முன்னுரை

சாலொமோன் ராஜா தன்னுடைய ஜீவியக்காலத்தின் கடைசிப்பகுதியில் தேவனைவிட்டு பின்வாங்கிப் போய்விட்டார். ஆரம்ப காலத்தில் கர்த்தரோடு நெருங்கிய ஐக்கியத்திலிருந்தார். அதன் பின்பு அந்நிய ஸ்திரீகளை விவாகம்பண்ணி, அவர்களுடைய தெய்வங்களை பின்பற்றிப்போய்விட்டார்.

"ராஜாவாகிய சாலொமோன், பார்வோனின் குமாரத்தியை நேசித்ததுமல்லாமல், மோவாபியரும், அம்மோனியரும், ஏதோமியரும், சீதோனியரும், ஏத்தியருமாகிய அந்நிய ஜாதியாரான அநேகம் ஸ்திரீகள்மேலும் ஆசைவைத்தான். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: நீங்கள் அவர்களண்டைக்கும் அவர்கள் உங்களண்டைக்கும் பிரவேசிக்கலாகாது; அவர்கள் நிச்சயமாய்த் தங்கள் தேவர்களைப் பின்பற்றும்படி உங்கள் இருதயத்தைச் சாயப்பண்ணுவார்கள் என்று சொல்லியிருந்தார்;

சாலொமோன் அவர்கள்மேல் ஆசைவைத்து, அவர்களோடு ஐக்கியமாயிருந்தான். அவனுக்குப் பிரபுக்கள் குலமான எழுநூறு மனையாட்டிகளும், முந்நூறு மறுமனையாட்டிகளும் இருந்தார்கள்; அவனுடைய ஸ்திரீகள் அவன் இருதயத்தை வழுவிப்போகப் பண்ணினார்கள். சாலொமோன் வயதுசென்றபோது, அவனுடைய மனைவிகள் அவன் இருதயத்தை அந்நியதேவர்களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணினார்கள்; அதினால் அவனுடைய இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப்போல, தன் தேவனாகிய கர்த்தரோடே உத்தமமாயிருக்கவில்லை" (1இராஜா 11:1-4).

சாலொமோன் ராஜா கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப்போனது, அவருடைய ஜீவியத்தில் காணப்பட்ட மிகவும் துக்கமான சம்பவம். சாலொமோன் தன்னுடைய வாலிப நாட்களிலும், தன்னுடைய ஆட்சிக்காலத்தின் ஆரம்பத்திலும், கர்த்தரோடு நெருங்கிய ஐக்கியத்திலிருந்தார். அந்த சந்தர்ப்பத்தில் அவர் "நீதிமொழிகள்" புஸ்தகத்தை எழுதினார் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

சாலொமோனுக்கு முதிர் வயதானபோது அவருடைய சிந்தனைகளில் மாற்றங்கள் உண்டாயிற்று. அவர் பல அனுபவங்கள் வழியாகக் கடந்து வந்தார். சாலொமோன் தன்னுடைய முதிர்வயதில், கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப்போய், அநேக துன்பங்களை அனுபவித்தார். தன்னுடைய கசப்பான அனுபவத்தின் மூலமாய் ஆவிக்குரிய அநேக பாடங்களை கற்றுக்கொண்டார். "நீ உன் வாலிப பிராயத்தில் உன் சிருஷ்டிகரை நினை" (பிர 12:1) என்று தன்னுடைய ஜீவியத்தின் கஷ்டங்களை உணர்ந்து, வாலிபருக்கு நல்ல ஆலோசனை சொல்லுகிறார்.

சாலொமோன் தன்னுடைய ஜீவியத்தின் கடைசி காலத்தில், கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப்போனாலும், கர்த்தருடைய பெரிதானகிருபையால் அவர் மறுபடியும் கர்த்தரோடு ஐக்கியமாகயிருக்கிறார். தன்னுடைய பின்மாற்றத்திற்காக மனம் வருந்தி கர்த்தரை மனப்பூர்வமாய்ப் பற்றிக்கொள்கிறார். கர்த்தரிடத்தில் மறுபடியும் சேர்ந்த பின்பு, தன்னுடைய ஜீவியத்தின் அனுபவங்களை, இந்தப் புஸ்தத்தில் எழுதியிருக்கிறார். சாலொமோனுடைய ஞானமும், ஜீவியஅனுபவமும், பிரசங்கி புஸ்தகத்தின் வாக்கியங்களில் தெளிவாக பிரதிபலிக்கிறது. பிறருடைய அனுபவங்களை கவனிப்பதன் மூலமாய், நாம் அநேக பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம்.

பிரசங்கியின் புஸ்தகம், "எழுதப்பட்டுள்ள ஒரு பிரசங்கம்" (பிர 1,2). மாயை, மாயை, எல்லாம் மாயை என்பதுதான் இந்தப் புஸ்தகத்தின் மையக்கருத்து. இதுவே சாலொமோனின் பிரதான உபதேசம். எல்லாம் மாயை என்பதை நிரூபிப்பதற்கு சாலொமோன் அநேக விவாதங்களையும், எடுத்துக்காட்டுக்களையும் சொல்லுகிறார்.

சாலொமோனுடைய புத்திமதிகளை கவனமாய்க் கேட்டு, அவருடைய ஆலோசனைகளை நம்முடைய ஜீவியத்தில் கடைபிடித்தால் நமக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதம் உண்டாகும். நம்முடைய சிருஷ்டிகரை நாம் நினைக்கவேண்டும். கர்த்தருக்குப் பயப்படும் பயம் நம்மிடத்தில் காணப்படவேண்டும். நாம் கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளவேண்டும். இதுவே சாலொமோனுடைய பிரதான உபதேசம்.

பிரசங்கியின் புஸ்தகத்தில், ஒரு சில உபதேசங்கள், புரிந்துகொள்வதற்கு கடினமாயிருக்கிறது. அதன் அர்த்தங்களும் வியாக்கியானங்களும் நமக்கு மறைபொருளாயிருக்கிறது. நாஸ்திகர்கள் கர்த்தரை நம்புவதில்லை. சாலொமோனுடைய உபதேசம் வெளிப்பார்வைக்கு நாஸ்திகரின் உபதேசத்தைப்போலவே இருக்கிறது. சாலொமோன் ஒரு நாஸ்திகரல்ல. அவர் கர்த்தரை விசுவாசிக்கிறவர். கர்த்தருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கிறவர்.

இந்த உலகம் ஒரு மாயை. இந்த சத்தியத்தை நமக்குப் புரியவைப்பதற்காக சாலொமோன் அநேக எடுத்துக்காட்டுக்களை விவரமாகச் சொல்லுகிறார். இந்த உலகத்தால் நமக்கு மெய்யான சந்தோஷத்தைக் கொடுக்க முடியாது. பாவம் மிகவும் பயங்கரமானது. பாவத்தின் சம்பளம் மரணம். பாவத்தினால் நமக்கு பேரழிவு உண்டாகும். கர்த்தருக்குப் பயப்படுவதே ஞானத்தின் ஆரம்பம்.

நாம் கர்த்தருக்குப் பயந்து ஜீவியத்தால், நம்முடைய ஜீவியத்தில் சந்தோஷமும் சமாதானமும் இருக்கும். நாம் கர்த்தரிடத்தில் பக்தியாகவும், மனுஷரிடத்தில் அன்பாகவும் ஜீவிக்கவேண்டும். அப்போதுதான் நம்முடைய ஜீவியத்தில் திருப்தி உண்டாகும். நமக்கு கர்த்தரைப்பற்றிய ஞானம் தேவை. நம்முடைய சுயபுத்தியினாலோ, சுயபக்தியினாலோ கர்த்தரை அறிந்து கொள்ள முடியாது. கர்த்தர் தாமே, தம்முடைய கிருபையினால், தம்மை நமக்கு வெளிப்படுத்தினால் மாத்திரமே, நம்மால் தேவனைப்பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்ள முடியும்.

பிரசங்கியின் புஸ்தகத்தில் சாலொமோனுடைய மனவருத்தம் சொல்லப்பட்டிருக்கிறது. அவர் தான் செய்த பாவங்களுக்காக மனம் வருந்துகிறார். இந்த உலகம் தனக்கு எல்லாவிதமான சந்தோஷத்தையும் கொடுக்கும் என்று சாலொமோன் இந்த உலகத்தை நம்பினார். ஆனால் இந்த உலகம் அவருக்கு மெய்யான சந்தோஷத்தைக் கொடுக்கவில்லை. சாலொமோன் மாம்ச இச்சைகளில் விழுந்தார். கர்த்தர் தடைபண்ணியிருந்த எல்லா பாவங்களையும் சாலொமோன் தாராளமாய் செய்து பார்த்தார். அப்போதும் சாலொமோனுக்கு மெய்யான சந்தோஷமும், மன அமைதியும் கிடைக்கவில்லை. சாலொமோனுடைய வாழ்க்கை அவருக்கு கசப்பாயிற்று. துன்மார்க்கருக்கு அழிவும் மரணமும் உண்டாகும் என்பதை சாலொமோன் புரிந்துகொண்டார். பாவத்தின் சம்பளம் மரணம் என்பதே சத்தியம்.

நம்முடைய சுயபலத்தின்மீது நாம் நம்பிக்கை வைப்பது நமக்கு ஆபத்தானது. மனுஷனுடைய பலவீனம் அவனை கீழே விழ வைத்துவிடும். சாலொமோன் தன்னையும், தன்னுடைய ஐசுவரியத்தையும் நம்பினார். அவை அவருக்கு மெய்யான சந்தோஷத்தைக் கொடுக்கவில்லை. சாலொமோன் தன்னுடைய ராஜ்யபாரத்தின்மீது நம்பிக்கை வைத்தார். அதுவும் அவருக்கு சமாதானம் கொடுக்கவில்லை.

ஞானி தன்னுடைய சுயஞானத்தின்மீது பெருமைப்படக்கூடாது. சாலொமோன் மிகப்பெரிய ஞானி. ஆனால் அவருடைய ஜீவியத்தின் முடிவில் மதியீனமே வெளிப்பட்டது. அவர் ஞானியாகயிருந்தாலும், அவர் கர்த்தருக்கு விரோதமாக பல பாவங்களை செய்தார்.

ஐசுவரியவான் தன்னுடைய ஐசுவரியத்தின்மீது நம்பிக்கை வைக்கவும் கூடாது. அந்த ஐசுவரியத்தினால் பெருமைப்படவும் கூடாது. சாலொமோன் மிகப்பெரிய ஐசுவரியவான். அவருடைய ஐசுவரியமே அவருக்கு மிகப்பெரிய கண்ணியாயிற்று. யோபுவுக்கு தரித்திரத்தினால் சோதனை உண்டாயிற்று. சாலொமோனுக்கு ஐசுவரியத்தினால் சோதனை உண்டாயிற்று. சாலொமோன் ஐசுவரியத்தின் கண்ணியில் சிக்கிக்கொண்டார். அநேக பாவங்களை செய்தார். ஆனாலும் கர்த்தருடைய பெரிதான கிருபையினால், சாலொமோன் கர்த்தரிடத்தில் மறுபடியும் திரும்பி வந்தார். இது தேவனுடைய சுத்தக்கிருபை.

தம்மிடத்தில் வருகிற யாரையும் கர்த்தர் ஒருபோதும் புறம்பே தள்ளிவிடுவதில்லை. மனம் திரும்பி, தன்னைத் தாழ்த்தி, ஒருவர் கர்த்தரிடத்தில் வரும்போது, கர்த்தர் அவரை ஏற்றுக்கொள்கிறார். சாலொமோன் கர்த்தரை விட்டுத் தூரமாய் விலகிப்போயிருந்தாலும், தன்னுடைய பாவங்களுக்காக மனம் வருந்தி, கர்த்தரிடத்தில் மறுபடியும் திரும்ப வருகிறார். கர்த்தரும் அவரை அன்போடு ஏற்றுக்கொள்கிறார்.

பிரசங்கியின் புஸ்தகத்தில் நம்முடைய அன்றாட ஜீவியத்திற்கு பிரயோஜனப்படும் அநேக உபதேசங்கள் உள்ளன. சாலொமோன் தாவீதின் குமாரன். சாலொமோன் தன்னுடைய பாவங்களுக்கு மனம் வருந்திய பின்பு, தாவீதைப்போலவே "பாதகருக்கு உம்முடைய வழிகளை உபதேசிப்பேன்" (சங் 51:13) என்று தீர்மானம் பண்ணுகிறார். அந்தத் தீர்மானத்தின் ஒரு பகுதியாகவே அவர் பிரசங்கியின் புஸ்தகத்தை எழுதியிருக்கிறார்.

ஏதேன் தோட்டத்திலே நம்முடைய முற்பிதாவாகிய ஆதாமும், ஏவாளும் தங்கள் கண்களின் இச்சைகளுக்கும், மாம்சத்தின் இச்சைகளுக்கும் தங்களை ஒப்புக்கொடுத்து, தேவனுக்கு கீழ்ப்படியாமல் போனார்கள். பார்வைக்கு அழகும், புசிப்பதற்கு சுவையாகவும் உள்ளதுதான் ஆசீர்வாதம் என்று நினைத்தார்கள். கர்த்தருடைய கட்டளைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், தங்களுடைய விருப்பத்திற்கும், சுயஇச்சைக்கும் முக்கியத்துவம் கொடுத்து பாவத்தில் விழுந்தார்கள். ஆதியிலே அவர்கள் செய்த தப்பிதத்தை, இக்காலத்தில் அநேக ஜனங்கள் செய்கிறார்கள்.

தேவனாகிய கர்த்தர் நம் எல்லோருக்கும் சுயாதீனமாக சிந்திக்கும் திறமையைக் கொடுத்திருக்கிறார். நம் எல்லோருக்குமே விருப்புக்களும், வெறுப்புக்களும் உண்டு. விசுவாசிகளாகிய நம்முடைய ஜீவியத்தில், தேவனுடைய சித்தமே, நம்முடைய சித்தமாக இருக்கவேண்டும். நம் விரும்பியதை செய்ய நமக்கு உரிமை உண்டு என்று நினைத்து, தேவனுடைய சித்தத்திற்கு விரோதமானதைச் செய்துவிடக்கூடாது. நம்முடைய ஜீவியத்திற்கு நாம் தேவனல்ல. கர்த்தரே நம்முடைய தேவன். கர்த்தரே நம்மை ஆளுகை செய்யவேண்டும். கர்த்தர் நமக்குள் வாசம்பண்ணவேண்டும். நாம் என்ன செய்யவேண்டும் என்பதை கர்த்தரே நமக்காக தீர்மானம்பண்ணவேண்டும்.

தேவனுக்குப் பயந்து, அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளும்போது நமக்கு மிகுந்த ஆசீர்வாதம் உண்டாகும். கர்த்தருக்குப் பிரியமாக ஜீவிப்பதே நமக்கு மெய்யான சந்தோஷம். நாம் கர்த்தருக்கு பிரியமானவர்களாயும் இருக்க வேண்டும், பிரயோஜனமுள்ளவர்களாயும் இருக்கவேண்டும். மனுஷன் தன்னுடைய சந்தோஷத்திற்காக இந்த உலகத்தைப் பார்க்கிறான். ஆனால் இந்த உலகமோ ஒரு மாயை என்று சாலொமோன் விவரமாகச் சொல்லுகிறார்.

மனுஷன் தன்னுடைய கல்வியிலும், அதிகாரத்திலும், ஐசுவரியத்திலும், கனத்திலும் பெருமைப்படுகிறான். இவற்றைப் பெற்றுக்கொண்டால் தனக்கு சந்தோஷம் உண்டாகும் என்று நினைக்கிறான். ஆனால் இவையெல்லாமே மாயை. மாயை, மாயை, எல்லாம் மாயை என்று பிரசங்கி சொல்லுகிறார்.

நாம் மெய்யான சந்தோஷத்தைப் பெற்றுக்கொள்வது எப்படி என்பதற்கான ஆலோசனைகள் இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. எல்லாம் மாயையாயிருக்கும்போது, எது மெய்யானது என்பதையும் சாலொமோன் சொல்லுகிறார். நம்மால் மாயையை மெய்யாக மாற்ற முடியாது. மாயையைக் குணப்படுத்த முடியாது. மாயையினால் நமக்கு துன்பங்களும் வேதனைகளும் வரும். நம்மால் மாயையை மாற்ற முடியாவிட்டாலும், மாயையினால் வரும் துன்பங்களுக்கும் வேதனைகளுக்கும் நாம் தப்பித்துக்கொள்ளலாம்.

நாம் மாயையை நம்பினால் நமக்கு ஏமாற்றமுண்டாகும். நாம் மாயையை விட்டு விலகி ஜீவிக்கவேண்டும். மாயையின்மீது நாம் நம்பிக்கை வைக்கக்கூடாது. தேவனுடைய சித்தத்திற்கு நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும். மாயையான காரியங்களைப் பின்பற்றாமல், கர்த்தருடைய அடிச்சுவடுகளையே பின்பற்றவேண்டும். நம்முடைய வாலிபப்பிராயத்திலேயே, நம்முடைய சிருஷ்டிகராகிய கர்த்தரை நினைக்கவேண்டும் என்று சாலொமோன் நமக்கு ஆலோசனை சொல்லுகிறார். நம்முடைய ஜீவியத்தில் நாம் கர்த்தரை நினைப்பதும், கர்த்தருக்குப் பயந்து ஜீவிப்பதும் தொடரவேண்டும். நம்முடைய ஜீவியகாலமெல்லாம் நாம் கர்த்தருக்குப் பயந்து, கர்த்தருடைய ஊழியத்தை செய்யவேண்டும். கர்த்தரை நம்பி நன்மை செய்யவேண்டும்.

1 அதிகாரம்

இந்தப் புஸ்தகத்திற்கு "பிரசங்கி" என்னும் தலைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. "எல்லாம் மாயை" என்று பிரசங்கி சொல்லுகிறார். சாலொமோன் மாயையின் குணாதிசயங்களை விவரிக்கிறார். எல்லாம் மாயை என்று தான் சொல்வதற்கான காரணங்களையும் சாலொமோன் விரிவாக எடுத்துச் சொல்லுகிறார். மனுஷருடைய ஜீவியகாலம் குறைவானது. இயற்கையின் சுபாவங்களிலும் நிலையான தன்மையில்லை. எல்லாமே மாறிக்கொண்டிருக்கிறது. சூரியன், சந்திரன், காற்று ஆகியவையெல்லாமே மாற்றத்திற்குட்பட்டிருக்கிறது.

எல்லாம் வருத்தத்தினால் நிறைந்திருக்கிறது. முன்னிருந்ததே இப்போதும் இருக்கிறது, இனிமேலும் இருக்கப்போகிறது. முன்நடந்ததே இனிமேலும் நடக்கப்போகிறது. இந்தப் பிரபஞ்சத்தில் நூதனமானது ஒன்றுமில்லை என்று பிரசங்கி சொல்லுகிறார். எதுவுமே பரிபூரணமானதல்ல. எல்லாமே குறைவுள்ளது. சர்வமும் மாயை. மனுஷனுடைய அறிவும் மாயை. அவனுடைய ஐசுவரியமும் மாயை. ஞாபகசக்தியும் மாயை.

சாலொமோன் இந்தப் புஸ்தகத்தின் ஆசிரியர். இவர் எருசலேமில் இஸ்ரவேலருக்கு ராஜாவாகயிருந்தவர். இவர் பெரியவராகயிருந்தார். ஞானமடைந்து தேறியிருந்தார். இவர் ஞானத்தில் சிறந்து விளங்கினார். ஆனாலும் ஞானமும் ஒரு மாயை என்று சொல்லுகிறார். எல்லாம் மாயையாயிருப்பதினால் அவை மனதிற்கு சஞ்சலமாயிருக்கிறது.

தாவீதின் குமாரன்
பிர 1:1-3

பிர 1:1. தாவீதின் குமாரனும் எருசலேமின் ராஜாவுமாகிய பிரசங்கியின் வாக்கியங்கள்.

பிர 1:2. மாயை, மாயை, எல்லாம் மாயை என்று பிரசங்கி சொல்லுகிறான்.

பிர 1:3. சூரியனுக்குக் கீழே மனுஷன் படுகிற எல்லாப் பிரயாசத்தினாலும் அவனுக்குப் பலன் என்ன?

பிரசங்கி புஸ்தகத்திற்கு சாலொமோன் ஆசிரியராகயிருக்கிறார். இவர் தன்னைப்பற்றிச் சொல்லும்போது, தன்னை தாவீதின் குமாரன் என்றும், எருசலேமின் ராஜா என்றும் குறிப்பிடுகிறார். தாவீதின் குமாரர்களில், சாலொமோன் மாத்திரமே எருசலேமின் ராஜாவாகயிருந்தவர். தன்னை தாவீதின் குமாரன் என்றும், எருசலேமின் ராஜா என்றும் வெளிப்படுத்தினாலும், தன்னுடைய பெயர் "சாலொமோன்" என்று இந்தப் புஸ்தகத்தின் ஆசிரியர் தன்னை வெளிப்படுத்திக் காண்பிக்கவில்லை.

சாலொமோன் என்னும் பெயருக்கு "சமாதானம்" என்று பொருள். ஆனால் சாலொமோனோ, தன்னுடைய பாவத்தினால் தனக்கும், தன்னுடைய தேசத்திற்கும் அநேக பிரச்சனைகளையும், தொல்லைகளையும், தொந்தரவுகளையும் கொண்டு வந்தார். தேவனிடத்தில் சாலொமோனுக்கு இருந்த சமாதானமும் குறைந்து போயிற்று. ஆகையினால் சாலொமோன் இந்தப் புஸ்தகத்தின் ஆசிரியராக தன்னுடைய பெயரை வெளிப்படுத்திக் காண்பிக்க விரும்பவில்லை. "என்னை சாலொமோன் என்று கூப்பிடாமல், "மாரா" என்று கூப்பிடுங்கள்" என்று சாலொமோன் சொல்ல நினைத்திருக்கலாம். சாலொமோனுடைய ஜீவியத்தில், அவருடைய வயதான காலத்தில், அவருக்கு சமாதானத்திற்குப் பதிலாக சஞ்சலமும், சலிப்பும், கசப்பும் உண்டாயிற்று.

சாலொமோன் தன்னுடைய பெயரை இந்தப் புஸ்தகத்தில் குறிப்பிடாவிட்டாலும், அவர் தன்னை "பிரசங்கி" என்று சொல்லுகிறார். இதுவே சாலொமோனின் தற்போதைய சுபாவம். "கோஹேலேத்" என்னும் எபிரெய வார்த்தையிலிருந்து "பிரசங்கி" என்னும் தமிழ் வார்த்தை மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. "கோஹேலேத்" என்னும் வார்த்தைக்கு, "கூட்டிச் சேர்க்கிறவர்" என்று பொருள்.

"கோஹேலேத்" என்னும் வார்த்தைக்கு தன்னுடைய பாவத்திற்காக மனம் வருந்துகிற ஆத்துமா என்றும் பொருள் சொல்லலாம். சாலொமோன் தன்னுடைய மிகுதியான பாவங்களினால் காணாமல் போன ஆட்டைப்போல, கர்த்தருடைய சமுகத்தைவிட்டு வழிவிலகிப்போனார். தன்னுடைய பாவங்களுக்காக மனம் வருந்தி, கர்த்தரிடத்தில் மன்னிப்பு கேட்டார். கர்த்தரோ தம்முடைய பெரிதான கிருபையினால் சாலொமோனுடைய பாவங்களை மன்னித்து, அவரை தம்மிடமாகக் கூட்டிச் சேர்த்துக்கொண்டார்.

சாலொமோன் கர்த்தரைவிட்டு தூரவிலகிப்போயிருந்த காலங்களில், அவருடைய மனக்கண்கள் மங்கிப்போயிருந்தது. அவருடைய பார்வைக்கு எல்லாமே மாயையாகத் தெரிந்தது. சாலொமோனுடைய ஆவி மாயையான காரியங்களை நாடிச் சென்றது. சாலொமோன் தன்னுடைய பாவங்களுக்காக மனம் வருந்தி, மனம் திரும்பிய பின்போ, அவருடைய மனக்கண்கள் பிரகாசமாயிற்று. மாயையைப் பின்பற்றுவதற்குப் பதிலாக அவர் கர்த்தரைப் பின்பற்ற ஆரம்பித்தார். மாயையின் மத்தியில் ஜீவித்தவர், இப்போது கர்த்தருடைய சமுதகத்திற்கு மத்தியில் ஜீவிக்கிறார்.

சாலொமோனுடைய ஆத்துமா மனம் திரும்பியிருக்கிறது. கர்த்தர் நொருங்குண்ட ஆவிகளைப் புதுப்பிக்கிறார். சாலொமோனுடைய இருதயம் உடைந்துபோயிருக்கிறது.

ஒரு சிலர் அதிகமான வேதனைகளினிமித்தமாய், ஒரு குறுகிய காலத்திற்கு மாத்திரமே மனந்திரும்புவார்கள். அதன்பின்பு மறுபடியும் தங்கள் பழைய ஜீவியத்திற்குத் திரும்பிப்போய்விடுவார்கள். கர்த்தர் மீதுள்ள பக்தியும் பரவசமும் ஒரு நாளுக்கு மாத்திரம் இருக்கும். இப்படிப்பட்டவர்கள் ஒரு நாளுக்கு கர்த்தருடைய பிள்ளைகளாகயிருப்பார்கள். மறுநாளிலோ கர்த்தருடைய சமுகத்தைவிட்டு விலகிப்போய், சாத்தானுடைய பிள்ளைகளாக ஜீவிப்பார்கள்.

மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். கர்த்தர் மனுஷனுடைய இருதயத்தைப் பார்க்கிறார். உண்மையாய் மனந்திரும்பிய ஆத்துமாக்களை கர்த்தர் தம்மிடத்தில் சேர்த்துக்கொள்கிறார். நொறுங்குண்ட ஆவிகளையும், நறுங்குண்ட ஆவிகளையும் கர்த்தர் தேற்றி, அவற்றிற்கு ஆறுதலையும், சமாதானத்தையும், ஆசீர்வாதத்தையும் தருகிறார். கர்த்தரைவிட்டு விலகிப்போனவர்கள், உண்மையாய் மனந்திரும்பி, கர்த்தரிடத்தில் திரும்பி வரலாம். தம்மிடத்தில் வருகிற யாரையும் கர்த்தர் ஒருபோதும் புறம்பே தள்ளிவிடமாட்டார்.

சாலொமோனுடைய ஆத்துமா தன்னுடைய பாவங்களுக்காக மனம் வருந்தி, மனம் திரும்பியிருக்கிறது. அது கர்த்தருடைய சமுகத்தில் கூட்டிச்சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்போது அவருடைய ஆத்துமா கர்த்தருடைய நற்செய்தியை பிரசங்கம்பண்ணுகிறது. சாலொமோன் தன்னுடைய பாவங்களுக்கு வருந்தி, இப்போது கர்த்தரோடு ஒப்புரவாயிருக்கிறார். தன்னைப்போல அநேகர் கர்த்தரைவிட்டு விலகிப் போயிருப்பதைப் பார்க்கிறார். தான் கர்த்தருடைய சமுகத்தில் மறுபடியும் கூட்டிச்சேர்க்கப்பட்டதுபோல அவர்களும் கர்த்தரிடத்தில் கூட்டிச்சேர்க்கப்படவேண்டும் என்று பிரியப்படுகிறார்.

தேவனாகிய கர்த்தர் தம்முடைய ஆவியினாலே சாலொமோனை ஒரு பிரசங்கியாக மாற்றியிருக்கிறார். சாலொமோன் தன்னுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி, கர்த்தரோடு ஒப்புரவாகியிருப்பதற்கு இது ஒரு அடையாளம். மனந்திரும்பிய பாவியை கர்த்தர் மன்னித்து, அவருக்கு தம்முடைய ஊழியத்தின் ஒரு பகுதியையும் கொடுக்கிறார். பேதுரு கர்த்தரை மறுதலித்தார். ஆனாலும் பேதுரு தன்னுடைய பாவங்களுக்காக மிகவும் மனம் வருந்தினார். கர்த்தர் பேதுருவின் பாவத்தை மன்னித்தார். அவருடைய பாவம் மன்னிக்கப்பட்டதற்கு சாட்சியாக, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய ஆடுகளையும், ஆட்டுக்குட்டிகளையும் மேய்க்கும் ஊழியத்தை பேதுருவிடம் ஒப்புக்கொடுத்தார்.

சாலொமோன் தன்னை தாவீதின் குமாரன் என்று வெளிப்படுத்துகிறார். தாவீது கர்த்தருக்குப் பிரியமாக ஜீவித்தார். சாலொமோனோ கர்த்தருடைய சமுகத்தைவிட்டு விலகிப்போய் பாவத்தில் சிக்கிக்கொண்டார். தன்னுடைய தகப்பனாராகிய தாவீது கர்த்தரோடு நெருங்கி ஜீவித்ததை சாலொமோன் சிந்தித்துப் பார்க்கிறார். தாவீதின் இருதயம் கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்றதாயிருந்தது. சாலொமோனின் இருதயமோ பாவம் நிரம்பியதாயிருக்கிறது.

தாவீதும் பாவத்தில் விழுந்தார். ஆனாலும் அவர் தன்னுடைய பாவத்திற்காக மனம் வருந்தி கர்த்தருடைய சமுகத்தில் மன்னிப்பைப் பெற்றுக்கொண்டார். தாவீதைப்போலவே தானும் மனம் வருந்தி, கர்த்தரிடத்தில் மன்னிப்பு கேட்டால், கர்த்தர் தம்முடைய இரக்கத்தினால் தன்னையும் மன்னிப்பார் என்னும் நம்பிக்கை சாலொமோனுக்கு உண்டாயிற்று. பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்வதற்கு சாலொமோன் தன்னுடைய தகப்பனாராகிய தாவீதை ஒரு எடுத்துக்கட்டாக நினைக்கிறார். தாவீதைப்போலவே தானும் தேவனுடைய கிருபையையும் இரக்கத்தையும் பெற்றுக்கொள்ளவேண்டும் என்னும் வாஞ்சை சாலெமோனுக்கு உண்டாயிற்று.

சாலொமோன் தன்னைப்பற்றிச் சொல்லும்போது, "எருசேலமின் ராஜா" என்று சொல்லுகிறார். தேவன் சாலொமோனுக்கு அநேக நன்மைகளைச் செய்திருக்கிறார். அவரை உயர்த்தியிருக்கிறார். சிங்காசனத்தில் அமரச் செய்திருக்கிறார். கர்த்தர் தனக்கு அநேக நன்மைகளைச் செய்திருந்தாலும், சாலெமோனோ கர்த்தருக்குப் பயந்து ஜீவிக்காமல், கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்துவிட்டார்.

தான் ராஜாவாகயிருப்பதினால், தன்னுடைய பிரசங்க வாக்கியத்திற்கு ஜனங்கள் செவிகொடுப்பார்கள் என்று சாலொமோன் நம்புகிறார். தான் ராஜாவாகயிருப்பதினால் பிரசங்கம்பண்ணக்கூடாது என்று சாலொமோன் நினைக்கவில்லை. எல்லோரும் ஊழியம் செய்யவேண்டும். சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்துகளிலுள்ளவர்களும் கர்த்தருக்கு ஊழியம் செய்யலாம். அவர்களைப்போலவே, சமுதாயத்தில் கடைநிலையிலுள்ளவர்களும் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்யலாம். நாம் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட நன்மைகளை, ஜனங்களுக்கு சாட்சியாகச் சொல்லவேண்டும்.

மனுஷர் இந்தப் பிரபஞ்சத்தின் மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். இந்த உலகத்திற்கும், உலகத்தின் காரியத்திற்கும் அதிக மதிப்பும் மரியாதையும் கொடுக்கிறார்கள். தங்களுடைய சந்தோஷத்திற்கும், சமாதானத்திற்கும் இவர்கள் உலகத்தையே நம்புகிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமோ இந்த உலகத்தின்மீது நம்பிக்கை வைக்காமல், கர்த்தர்மீதே நம்பிக்கை வைக்கவேண்டும்.

சாலொமோன் பிரசங்கியின் புஸ்தகத்தில், மாயையான காரியங்களுக்கும், மெய்யான காரியங்களுக்கும் வித்தியாசம் சொல்லுகிறார். நாம் மாயையைப் பற்றிக்கொள்ளாமல், கர்த்தரையே பற்றிக்கொள்ளவேண்டுமென்று சாலொமோன் நமக்கு பிரசங்கம்பண்ணுகிறார்.

சாலொமோனுடைய பார்வையில் எல்லாம் மாயையாயிருக்கிறது. மனுஷனுடைய பாவத்தினால் எல்லாமே பிரயோஜனமில்லாமல் போயிற்று. ஒவ்வொரு பொருளையும் மனுஷனால் சரியாகப் பயன்படுத்த முடியவில்லை. மனுஷன் தன்னுடைய பாவத்தினால் நன்மையான காரியங்களையும் தீமையானதாக மாற்றிவிடுகிறான். சாலொமோன் இதைப் பார்த்து, "மாயை, மாயை, எல்லாம் மாயை" என்று சொல்லுகிறார். இந்த உலகத்திலுள்ள எல்லா காரியங்களுமே சாலொமோனுடைய பார்வையில் மாயையாகத் தெரிகிறது. இது சாதாரண மாயையல்ல. இவை மாயையிலும் மாயை.

ஒரு சிலர் தரித்திரராகயிருக்கிறார்கள். அவர்களிடத்தில் கொஞ்சமும் ஐசுவரியம் இருக்காது. அவர்கள் இதுவரையிலும் ஐசுவரியத்தை அனுபவித்திருக்கமாட்டார்கள். இப்படிப்பட்டவர்கள், தாங்கள் அனுபவித்திராத ஐசுவரியத்தை, மாயை என்று சொல்லுவார்கள். வேறு சிலருக்கு இந்தப் பிரபஞ்சத்தின் சந்தோஷமும், ஆடம்பரமும், அலங்காரமும் கிடைத்திருக்காது. இவர்கள் இந்தப் பூமியிலே துறவிகளைப்போல ஜீவித்திருப்பார்கள். உலகத்தை அனுபவியாத இவர்கள், உலகப்பிரகாரமான காரியங்களையெல்லாம் மாயை என்று சொல்லுவார்கள்.

இவர்களுக்கும் சாலொமோனுக்கும் வித்தியாசமுண்டு. சாலொமோனுக்கு எல்லாம் இருந்தது. அவரிடத்தில் பொன்னும், பொருளும், சகல சம்பத்துக்களும் திரளாயிருந்தது. அவர் சமஸ்த இஸ்ரவேல் தேசத்திற்கும் ராஜாவாகயிருந்தார். அவரிடத்தில் மிகுந்த ஞானமிருந்தது. அவருக்கு முன்னூறு மனைவிகளும் எழுநூறு மறுமனையாட்டிகளும் இருந்தார்கள். உலக வாழ்க்கையை எவ்வளவு அனுபவிக்க முடியுமோ, அவ்வளவையும் அனுபவித்து விட்டு, அதன் பின்பு "எல்லாம் மாயை" என்று சாலொமோன் சொல்லுகிறார்.

சாலொமோன் எல்லா மனுஷரிலும் ஞானவானாயிருந்தார். சகல ஜாதிகளிலும் அவருடைய கீர்த்தி பிரபல்யமாயிருந்தது. அவர் இயற்கையின் ஆழங்களையும் ஆராய்ந்து அறிந்திருந்தார் (1இராஜா 4:33). அவருக்கு எல்லா தாவரங்களின் பெயர்களும், மிருகங்களின் பெயர்களும் தெரிந்திருந்தது. சாலொமோன் தேவனுடைய நாமத்தினால் பேசினார். அவர் தேவனுடைய ஆவியானவரால் ஏவப்பட்டு தெய்வீக இரகசியங்களை வெளிப்படுத்தினார். எல்லாவற்றிற்கும் ஆதாரமான சத்தியங்களெல்லாம் அவருக்கு நன்றாய்த் தெரிந்திருந்தது.

சாலொமோனிடத்தில் இம்மையைப்பற்றிய ஞானமும் மறுமையைப்பற்றிய ஞானமும் ஏராளமாயிருந்தது. இந்தப் பூமியின் ராஜ்யத்தைவிட பரலோகராஜ்யமே நித்தியமானது என்பதை சாலொமோன் அறிந்திருந்தார். தன்னுடைய சிங்காசனத்தைவிட பரலோகத்திலுள்ள தேவனுடைய சிங்காசனமே மகிமையானது என்னும் இரகசியத்தையும் சாலொமோன் நன்றாய் புரிந்து வைத்திருந்தார்.

இந்தப் பிரபஞ்சத்திலுள்ள எல்லா காரியங்களும் மாயையாயிருக்கிறது. இவற்றால் மனுஷருக்கு மெய்யான சந்தோஷத்தையோ, சமாதானத்தையோ கொடுக்க முடியாது. "சூரியனுக்குக் கீழே மனுஷன் படுகிற எல்லாப் பிரயாசத்தினாலும் அவனுக்குப் பலன் என்ன?" (பிர 1:3) என்று சாலொமோன் கேட்கிறார். உலகப்பிரகாரமான காரியங்கள் நம்மை சந்தோஷமாய் வைத்திருப்பதற்கு போதுமானவையல்ல. உலகக்காரியங்கள் குறைவுள்ளவை.

சாலொமோன் உலகக்காரியங்களைப் பற்றிச் சொல்லும்போது, அதை "பிரயாசம்" என்று சொல்லுகிறார். இந்த வார்த்தைக்கு "கடினமான உழைப்பு" என்றும், "அதிகமாகக் கவனம் செலுத்துதல்" என்றும் பொருள் சொல்லலாம். மனுஷன் உலகக்காரியங்களில் ஈர்க்கப்பட்டிருக்கிறான். கடினமாய் உழைக்கிறான். எல்லா காரியங்களிலும் கவனமாயிருக்கிறான். ஆனாலும் மனுஷன் படுகிற எல்லாப் பிரயாசத்தினாலும் அவனுக்கு ஒரு பலனும் உண்டாகப்போவதில்லை. அவனுக்கு களைப்பு தான் உண்டாகும். சோர்வு தான் உண்டாகும்.

சாலொமோன் நீதிமொழிகள் புஸ்தகத்தில் மனுஷருடைய பிரயாசத்தைப்பற்றிச் சொல்லும்போது "சகல பிரயாசத்தினாலும் பிரயோஜனமுண்டு" (நீதி 14:23) என்று சொல்லுகிறார். ஆனால் இப்போதோ அந்தப் பிரயாசத்தினால் ஒரு பிரயோஜனமுமில்லை என்று சொல்லிவிடுகிறார்.

இந்தப் பிரபஞ்சத்தில் நாம் கடினமாய் உழைக்கும்போது, நமக்கு ஏதாவது பிரயோஜனமுண்டாகும். வியாபாரத்தில் அதை "லாபம்" என்று சொல்லுகிறார்கள். நம்முடைய கைகளின் பிரயாசத்தினால் நாம் புசிக்கிறோம். நாம் புசிப்பது மெய்யான பிரயோஜனமல்ல என்று சாலொமோன் சொல்லுகிறார். இந்தப் பிரபஞ்சத்தில் நமக்கு ஏராளமான ஐசுவரியங்களும், சம்பத்துக்களும் இருக்கலாம். ஆனால் இவை நமக்கு ஒருபோதும் பிரயோஜனப்படாது. இந்த உலகக்காரியங்களை ஏராளமாய் அனுபவித்து நாம் சந்தோஷமாயிருக்கலாம். ஆனாலும் இவை நமக்கு மெய்யான சந்தோஷத்தைக் கொடுக்காது.

நம்முடைய ஐசுவரியம் அதிகரிக்கும்போது, அதைப் பாதுகாக்க வேண்டுமே என்னும் அக்கரையும் கவலையும் நமக்கு வந்துவிடுகிறது. ஐசுவரியத்தினால் சந்தோஷம் வருவதற்குப் பதிலாக கவலையும் பயமும் வருகிறது. நம்முடைய சொத்து அதிகரிக்கும்போது, அதை பங்கு போடுவதற்கு வருகிறவர்களும் அதிகமாயிருப்பார்கள். ஒரு சிறிய காரியம்கூட நம்முடைய சந்தோஷத்தையும், சமாதானத்தையும், நிம்மதியையும் அழித்துப்போடும். நாம் கஷ்டப்பட்டு படுகிற பிரயாசத்தினால் நமக்கு ஒரு பலனும் இல்லாமல் போய்விடும்.

நம்முடைய சரீரப்பிரகாரமான பிரயாசத்தினால், நம்முடைய சரீரத்திற்கு பலன் உண்டாகலாம். நம்முடைய ஆத்துமாவுக்கோ இதனால் ஒரு பலனும் உண்டாகாது. நாம் படுகிற பிரயாசத்தினால் இந்தப் பிரபஞ்சத்தில் நமக்கு பலன் உண்டானாலும், வரப்போகிற மறுமையிலே, நமக்கு ஒரு பலனும் உண்டாகாது. நாம் படுகிற பிரயாசத்தினால் நம்முடைய ஆத்துமாவின் பாவம் மன்னிக்கப்படாது. ஆத்துமாவில் ஏற்பட்டிருக்கிற ஆத்தும வியாதி நம்முடைய சுயபிரயோஜனத்தினால் ஒருபோதும் குணமடையாது. சாலொமோன் தன்னுடைய வயது முதிர்ந்த காலத்தில் இம்மைக்குரிய காரியங்களைப்பற்றி அதிகமாய் யோசிக்காமல், மறுமைக்குரிய காரியங்களைப்பற்றியே அதிகமாய் யோசிக்கிறார்.

ஒரு சந்ததி போகிறது பிர 1:4-8

பிர 1:4. ஒரு சந்ததி போகிறது, மறு சந்ததி வருகிறது; பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கிறது.

பிர 1:5. சூரியன் உதிக்கிறது, சூரியன் அஸ்தமிக்கிறது; தான் உதித்த இடத்திற்கே அது திரும்பவும் தீவிரிக்கிறது.

பிர 1:6. காற்று தெற்கே போய், வடக்கேயுஞ்சுற்றி, சுழன்று சுழன்று அடித்து, தான் சுற்றின இடத்துக்கே திரும்பவும் வரும்.

பிர 1:7. எல்லா நதிகளும் சமுத்திரத்திலே ஓடி விழுந்தும் சமுத்திரம் நிரம்பாது; தாங்கள் உற்பத்தியான இடத்திற்கே நதிகள் மறுபடியும் திரும்பும்.

பிர 1:8. எல்லாம் வருத்தத்தினால் நிறைந்திருக்கிறது; அது மனுஷரால் சொல்லி முடியாது; காண்கிறதினால் கண் திருப்தியாகிறதில்லை, கேட்கிறதினால் செவி நிரப்பப்படுகிறதுமில்லை.

"எல்லாம் மாயை" என்று சொல்லிவிட்டு, சாலொமோன் தான் சொன்னதை இங்கு நிரூபிக்கிறார். நாம் இந்தப் பூமியில் ஜீவிக்கிற காலம் மிகவும் குறுகியது. இந்த உலகத்தில் நமக்கு நித்திய சந்தோஷம் இல்லை. உலகப்பிரகாரமான சந்தோஷம் தற்காலிகமானது. அது சீக்கிரத்தில் முடிந்து போகும். நாம் இந்தப் பூமியில் நித்திய காலமாய் ஜீவிக்கப்போவதுமில்லை. நம்முடைய ஜீவியகாலம் ஒரு சந்ததியாக மாத்திரமே இருக்கும். அதன்பின்பு மறுசந்ததி வருவதற்கு நாம் இடங்கொடுக்கவேண்டும். ஒரு சந்ததி போகும். மறுசந்ததி வரும். ஆனால் இந்த பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கும்.

மனுஷனுடைய நதி எப்போதும் ஓடிக்கொண்டேயிருக்கிறது. அந்த நதியில் ஒவ்வொரு மனுஷனும் ஒரு சிறு துளியைப்போலத்தான் இருக்கிறான். தான் ஒரு சிறு துளிதான் என்பதை மனுஷன் உணராமல், தன்னை ஒரு பெரிய நதியாகப் பாவித்துக்கொள்கிறான். பெரிய நதிக்கும், ஒரு சிறிய துளிக்கும் ஏராளமான வித்தியாசமுண்டு. ஒரு துளி ஒருபோதும் நதியாகாது. ஆனால் மனுஷனோ தன்னைத்தானே புரிந்துகொள்ளாமல், மாயையில் சிக்கிக்கொண்டு, மாயையை யோசிக்கிறான். மாயையில் சந்தோஷப்படுகிறான்.

இந்தப் பூமியிலே ஒரு சந்ததி போகும். ஒரு சந்ததி வரும். ஆனால் பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கும். அதுபோலவே ஒரு சந்ததி போனாலும், ஏதாவது ஒரு சந்ததி இந்தப் பூமியில் நிலைத்திருக்கும். இந்தப் பூமியிலே ஒரு சந்ததி நிலைத்திருப்பதற்காக நாம் கர்த்தரைத் துதிக்கவேண்டும். நம்முடைய சந்தோஷத்திற்கு நம்முடைய உலகப்பிரகாரமான ஜீவியகாலத்தை நாம் சார்ந்திருக்கக்கூடாது. மறுமையில்தான் நமக்கு நித்திய ஓய்வு கிடைக்கும். நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்கிறவர்கள் நித்தியகாலமாய் நிலைத்திருப்பார்கள். பரலோகத்திலே போவோரும் வருவோரும் இருக்கமாட்டார்கள். எல்லோரும் அங்கு இருக்கிறவர்களாகவே இருப்பார்கள்.

இந்தப் பூமியில் நாம் ஜீவிக்கும் காலம் மிகவும் குறுகியது. நம்முடைய ஜீவியகாலத்தை மாத்திரம் நாம் நோக்கிப் பார்த்தால், நம்மால் சந்தோஷமாயிருக்க முடியாது. இந்தப் பூமி என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் என்பதை சிந்தித்துப் பார்த்து நாம் சந்தோஷப்படவேண்டும். நாம் பார்க்கிற இந்தப் பூமி அதன் முடிவு காலத்திலிருக்கிறது. சகலமும் அக்கினிக்கு இரையாகும். புதிய வானமும் புதிய பூமியும் உண்டாகும். மனுஷன் அழிந்து போகப்போகிற இந்தப் பூமியில்தான் தனக்கு ஆஸ்தியை சேமித்து வைக்கிறான். நாம் இந்தப் பூமியில் பொக்கிஷத்தை சேமித்து வைக்காமல், பரலோகத்தில் சேமித்து வைக்கவேண்டும். அதுவே நமக்கு நித்தியமான பொக்கிஷம்.

ஒவ்வொரு நாளும் சூரியன் உதிக்கிறது. அது உதிக்கிறது போலவே, ஒவ்வொரு நாளும் அஸ்தமிக்கிறது. தான் உதித்த இடத்திற்கே அது திரும்பவும் போய்ச் சேருகிறது. இதுபோலவே மனுஷனுடைய ஜீவியமும் இருக்கிறது. மண்ணிலிருந்து உண்டான மனுஷன் மண்ணுக்கே திரும்புகிறான். சூரியன் காலையில் உதிக்கும்போது பிரகாசமாயிருக்கிறது. மாலையில் அஸ்தமிக்கிறபோது அது மங்கிப்போகிறது. அதுபோலவே, மனுஷனும் பிறக்கும்போது சந்தோஷமாய்ப் பிறக்கிறான். சந்தோஷமாய் ஜீவிக்கிறான். மரிக்கும்போதோ ஒன்றுமில்லாமல் மங்கிப்போகிறான்.

சூரியன் இரவிலே அஸ்தமித்தாலும் அது மறுநாள் காலையிலே மறுபடியும் உதிக்கும். ஆனால் மனுஷனோ மண்ணுக்குள் போய்விட்டால், அவன் திரும்பவும் வரமாட்டான்.

"ஒரு மரத்தைக்குறித்தாவது நம்பிக்கையுண்டு; அது வெட்டிப்போடப்பட்டாலும் திரும்பத் தழைக்கும், அதின் இளங்கிளைகள் துளிர்க்கும்; அதின் வேர் தரையிலே பழையதாகி, அதின் அடிக்கட்டை மண்ணிலே செத்தாலும், தண்ணீரின் வாசனையினால் அது துளிர்த்து, இளமரம்போலக் கிளைவிடும். மனுஷனோவென்றால் செத்தபின் ஒழிந்துபோகிறான், மனுபுத்திரன் ஜீவித்துப்போனபின் அவன் எங்கே? தண்ணீர் ஏரியிலிருந்து வடிந்து, வெள்ளம் வற்றிச் சுவறிப்போகிறது போல, மனுஷன் படுத்துக்கிடக்கிறான், வானங்கள் ஒழிந்துபோகுமளவும் எழுந்திருக்கவும் இல்லை, நித்திரை தெளிந்து விழிக்கிறதும் இல்லை" (யோபு 14:7-12).

இந்தப் பிரபஞ்சத்திலுள்ள எல்லா காரியங்களும் அசைந்துகொண்டேயிருக்கிறது. ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் போய்க்கொண்டிருக்கிறது. காற்று தெற்கே போய் வடக்கே சுற்றுகிறது. அது சுழன்று சுழன்று அடிக்கிறது. தான் சுற்றின இடத்திற்கே திரும்பவும் வந்து சேருகிறது. காற்றிற்கு ஓய்வில்லை. அதுபோலவே நாம் இந்தப் பிரபஞ்சத்தில் ஜீவிக்கிற காலம் வரையிலும் நமக்கும் ஓய்வில்லை. காற்றைப்போலவே நாமும் சுழன்று சுழன்று வருகிறோம். நாம் சுற்றின இடத்திற்கே திரும்பி வந்துவிடுகிறோம். எங்கே போகிறோம், எங்கே வருகிறோம் என்பதும் நமக்குப்புரியவில்லை. ஓய்வில்லாமல் எங்கேயோ போய்க்கொண்டிருக்கிறோம்.

இந்தப் பிரபஞ்சத்தில் எல்லாமே வருத்தத்தினால் நிறைந்திருக்கிறது. தனக்குப் பலன் கிடைக்கவில்லை என்றாலும், மனுஷன் பிரயாசப்பட்டுக்கொண்டுதான் இருக்கிறான். எல்லா நதிகளும் சமுத்திரத்திலே ஓடி விழுந்தாலும், சமுத்திரம் நிரம்பாது. சமுத்திரத்தின் அலைகள் ஒருபோதும் ஓய்ந்திருக்காது. அதுபோலவே மனுஷனுடைய மனதும் எப்போதும் சிந்தித்துக்கொண்டேயிருக்கும். அதற்கு ஓய்வே இருக்காது. சூரியன், காற்று, நதிகள் எப்போதும் இயங்கிக்கொண்டிருந்தாலும், ஒருபோதும் ஓய்ந்திருப்பதில்லை.

அதுபோலவே மனுஷனும் எல்லா பிரயாசமும் ஏறெடுத்தாலும், அவனும் ஓய்ந்திருக்கப்போவதில்லை. மனுஷனுக்குத் திருப்தி உண்டாகப்போவதில்லை. எல்லா நதிகளும் சமுத்திரத்தில் விழுந்தாலும், சமுத்திரம் நிரம்பாது. அதுபோலவே மனுஷனுக்கு எவ்வளவுதான் ஐசுவரியம் சேர்ந்தாலும் அவனுடைய ஆசை அடங்காது. தனக்கு இன்னும் அதிகமாய் வேண்டுமென்றுதான் சொல்லுவான். பொங்குகிற கடல் ஓய்ந்திருக்காது. மனுஷனுடைய மனமும் பேராசையினால் பொங்கும்போது அவனுக்கு ஓய்வும் நிம்மதியும் இருக்காது.

பூமி இப்போதிருக்கிற பிரகாரம் என்றைக்கும் நிலைத்திருக்கிறது. சூரியனும், காற்றும், நதிகளும் ஏதாவது ஒரு திசையில் போய்க்கொண்டேயிருக்கிறது. நாம் சூரியனைப் பார்ப்பதற்குப் பதிலாக, நம்முடைய கண்களை ஏறெடுத்து சூரியனுக்கு அப்பாலும் பார்க்கவேண்டும். அங்கு நீதியின் சூரியனாகிய தேவனாகிய கர்த்தரை நம்முடைய மனக்கண்களால் பார்க்க முடியும். அவரிடத்தில் நமக்கு ஆறுதலும் நிம்மதியும் உண்டு.

நாம் இந்தப் பூமியில் சந்தோஷத்தைத் தேடுவதற்குப் பதிலாக, புதிய பூமியை நோக்கிப் பார்க்கவேண்டும். புதிய பூமியில் நமக்கு நித்திய ஜீவன் உண்டு. இந்தப் பூமிக்குரிய காரியங்கள் நமக்கு திருப்தியைக் கொடுக்காது. நாம் இன்னும் புதிய காரியங்களை அறிந்துகொள்ளவேண்டும் என்று விரும்புவோம். காண்கிறதினால் கண் திருப்தியாகிறதில்லை. கேட்கிறதினால் செவி நிரப்பப்படுகிறதுமில்லை.

முன் இருந்ததே இனிமேலும் இருக்கும் பிர 1:9-11

பிர 1:9. முன் இருந்ததே இனிமேலும் இருக்கும்; முன் செய்யப்பட்டதே பின்னும் செய்யப்படும்; சூரியனுக்குக் கீழே நூதனமானது ஒன்றுமில்லை.

பிர 1:10. இதைப்பார், இது நூதனம் என்று சொல்லப்படத்தக்க காரியம் ஒன்றுண்டோ? அது நமக்கு முன்னுள்ள பூர்வகாலங்களிலும் இருந்ததே.

பிர 1:11. முன் இருந்தவைகளைப்பற்றி ஞாபகம் இல்லை; அப்படியே பின்வரும் காரியங்களைப் பற்றியும் இனிமேலிருப்பவர்களுக்கு ஞாபகம் இராது.

இந்தப் பிரபஞ்சத்தில் இதுவரையிலும் ஏராளமான சந்ததியார் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்களில் நாம் விசேஷித்தவர்கள். நம்முடைய காலங்களில் நூதனமான அநேக காரியங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. மனுஷருடைய அறிவும் விருத்தியாயிருக்கிறது. பழைய காலத்தைவிட, இப்போதுள்ள காலத்தில் புதிய கண்டுபிடிப்புக்கள் ஏராளமாகயிருக்கிறது என்று நினைத்து நாம் பெருமைப்படுகிறோம். நாகரீகம் மாறியிருக்கிறது. விஞ்ஞானத்தில் முன்னேற்றம் உண்டாயிருக்கிறது. விஞ்ஞானிகள் புதிய இயந்திரங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். கல்வியிலும் முன்னேற்றம் உண்டாயிருக்கிறது. ஆகையினால் பழங்காலத்தைவிட, தற்காலம் அறிவிலும், ஆற்றலிலும், கண்டுபிடிப்புக்களிலும், விஞ்ஞானத்திலும் சிறந்திருப்பதாக மனுஷர் நினைக்கிறார்கள். ஆனால் இது தவறான எண்ணம் என்று பிரசங்கி சொல்லுகிறார்.

இயற்கையில் இன்னும் ஒரு மாற்றமும் உண்டாகவில்லை. முன் இருந்ததே இனிமேலும் இருக்கும்; முன் செய்யப்பட்டதே பின்னும் செய்யப்படும்; சூரியனுக்குக் கீழே நூதனமானது ஒன்றுமில்லை. நூதனம் என்று சொல்லப்படத்தக்க காரியம் ஒன்றுமில்லை. அது நமக்கு முன்னுள்ள பூர்வ காலங்களிலும் இருந்தது. இயற்கையின் வல்லமை எப்போதும் மாறாமல் அப்படியே இருக்கிறது. ஆதிகாலத்தில் சூரியன் எப்படி உதித்ததோ அப்படித்தான் இப்போதும் உதிக்கிறது.

இயற்கை மாத்திரமல்ல, மனுஷனும் மாறாமல் அப்படியே இருக்கிறான். ஆதிகாலத்தில் மனுஷர் கர்த்தரைவிட்டு விலகிப்போனதுபோல இப்போதும் விலகிப்போயிருக்கிறார்கள். ஆதாமும் ஏவாளும் கர்த்தருக்குக் கீழ்ப்படியாமல் போனதுபோலவே, இப்போதுள்ள ஜனங்களும் கர்த்தருக்குக் கீழ்ப்படியாமலிருக்கிறார்கள். மனுஷருடைய இருதயம் அக்காலத்திலும், இக்காலத்திலும் பாவத்தினால் கறைபட்டிருக்கிறது. மனுஷனுடைய பேராசைகளும், முறுமுறுப்புக்களும், புறங்கூறுதலும், தீயசுபாவங்களும் அன்றுபோல் இன்றும், மாறாமலிருக்கிறது.

நம்முடைய முன்னோர்கள் இயற்கையின் காரியங்களை அதிகமாய்ப் பயன்படுத்தவில்லை. நம்முடைய காலத்தில் விஞ்ஞானிகள் பலவிதமான ஆராய்ச்சிகளைச் செய்து, புதிய காரியங்களையெல்லாம் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆனாலும் அவை நூதனமானதல்ல. எந்திரம் நூதனமாயிருக்கலாம். ஆனால் அந்த எந்திரத்தை இயக்குகிற அடிப்படை காரியங்கள் பூர்வகாலங்களிலும் இருந்தது.

நாம் கிறிஸ்துவுக்குள் வரும்போது நம்முடைய ஜீவன் புதிதாகும். பழையவை ஒழிந்துபோகும். "இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2கொரி 5:17) என்று அப்போஸ்தலர் பவுல் சொல்லுகிறார். சுவிசேஷத்தினால் நம்முடைய வாயில் புதுப்பாடல்கள் புறப்பட்டு வருகிறது. இரட்சிக்கப்பட்டோரின் இருதயம் மாற்றமடைகிறது. மனுஷருடைய இருதயத்திலே கிறிஸ்துவினால் மாத்திரமே மாற்றமுண்டாகும். கிறிஸ்துவானவர் மாத்திரமே மனுஷருடைய இருதயத்தைப் புதிதாக்குகிறார்.

ஒரு சிலர் இந்தப் பிரபஞ்சத்தில் ஐசுவரியவான்களாயிருப்பார்கள். அதிகாரத்தில் அமர்ந்து ஆட்சிசெய்வார்கள். தங்களுடைய பெயரும் புகழும் நித்தியகாலமாய் நிலைத்திருக்குமென்று நினைப்பார்கள். தங்களுடைய கிரியைகளை அதிகமாய் விளம்பரப்படுத்துவார்கள். பிற்காலத்தில் வரப்போகிற ஜனங்களும், தங்களுடைய சாதனைகளை மறவாமல் நினைத்துக்கொண்டிருப்பார்கள் என்று நினைக்கிறார்கள். ஆனால் முன்னிருந்தவைகளைப்பற்றிய ஞாபகம் மனுஷருக்கு இருக்காது. பின்வரும் காரியங்களைப்பற்றியும் இனிமேல் இருப்பவர்களுக்கு ஞாபகம் இராது. ஜனங்கள் பழையதை மறந்துவிடுவார்கள்.

வரலாற்றில் ஒரு சிலரைப்பற்றி மாத்திரமே நாம் இன்னும் நினைத்துக் கொண்டிருக்கிறோம். அவர்களுடைய வீரச்செயல்களை மாத்திரமே இன்றும் பேசிக்கொண்டிருக்கிறோம். நாம் வரலாற்றுக்காலத்தில் பிரபல்யமாயிருந்த எல்லோரைப்பற்றியும் பேசுவதில்லை. அவர்கள் அவர்களுடைய காலத்தில் பிரபல்யமானவர்கள். நம்முடைய காலத்திலுள்ளவர்கள் அவர்களையும், அவர்களுடைய சாகசங்களையும் மறந்துவிட்டார்கள். நாமும் இப்போது பெரியவர்களாகயிருக்கலாம். பெரிய சாதனைகளைச் செய்திருக்கலாம். நம்முடைய காலத்திலுள்ளவர்கள் நம்மைப் புகழ்ந்து பேசலாம். ஆனாலும் நமக்குப் பின்வரும் சந்ததியார் நம்மையும் மறந்துவிடுவார்கள். நம்முடைய சாதனைகளையும் மறந்துவிடுவார்கள். எல்லாமே காலப்போக்கில் மறைந்துபோகும்.

எல்லாம் மாயை
பிர 1:12-18

பிர 1:12. பிரசங்கியாகிய நான் எருசலேமில் இஸ்ரவேலருக்கு ராஜாவாயிருந்தேன்.

பிர 1:13. வானத்தின்கீழ் நடப்பதையெல்லாம் ஞானமாய் விசாரித்து ஆராய்ச்சி செய்கிறதற்கு என் மனதைப் பிரயோகம் பண்ணினேன்; மனுபுத்திரர் இந்தக் கடுந்தொல்லையில் அடிபடும்படிக்கு தேவன் அதை அவர்களுக்கு நியமித்திருக்கிறார்.

பிர 1:14. சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிற காரியங்களையெல்லாம் கவனித்துப் பார்த்தேன்; இதோ, எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது.

பிர 1:15. கோணலானதை நேராக்கக்கூடாது; குறைவானதை எண்ணிமுடியாது.

பிர 1:16. இதோ, நான் பெரியவனாயிருந்து, எனக்குமுன் எருசலேமிலிருந்த எல்லாரைப்பார்க்கிலும் ஞானமடைந்து தேறினேன்; என் மனம் மிகுந்த ஞானத்தையும் அறிவையும் கண்டறிந்தது என்று நான் என் உள்ளத்திலே சொல்லிக்கொண்டேன்.

பிர 1:17. ஞானத்தை அறிகிறதற்கும், பைத்தியத்தையும் மதியீனத்தையும் அறிகிறதற்கும், நான் என் மனதைப் பிரயோகம் பண்ணினேன்; இதுவும் மனதுக்குச் சஞ்சலமாயிருக்கிறதென்று கண்டேன்.

பிர 1:18. அதிக ஞானத்திலே அதிக சலிப்புண்டு; அறிவுபெருத்தவன் நோவுபெருத்தவன்.

நம்முடைய ஞானத்தைப்பற்றியும், கல்வியறிவைப்பற்றியும் நாம் பெருமையோடு பேசிக்கொள்கிறோம். இவையெல்லாம் மாயையும், மனதிற்கு சஞ்சலமுமாயிருக்கிறது என்று சாலொமோன் சொல்லுகிறார். பிரசங்கியாகிய சாலொமோன் எருசலேமில் இஸ்ரவேலுக்கு ராஜாவாயிருந்தார். வானத்தின்கீழ் நடப்பதையெல்லாம் ஞானமாய் விசாரித்து அறிந்தார். அதைப்பற்றி விரிவாக ஆராய்ச்சி செய்தார். அதற்காக தன்னுடைய மனதை பிரயோகம்பண்ணினார். தேவனுடைய சித்தத்தின் பிரகாரமாகவே, வானத்தின் கீழே ஒவ்வொரு காரியமும் நடைபெறுகிறது. கர்த்தருடைய சித்தமில்லாமல் எதுவும் நடைபெறாது. கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் தடைபடாது.

சாலொமோன் தன்னைப்பற்றிச் சொல்லும்போது, "நான் எருசலேமில் இஸ்ரவேலுக்கு ராஜாவாயிருந்தேன்" என்று சொல்லுகிறார். அக்காலத்தில் அத்தேனே பட்டணம் செல்வச் சிறப்போடிருந்தது. வரலாற்று ஆசிரியர்கள் அத்தேனே பட்டணத்தை "உலகத்தின் கண்" என்று வருணிக்கிறார்கள். ஆனால் சாலொமோனே எருசலேமை மேன்மைப்படுத்துகிறார். எருசேலமில் இஸ்ரவேலருக்கு ராஜாவாகயிருந்ததை உயர்வாக நினைக்கிறார்.

சாலொமோனுக்கு திரளான ஐசுவரியம் இருந்தது. அவர் சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாயிருந்தார். அவருடைய பெயரும் புகழும் உலகமெங்கும் பரம்பிற்று. அவருடைய மேன்மையைப் பார்ப்பதற்கு பல தேசங்களின் ராஜாக்களும், அறிஞர்களும் எருசலேமுக்கு வந்தார்கள். அவர்களோடு கலந்து பேசுவதற்கும், விவாதம்பண்ணுவதற்கும் சாலொமோனுக்கு அதிக வாய்ப்பு கிடைத்து. எருசலேம் நகரம் ஞானிகள் கூடுகிற இடமாயிற்று.

சாலொமோன் வானத்தின்கீழ் நடப்பதையெல்லாம் ஞானமாய் விசாரித்து ஆராய்ச்சி செய்தார். சூரியனுக்குக் கீழே அநேகக் காரியங்கள் நடைபெறுகிறது. தேவனுடைய பராமரிப்பினாலேயே இப்பிரபஞ்சத்தின் காரியங்களெல்லாம் ஆளுகை செய்யப்படுகிறது. மனுஷருடைய சுயபுத்தியினாலோ, சுயவல்லமையினாலோ ஒன்றும் நடைபெறாது. சகலமும் தேவனுடைய பெலத்தினால் நடைபெறுகிறது.

சாலொமோன் ஒரு தேசத்திற்கு ராஜாவாகயிருந்தாலும், ஜனங்களை ஆளுகை செய்வதோடு, ஞானத்தைத் தேடுவதற்கும் தன்னுடைய நேரத்தை செலவுபண்ணினார். சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிற காரியங்களையெல்லாம் பார்த்தார். தன்னுடைய ஞானத்தை பெருமைப்படுத்தவேண்டும் என்னும் நோக்கம் சாலொமோனிடத்தில்லை. எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்த்து, கர்த்தருடைய ஊழியத்தை செய்வதற்கு சாலொமோன் தன்னை தகுதிப்படுத்திக்கொள்கிறார்.

வானத்தின் கீழ் நடப்பதெல்லாம் தேவனுடைய சித்தத்தின் பிரகாரமாக நடைபெறுகிறது. இதை நடைபெறாதவாறு தடைபண்ணுவதற்கு மனுஷருக்குப் பெலனில்லை. இந்தப் பிரபஞ்சத்தில் நடைபெறுகிற அநேகக் காரியங்கள் மனுஷருக்கு நன்மையைக் கொடுப்பதற்குப் பதிலாக தீமையைக் கொடுக்கிறது. மனுபுத்திரர் இந்தக் கடுந்தொல்லையில் அடிபடும்படிக்கு தேவன் அதை அவர்களுக்கு நியமித்திருக்கிறார்.

இயற்கையில் அநேகக் காரியங்கள் நடைபெறுகிறது. வானத்திலும் பூமியிலும் ஏராளமான காரியங்கள் செய்யப்படுகிறது. மனுஷன் தன்னுடைய கைத்திறமையினால் பல பொருட்களை உண்டுபண்ணுகிறான். சமுதாயத்திலே அநேகக் காரியங்களைச் செய்கிறான். தன்னுடைய கையின் பிரயாசங்களில் மனுஷன் திருப்தியடைகிறான். தான் புதிதாக எதையோ சாதித்துபோல பெருமைப்படுகிறான். சாலொமோனோ சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிற எல்லா காரியங்களையும் பார்த்து, "இவையெல்லாம் மாயையும் மனதிற்கு சஞ்சலமுமாயிருக்கிறது" (பிர 1:14) என்று சொல்லுகிறார்.

சாலொமோன் சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிற காரியங்களையெல்லாம் தன்னுடைய கண்களினால் நோக்கிப் பார்க்கிறார். அவர் இஸ்ரவேல் தேசத்தின் வழக்குகளை நேர்த்தியாய் விசாரித்து, நீதியாய் தீர்ப்பு சொல்லுகிறவர். இப்போது மனுஷருடைய கைகளின் கிரியைகளையும் ஆராய்ந்து பார்த்து, நீதியான தீர்ப்பு சொல்லுகிறார். "எல்லாம் மாயை" என்பதே சாலொமோனுடைய தீர்ப்பு.

கர்த்தர் சாலொமோனுக்கு அதிகமான ஞானத்தைக் கொடுத்திருக்கிறார். அவருடைய இருதயத்தில் ஞானம் நிரம்பியிருக்கிறது. தன்னுடைய ஞானத்தினாலும், அறிவினாலும் சாலொமோன் அநேக நன்மைகளை அடைந்திருக்கிறார். தன்னுடைய ஞானத்தை தனக்கு சாதகமாகப் பயன்படுத்தியிருக்கிறார். "இதோ, நான் பெரியவனாயிருந்து, எனக்குமுன் எருசலேமிலிருந்த எல்லாரைப்பார்க்கிலும் ஞானமடைந்து தேறினேன்; என் மனம் மிகுந்த ஞானத்தையும் அறிவையும் கண்டறிந்தது என்று நான் என் உள்ளத்திலே சொல்லிக்கொண்டேன்" (பிர 1:16) என்று சாலொமோன் தன்னுடைய ஞானத்தைப்பற்றிச் சொல்லுகிறார். சாலொமோன் ஒருபோதும் சோம்பேறியாயிருப்பதில்லை. அவர் எப்போதுமே அறிவைத் தேடிக்கொண்டிருக்கிறார். ஞானத்தையும் அறிவையும் கண்டறியவேண்டுமென்று பிரயாசப்படுகிறார்.

எல்லாம் மாயை என்பதே சாலொமோனுடைய பிரதான பிரசங்கச் செய்தி. நம்முடைய பிரயாசங்களின் பலனால் நமக்கு ஒன்றும் உண்டாகப்போவதில்லை. வானத்தின்கீழ் நடப்பதையெல்லாம் சாலொமோன் ஞானமாய் விசாரித்து ஆராய்ச்சி செய்தார். இதற்காக அவர் தன்னுடைய மனதை பிரயோகம்பண்ணினார். மனுஷருடைய பிரயாசமெல்லாம் அவர்களுக்கு பிரயோஜனப்படாமல் கடுந்தொல்லையாய் மாறிற்று.

சரீரத்திற்கு ஆகாரம் தேவை. அதுபோலவே நம்முடைய ஆத்துமாவுக்கும் போஜனம் தேவைப்படுகிறது. நம்முடைய முகத்தின் வேர்வையினால் நாம் போஜனத்தை சம்பாதிக்கிறோம். அதுபோலவே ஆவிக்குரிய போஜனத்தையும் தேடிக்கண்டுபிடிக்கவேண்டும்.

சாலொமோன் சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிற காரியங்களையெல்லாம் கவனித்துப் பார்க்கிறார். எல்லா ஜனங்களும் எதையோ செய்துகொண்டிருக்கிறார்கள். உலகம் முழுவதிலுமுள்ள ஜனங்கள் ஏதாவது ஒரு காரியத்தில் தங்களை ஈடுபடுத்திக்கொள்கிறார்கள். ஆனால் அவையெல்லாமே சாலொமோனுடைய பார்வைக்கு மாயையாயிருக்கிறது. அவை மனுஷருடைய மனதிற்கு சஞ்சலமாயிருக்கிறது என்று சாலொமோன் தீர்மானம்பண்ணுகிறார்.

நாம் இந்த உலகத்தை அதிகமாய்க் கவனித்துப் பார்க்கும்போது, இந்த உலகத்திலுள்ள சஞ்சலங்களை நாம் தாராளமாய்ப் பார்க்கலாம். இதனால் நம்முடைய மனதிற்கு சோர்வும் வருத்தமும் உண்டாகும். மனுஷர் படும் பாடுகளைப் பார்க்கும்போது நம்முடைய கண்களில் கண்ணீர் வரும். ஞானத்தை அறிகிறதற்கும், பைத்தியத்தையும் புத்தியீனத்தையும் அறிகிறதற்கும் சாலொமோன் தன்னுடைய மனதை பிரயோகம்பண்ணினார். இதுவும் அவருடைய மனதிற்கு சஞ்சலமாயிருந்தது.

சாலொமோனைப்போலவே அநேகர் ஞானிகளாகயிருக்கிறார்கள். ஆனால் அவர்களோ ஞானத்தை அறிகிறதற்கு தங்களுடைய மனதை பிரயோகம்பண்ணுவதில்லை. இதைப் பார்க்கும்போதும் சாலொமோனுடைய மனதிற்கு சஞ்சலமுண்டாயிற்று. மனுஷருக்கு கொஞ்சம் ஞானம் வந்தவுடனேயே, அவர்கள் அதில் திருப்தியடைந்துவிடுகிறார்கள். அவர்கள் யாருக்கும் நன்மை செய்வதில்லை. ஒருவருக்கும் பிரயோஜனமாயிருப்பதில்லை.

கோணலானதை நேராக்கக்கூடாது. குறைவானதை எண்ணி முடியாது. மனுஷனுடைய மனதும் சுபாவங்களும் கோணலாயிருக்கிறது. அது குறைவுள்ளதாயிருக்கிறது. மனுஷனுடைய மனதும் சிந்தையும் மாறுபாடுள்ளது.

சாலொமோன் தன்னுடைய ஞானத்தையும், அதிகாரத்தையும், வல்லமையையும் பயன்படுத்தி, தன்னுடைய ராஜ்யத்தை முற்றிலுமாய் சீர்திருத்த முயற்சிபண்ணினார். ஆனால் சாலொமோனால் அதை செய்து முடிக்க முடியவில்லை. இதனால் அவருடைய மனதில் ஏமாற்றமுண்டாயிற்று. இந்த உலகத்தில் ஏராளமான தத்துவஞானிகளும் மேதைகளும் இருக்கிறார்கள். அவர்கள் ஏராளமான தத்துவங்களையும் ஞான வார்த்தைகளையும் சொல்லுகிறார்கள். ஆனாலும் அவர்களுடைய ஞானவார்த்தையினால் மனுஷருடைய அசுத்தமான சுபாவம் சுத்தமாவதில்லை.

ஒரு மனுஷன் கல்வி கற்பதினால் அவனுடைய இயல்பான சுபாவம் மாறுவதில்லை. கல்வியினால் யாருடைய பாவமும் மன்னிப்படுவதுமில்லை. மனுஷருடைய பாவசுபாவத்தை கல்வியறிவு குணப்படுத்தாது. நம்முடைய அறிவும் ஞானமும் குறைவுள்ளது. ஆகையினால் அதை எண்ணி முடியாது. நாம் எவ்வளவு அதிகமாக கற்று அறிந்துகொள்ள முடியுமோ, அவ்வளவு அதிகமாக கற்று அறியவேண்டும். அப்போதுதான் நம்முடைய மெய்யான சுபாவம் நமக்குத் தெரியவரும். நாம் எவ்வளவு கற்றாலும், நாம் இன்னும் கற்கவேண்டியது ஏராளமாய் உள்ளது என்பதை நாம் புரிந்துகொள்ளலாம். நம்முடைய அறிவினால் நம்முடைய அறியாமையை அறிந்துகொள்ளலாம்.

சாலொமோன் இஸ்ரவேல் தேசத்திலே பெரியவராயிருந்தார். எருசலேமிலிருந்த எல்லாரைப் பார்க்கிலும் சாலொமோன் ஞானமடைந்து தேறினார். அவருடைய மனம் மிகுந்த ஞானத்தையும் அறிவையும் கண்டடைந்தது. ஆனாலும் அவருடைய அறிவும் ஞானமும் அவருடைய மனதிற்கு சந்தோஷத்தையும், சமாதானத்தையும், திருப்தியையும் கொடுக்கவில்லை. அது அவருடைய மனதிற்கு சஞ்சலமாயிருந்தது.

ஞானிகளும் தத்துவ மேதைகளும் அதிகமான கல்வியறிவு பெற்றிருக்கிறார்கள். அவர்களுடைய ஞானத்தினால் அவர்களுக்கு சந்தோஷத்திற்குப் பதிலாக துக்கமே உண்டாயிருக்கிறது. சந்தோஷ ஆர்ப்பரிப்புக்குப் பதிலாக, அவர்களுக்கு அழுகையும் புலம்பலும் உண்டாயிருக்கிறது. அதிகஞானத்தினாலே அதிக சலிப்புண்டு. நம்முடைய ஞானம் அதிகரிக்கும்போது நாம் இந்த உலகத்தின் துன்பங்களையும், துயரங்களையும் பிரத்தியட்சமாகப் பார்க்கிறோம். உலகத்தின் வருத்தமும் கவலையும் நம்மையும் தொற்றிக்கொள்கிறது. இதனால் நமக்கு அதிக சலிப்பும் வேதனையும் உண்டாகிறது.

அதிக ஞானத்தினால் அதிக சலிப்பு வரும் என்று பயந்து, நாம் ஞானத்தைத் தேடாமல் இருக்கமுடியாது. நமக்குத் தேவையான ஞானத்தையும் அறிவையும் பெற்றுக்கொள்ள பிரயாசப்படவேண்டும். ஞானத்தினால் வரும் சலிப்பையும் வேதனையையும் சகித்துக்கொள்ளப் பழகவேண்டும். உலகஞானத்தினால் நமக்கு சலிப்பு வரும். இப்பிரபஞ்சத்தில் அறிவு பெருத்தவன் நோவு பெருத்தவனாகயிருக்கிறான். உலகப்பிரகாரமான ஞானம் மெய்யான ஞானமல்ல. கர்த்தரைப்பற்றிய அறிவே மெய்யான அறிவு. கர்த்தருக்குப் பயப்படுவதே ஞானத்தின் ஆரம்பம்.

நாம் உலகஞானத்தைப் பெற்றுக்கொள்ள முயற்சிபண்ணுவதற்குப் பதிலாக, கர்த்தர் கொடுக்கும் ஞானத்தைப் பெற்றுக்கொள்ள வாஞ்சையாயிருக்க வேண்டும். நம்மிடத்தில் உலகத்தைப்பற்றிய அறிவு இல்லாவிட்டாலும், தேவனைப்பற்றிய அறிவு நிரம்பியிருக்கவேண்டும். நாம் கர்த்தரை நம்பி நன்மை செய்யவேண்டும். நாம் கர்த்தருக்காக செய்ய வேண்டிய ஊழியங்களை கவனமாய்ச் செய்யவேண்டும். உலகப்பிரகாரமான காரியங்களில் நம்மை ஈடுபடுத்திக்கொள்வதற்குப் பதிலாக, கர்த்தருக்கு அடுத்த காரியங்களில் நம்மை அர்ப்பணித்துக் கொள்வதுதான் மெய்யான ஞானம்.

2 அதிகாரம்

"எல்லாம் மாயை" என்று சாலொமோன் சொல்லுகிறார். சாலொமோன் தன்னுடைய சந்தோஷத்திற்கு உலகத்தையும், உலகத்தின் காரியங்களையும் நோக்கிப் பார்த்தார். ஆனால் அவரால் உலகத்திலிருந்து மெய்யான சந்தோஷத்தைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. மாம்சப்பிரகாரமான சந்தோஷமும் நமக்கு மெய்யான சந்தோஷத்தைத் தராது. இன்பமும் மாயை. மாம்சத்தின் சந்தோஷமும் மாயை. சாலொமோனுக்கு எதிலும் திருப்தி உண்டாகவில்லை (பிர 2:1-11).

சாலொமோன் உலகத்தைப் பார்ப்பதை நிறுத்திவிட்டு, தன்னுடைய சந்தோஷத்தைப் பெற்றுக்கொள்ள ஞானத்தை நோக்கிப் பார்த்தார். ஞானமும் அவருக்கு மெய்யான சந்தோஷத்தைக் கொடுக்கவில்லை (பிர 2:12-16). மனுஷனுக்கு ஐசுவரியத்தினால் சந்தோஷமுண்டாகும் என்று நினைத்தார். ஆனால் சாலொமோனுக்கு ஐசுவரியமும் மெய்யான சந்தோஷத்தைக் கொடுக்கவில்லை (பிர 2:17-23). மெய்யான ஞானமும், அறிவும் இன்பமும் தேவனிடமிருந்தே நமக்கு வரும். நம்முடைய சுயமுயற்சியினால் சம்பாதிக்க நினைக்கும் ஞானமும், அறிவும், இன்பமும் மாயையாகவே இருக்கிறது. இது மனதிற்கு சஞ்சலமாயிருக்கும்.

சந்தோஷம்
பிர 2:1,2

பிர 2:1. நான் என் உள்ளத்திலே சொல்லிக் கொண்டது என்னவென்றால்: வா, இப்பொழுது உன்னைச் சந்தோஷத்தினாலே சோதித்துப் பார்ப்பேன்; இன்பத்தை அநுபவி என்றேன்; இதோ, இதுவும் மாயையாயிருந்தது.

பிர 2:2. நகைப்பைக்குறித்து, அது பைத்தியம் என்றும், சந்தோஷத்தைக்குறித்து, அது என்ன செய்யும்? என்றும் சொன்னேன்.

சாலொமோன் மெய்யான சந்தோஷத்தைப் பெற்றுக்கொள்ளும் வழிகளை சிந்தித்துப் பார்க்கிறார். உலகப்பிரகாரமான காரியங்களில் அவர் சந்தோஷத்தைத் தேடிப்பார்த்தார். எதுவுமே அவருக்கு மெய்யான சந்தோஷத்தைக் கொடுக்கவில்லை. அவருடைய உள்ளத்தில் எல்லாமே மாயையாய்த் தெரிந்தது. தன்னுடைய கருத்துக்களை மற்ற ஞானிகளிடம் பகிர்ந்து கொண்டார். தத்துவ மேதைகளோடு பேசினார். தன்னுடைய அரச சபையிலுள்ள பிரபுக்களோடு தன்னுடைய கருத்துக்களையெல்லாம் பகிர்ந்துகொண்டார். ஆனாலும் அவருக்கு மெய்யான சந்தோஷம் கிடைக்கவில்லை. சாலொமோனுக்கு எதிலும் திருப்தி உண்டாகவில்லை.

ஞானத்தினால் சந்தோஷத்தை அடையலாம் என்று நினைத்தவர் இப்போது மாம்சப்பிரகாரமான சந்தோஷத்தை நினைத்துப் பார்க்கிறார். "இன்பத்தை அனுபவி" என்று தனக்குத்தானே சொல்லிக் கொள்கிறார். உலகக்கவலைகளையெல்லாம் தன்னைவிட்டு நீக்கிவிட்டு, எப்போதும் இன்பமாயிருக்க வேண்டுமென்று முயற்சி பண்ணுகிறார். ஆனால் இதுவும் சாலொமோனுக்கு மாயையாயிருக்கிறது.

தரித்திரராயிருக்கிறவர்களில் அநேகர் சந்தோஷமாயிருக்கிறார்கள். ஐசுவரியத்தினால் நமக்கு மெய்யான சந்தோஷம் உண்டாகாது. பிச்சைக்காரர்களில் அநேகர் மனநிம்மதியோடு இருக்கிறார்கள். இவர்களிடத்தில் ஐசுவரியமில்லை. ஆனால் சந்தோஷமிருக்கிறது. ஐசுவரியவான்களில் அநேகர் சந்தோஷம் இழந்து வருத்தத்தோடிருக்கிறார்கள். சாலொமோன் இதை நோக்கிப் பார்த்து ஐசுவரியத்திற்கும் சந்தோஷத்திற்கும் சம்மந்தமில்லை என்று தீர்மானம்பண்ணுகிறார்.

ஐசுவரியம் இருந்தால் நமக்கு எல்லாம் கிடைக்குமென்று சிலர் நினைக்கிறார்கள். ஐசுவரியத்தின் மூலமாய் தங்களுடைய மாம்சப்பிரகாரமான ஆசைகளையெல்லாம் நிறைவேற்றலாம் என்று எண்ணிக்கொள்கிறார்கள். சாலொமோனும் அவர்களைப்போலவே தன்னுடைய உள்ளத்தில் சொல்லிக்கொண்டார். "வா இப்பொழுது உன்னை சந்தோஷத்தினாலே சோதித்துப் பார்ப்பேன், இன்பத்தை அனுபவி" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டார். அவர் எவ்வளவுதான் இன்பத்தை அனுபவித்தாலும், அவருக்கு மெய்யான சந்தோஷம் கிடைக்கவில்லை. முடிவில், "இதோ, இதுவும் மாயையாயிருந்தது" என்று தீர்மானித்துவிடுகிறார்.

மெய்யான சந்தோஷத்தைப் பெற்றுக்கொள்வதற்கு சாலொமோன் பலவழிகளில் முயற்சி பண்ணுகிறார். ஒவ்வொன்றையும் சோதித்துப் பார்க்கிறார். நகைப்பதினால் தனக்கு சந்தோஷம் வரும் என்று நினைத்து, அதைச் சோதித்துப் பார்க்கிறார். ஆனால் நகைப்பு அவருக்கு பைத்தியமாயிருக்கிறது. நாம் நகைப்பதிலும் ஒரு அளவு இருக்கவேண்டும். ஒரு கட்டுப்பாடு இருக்கவேண்டும். அதுதான் நல்லது. அளவுக்கு அதிகமாக, கட்டுப்பாடில்லாமல் நகைப்பது பைத்தியமாயிருக்கும்.

நாம் கடினப்பட்டு வேலை செய்கிறோம். உடலை வருத்துகிறோம். வியர்வையை சிந்துகிறோம். நம்முடைய சரீர களைப்பு நீங்கவேண்டுமென்றால் நாம் ஓய்வு எடுக்கவேண்டும். ஓய்வு நேரத்தில் சந்தோஷமாயிருக்கவேண்டும். அதிகமாக ஓய்வெடுத்தால் நம்முடைய சரீரம் சோம்பலாகிவிடும். அதிகமான நகைப்பு பைத்தியமாயிருக்கும். அதிகமான ஓய்வினால் நமக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகாது. நாம் நகைக்கும்போது ஒருவேளை நமக்கு ஓரளவு சந்தோஷம் கிடைக்கலாம். இது தற்காலிகமான சந்தோஷம்தான். இந்த சந்தோஷம் நீடித்து நிலைக்காது.

மதுபானம்
பிர 2:3

பிர 2:3. வானத்தின்கீழ் மனுபுத்திரர் உயிரோடிருக்கும் நாளளவும் பெற்று அநுபவிக்கத்தக்கது இன்னதென்று அறியும் பொருட்டு, என் இருதயத்தை ஞானத்தால் தேற்றிக்கொண்டிருக்கும் போதே, நான் என் தேகத்தை மதுபானத்தால் சீராட்டிக் கொண்டிருக்கவும், மதியீனத்தைப் பற்றிக்கொண்டிருக்கவும் என் உள்ளத்தில் வகைதேடினேன்.

சாலொமோன் சந்தோஷத்தைத் தேடி அலைந்தார். நகைத்துப் பார்த்தார். தான் விரும்பதையெல்லாம் செய்து பார்த்தார். அவருக்கு மெய்யான சந்தோஷம் கிடைக்கவில்லை. தன்னுடைய வாய்க்கு ருசியாக நன்றாகப் புசித்தால், அல்லது நன்றாக பானம்பண்ணினால் தனக்கு சந்தோஷமுண்டாகும் என்று சாலொமோன் நினைத்தார். இதற்காக தன் தேகத்தை மதுபானத்தால் சீராட்டிக்கொண்டிருக்க தன்னுடைய உள்ளத்தில் வகை தேடினார்.

சாலொமோனிடத்தில் குடித்து வெறித்திருக்கும் பழக்கம் கிடையாது. ஆனாலும் மதுபானத்தை மட்டாய்ப் பயன்படுத்திப் பார்த்தார். மதுபானத்தினால் தனக்கு சந்தோஷம் கிடைக்குமா என்று சோதித்துப் பார்த்தார். இது ஒரு அபாயகரமான சோதனை. இந்த சோதனையினால் மனுஷருக்கு ஆபத்து வரும். சோதிப்பதற்காக மதுபானம் பண்ணுகிறவர்கள், முடிவில் மதுபானத்திற்கு அடிமைகளாகிவிடுவதற்கும் வாய்ப்புள்ளது. ஆரம்பத்தில் மதுபானம் அவர்களுக்கு மகிழ்ச்சியாகயிருக்கலாம். முடிவில் அதே மதுபானம் அவர்களுடைய சரீர ஆரோக்கியத்தைக் கொன்றுபோடும். அவர்களுடைய ஆயுசுகாலத்தைக் குறைத்துவிடும்.

சாலொமோன் மதியீனத்தைப் பற்றிக்கொண்டிருக்க வேண்டும் என்று தன் உள்ளத்தில் வகைதேடுகிறார். சாலொமோனுக்கு ஞானத்தினால் சந்தோஷம் கிடைக்கவில்லை. தனக்கு மதியீனத்தினால் சந்தோஷம் கிடைக்குமா என்று சோதித்துப் பார்க்கிறார். ஞானம் மனுஷனை சந்தோஷப்படுத்தாதபோது, மதியீனம் மனுஷனை நிச்சயமாய் சந்தோஷப்படுத்தாது. நாம் மதியீனத்தைப் பற்றிக்கொண்டால் மதியீனம் நம்மைப் பற்றிக்கொள்ளும். அது நம்மை ஆளுகை செய்யும்.

சாலொமோன் மதியீனத்தைப் பற்றிக்கொண்டிருக்க தன்னுடைய உள்ளத்தில் வகைதேடினாலும், அவர் ஞானத்தைப் பெற்றுக்கொள்ளவே முயற்சி செய்தார். தன்னிடத்திலுள்ள ஞானத்தைப் பயன்படுத்தி, மெய்யான சந்தோஷத்தை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்று ஆராய்ந்து பார்த்தார். ஆகையினால் மதியீனம் சாலொமோனைப் பாதிக்கவில்லை. அவர் சோதனைக்காக பயன்படுத்திய மதியீனத்தைவிட, ஞானம் அவரிடத்தில் மிகவும் அதிகமாயிருந்தது.

சாலொமோன் மெய்யான சந்தோஷத்தைப் பெற்றுக்கொள்ள பல வழிகளிலும் முயற்சிபண்ணினார். எல்லாமே அவருக்கு மாயையாயிருந்தது. மதுபானமும் மாயை. மதுபானம் தன்னைப் பருகுகிறவர்களை பரியாசம்பண்ணும். மதுபானத்தைப் பருகுகிறவர்கள், குடிபழக்கத்திற்கு அடிமைகளாகிவிடுவார்கள். "ஒரு குறிப்பிட்ட அளவு மாத்திரமே மதுபானம் பண்ணுவேன்" என்று யாராலும் கட்டுப்பாடோடு இருக்க முடியாது. ஒரு சிலர் ஆரம்பத்தில் தங்களைக் கட்டுப்படுத்துவார்கள். முடிவில் மதுபானம் அவர்களைக் கட்டுப்படுத்தும். அவர்களை ஆளுகை செய்யும்.

மதுபானம் பண்ணுகிறவன் தன்னுடைய தாகத்தைத் தீர்ப்பதற்கு அதை பானம்பண்ணுவதில்லை. தன்னுடைய ஆசையையும், குடிவெறியையும் நிறைவேற்றுவதற்கே மதுபானம்பண்ணுகிறான். முடிவில் அவன் மதுபானத்திற்கு அடிமையாகிவிடுகிறான். அடிமைக்கு சந்தோஷமில்லை.

வானத்தின்கீழ் மனுபுத்திரர் உயிரோடிருக்கும் நாளளவும் பெற்று அனுபவிக்கத்தக்கது இன்னதென்று அறியும் பொருட்டு சாலொமோன் தன் இருதயத்தை ஞானத்தால் தேற்றிக்கொண்டிருக்கிறார். நாம் ஒன்றும் செய்யாமல் சோம்பேறியாக, சும்மாயிருந்தால் நமக்கு ஒருபோதும் சந்தோஷம் வரப்போவதில்லை. நாம் சரியான காரியங்களைச் செய்யவேண்டும். நாம் பெரிய காரியங்களை செய்கிறோமா என்பது முக்கியமல்ல. நாம் சரியான காரியங்களை செய்யவேண்டும் என்பது தான் முக்கியம். நாம் அதிகக் கடினமாய் உழைக்கிறோமா என்பதைவிட, சரியான வேலையை செய்கிறோமா என்பதுதான் முக்கியம்.

தான் உயிரோடிருக்கும் நாளளவும் நன்மையைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்னும் நோக்கத்தோடு மதுபானம் பண்ணுகிறவர்களுக்கு ஏமாற்றமே உண்டாகும். மதுபானம் மெய்யான சந்தோஷத்தைத் தராது. சந்தோஷத்தைப் பெற்றுக்கொள்ள சாலொமோன் தன் தேகத்தை மதுபானத்தால் சீராட்டிப் பார்த்தார். ஆனால் அவருக்கு சந்தோஷம் கிடைக்கவில்லை. ஆகையினால் மதுபானமும் மாயை என்று தீர்மானம் பண்ணுகிறார். மதுபானத்தினாலும் நமக்கு சந்தோஷம் வராது. மதியீனத்தினாலும் நமக்கு சந்தோஷம் வராது. தேவனுடைய கிருபையினால் மாத்திரமே நமக்கு சந்தோஷம் வரும். நம்முடைய சந்தோஷம் தேவனுடைய அநுக்கிரகம்.

பெரிய வேலைகள்
பிர 2:4-11

பிர 2:4. நான் பெரிய வேலைகளைச் செய்தேன்; எனக்காக வீடுகளைக் கட்டினேன், திராட்சத்தோட்டங்களை நாட்டினேன்.

பிர 2:5. எனக்காகத் தோட்டங்களையும் சிங்காரவனங்களையும் உண்டாக்கி, அவைகளில் சகலவகைக் கனிவிருட்சங்களையும் நாட்டினேன்.

பிர 2:6. மரங்கள் பயிராகும் தோப்புக்கு நீர்ப்பாய்ச்சுகிறதற்குக் குளங்களை உண்டு பண்ணினேன்.

பிர 2:7. வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் சம்பாதித்தேன்; வீட்டிலும் வேலைக்காரர் பிறந்தார்கள்; எனக்குமுன் எருசலேமிலிருந்த எல்லாரைப்பார்க்கிலும் ஆடுமாடு முதலான திரண்ட ஆஸ்திகள் எனக்கு இருந்தது.

பிர 2:8. வெள்ளியையும் பொன்னையும், ராஜசம்பத்தையும் மாகாணங்களிலுள்ள பொருள்களையும் சேகரித்தேன்; சங்கீதக்காரரையும் சங்கீதக்காரிகளையும், மனுபுத்திரருக்கு இன்பமான பலவித வாத்தியங்களையும் சம்பாதித்தேன்.

பிர 2:9. எனக்குமுன் எருசலேமிலிருந்த எல்லாரைப்பார்க்கிலும் நான் பெரியவனும் திரவிய சம்பன்னனுமானேன்; என் ஞானமும் என்னோடேகூட இருந்தது.

பிர 2:10. என் கண்கள் இச்சித்தவைகளில் ஒன்றையும் நான் அவைகளுக்குத் தடைபண்ணவில்லை; என் இருதயத்துக்கு ஒரு சந்தோஷத்தையும் நான் வேண்டாமென்று விலக்கவில்லை; நான் செய்த முயற்சிகளிலெல்லாம் என் மனம் மகிழ்ச்சி கொண்டிருந்தது; இதுவே என் பிரயாசங்கள் எல்லாவற்றினாலும் எனக்கு வந்த பலன்.

பிர 2:11. என் கைகள் செய்த சகல வேலைகளையும், நான் பட்ட எல்லாப் பிரயாசத்தையும் கண்ணோக்கிப் பார்த்தேன்; இதோ, எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருந்தது; சூரியனுக்குக் கீழே பலன் ஒன்றுமில்லை.

மதுபானம் பண்ணுவது மதியீனமானது என்பதை சாலொமோன் ராஜா அறிந்துகொள்கிறார். மெய்யான சந்தோஷத்தைப் பெறுவதற்கு வேறு வழிகளில் முயற்சிபண்ணுகிறார். பொழுதுபோக்கான காரியங்களிலும், கண்களின் பார்வைக்கு இனிமையாயிருக்கும் காரியங்களிலும், மனதிற்கு ரம்மியமாயிருக்கும் காரியங்களிலும் சாலொமோன் தன்னுடைய மனதை ஈடுபடுத்துகிறார். சாலொமோன் ராஜா தன்னை கட்டுமான வேலைகளில் அதிகமாய் ஈடுபடுத்திக்கொள்கிறார். நகரத்திலும், நகரத்திற்கு வெளியே கிராமங்களிலும் அநேக கட்டிடங்களைக் கட்டுகிறார். தன்னுடைய ராஜ்யபாரத்தின் ஆரம்ப காலத்தில் சாலொமோன் தேவனுக்காக ஒரு ஆலயத்தைக் கட்டினார். இதற்காக அவர் ஏராளமான ஐசுவரியத்தை செலவுபண்ணினார்.

தேவாலயத்தைக் கட்டின பின்பும், சாலொமோன் மேலும் அநேகக் கட்டிடங்களைக் கட்டினார். எத்தனை கட்டிடங்களைக் கட்டினாலும், கட்டிடம் கட்டவேண்டும் என்னும் ஆசை அவருடைய இருதயத்தில் இன்னும் ஏராளமாயிருந்தது. தனக்காக ஆடம்பரமான மாளிகைகளைக் கட்டினார். கட்டிட வேலைகளில் தரித்திரர்களைப் பயன்படுத்தி அவர்களை ஆதரித்தார். தன்னுடைய பின்சந்ததியாருக்கு பிரயோஜனமாயிருக்கும் என்று யோசித்து, அவர் தனக்காகவும், தன்னுடைய குடும்பத்தாருக்காகவும் வீடுகளைக் கட்டினார்.

சாலொமோன் கட்டின கட்டிடங்களைப்பற்றி வேதாகமத்தில் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. "பிடித்த அமஞ்சி ஆட்டுகளைக்கொண்டு சாலொமோன் ராஜா தான் கர்த்தருடைய ஆலயத்தையும், தன் அரமனையையும், மில்லோவையும், எருசலேமின் மதிலையும், ஆத்சோரையும், மெகிதோவையும், கேசேரையும் கட்டினான். கேசேரை ஏன் கட்டினான் என்றால், எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் புறப்பட்டுவந்து, அந்தக் கேசேர்ப்பட்டணத்தைப் பிடித்து, அதை அக்கினியால் சுட்டெரித்து, அதிலே குடியிருந்த கானானியரைக் கொன்றுபோட்டு, அதைச் சாலொமோனின் மனைவியாகிய தன் குமாரத்திக்குச் சீதனமாகக் கொடுத்திருந்தான். சாலொமோன் அந்தக் கேசேர்ப்பட்டணத்தையும், கீழ்ப்பெத்தொரோனையும், பாலாத்தையும், வனாந்தரவெளியிலுள்ள தத்மோரையும், தனக்கு இருக்கிற ரஸ்துக்களை வைக்கும் சகல பட்டணங்களையும், இரதங்கள் இருக்கும் பட்டணங்களையும், குதிரை வீரர் இருக்கும் பட்டணங்களையும், எருசலேமிலும் லீபனோனிலும், தான் அரசாண்ட தேசமெங்கும் தனக்கு இஷ்டமானதையெல்லாம் கட்டினான்" (1இராஜா 9:15-19). சாலொமோன் கட்டிய கட்டிட வேலைகள் எல்லாமே பெரிய வேலைகளாகும்.

சாலொமோன் நல்ல வேலையை செய்யவேண்டும் என்று விரும்பினார். எது நல்ல வேலை என்று ஆராய்ந்து பார்த்தார். ஆனால் அவர் நல்ல வேலையை செய்வதற்குப் பதிலாக பெரிய வேலையைச் செய்தார். நல்ல வேலைகள் மெய்யாகவே பெரிய வேலைகள்தான். ஆனால் பெரியவேலைகள் எல்லாமே நல்ல வேலைகளாகயிருக்கும் என்று சொல்லமுடியாது. நாம் நன்மையில்லாத வேலைகளை எவ்வளவுதான் செய்தாலும், அதனால் நமக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகாது. நம்முடைய பெயரும் புகழும் அதிகரிக்க வேண்டும் என்பதற்காக நாம் பெரிய வேலைகளைச் செய்யலாம். அந்த வேலைகள் நல்ல வேலைகளா என்பதை சோதித்துப் பார்க்கவேண்டும்.

சாலொமோன் தனக்காக திராட்சத்தோட்டங்களை நாட்டினார். சிங்கார வனங்களையும் உண்டாக்கினார். அவைகளில் சகலவகை கனிவிருட்சங்களையும் நாட்டினார். சாலொமோன் கட்டிட வேலைகளை விரும்பியதுபோலவே தோட்ட வேலைகளையும் விரும்பினார். வனாந்தரத்தில் நாட்டப்படுகிற மரங்களோடு, தோட்டங்களையும் நாட்டி பராமரித்தார். மற்றவர்கள் பயிரிட்டு வளர்த்த தோட்டத்தை சாலொமோன் கிரயத்திற்கு வாங்காமல், தானே தனக்காக தோட்டங்களையும் சிங்கார வனங்களையும் உண்டாக்கினார். அவைகளில் தானே கனிவிருட்சங்களையும் நாட்டினார்.

தோட்டத்தில் நாட்டப்பட்டிருக்கிற கனிவிருட்சங்களுக்கு தண்ணீர் பாய்ச்சவேண்டும். சாலொமோன் இதற்காக அதிகமான ஐசுவரியத்தை செலவு பண்ணினார். மரங்கள் பயிராகும் தோப்புக்கு நீர் பாய்ச்சுகிறதற்கு குளங்களை உண்டுபண்ணினார். குளிப்பதற்காகவோ, நீச்சலடிப்பதற்காகவோ, பொழுது போக்குவதற்காகவோ சாலொமோன் குளங்களை உண்டுபண்ணவில்லை. தான் உண்டாக்கிய தோப்புக்கு நீர்ப்பாய்ச்சவேண்டும் என்பதே சாலொமோனுடைய விருப்பம். சாலொமோன் விருட்சங்களை நாட்டியது மாத்திரமல்ல, அவற்றிற்கு நீர்ப்பாய்ச்சவும் செய்கிறார். பராமரிக்கிறார். அதன் பின்பு அது வளர்ந்து கனிதருவதை தேவனுடைய கிருபைக்கும், பராமரிப்புக்கும் ஒப்புக்கொடுக்கிறார். மனுஷர் கனிவிருட்சங்களை நாட்டுகிறார்கள். அவற்றிற்கு நீர்ப்பாய்ச்சுகிறார்கள். தேவனே அவற்றை விளையச்செய்கிறார்.

பெரிய வேலைகளை செய்யும்போது, அதற்கு அதிகமான ஆட்கள் தேவைப்படுவார்கள். பல கைகள் சேர்ந்து உழைத்தால்தான் பெரிய வேலைகளை செய்ய முடியும். சாலொமோன் பெரிய வேலைகளைச் செய்வதற்கு வேலைக்காரரையும், வேலைக்காரிகளையும் சம்பாதித்தார். அவர்களுடைய பிள்ளைகளும் சாலொமோனுக்கு வேலைக்காரராயிருந்தார்கள்.

சாலொமோனுக்கு ஏராளமான ஆடுமாடுகள் இருந்தது. தனக்கு முன் எருசலேமிலிருந்த எல்லாரைப் பார்க்கிலும், தனக்கு ஆடுமாடு முதலான திரண்ட ஆஸ்திகள் இருந்ததாக சாலொமோன் சொல்லுகிறார். அவருடைய தகப்பனாராகிய தாவீதின் ஆடுமாடுகளைப்பற்றி வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

"சாரோனில் மேய்கிற மாடுகளின் மேல் சாரோனியனான சித்ராயும், பள்ளத்தாக்குகளிலுள்ள மாடுகளின்மேல் அத்லாயின் குமாரன் சாப்பாத்தும், ஒட்டகங்களின்மேல் இஸ்மவேலியனாகிய ஓபிலும், கழுதைகளின்மேல் மெரோனோத்தியனாகிய எகெதியாவும், ஆடுகளின்மேல் ஆகாரியனான யாசீசும் விசாரிப்புக் காரராயிருந்தார்கள்; இவர்களெல்லாரும் தாவீதுராஜாவின் பொருள்களுக்கு விசாரிப்புக் காரராயிருந்தார்கள்" (1நாளா 27:29-31).

சாலொமோன் மிகப்பெரிய ஐசுவரியவான். ஏராளமான கட்டிடங்களைக் கட்டினாலும், சிங்காரவனங்களை உண்டாக்கினாலும், கனிவிருட்சங்களை திரளாய் நட்டினாலும் சாலொமோனுடைய ஐசுவரியம் குறைந்துபோகவில்லை. அவர் தன்னுடைய கஜானாவில் வெள்ளியையும், பொன்னையும், சம்பத்தையும் மாகாணங்களிலுள்ள பொருள்களையும் சேகரித்தார்.

சாலொமோன் தாவீதைப்போல ஒரு இசைப்பிரியர். அவர் நன்றாகப் பாடுகிறவர். இசைக்கருவிகளையும் நேர்த்தியாக இசைப்பார். சாலொமோனுக்கு இசையிலும், சங்கீதத்திலும் அதிகப்பிரியம் இருந்தபடியால் அவர் சங்கீதக்காரரையும், சங்கீதக்காரிகளையும், வாத்தியங்களையும் சம்பாதித்தார். இவை மனுபுத்திரருக்கு இன்பமானவையாகும்.

சாலொமோன் தனக்கு முன் எருசலேமிலிருந்த எல்லோரைப் பார்க்கிலும், தன்னுடைய ஜீவியத்தை அதிகமாய் அனுபவித்தார். தன்னுடைய மனதிற்கு எது இன்பமாயிருக்குமோ அதையெல்லாம் செய்து பார்த்தார். மாம்சத்தின் இச்சைகளையும் நிறைவேற்றிப் பார்த்தார். அவர் பெரியவராகவும் திரவிய சம்பன்னராகவும் இருந்தார். பொழுதுபோக்குகளிலும், களியாட்டங்களிலும் சாலொமோன் தன்னை அதிகமாய் ஈடுபடுத்திக்கொண்டாலும், அவருடைய ஞானமும் அவரோடு கூடயிருந்தது.

சந்தோஷத்தை அவர் அனுபவிக்க விரும்பியபோது, அவருடைய மனச்சாட்சி அவரோடு பேசவில்லை. சந்தோஷத்தைப் பெறவேண்டும் என்பதுதான் அவருடைய பிரதான விருப்பம். தான் ஏறெடுக்கிற முயற்சிகளை அவர் நிதானித்துப் பார்க்கவில்லை. தன்னுடைய கிரியைகளை நியாயந்தீர்க்கவுமில்லை. அவருடைய சந்தோஷத்திற்கு, அவருடைய மனச்சாட்சியும், அவருடைய நியாயத்தீர்ப்பும் சிறிதும் தடையாயிருக்கவில்லை.

தன் கண்கள் இச்சித்தவைகளில் ஒன்றையும் அவர் அவைகளுக்கு தடைபண்ணவில்லை. தன் இருதயத்திற்கு ஒரு சந்தோஷத்தையும் அவர் வேண்டாம் என்று விலக்கவுமில்லை. அவர் செய்த முயற்சிகளிலெல்லாம் அவர் மனம் மகிழ்ச்சி கொண்டிருந்தது. தான் செய்த எல்லா வேலைகளையும் அவர் மனப்பூர்வமாய் செய்ததினால், அந்த வேலைகளில் அவருடைய மனம் மகிழ்ச்சியாயிருந்தது. தனக்கு விருப்பமான எல்லா வேலைகளையும் செய்து பார்த்தார். இந்த உலகம் கொடுத்த சந்தோஷத்தைவிட, சாலொமோன் செய்த முயற்சிகள் அவருக்கு அதிக சந்தோஷத்தைக் கொடுத்தது. இந்த உலகத்தால் சாலொமோனை சந்தோஷப்படுத்த முடியவில்லை. ஆனால் அவர் செய்த பெரிய வேலைகளும், அவர் கட்டிய ஆடம்பரமான கட்டிடங்களும், சிங்கார வனங்களும், தோட்டங்களும் அவருக்கு அதிக சந்தோஷத்தைக் கொடுத்தது.

சாலொமோன் தன்னுடைய கைகளின் கிரியைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்தார். தன் கைகள் செய்த சகல வேலைகளையும் அவர் கண்ணோக்கிப் பார்த்தார். தான் பட்ட எல்லா பிரயாசத்தையும் சோதித்துப் பார்த்தார். அதனால் அவருக்கு ஒரு சந்தோஷமும் உண்டாகவில்லை. எல்லாம் அவருக்கு மாயையும், மனதிற்கு சஞ்சலமுமாயிருந்தது. சூரியனுக்குக் கீழே ஒரு பலனும் இல்லை என்பதை அறிந்து கொண்டார். வீடுகளைக் கட்டினால் சந்தோஷமுண்டாகும் என்று நினைத்தார். ஆனால் அதனால் அவருக்கு ஒரு பலனும் உண்டாகவில்லை. சிங்கார வனங்களை உண்டாக்கினால் அது மனதிற்கு சந்தோஷமாகயிருக்கும் என்று நினைத்தார். ஆனால் அதனால் அவருடைய மனதிற்கு சந்தோஷமுண்டாகவில்லை.

அவர் செய்த பெரிய வேலைகளினாலும், சிறிய வேலைகளினாலும் அவருக்கு சிறிதும் சந்தோஷம் கிடைக்கவில்லை. அவர் செய்த முயற்சிகளெல்லாமே அவருடைய மனதிற்கு சஞ்சலமாயிருக்கிறது. அவருக்கு திருப்தி உண்டாகவில்லை. இந்த உலகப்பிரகாரமான சந்தோஷம் மெய்யான சந்தோஷமல்ல. அது நம்முடைய ஆத்துமாவுக்கு ஆறுதலைக் கொடுக்காது. நம்முடைய ஆத்துமா உலகக்காரியங்களினால் திருப்தியடையாது. சாலொமோன் இந்த சத்தியத்தைப் புரிந்துகொண்டு, "எல்லாம் மாயை" என்று தெளிவாகச் சொல்லுகிறார்.

ஞானமும் பைத்தியமும் பிர 2:12

பிர 2:12. பின்பு நான் ஞானமானது என்ன என்றும், பைத்தியமும் மதியீனமும் என்ன என்றும் பார்த்து அறியும்படி திரும்பினேன்; ராஜாவுக்குப் பின்வரும் மனுஷன் என்ன செய்யக்கூடும்? செய்ததையே செய்வான்.

ஞானத்தைப் பெற்றுக்கொள்வதினால் சந்தோஷமுண்டாகும் என்று சாலொமோன் நினைத்தார். கல்வி கற்பதினால் புதிய காரியங்களை கற்றுக்கொள்ளலாம் என்றும், அதனால் தனக்கு மகிழ்ச்சி உண்டாகும் என்றும் எதிர்பார்த்தார். ஞானமானது என்ன என்றும், பைத்தியமும் மதியீனமும் என்ன என்றும் பார்த்து அறியும்படி திரும்பிப் பார்த்தார். சாலொமோன் ஞானத்தை மாத்திரம் பார்க்காமல், பைத்தியத்தையும் மதியீனத்தையும் ஆராய்ந்து பார்த்தார்.

சாலொமோன் ஏற்கெனவே ஞானத்தைப் பெற்றுக்கொள்ள முயற்சி செய்தார். ஞானத்தினால் அவருக்கு சந்தோஷமுண்டாகவில்லை. இப்போது அவர் மறுபடியுமாக ஞானத்தைப் பெற்றுக்கொள்ள முயற்சி பண்ணுகிறார். தனக்கு ஞானத்தினால் இதுவரையிலும் ஒரு நன்மையும் கிடைக்காமல் போனபோதிலும், அதே ஞானத்தை மறுபடியும் ஆராய்ந்து பார்க்கிறார். அதன் மூலமாய் தனக்கு ஏதாவது சந்தோஷம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறார்.

தான் ஏற்கெனவே செய்ததை மறுபடியும் செய்வது சாலொமோனுக்கு நன்றாய்த் தெரிகிறது. இதைப்பற்றி அவர் சொல்லும்போது, "ராஜாவுக்குப் பின்வரும் மனுஷன் என்ன செய்யக்கூடும்? செய்ததையே செய்வான்" என்று சொல்லுகிறார். இதுவே சாலொமோனுடைய தீர்ப்பு. இந்த உலகத்தில் எந்தக் காரியமும் புதியதல்ல. எல்லாமே பழையது. ஏற்கெனவே நடைபெற்றது. நாம் ஏற்கெனவே செய்த காரியத்தையே, மறுபடியும் செய்கிறோம். திரும்பத் திரும்ப செய்கிறோம். இது மனுஷருடைய இயல்பு. மனுஷனால் இப்படிப்பட்ட காரியத்தைத்தான் செய்ய முடியும்.

நாம் ஒரு காரியத்தை முயற்சி செய்து பார்க்கும்போது, அதனால் நமக்கு பிரயோஜனமுண்டாகவில்லையென்றால், அதை மறுபடியும் முயற்சி செய்து பார்ப்பதினால் தவறு ஒன்றுமில்லை. ஒரு சத்தியத்தை ஒரு தடவை மாத்திரம் ஆராய்ச்சி செய்து பார்ப்பதற்குப் பதிலாக, பலதடவை ஆராய்ச்சி செய்து பார்க்கலாம்.

இருளும் வெளிச்சமும்
பிர 2:13,14

பிர 2:13. இருளைப்பார்க்கிலும் வெளிச்சம் எவ்வளவு உத்தமமோ, அவ்வளவாய் மதியீனத்தைப் பார்க்கிலும் ஞானம் உத்தமமென்று கண்டேன்.

பிர 2:14. ஞானியின் கண்கள் அவன் முகத்திலே இருக்கிறது; மூடனோ இருளிலே நடக்கிறான்; ஆகிலும் அவர்களெல்லாருக்கும் ஒரேவிதமாய்ச் சம்பவிக்கிறது என்று கண்டேன்.

சாலொமோன் ஞானத்தையும் மதியீனத்தையும் ஒப்பிட்டுச் சொல்லுகிறார். மதியீனத்தைப் பார்க்கிலும் ஞானம் உத்தமமானது. இருளைப் பார்க்கிலும் வெளிச்சம் உத்தமமாயிருக்கிறது. ஞானத்தினால் நமக்கு சந்தோஷமுண்டாகும். மதுபானம் அருந்துகிறவர்களுக்கு சொற்ப நேரம் சந்தோஷமுண்டாகலாம். ஞானத்தினால் வரும் சந்தோஷம், மதுபானத்தினால் வரும் சந்தோஷத்தைப் போன்றதல்ல. ஞானம் பரிசுத்தமானது. மதுபானம் அசுத்தமானது. மதுபானம் சரீரத்தில் கிரியை நடப்பிக்கிறது. ஞானமோ மனுஷருடைய ஆத்துமாவில் கிரியை நடப்பிக்கிறது. ஞானம் நம்முடைய ஆத்துமாவுக்கு அமைதியையும், ஆறுதலையும், சந்தோஷத்தையும் கொடுக்கிறது.

ஞானம் நம்மை ஆளுகை செய்யவேண்டும். ஆனால் பல வேளைகளில் ஞானம் இருக்குமிடத்தில் மதியீனமும் சேர்ந்திருக்கிறது. மதியீனம் நம்முடைய மனக்கண்களை மங்க வைத்துவிடுகிறது. மதியீனம் இருக்குமிடத்தில் இருள் இருக்கும். இருளிலே நடக்கிறவன் தடுமாறுவான். நாம் வெளிச்சத்தின் பிள்ளைகளாகயிருக்கிறோம். நாம் வெளிச்சத்தில் நடக்கவேண்டும். ஞானியின் கண்கள் அவன் முகத்திலே இருக்கிறது. மூடனோ இருளில் நடக்கிறான்.

மனுஷனுடைய உள்ளத்திலே மாம்ச சிந்தை நிரம்பியிருக்கிறது. இது ஞானியையும் ஆளுகை செய்கிறது. மதியீனனையும் ஆளுகை செய்கிறது. மதியீனம் நம்மை ஆளுகை செய்தால் நமக்குள் இருள்தான் இருக்கும். நாம் இருளிலே நடப்போம். தடுமாறி கீழே விழுந்துவிடுவோம். நாம் போகும் பாதை நமக்குத் தெரியாது. நம்முடைய இலக்கு என்ன என்பதையும் நம்மால் அறியமுடியாது.

ஒருவன் ஞானியாகயிருந்தாலும், மூடனாகயிருந்தாலும், அவர்களுக்கு சம்பவிக்கிறது ஒரேவிதமாயிருக்கிறது. ஒருதரம் பிறப்பதும், ஒரு தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும் எல்லோருக்கும் நியமிக்கப்பட்டிருக்கிறது போல, இவர்களுக்கும் நியமிக்கப்பட்டிருக்கிறது. தேவனுடைய பார்வையில் பட்சபாதமில்லை. அவர் எல்லோரையும் நீதியாய் விசாரிக்கிறவர். நீதியாய்த்தீர்ப்பு செய்கிறவர். சாலொமோன் ஞானியையும் மூடனையும் நோக்கிப் பார்த்து, அவர்கள் எல்லோருக்கும் ஒரேவிதமாய் சம்பவிக்கிறது என்பதை கண்டுகொள்கிறார்.

மூடனும் ஞானியும் பிர 2:15,16

பிர 2:15. மூடனுக்குச் சம்பவிக்கிறதுபோல எனக்கும் சம்பவிக்கிறதே; அப்படியிருக்க நான் அதிக ஞானமடைந்ததினால் காரியமென்ன என்று சிந்தித்தேன்; இதுவும் மாயை என்று என் உள்ளத்தில் எண்ணினேன்.

பிர 2:16. மூடன் என்றாலும் ஞானியென்றாலும் என்றைக்கும் நினைவில் இருப்பதில்லை; இப்பொழுது இருக்கிறதெல்லாம் வருங்காலத்தில் மறக்கப்பட்டுப்போம்; மூடன் எப்படிச் சாகிறானோ அப்படியே ஞானியும் சாகிறான்.

இந்த உலகத்தின் ஞானத்தினால் மனுஷனுக்கு அதிக பிரயோஜனமில்லை. உலகஞானம் நித்திய சந்தோஷத்தைக் கொடுக்காது. அது ஆத்தும திருப்தியையும் தராது. மூடனுக்கு வருவதுபோலவே ஞானிக்கும் வியாதி வருகிறது. பட்டயம் இருவருக்குமே கூர்மையாயிருக்கிறது. மூடன் எப்படி சாகிறானோ அப்படியே ஞானியும் சாகிறான். சாலொமோன் மூடனுக்கு சம்பவிக்கிறதை ஆராய்ந்து பார்க்கிறார். அவனுக்கு சம்பவிப்பதுபோலவே சாலொமோனுக்கும் சம்பவிக்கிறது. சாலொமோன் ஞானத்தில் சிறந்தவர். மனுஷருக்கு சம்பவிக்கிற பொதுவான காரியங்கள், மூடனுக்கும் ஞானிக்கும், ஒன்றுபோல் சம்பவிக்கிறது.

ஒரு சில காரியங்களில் ஞானிக்கும் மூடனுக்கும் வித்தியாசமில்லை. தனக்கும் மூடனுக்கும் சில காரியங்களில் வித்தியாசமில்லை என்பதை சாலொமோன் அறிந்துகொள்கிறார். அப்படியிருக்கும்போது, தான் அதிக ஞானமடைந்ததினால் காரியம் என்ன என்று சாலொமோன் சிந்தித்துப் பார்க்கிறார். இதுவும் மாயை என்று தன் உள்ளத்திலே எண்ணிக்கொள்கிறார். சாலொமோன் ஞானத்தைப் பெற்றுக்கொள்வதற்காக அதிகப் பிரயாசத்தை மேற்கொள்கிறார். ஆனாலும் அவர் பெற்றுக்கொண்ட ஞானத்தினால் அவருக்கு அதிக பிரயோஜனம் உண்டாகவில்லை.

இந்த உலகம் மூடனை மறந்துவிடும். ஞானியையும் ஞாபத்தில் வைத்திருக்காது. அவனையும் மறந்துவிடும். மூடன் என்றாலும், ஞானி என்றாலும் அவர்கள் இருவருமே என்றைக்கும் நினைவில் இருப்பதில்லை என்று சாலொமோன் சொல்லுகிறார். இப்பொழுது இருக்கிறதெல்லாம் வருங்காலத்தில் மறக்கப்பட்டுப்போம். இந்த உலகம் ஞானிகளை நித்திய காலமாய் நினைத்துப் பார்க்கும் என்று பேறிஞர்கள் சொல்லுகிறார்கள். அவர்கள் நட்சத்திரங்களைப் போல பிரகாசமாயிருப்பார்கள் என்றும் சொல்லுகிறார்கள். ஆனால் பரிசுத்த வேதாகமத்தில் உலகஞானத்திற்கு ஆதரவாக எந்த வாக்குத்தத்தமும் கொடுக்கப்படவில்லை.

ஞானத்தில் சிறந்திருக்கிறவருக்கு பெயரும் புகழும் உண்டாகும் என்று சிலர் நம்புகிறார்கள். நம்முடைய பெயர்கள் ஞானிகளின் புஸ்தகத்தில் இடம் பெற்றிருப்பதினால் நமக்கு ஒரு பிரயோஜனமுமில்லை. அதற்குப் பதிலாக, நம்முடைய பெயர்கள் பரலோகத்திலுள்ள கர்த்தருடைய ஜீவப்புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கவேண்டும். அதுவே நமக்கு மெய்யான ஆசீர்வாதம்.

சாலொமோன் மூடனுடைய மரணத்தையும், ஞானியினுடைய மரணத்தையும் ஆராய்ந்து பார்க்கிறார். மூடன் எப்படி சாகிறானோ அப்படியே ஞானியும் சாகிறான் என்று சொல்லுகிறார். அவர்களுடைய மரணத்தில் வித்தியாசமில்லை. ஞானியுடைய மரணத்திலும், மூடனுடைய மரணத்திலும் வித்தியாசமில்லாமலிருக்கலாம். ஆனால் நீதிமானுடைய மரணத்திலும், துன்மார்க்கனுடைய மரணத்திலும் நிச்சயமாகவே வித்தியாசமுண்டு. நீதிமான் மரித்த பின்பு பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவான். துன்மார்க்கனோ மரித்த பின்பு நரகத்திலே தள்ளப்படுவான்.

சூரியனுக்குக் கீழே செய்யப்படும் கிரியைகள் பிர 2:17-20

பிர 2:17. ஆகையால் இந்த ஜீவனை வெறுத்தேன்; சூரியனுக்குக்கீழே செய்யப்படும் கிரியையெல்லாம் எனக்கு விசனமாயிருந்தது; எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது.

பிர 2:18. சூரியனுக்குக்கீழே நான் பட்ட பிரயாசத்தையெல்லாம் வெறுத்தேன்; எனக்குப் பின்வரப்போகிறவனுக்கு அதை நான் வைத்துப்போக வேண்டியதாகுமே.

பிர 2:19. அவன் புத்திமானாயிருப்பானோ, மூடனாயிருப்பானோ அதை யார் அறிவார்? ஆகிலும் சூரியனுக்குக்கீழே நான் பிரயாசப்பட்டு ஞானமாய்ச் சம்பாதித்த சகல வஸ்துக்களின்பேரிலும் அவன் அதிகாரியாவான்; இதுவும் மாயையே.

பிர 2:20. ஆகையால் சூரியனுக்குக்கீழே நான் பட்ட எல்லாப் பிரயாசத்தின் மேலுமுள்ள ஆசையை விட்டுவிட வகைபார்த்தேன்.

தனக்கு சந்தோஷமுண்டாகவேண்டும் என்பதற்காக சாலொமோன் பெரிய வேலைகளையெல்லாம் செய்து பார்த்தார். ஆனால் அவருடைய ஜீவியத்தில் அவருக்கு மெய்யான சந்தோஷம் உண்டாகவில்லை. வெள்ளியையும் பொன்னையும் ராஜசம்பத்தையும் சேகரித்து சந்தோஷமாய் ஜீவிக்கலாம் என்று நினைத்தார். ஆனாலும் அவருக்கு சந்தோஷம் உண்டாகவில்லை. எல்லாம் அவருக்கு மாயையும், மனதிற்கு சஞ்சலமுமாயிருந்தது.

சாலொமோன் முயற்சி செய்த எல்லா கிரியைகளும் சூரியனுக்குக் கீழே செய்யப்படும் கிரியைகளாகும். இந்த வாக்கியத்திற்கு உலகப்பிரகாரமான காரியங்கள் என்று பெயர். சாலொமோன் சமஸ்த இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜா. அவர் ராஜாவுக்குரிய வேலைகளை நேர்த்தியாய் செய்தார். அவர் பெரியவரானார். திரவிய சம்பன்னருமானார். அவரோடு ஞானமும் இருந்தது. ஆனால் அவரிடத்தில் மெய்யான சந்தோஷமும் திருப்தியும் இல்லை.

"அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்தியஜீவன்வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்; அதை மனுஷகுமாரன் உங்களுக்குக் கொடுப்பார்; அவரைப் பிதாவாகிய தேவன் முத்திரித்திருக்கிறார்" *(யோவா 6:27)*.

"நீங்கள் அப்பமல்லாததற்காகப் பணத்தையும், திருப்திசெய்யாத பொருளுக்காக உங்கள் பிரயாசத்தையும் செலவழிப்பானேன்? நீங்கள் எனக்குக் கவனமாய்ச் செவிகொடுத்து, நலமானதைச் சாப்பிடுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமா கொழுப்பான பதார்த்தத்தினால் மகிழ்ச்சியாகும்" *(ஏசா 55:2)*.

சாலொமோனுடைய முயற்சிகளெல்லாம் வீணாயிற்று. அவர் பெரிய வேலைகளைச் செய்தாலும், அவையெல்லாமே அவருக்கு மாயையும் மனதிற்கு சஞ்சலமுமாயிற்று. சாலொமோன் இப்போது உள்ளத்தில் திருப்தியில்லாமல் விரக்தியோடு பேசுகிறார். "ஆகையால் இந்த ஜீவனை வெறுத்தேன்" என்று சொல்லுகிறார். சூரியனுக்குக் கீழே செய்யப்படும் கிரியையெல்லாம் சாலொமோனுக்கு விசனமாயிருந்தது. எல்லாம் அவருக்கு மாயையும், அவருடைய மனதிற்கு சஞ்சலமுமாயிருந்தது. சூரியனுக்குக் கீழே தான் பட்ட எல்லா பிரயாசத்தையும் சாலொமோன் வெறுக்கிறார்.

மனுஷன் புத்தி, யுக்தி, நிதானத்தோடு பிரயாசப்படுகிறான். அவனுடைய பிரயாசமும் மாயையும், பெரிய தீங்குமாயிருக்கிறது. சாலொமோன் தன்னுடைய ராஜ்யத்தோடு தொடர்புடைய எல்லா வேலைகளையும் செய்தார். அவற்றை ஞானத்தோடு செய்தார். அவர் சூரியனுக்குக் கீழே பிரயாசப்பட்டு சகல வஸ்துக்களையும் ஞானமாய் சம்பாதித்தார் (பிர 2:19).

இந்தப் பிரபஞ்சத்தின் காரியங்களில் தங்களை ஈடுபடுத்திக்கொள்கிறவர்கள், அதிகப் பிரயாசப்பட்டு சகல வஸ்துக்களையும் சம்பாதிக்கிறார்கள். தாங்கள் சம்பாதித்த ஐசுவரியத்தின்மீது மிகவும் கவனமாயிருக்கிறார்கள். அவர்களுடைய ஜீவனே அவர்களுடைய ஐசுவரியத்தில்தான் இருக்கிறது. ஐசுவரியம் அவர்களை விட்டு கடந்துபோய்விட்டால் அவர்களுடைய ஜீவனும் அவர்களைவிட்டு கடந்துபோய்விடும்.

சாலொமோன் தனக்கு முன் எருசலேமிலிருந்த எல்லாரைப் பார்க்கிலும், பெரியவராகவும், திரவிய சம்பன்னராகவும் ஆனார். வெள்ளியையும் பொன்னையும் ராஜசம்பத்தையும், மாகாணங்களிலும் பொருள்களையும் சேகரித்தார். அவருக்கு அவற்றால் சந்தோஷமுண்டாகவில்லை. ஆகையினால் அவர் இந்த ஜீவனையே வெறுக்கிறார். தான் பட்ட எல்லா பிரயாசத்தையும் வெறுக்கிறார்.

சாலொமோன் தனக்காக வீடுகளைக் கட்டினார். திராட்சத்தோட்டங்களை நாட்டினார். சிங்கார வனங்களை உண்டாக்கினார். அவைகளில் சகலவகை கனிவிருட்சங்களையும் நாட்டினார். அவற்றிற்கு நீர்ப்பாய்ச்சுகிறதற்கு குளங்களையும் உண்டுபண்ணினார். ஆனால் இப்போதோ தான் பட்ட எல்லா பிரயாசத்தையும் வெறுக்கிறார். அவை எல்லாமே சாலொமோனுக்கு மாயையும், மனதிற்கு சஞ்சலமுமாயிருக்கிறது.

நாம் இப்பிரபஞ்சத்தில் ஜீவிக்கிற காலம் வரையிலும் கர்த்தருக்கு மாத்திரமே முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். இந்த உலகத்தையும், உலகக்காரியங்களையும்விட, கர்த்தரையே நாம் அதிகமாய் நேசிக்கவேண்டும்.

"யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான். தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" (லூக் 14:26,27) என்று இயேசு சொல்லுகிறார்.

இந்த உலகமும், உலகத்திலுள்ள காரியங்களும் பாவமானவையல்ல. ஆனால் உலகசிநேகம் நமக்கு பாவமாயிருக்கும். நாம் ஜீவனுள்ள காலம் வரையிலும் இந்த உலகத்தில்தான் ஜீவிக்கவேண்டும். கர்த்தர் இந்த உலகத்தில் நமக்குக் கொடுத்திருக்கிற ஸ்தானத்தில், நாம் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கும் வேலையை உண்மையாய்ச் செய்யவேண்டும். கர்த்தருக்குப் பயந்து ஜீவித்து, அவருடைய நாமத்தை மகிமைப்படுத்தவேண்டும்.

உலகத்தை வெறுக்கிறேன் என்று சொல்லி, கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற கடமைகளை நிறைவேற்றாமல், அவற்றை ஒதுக்கி புறக்கணித்துவிடக்கூடாது. கர்த்தரை நம்பி நன்மை செய்யவேண்டும். இந்த உலகத்தில் கர்த்தருக்காக ஜீவிக்கவேண்டும். நாம் உலகத்தின்மீது நம்பிக்கை வைக்காமல், கர்த்தர்மீது நம்பிக்கை வைக்கும்போது, நமக்கு மெய்யான சந்தோஷமும், சமாதானமும், ஆத்தும திருப்தியும் உண்டாகும்.

கர்த்தருடைய சமுகத்தில்தான் நமக்கு நித்திய சந்தோஷம் உண்டு. ஒரு சிலர் உலகக்காரியங்களின்மீது ஆசை வைத்து, சந்தோஷமாயிருக்கலாம் என்று நினைக்கிறார்கள். ஐசுவரியம் தங்களுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கும் என்று எதிர்பார்க்கிறார்கள். உலகமும் உலகக்காரியங்களும் நமக்குக் கொடுக்கும் சந்தோஷம் நிறைவானதாயிருக்காது. அது அற்ப சந்தோஷம். உலக சந்தோஷம் சீக்கிரத்தில் மறைந்துபோகும். உலகப்பிரகாரமான சந்தோஷத்தினால் நமக்கு திருப்தி உண்டாகாது. உலகத்தை நம்புகிறவர்கள் ஏமாந்துபோவார்கள்.

தன்னுடைய சந்தோஷத்திற்காக சாலொமோன் உலகக்காரியங்களை நாடினார். அவருக்கு ஏமாற்றமுண்டாயிற்று. ஆகையினால் "இந்த ஜீவனை வெறுத்தேன்" (பிர 2:17) என்று சொல்லுகிறார். இந்த உலகத்தில் தொல்லைகளும், தொந்தரவுகளும், வருத்தங்களும், கவலைகளும் இருக்கிறது. உலகத்தை நம்புகிறவர்களுக்கு ஏமாற்றத்தின் மேல் ஏமாற்றம் வந்துகொண்டேயிருக்கும். சூரியனுக்குக் கீழே செய்யப்படும் எல்லா கிரியைகளும் நமக்கு விசனமாயிருக்கும். அவையெல்லாம் மாயையும் மனதிற்கு சஞ்சலமுமாயிருக்கிறது என்று சாலொமோன் சொல்லுகிறார்.

இந்தப் பிரபஞ்சத்தில் நாம் வெள்ளியையும், பொன்னையும், சம்பத்தையும் அதிகமாய் சேகரித்தாலும், நாம் மரிக்கும்போது அவற்றில் எதுவும் நம்மோடு கூட வரப்போவதில்லை. அவற்றை நம்முடைய பின்சந்ததியாருக்கு விட்டுவிட்டுத்தான் போகவேண்டும். அவன் எப்படியிருப்பான் என்பதை நம்மால் அறியமுடியாது. நம்முடைய பிரயாசத்தின் பலனை அவன் அனுபவிப்பான்.

அவன் புத்திமானாயிருப்பானா, அல்லது மூடனாயிருப்பானா என்பதும் நமக்குத் தெரியாது. நாம் பிரயாசப்பட்டு சகல வஸ்துக்களையும் ஞானமாய் சம்பாதித்தாலும், நமக்குப் பின் வரப்போகிறவன் அதை ஞானமாய் ஆளுகை செய்வானா அல்லது மூடனாய் அவற்றை விரயம் பண்ணுவானா என்பதும் நமக்குத் தெரியாது. ஆகையினால் இதுவும் மாயையாயிருக்கிறது என்று சாலொமோன் சொல்லுகிறார்.

சாலொமோன் சூரியனுக்குக் கீழே அதிகமாய்ப் பிரயாசப்பட்டார். ஆசையாய் பிரயாசப்பட்டார். அவருடைய பிரயாசத்தினால் அவருக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகவில்லை. ஆகையினால் தான் பட்ட பிரயாசத்தையெல்லாம் வெறுத்தார். தன் ஜீவனை வெறுத்தார். தான் பட்ட எல்லா பிரயாசத்தின் மேலுள்ள ஆசையை விட்டுவிட வகை பார்த்தார்.

அலுப்பும் வருத்தமும்
பிர 2:21-23

பிர 2:21. ஒருவன் புத்தி, யுக்தி, நிதானத்தோடு பிரயாசப்படுகிறான்; ஆகிலும் அப்படிப் பிரயாசப்படாதிருந்த வேறொருவனுக்கு அவன் அதைச் சொந்தமாக விட்டுவிட வேண்டியதாகும்; இதுவும் மாயையும் பெரிய தீங்குமாய் இருக்கிறது.

பிர 2:22. மனுஷன் சூரியனுக்குக்கீழே படுகிற எல்லாப் பிரயாசத்தினாலும் அவனுடைய இருதயத்தின் எண்ணங்களினாலும் அவனுக்குப் பலன் என்ன?

பிர 2:23. அவன் நாட்களெல்லாம் அலுப்புள்ளது, அவன் வேலைகள் வருத்தமுள்ளது; இராத்திரியிலும் அவன் மனதுக்கு இளைப்பாறுதலில்லை; இதுவும் மாயையே.

மனுஷனுடைய நாட்களெல்லாம் அலுப்புள்ளது. அவனுடைய வேலைகளெல்லாம் வருத்தமுள்ளது. மனுஷனை இரண்டு காரியங்கள் வருத்தப்பட வைக்கிறது. அவையாவன : 1. சூரியனுக்குக் கீழே செய்யப்படும் கிரியைகள் அவனுக்கு விசனமாயும், மனதிற்கு சஞ்சலமாயும் இருக்கிறது. 2. சூரியனுக்குக் கீழே பட்ட பிரயாசத்தின் பலனையெல்லாம் மனுஷன் தனக்குப் பின் வரப்போகிறவனுக்கு வைத்துவிட்டுப் போகவேண்டும்.

மனுஷனுடைய கிரிகளெல்லாம் அவனுக்கு விசனமாயும் சஞ்சலமாயும் இருக்கும். ராத்திரியிலும் அவன் மனதிற்கு இளைப்பாறுதல் இருக்காது. அவன் போகும்போதும் வரும்போதும் அலுப்போடும் வருத்தத்தோடும் இருப்பான். பகல் வேளையிலும் அவனுடைய மனதிற்கு சந்தோஷம் இருக்காது. இரவு வேளையிலும் அவன் மனதிற்கு இளைப்பாறுதல் இருக்காது. இப்படிப்பட்டவர்கள் இந்தப் பிரபஞ்சத்தில், தங்களுக்குத் தாங்களே பாரமாயிருப்பார்கள். இந்த உலகத்தில் இளைப்பாறுதல் தேடினால் நமக்கு இளைப்பாறுதல் கிடைக்காது. நமக்கு மெய்யான இளைப்பாறுதல் கர்த்தரிடத்தில் மாத்திரமே உண்டு.

"வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்று நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம்மை அன்போடு அழைக்கிறார். நாம் கர்த்தரை நம்பி அவருடைய சமுகத்தில் போகும்போது, நம்முடைய ஆத்துமாவுக்கு மெய்யான இளைப்பாறுதல் கிடைக்கும். நம்முடைய வருத்தம் நம்மை விட்டு நீங்கும். மனுஷன் சூரியனுக்குக் கீழே படுகிற எல்லா பிரயாசத்தினாலும் அவனுடைய மனதிற்கு இளைப்பாறுதல் இல்லை. ஆகையினால் "இதுவும் மாயையே" என்று சாலொமோன் சொல்லுகிறார் (பிர 2:23).

சூரியனுக்குக் கீழே செய்யப்படும் கிரியையெல்லாம் சாலொமோனுக்கு விசனமாயிருக்கிறது. எல்லாம் மாயையும் அவருடைய மனதிற்கு சஞ்சலமுமாயிருக்கிறது (பிர 2:17). தான் பட்ட பிரயாசத்தின் பலனையெல்லாம், தனக்குப் பின் வரப்போகிறவனுக்கு வைத்து போகவேண்டும் என்பதை சாலொமோன் சிந்தித்துப் பார்க்கிறார். இப்படி சிந்திப்பதினால் அவருடைய மனதிற்கு இளைப்பாறுதல் இல்லாமல் போயிற்று. அது அவருக்கு விசனமாயிருக்கிறது. அவருடைய மனதிற்கு சஞ்சலமாயிருக்கிறது.

நாம் இப்பிரபஞ்சத்தில் ஜீவிக்கிற காலம் வரையிலும்தான், நம்முடைய பிரயாசத்தின் பலனை நம்மால் அனுபவிக்க முடியும். அதற்குப் பின்பு, நமக்கு பின் வருகிறவர்கள்தான் அதை அனுபவிப்பார்கள். நம்முடைய சம்பத்துக்களை, நம்முடைய பின்சந்ததியாருக்கு சந்தோஷமாக வைத்துப்போகவேண்டும். விசனப்படக்கூடாது. நாம் மரித்துப்போன பின்பு, நாம் சேகரித்த ஆஸ்தியை, நமக்குப் பின்வருகிறவர்கள் எப்படி பயன்படுத்துவார்கள் என்பதும் நமக்குத் தெரியாது. அவர்கள் புத்திமானாயிருப்பார்களா, மூடனாயிருப்பார்களா என்பதும் நமக்குத் தெரியாது. ஞானமுள்ளவன் தன்னுடைய ஆஸ்தியை அதிகரிக்கச் செய்கிறான். மூடனோ தன்னுடைய ஆஸ்தியை அழித்துப்போடுகிறான்.

சாலொமோன் இந்த வாக்கியத்தை எழுதும்போது, அவர் தன்னுடைய குமாரன் ரெகொபெயாமை மனதில் நினைத்து இதை எழுதுகிறார். சாலொமோன் திரவிய சம்பன்னராகயிருந்தார். வெள்ளியையும், பொன்னையும், ராஜசம்பத்தையும், மாகாணங்களிலுள்ள பொருட்களையும் அதிகமாய் சேகரித்தார். சாலொமோன் மரித்த பின்பு, அவருடைய குமாரன் ரெகொபெயாமுக்கு, சாலொமோனுடைய சம்பத்துக்களெல்லாம் வந்து சேரும். ரெகொபெயாம் புத்திமானாயிருப்பானா, அல்லது மூடனாயிருப்பானா என்று யோசித்துப் பார்க்கிறார். இந்த யோசனையினால் அவருடைய மனதின் நிம்மதி அவரை விட்டு அகன்றுபோயிற்று. அவருக்கு வருத்தமும் சஞ்சலமும் உண்டாயிற்று.

பிரயாசத்தின் பலன்
பிர 2:24-26

பிர 2:24. மனுஷன் புசித்துக் குடித்து, தன் பிரயாசத்தின் பலனை அநுபவிப்பதைப் பார்க்கிலும், அவனுக்கு ஒரு நன்மையும் இல்லை; இதுவும் தேவனுடைய கரத்திலிருந்து வருகிறது என்று நான் கண்டேன்.

பிர 2:25. என்னைப்பார்க்கிலும் சம்பிரமமாய்ச் சாப்பிடத்தக்கவன் யார்? என்னைப்பார்க்கிலும் துரிதமாய்ச் சம்பாதிக்கத்தக்கவன் யார்?

பிர 2:26. தேவன் தமது பார்வைக்கு நல்லவனாயிருக்கிறவனுக்கு ஞானத்தையும் அறிவையும் இன்பத்தையும் அளிக்கிறார்; பாவஞ்செய்கிறவனுக்கோ தமது பார்வைக்கு நல்லவனாயிருக்கிறவன் வசமாய் வைத்துவிட்டுப் போகும் பொருட்டுச் சேர்த்துக் குவித்துவைக்கும் தொல்லையை அவர் நியமித்திருக்கிறார்; இதுவும் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது.

இந்தப் பிரபஞ்சத்தில் நாம் சேகரிக்கும் ஐசுவரியத்தை நல்ல முறையில் பயன்படுத்தவேண்டும். நம்முடைய ஐசுவரியத்திற்கு நாம் உக்கிராணக்காரர்களாயிருக்கிறோம். நம்முடைய சம்பத்துக்கு நாம் கர்த்தரிடத்தில் கணக்கு ஒப்புவிக்கவேண்டும். நம்முடைய ஐசுவரியத்தை நன்மை உண்டாக செலவு பண்ணவேண்டும். சந்தோஷமாய் பயன்படுத்தவேண்டும்.

இந்தப்பிரபஞ்சத்தின் காரியங்கள் மாயையாகவும், மனதிற்கு சஞ்சலமாகவும் இருக்கிறது. இந்த மாயையிலிருந்து நாம் தப்பித்துக்கொள்ளவேண்டுமென்றால், நாம் இந்த உலகத்தைப்பற்றிக்கொள்ளாமல், கர்த்தரைப்பற்றிக்கொள்ளவேண்டும். நாம் இந்த உலகத்தில் ஜீவித்தாலும், உலகத்திற்குரியவர்களாக ஜீவிக்காமல், கர்த்தருக்குரியவர்களாக ஜீவிக்கவேண்டும். உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகை என்னும் சிந்தனை நம்முடைய இருதயத்தின் ஆழத்தில் பதிந்திருக்கவேண்டும்.

கர்த்தரே நமக்கு ஐசுவரியத்தையும் சம்பத்தையும் கொடுத்திருக்கிறார். கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற உலகப்பொருட்களை, கர்த்தருடைய நாமத்திற்கு மகிமை உண்டாகவும், கர்த்தருடைய பிள்ளைகளுக்கு பிரயோஜனமுண்டாகவும் பயன்படுத்த வேண்டும். நம்முடைய ஐசுவரியத்தை இன்னும் அதிகமாய் எப்படி அதிகரிக்கச் செய்வது என்று யோசித்துக்கொண்டிராமல், நம்மிடத்திலுள்ள ஐசுவரியத்தை எப்படி நல்ல வழியில் பயன்படுத்துவது என்பதையே நாம் அதிகமாய்ச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

ஒரு வேலையும் செய்யாமல் சோம்பேறியாக சும்மாயிருக்கக்கூடாது. மனுஷன் புசித்துக் குடித்து தன் பிரயாசத்தின் பலனை அனுபவிக்கலாம் என்று நினைக்கிறான். அப்படிப்பட்டவனுக்கு ஒரு நன்மையுமில்லை. நாம் கர்த்தருடைய பார்வையில் நல்லவர்களாகயிருக்கவேண்டும். தேவன் தமது பார்வைக்கு நல்லவனாயிருக்கிறவனுக்கு ஞானத்தையும் அறிவையும் இன்பதையும் அளிக்கிறார்.

சூரியனுக்குக் கீழே படும் எல்லா பிரயாசங்களும் மாயை என்று தீர்மானித்து, ஒரு வேலையும் செய்யாமல் சும்மாயிருக்கக்கூடாது. கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற வேலையில் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். நம்முடைய காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளவேண்டும். கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற சரீர ஆரோக்கியத்தையும், ஞானத்தையும் பயன்படுத்தி, சூரியனுக்குக் கீழே கர்த்தருக்குப் பயந்து பிரயாசப்படவேண்டும். நம்முடைய பிரயாசத்தில் நமக்கு சந்தோஷமுண்டாக வேண்டும்.

நம்முடைய பேச்சிலும், கிரியையிலும் நாம் கர்த்தருக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். நம்மிடத்திலிருக்கிற எல்லா நன்மைகளும் தேவனுடைய கரத்திலிருந்து நமக்கு வருகிறது. கர்த்தரே நமக்கு போஜனத்தையும், ஐசுவரியத்தையும், சம்பத்தையும் தருகிறார். இவை தேவனுடைய கிருபையினால் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற ஈவு. சாலொமோன் சம்பிரமமாய் சாப்பிடத்தக்கவர். துரிதமாய் சம்பாதிக்கத்தக்கவர். சாலொமோனிடத்தில் எல்லாம் இருந்தது. அவர் நினைத்தால் இன்னும் அதிக சம்பிரமமாய் சாப்பிடலாம். இன்னும் அதிக துரிதமாய் சம்பாதிக்கலாம். ஆனால் அவற்றினால் சாலொமோனுக்கு மெய்யான சந்தோஷம் உண்டாகவில்லை. அவை சாலொமோனுடைய மனதிற்கு சஞ்சலமாயும், வருத்தமாயும் இருந்தது.

சாலொமோன் தன்னுடைய சுயஞானத்தினாலோ, சுயபுத்தியினாலோ, சுயதிறமையினாலோ திரளான ஐசுவரியத்தை சம்பாதிக்கவில்லை. தேவனுடைய விசேஷித்த கிருபையினாலேயே சாலொமோன் ஐசுவரிய சம்பன்னரானார். எல்லாம் தனக்கு தேவனுடைய கரத்திலிருந்தே வந்திருக்கிறது என்பதை அங்கீகரித்து, அவர் கர்த்தருக்கு நன்றி சொல்லுகிறார். கர்த்தரை ஜெபத்தோடு நோக்கிப் பார்க்கிறார். கர்த்தர் கொடுத்திருக்கிற ஆசீர்வாதங்களை நல்ல வழிகளில் பயன்படுத்தவேண்டும் என்று விரும்புகிறார்.

நம்முடைய ஐசுவரியம் நமக்கு ஆசீர்வாதமாகவும் இருக்கலாம். சாபமாகவும் இருக்கலாம். நம்முடைய ஐசுவரியத்தை நாம் எப்படி செலவு பண்ணுகிறோம் என்பதன் அடிப்படையிலேயே, அது நமக்கு ஆசீர்வாதமாகவோ அல்லது சாபமாகவோ இருக்கும். நாம் ஐசுவரியத்தை தேவனுடைய சித்தத்தின் பிரகாரம் ஆளுகை செய்யவேண்டும். இதுவே மெய்யான ஆசீர்வாதம். ஐசுவரியம் நம்மை ஆளுகை செய்யக்கூடாது. ஐசுவரியம் நம்மை ஆளுகை செய்தால் அது நமக்கு சாபமாகயிருக்கும். கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்குப் பதிலாக, நம்முடைய மாம்சத்தின் இச்சைகளை நம்முடைய ஐசுவரியத்தினால் நிறைவேற்றவேண்டும் என்னும் பேராசை நம்மிடத்தில் வந்துவிடும்.

நாம் கர்த்தருடைய பார்வைக்கு நல்லவர்களாக இருக்கவேண்டும். மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். கர்த்தரோ மனுஷனுடைய இருதயத்தைப் பார்க்கிறார். தேவன் தமது பார்வைக்கு நல்லவனாயிருக்கிறவனுக்கு ஞானத்தையும் அறிவையும் இன்பத்தையும் அளிக்கிறார்; பாவஞ்செய்கிறவனுக்கோ தமது பார்வைக்கு நல்லவனாயிருக்கிறவன் வசமாய் வைத்துவிட்டுப் போகும் பொருட்டுச் சேர்த்துக் குவித்துவைக்கும் தொல்லையை அவர் நியமித்திருக்கிறார்.

கர்த்தர் நமக்கு ஞானத்தையும், அறிவையும், இன்பத்தையும் கொடுக்கும்போது, நம்மிடத்திலுள்ள ஐசுவரியத்தை நாம் சந்தோஷமாய் செலவு பண்ணுவோம். அவற்றை மற்றவர்களுக்கும் சந்தோஷமாய் பகிர்ந்துகொடுப்போம். நாம் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்யும்போது, கர்த்தருடைய சமுகத்திலிருந்து நமக்கு ஒரு நன்மையும் வராது. நம்மிடத்தில் ஞானமும் இருக்காது. அறிவும் இருக்காது. நம்முடைய இன்பமும் நம்மைவிட்டு நீங்கிப்போகும். கர்த்தரிடமிருந்து நமக்கு சந்தோஷம் வருவதற்குப் பதிலாக, நம்முடைய ஜீவியத்தில் தொல்லைகளே வரும். கர்த்தருடைய ஆசீர்வாதத்திற்குப் பதிலாக, அவருடைய சமுகத்திலிருந்து நமக்கு தண்டனைகள் வரும்.

ஐசுவரியம் நம்மை ஆளுகை செய்தால், நம்மிடத்தில் பண ஆசை வந்துவிடும். பணத்தை சம்பாதித்தால் மாத்திரம் போதாது. நற்குணத்தையும் சம்பாதிக்கவேண்டும். நாம் கர்த்தருடைய பார்வைக்கு நல்லவர்களாகவும் இருக்கவேண்டும். நம்மிடத்தில் மெய்யான சந்தோஷம் இருக்கும்போது, நம்முடைய உள்ளத்தில் போதும் என்கிற மனப்பக்குவம் இருக்கும். போதும் என்கிற தெய்வபக்தியே மிகுந்த ஆதாயம். தெய்வபக்தியில்லாதவர்கள் பேராசையில் சிக்கிக்கொண்டு, தங்களுடைய ஜீவனை அளித்துப்போடுகிறார்கள். தங்களுக்கு சோதனைகளையும், வேதனைகளையும் வரவழைத்துக் கொள்கிறார்கள். கண்ணிகளில் சிக்கிக்கொண்டு விடுதலை பெறமுடியாமல் தவிக்கிறார்கள். சாலொமோன் இவையெல்லாவற்றையும் சிந்தித்துப் பார்த்து, எல்லாம் மாயையாயிருக்கிறது என்று சொல்லுகிறார். அவை சாலொமோனுடைய மனதிற்கு சஞ்சலமாயிருக்கிறது.

3 அதிகாரம்

சாலொமோனுக்கு ஞானமும், உலக சந்தோஷமும், பெரிய வேலைகளைச் செய்வதும் மாயையாகயிருக்கிறது. அவருக்கு இவற்றால் மெய்யான சந்தோஷம் உண்டாகவில்லை. தத்துவ ஞானிகளோடு பேசுவதினாலும் சாலொமோனுக்கு திருப்தி உண்டாகவில்லை. ஞானமான கருத்துக்களை பரிமாறிக்கொள்வதினாலோ, புத்தியீனமாய் நடப்பதினாலோ ஒரு பிரயோஜனமுமில்லை என்பதை சாலொமோன் அறிந்துகொள்கிறார். இந்தப் பிரபஞ்சத்தின் ஐசுவரியம் நமக்கு மெய்யான சந்தோஷத்தைத் தராது. போதுமென்கிற தெய்வ பக்தியே மிகுந்த ஆதாயம். கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற ஆசீர்வாதங்களை பயபக்தியோடு பயன்படுத்தவேண்டும். கர்த்தர் கொடுக்கும் வாயப்புக்களைப் பயன்படுத்தி நன்றாய் உழைக்கவேண்டும். கர்த்தரை நம்பி நன்மை செய்யவேண்டும்.

ஒவ்வொன்றிக்கும் ஒவ்வொரு காலமுண்டு (பிர 3:1-10). தேவன் சகலத்தையும் அதனதின் காலத்திலே நேர்த்தியாய்ச் செய்திருக்கிறார் (பிர 3:11-15). உலகப்பிரகாரமான வல்லமையும், அதிகாரமும், மேன்மையும் மாயையாயிருக்கிறது (பிர 3:16). துன்மார்க்கர் பிறரை ஒடுக்குகிறார்கள். தேவன் சகல எண்ணங்களையும் அறிந்திருக்கிறார். அவர் சகல செய்கைகளையும் நியாயந்தீர்ப்பார் (பிர 3:17). மனுபுத்திரர் மிருகங்களைவிட மேலானவர்கள் (பிர 3:18-21).

ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு பிர 3:1-8

பிர 3:1. ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு; வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு சமயமுண்டு.

பிர 3:2. பிறக்க ஒரு காலமுண்டு, இறக்க ஒரு காலமுண்டு, நட ஒரு காலமுண்டு, நட்டதைப் பிடுங்க ஒரு காலமுண்டு;

பிர 3:3. கொல்ல ஒரு காலமுண்டு, குணமாக்க ஒரு காலமுண்டு; இடிக்க ஒரு காலமுண்டு, கட்ட ஒரு காலமுண்டு;

பிர 3:4. அழ ஒரு காலமுண்டு, நகைக்க ஒரு காலமுண்டு; புலம்ப ஒரு காலமுண்டு, நடனம்பண்ண ஒரு காலமுண்டு;

பிர 3:5. கற்களை எறிந்துவிட ஒரு காலமுண்டு, கற்களைச் சேர்க்க ஒரு காலமுண்டு; தழுவ ஒரு காலமுண்டு, தழுவாமலிருக்க ஒரு காலமுண்டு;

பிர 3:6. தேட ஒரு காலமுண்டு, இழக்க ஒரு காலமுண்டு; காப்பாற்ற ஒரு காலமுண்டு, எறிந்துவிட ஒரு காலமுண்டு;

பிர 3:7. கிழிக்க ஒரு காலமுண்டு, தைக்க ஒரு காலமுண்டு; மவுனமாயிருக்க ஒரு காலமுண்டு, பேச ஒரு காலமுண்டு;

பிர 3:8. சிநேகிக்க ஒரு காலமுண்டு, பகைக்க ஒரு காலமுண்டு; யுத்தம்பண்ண ஒரு காலமுண்டு, சமாதானம்பண்ண ஒரு காலமுண்டு.

நாம் வாழுகிற இந்த உலகம் மாறிக்கொண்டேயிருக்கிறது. ஒரேநேரத்தில் பல சம்பவங்கள் நடைபெறுகிறது. இவை மனுஷருடைய ஜீவியத்தை ஆளுகை செய்கிறது. நடைபெறுகிற எல்லா சம்பவங்களும் ஒன்றுபோலிராது. ஒவ்வொன்றிற்கும் வித்தியாசமுண்டு. நாம் அன்றாடம் பல சம்பவங்களைப் பார்க்கிறோம். அவற்றையெல்லாம் அனுதினமும் கடந்து வருகிறோம். யாக்கோபு நம்முடைய ஜீவனைப்பற்றிச் சொல்லும் அதை "ஆயுள் சக்கரம்" (யாக் 3:6) என்று சொல்லுகிறார். நம்மைச் சுற்றிலுமுள்ள இயக்கை ஒரு சக்கரத்தைப்போல சுழன்று கொண்டேயிருக்கிறது.

சக்கரத்தின் ஒரு பகுதி மேலே இருக்கும். மற்றொரு பகுதி கீழே இருக்கும். சக்கரம் சுழலும் போது, மேலே இருப்பது கீழே வரும். கீழே இருப்பது மேலே போகும். மனுஷன் தன்னுடைய ஜீவியத்தில் உயர்ந்த நிலையிலிருக்கும்போது, தன்னைவிட தாழ்ந்த நிலையிலிருக்கிறவர்களையும் நோக்கிப் பார்க்கவேண்டும். உயரத்திலிருக்கிறவன் கீழே வருவதற்கு வாய்ப்புள்ளது.

நம்மிடத்திலுள்ள ஐசுவரியம் நிலையானதல்ல. ஐசுவரியமும் தரித்திரமும் நமக்கு மாறி மாறி வரும். இந்த உலகம் மாறிக்கொண்டேயிருப்பதுபோல, நம்முடைய பொருளாதாரமும் மாறிக்கொண்டேயிருக்கும். நாம் நம்முடைய பிரயாசத்தின் பலனை அனுபவிக்கவேண்டும் *(பிர 2:24)*. நாம் மனத்தாழ்மையோடு கர்த்தரை சார்ந்திருக்கவேண்டும். கர்த்தர் நம்மை கரம்பிடித்து வழிநடத்துகிறார். எப்போதுமே பேராசையோடு வாழ்க்கையின் உயர்வை நோக்கிப் பார்த்துக்கொண்டேயிருக்கக்கூடாது. அதே சமயத்தில் நம்மிடத்திலுள்ளது எல்லாம் போய்விடுமோ என்று பயந்து, எப்போதும் கீழே நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கவும் கூடாது. நம்முடைய மனதில் தெளிந்த சிந்தனையிருக்கவேண்டும். எல்லாவற்றிற்கும் ஒரு காலமுண்டு. நம்முடைய காலங்கள் கர்த்தருடைய கரத்திலிருக்கிறது.

சாலொமோன் வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்தையும் ஆராய்ந்து பார்க்கிறார். ஒவ்வொன்றிற்கும் ஒரு காலமுண்டு என்றும், ஒவ்வொரு காரியத்திற்கும் ஒவ்வொரு சமயமுண்டு என்றும் சொல்லுகிறார். காரியங்கள் ஒன்றுக்கொன்று வித்தியாசமாகயிருக்கலாம். பிறப்பு என்பது வேறு. இறப்பு என்பது வேறு. இவ்விரண்டிற்குமே தேவன் ஒரு காலத்தை நியமித்திருக்கிறார். பிறப்பதும் இறப்பதும் அதனதன் காலத்தில் நடைபெறும்.

பிறக்க ஒரு காலமுண்டு. இறக்க ஒரு காலமுண்டு. பகல் வேளையில் சூரியன் உதிக்கிறது. இரவு வேளையில் சந்திரன் வருகிறது. பகலில் வெளிச்சமும் இரவில் இருளும் உண்டாகிறது. எப்போதுமே இரவாக இருக்கப்போவதில்லை. அதுபோலவே எப்போதுமே பகலாகவும் இருக்கப்போவதில்லை. பகலிலிருக்கிற நமக்கு இரவு வரும். இரவிலிருக்கிறவர்களுக்கு பகல் வரும்.

இப்போது கோடைகாலமாகயிருக்கலாம். கோடைகாலம் நிரந்தரமான காலமல்ல. ஏற்றவேளை வரும்போது கோடைகாலம் நம்மை விட்டு நீங்கிப்போகும். நமக்கு குளிர்காலம் வரும். இப்போது குளிர்காலமாகயிருக்குமென்றால், அதை பொறுமையோடு சகித்துக்கொள்ளவேண்டும். குளிர்காலம் சீக்கிரத்தில் கடந்துபோய்விடும். மறுபடியும் கோடைகாலம் வரும். ஒவ்வொன்றிற்கும் ஒரு காலமுண்டு. அவையவை அதனதன் காலத்தில் நேர்த்தியாய் நடைபெறும்.

சில மாற்றங்கள் தேவனுடைய செய்கையினால் நடைபெறுகிறது. ஒரு சில காரியங்களை மனுஷனே மாற்றிவிடுகிறான். வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்திற்கும் ஒரு சமயமுண்டு. இந்தக் காரியங்கள் எல்லாமே மாற்றமடையும். ஆனால் பரலோகம் ஒருபோதும் மாறுவதில்லை. பரலோகத்தின் காரியங்களும் மாறாது. இந்தப் பிரபஞ்சத்தில் மனுஷருக்கு பிறக்க ஒரு காலமுண்டு, இறக்க ஒரு காலமுண்டு. நாம் பிறந்தாலும் இறந்தாலும், மரித்த பின்பு உயிரோடு எழுந்திருப்பதற்கும் ஒரு காலமுண்டு என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

நட ஒரு காலமுண்டு. நட்டதை பிடுங்க ஒரு காலமுண்டு. ஒவ்வொரு வருஷத்திலும் ஏற்ற காலத்தில் நடுகிறோம். ஏற்ற காலத்தில் பிடுங்குகிறோம். நம்முடைய ஜீவியத்திலும் நடுவதற்கும் பிடுங்குவதற்கும் வெவ்வேறு காலங்கள் உண்டு. நாம் நட்டது கனிகொடுக்காவிட்டால் அது பயனற்றதாகிவிடும். கனிகொடுக்காத காலம் பிடுங்கப்படுவதற்கு நியமிக்கப்பட்ட காலம்.

கொல்ல ஒரு காலமுண்டு. தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும்போது துன்மார்க்கர் அழிந்துபோவார்கள். தேசம் பாழாக்கப்படும். கர்த்தர் தம்முடைய நியாயத்தீர்ப்பை வெளிப்படுத்துகிறாரா அல்லது தம்முடைய கிருபையை வெளிப்படுத்துகிறாரா என்பதன் அடிப்படையிலேயே அழிவும் ஜீவனும் மனுக்குலத்திற்கு உண்டாகும். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின்போது துன்மார்க்கர் அழிந்துபோவார்கள். தேவனுடைய கிருபை வெளிப்படும்போது நாம் குணமாக்கப்படுவோம்.

"கர்த்தரிடத்தில் திரும்புவோம் வாருங்கள்; நம்மைப் பீறினார், அவரே நம்மைக் குணமாக்குவார்; நம்மை அடித்தார், அவரே நம்முடைய காயங்களைக் கட்டுவார். இரண்டுநாளுக்குப் பின்பு அவர் நம்மைப் உயிர்ப்பிப்பார்; மூன்றாம் நாளில் நம்மை எழுப்புவார்; அப்பொழுது நாம் அவருடைய சமுகத்தில் பிழைத்திருப்போம்" *(ஓசி 6:1,2).*

கர்த்தர் நீதிமானைச் சோதிக்கிறார். துன்மார்க்கனை உபத்திரவத்திற்கு உட்படுத்துகிறார். வேதனைகளை அனுபவித்தவர்களுக்கு ஆறுதல்கள் உண்டாகவேண்டும். வேதனைப்பட ஒரு காலமுண்டு. ஆறுதலடைய ஒரு காலமுண்டு. "தேவரீர் எங்களைச் சிறுமைப்படுத்தின நாட்களுக்கும், நாங்கள் துன்பத்தைக் கண்ட வருஷங்களுக்கும் சரியாய் எங்களை மகிழ்ச்சியாக்கும்" *(சங் 90:15)* என்று சங்கீதக்காரர் சொல்லுகிறார்.

குடும்பத்தை இடிக்க ஒரு காலமுண்டு. அதைக் கட்ட ஒரு காலமுண்டு. குடும்பத்தைப்போலவே ஒரு ராஜ்யத்தையும், ஒரு தொழிலையும், ஒரு வியாபாரத்தையும் கட்டுவதற்கும் இடிப்பதற்கும் வெவ்வேறு காலங்கள் உண்டு. தேசத்தில் துன்மார்க்கம் அதிகரிக்கும்போது, அந்த தேசம் இடிக்கப்படுவதற்கு ஏற்ற காலத்திலிருக்கும். ஆனாலும் அவர்கள் தங்கள் பாவங்களுக்காக மனம் வருந்தி, கர்த்தரிடத்தில் திரும்பி வரும்போது, கர்த்தரோ தம்முடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும், அந்த தேசத்தை அழித்துப்போடாமல் ஆதரிக்கிறார். இடிக்கப்படும் காலம் கட்டப்படும் காலமாக மாறும். கர்த்தர் தம்முடைய கோபத்தினால், தாம் இடித்துப்போட்டதை, திரும்பவும் கட்டுவார்.

அழ ஒரு காலமுண்டு. நகைக்க ஒரு காலமுண்டு. தேவனுடைய பராமரிப்பின் பிரகாரம், நாம் அழவும் நகைக்கவும் செய்கிறோம். சில சமயங்களில் நாம் சந்தோஷமாக இருக்கவேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். நாம் எப்போதும் சந்தோஷமாக இருக்க முடியாது. நாம் அழவேண்டிய காலமும் உண்டு. நாம் பாவம் செய்துவிட்டால், நாம் செய்த பாவங்களுக்காக அழவேண்டும். நாம் சந்தோஷமாக இருக்கவேண்டிய காலத்தில் சங்கீதம் பாடவேண்டும். நாம் அழவேண்டிய காலத்தில் கண்ணீர் விடவேண்டும். நாம் கர்த்தரை முழுஇருதயத்தோடும், முழுசந்தோஷத்தோடும் ஆராதிக்கவேண்டும். நாம் சந்தோஷமாகயிருக்கும்போது நடனம்பண்ணலாம். நாம் அழும்போது புலம்பவேண்டும்.

கற்களை எறிந்துவிட ஒரு காலமுண்டு. கற்களை சேர்க்க ஒரு காலமுண்டு. தேவன் நம்முடைய எல்லைகளில் சமாதானத்தைக் கொடுக்கும்போது, சத்துருவினுடைய கோட்டைகளெல்லாம் தகர்க்கப்படும். சத்துரு நமக்கு விரோதமாக குவித்து வைத்திருக்கும் தடைக்கற்களெல்லாம் தூரத்திலே அப்புறப்படுத்தப்படும். நாம் ஏற்ற காலத்தில் கற்களை எறிந்துவிடவேண்டும். அதுபோலவே ஏற்ற காலத்தில் கற்களை சேர்க்கவும் வேண்டும். நம்முடைய அரண்களை வலுவாகக் கட்டியெழுப்ப வேண்டும்.

தழுவ ஒரு காலமுண்டு என்றும், தழுவாமலிருக்க ஒரு காலமுண்டு என்றும் சாலொமோன் சொல்லுகிறார். நம்முடைய சிநேகிதர்கள் உண்மையுள்ளவர்களாக காணும்போது நாம் அவர்களைத் தழுவி ஆதரிக்கவேண்டும். நம்மோடு பழகுகிறவர்கள் உண்மையில்லாத துரோகிகளாகயிருக்கும்போது, அவர்களை தழுவாமல் அவர்களை விட்டு விலகிப்போய்விட வேண்டும். இந்த வாக்கியத்திற்கு வியாக்கியானம் சொல்லும்போது, குடும்ப வாழ்க்கையில் கணவனுக்கும் மனைவிக்கும் இடையேயுள்ள உறவையும் வேதபண்டிதர்கள் தெளிவுபடுத்துகிறார்கள்.

"புருஷன் தன் மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்யக்கடவன்; அப்படியே மனைவியும் தன் புருஷனுக்குச் செய்யக்கடவள். மனைவியானவள் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, புருஷனே அதற்கு அதிகாரி; அப்படியே புருஷனும் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, மனைவியே அதற்கு அதிகாரி. உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும் தடையிராதபடிக்கு இருவரும் சிலகாலம் பிரிந்திருக்க வேண்டுமென்று சம்மதித்தாலன்றி, ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாதிருங்கள்; உங்களுக்கு விரதத்துவம் இல்லாமையால் சாத்தான் உங்களைத் தூண்டி விடாதபடிக்கு, மறுபடியும் கூடி வாழுங்கள்" *(1கொரி 7:3-5).*

"ஜனத்தைக் கூட்டுங்கள், சபையைப் பரிசுத்தப்படுத்துங்கள்; முதியோரைச் சேருங்கள், பிள்ளைகளையும் பாலுண்கிற குழந்தைகளையும் கூட்டுங்கள்; மணவாளன் தன் அறையையும், மணவாட்டி தன் மறைவையும் விட்டுப்புறப்படுவார்களாக" (யோவே 2:16).

தேட ஒரு காலமுண்டு. இழக்க ஒரு காலமுண்டு. பணத்தை சேகரிக்க ஒரு காலமுண்டு. ஒரு பொருளை பேரம்பேசி வாங்கி, பணத்தை மிச்சப்படுத்துவதற்கும் ஒரு காலமுண்டு. வாய்ப்புக்கள் வரும் போது அதை நாம் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். ஞானமுள்ளவன் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுவான். நாம் இப்பிரபஞ்சத்தில் ஜீவிக்கிற காலம் வரையிலும், நம்முடைய குடும்பத்தாரைப் போஷிக்கவேண்டும். அவர்களைப் பராமரிக்கவேண்டும். நமக்கு சரீர ஆரோக்கியம் நன்றாயிருக்கும்போது, நாம் அதிகமாய் உழைத்து, பணத்தை சேமிக்கவேண்டும். பொருளைத் தேடவேண்டும்.

சூரிய வெளிச்சம் இருக்கும்போதுதான் நம்மால் இடறி விழாமல் நடக்க முடியும். நம்முடைய வாழ்க்கையில் இரவு வேளையும் வரப்போகிறது. நமக்கு எப்பொழுதுமே பகல் பொழுதாகயிருக்காது. நம்முடைய ஆரோக்கியம் ஒரு காலத்தில் குறைந்துபோகும். நம்மால் உழைக்க முடியாதபடி நம்முடைய சரீரம் பலவீனமடையும். அது இழக்கும் காலம். தேடவேண்டிய காலத்தில் தேடி வைத்தால்தான், இழக்க வேண்டிய காலத்தில் நாம் இழப்பதற்கு நம்மிடத்தில் ஏதாவது இருக்கும். நாம் நியாயமான முறையில் தொழில் செய்து பணம் சம்பாதிக்கவேண்டும். அநியாயமாய் சம்பாதித்த பணம் நம்மிடத்தில் நிலைத்திருக்காது. அது சீக்கிரத்தில் நம்மைவிட்டு விலகிப்போய்விடும்.

காப்பாற்ற ஒரு காலமுண்டு. எறிந்துவிட ஒரு காலமுண்டு. நம்மிடத்தில் உள்ள பொருட்களை நாம் பயன்படுத்தவேண்டும். நம்மிடத்தில் எவ்வளவு பொருட்கள் இருக்கிறது என்பது முக்கியமல்ல. நம்மிடத்திலுள்ள பொருட்களையெல்லாம் நாம் நன்றாய்ப் பயன்படுத்துகிறோமா என்பதுதான் முக்கியம். நாம் தேவனிடத்தில் அன்பாயிருக்கும்போது, நம்மைவிட்டு பாவத்தை அகற்றிவிடவேண்டும். உலகப்பொருளைப் பற்றிக்கொண்டு தேவனை விட்டு விலகிப்போய்விடக்கூடாது. உலகப்பொருளுக்கும் கர்த்தருக்கும் நம்மால் ஊழியம் செய்ய முடியாது.

"ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே. தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல; மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல. தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல. தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தம் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் காப்பான்" (மத் 10:36-39) என்று இயேசுகிறிஸ்து சொல்லுகிறார்.

கிழிக்க ஒரு காலமுண்டு. தைக்க ஒரு காலமுண்டு. நாம் அதிக துக்கத்திலிருக்கும்போது, நம்முடைய வஸ்திரங்களை நாம் கிழித்துப்போடுவதற்கு வாய்ப்புள்ளது. நம்முடைய துக்கம் நம்மைவிட்டு நீங்கின பின்பு, நம்முடைய சந்தோஷத்திற்கு அடையாளமாக, நாம் கிழித்துப்போட்டதை மறுபடியும் தைக்கவேண்டும்.

நாம் மவுனமாயிருக்க ஒரு காலமுண்டு. நாம் பேசுவதற்கும் ஒரு காலமுண்டு. நாம் தீமையான காலத்தில் மவுனமாயிருக்கவேண்டும். "ஆகையால் புத்திமான் அந்தக்காலத்திலே மௌனமாயிருக்கவேண்டும்; அந்தக் காலம் தீமையான காலம்" (ஆமோ 5:13). நாம் தாறுமாறாக பேசிவிடக்கூடாது. மதியீனமாக அதிக வார்த்தைகளைப் பேசுவதைவிட மவுனமாகயிருப்பதே மிகவும் நல்லது. "நான் மவுனமாயி, ஊமையனாயிருந்தேன், நலமானதையும் பேசாமல் அமர்ந்திருந்தேன்; ஆனாலும் என் துக்கம் அதிகரித்தது" (சங் 39:2).

நாம் பேசவேண்டிய வேளையில் பேசாமல் அமைதியாயிருக்கக்கூடாது. நீதியான காரியத்தை நாம் பேசாமல் மவுனமாகயிருந்தால், நீதி வஞ்சிக்கப்படும். அநீதிக்கு முக்கியத்துவம் உண்டாகும். நாம் தேவனுடைய மகிமையை பேசவேண்டும். அதைப் பேசாமல் அமைதியாகயிருக்கக் கூடாது.

சிநேகிக்க ஒரு காலமுண்டு என்று சாலொமோன் சொல்லுகிறார். நம்முடைய சிநேகத்தை நாம் ஏற்ற வேளையில் வெளிப்படுத்திக் காண்பிக்கவேண்டும். நம்முடைய சிநேகிதரோடு சந்தோஷமாயிருக்கவேண்டும். சிநேகிக்க ஒரு காலம் இருப்பதுபோல, பகைப்பதற்கும் ஒரு காலம் இருக்கிறது. ஒரு சிலர் துன்மார்க்கராகயிருப்பார்கள். அவர்கள் நமக்கு விரோதமாகத் தீங்கு செய்வார்கள். அப்படிப்பட்டவர்களோடு நாம் சிநேகமாயிருக்கக்கூடாது. அவர்களுடைய துன்மார்க்கத்தினிமித்தம், நாம் அவர்களைப் பகைத்து விலகி வரவேண்டும்.

யுத்தம்பண்ணுவதற்கும் ஒரு காலமுண்டு. தேவன் தம்முடைய நியாயத்தீர்ப்பை வெளிப்படுத்தும்போது, தம்முடைய பட்டயத்தை வெளியே எடுக்கிறார். சமாதான காலத்தில் பட்டயத்திற்கு வேலையில்லை. நாம் எல்லோரோடு சமாதானமாயிருப்பதை விரும்பவேண்டும். தேவன் தம்முடைய பட்டயத்தை உறையிலே போடும்போது யுத்தங்கள் முடிவு பெறும்.

"அவர் பூமியின் கடைமுனைமட்டும் யுத்தங்களை ஓயப்பண்ணுகிறார்; வில்லை ஒடித்து, ஈட்டியை முறிக்கிறார்; இரதங்களை நெருப்பினால் சுட்டெரிக்கிறார்" *(சங் 46:9)*. இந்தப் பிரபஞ்சத்தில் யுத்தங்கள் எப்போதும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதில்லை. சில சமயங்களில் யுத்தங்கள் நடைபெறும். சில சமயங்களில் யுத்தங்கள் ஓய்ந்து போகும். ஆனாலும் இந்தப் பிரபஞ்சத்தின் சமாதானம் நித்தியமானதல்ல. அவ்வப்போது சமாதானம் வரும். வந்த சமாதானம் திடீரென்று நம்மை விட்டு நீங்கிப்போகும். பரலோகத்தில் மாத்திரமே நித்திய சமாதானம் நியமிக்கப்பட்டிருக்கிறது.

வருத்தப்பட்டுப் பிரயாசப்படுகிறவன் பிர 3:9,10

பிர 3:9. வருத்தப்பட்டுப் பிரயாசப்படுகிறவனுக்கு அதினால் பலன் என்ன?

பிர 3:10. மனுபுத்திரர் பாடுபடும்படி தேவன் அவர்களுக்கு நியமித்த தொல்லையைக் கண்டேன்.

நாம் இப்பிரபஞ்சத்தில் ஜீவிக்கும்போது வருத்தப்பட்டு பிரயாசப்படுகிறோம். அந்தப் பிரயாசத்தினால் ஒரு பலனுமில்லை என்று சாலொமோன் சொல்லுகிறார். நாம் இப்பிரபஞ்சத்தில் நித்தியகாலமாக ஜீவிக்கப்போவதில்லை. இந்தப் பூமி நமக்கு நித்திய வாசஸ்தலமல்ல. பரலோகமே நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற நம்முடைய நித்திய வாசஸ்தலம். நாம் இந்தப் பிரபஞ்சத்தில், கொஞ்சகாலம் மாத்திரம், தற்காலிகமாக ஜீவிக்கிறோம்.

ஆகையினால் நம்முடைய ஜீவியகாலத்தில் நாம் வருத்தப்பட்டு பிரயாசப்படுகிறதினால், நமக்கு ஒரு பலனுமில்லை. நம்முடைய பிரயாசத்தினால் நமக்கு சில ஆதாயங்கள் கிடைத்தாலும், அவை நமக்கு அற்ப பிரயோஜனமுள்ளதாகவே இருக்கும். அந்த ஆதாயத்தினால் நமக்கு சிறிதளவு நன்மை மாத்திரமே கிடைக்கும். இதைப் பெற்றுக்கொள்வதற்குத்தான் நாம் கடினப்பட்டு பிரயாசப்படுகிறோம்.

தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற ஆசீர்வாதங்களையும் பராமரிப்புக்களையும் நல்லமுறையில் செலவுபண்ணவேண்டும். அவற்றை சரியாகப் பயன்படுத்தவேண்டும். மனுபுத்திரர் பாடுபடும்படி, தேவன் நமக்கு வேலைகளைக் கொடுத்திருக்கிறார். அந்த வேலைகளை நாம் கர்த்தருக்குப் பயந்து, சரியாகச் செய்தால், நமக்கு பிரயோஜனமுண்டாகும். நாம் பாடுபடுவதைப்பற்றி சாலொமோன் சொல்லும்போது, அது தேவன் நியமித்த தொல்லை என்று சொல்லுகிறார். தொல்லையினால் நமக்கு சந்தோஷம் கிடைக்காது. வருத்தமும் வேதனையும்தான் கிடைக்கும். ஆனாலும் நாம் சரியாகப் பாடுபட்டால், நமக்கு நன்மை உண்டாகும். சந்தோஷமுண்டாகும்.

தேவன் நமக்கு ஏராளமான பராமரிப்புக்களைக் கொடுத்திருக்கிறார். நல்ல வாய்ப்புக்களையும் சூழ்நிலைகளையும் கொடுத்திருக்கிறார். பல்வேறுவிதமான கிருபைகளையும் கொடுத்திருக்கிறார். தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற கிருபைகளை, நாம் நல்லமுறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளவேண்டும். கிருபைகளைப் போக்கடித்துவிடக்கூடாது. நம்முடைய சுயபுத்தியின்மேல் சார்ந்திராமல், கர்த்தர்மீது சார்ந்திருக்கவேண்டும். நம்முடைய பாரங்களை கர்த்தர்மீது வைத்துவிட்டு, சந்தோஷமாக இருக்கக்கற்றுக்கொள்ள வேண்டும். கர்த்தரை நம்பி நன்மை செய்யவேண்டும். கர்த்தர் கொடுக்கும் எல்லா வாய்ப்புக்களையும், அவரை நம்பி பயன்படுத்தவேண்டும்.

நம்முடைய ஜீவியத்தில் புதிய அனுபவங்கள் ஏராளமாய் வருகிறது. நாம் ஏராளமான மாற்றங்கள் வழியாகக் கடந்து செல்கிறோம். ஒவ்வொரு முறை நாம் மாற்றமான சூழ்நிலையின் வழியாகச் செல்லும்போது, எல்லாமே நமக்குப் புதிதாயிருக்கிறது. நம்முடைய அனுபவமும் புதிதாயிருக்கிறது. நம்முடைய வேலைகளும், நம்முடைய முயற்சிகளும் புதிதாயிருக்கிறது. நம்முடைய சூழ்நிலைகளின்மீது நாம் அதிகமாய்க் கவனம் செலுத்தாமல், கர்த்தர்மீதே கவனம் செலுத்தவேண்டும். எல்லா சூழ்நிலைகளிலும் கர்த்தரே நமக்கு ஆண்டவராகயிருக்கிறார். சூழ்நிலைகள் மாறினாலும், நம்முடைய கர்த்தர் மாறாதவர்.

தேவன் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார் பிர 3:11

பிர 3:11. அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார்; உலகத்தையும் அவர்கள் உள்ளத்திலே வைத்திருக்கிறார்; ஆதலால் தேவன் ஆதிமுதல் அந்தம்மட்டும் செய்துவரும் கிரியையை மனுஷன் கண்டுபிடியான்.

எல்லா காரியங்களிலும் தேவனுடைய கரம் இருக்கிறது. இந்தப் பூமியில் நடைபெறுகிற எல்லா மாற்றங்களும் தேவனுடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமே நடைபெறுகிறது. நாம் எந்த சூழ்நிலைகளிலிருந்தாலும், அந்த சூழ்நிலைகளிலும் நாம் கர்த்தரை சார்ந்து ஜீவிக்கவேண்டும். கர்த்தர் நமக்குக் கொடுக்கும் காலத்தையும், ஆசீர்வாதத்தையும், பராமரிப்பையும் பிரயோஜனப்படுத்திக்கொள்ள வேண்டும். தேவன் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார்.

தேவன் குளிர்காலத்தில் குளிர்ச்சியாகயிருப்பது போல, கோடைகாலத்தில் வெப்பமாகவும் இருக்கிறார். பகல்வேளையில் அவர் வெளிச்சமாகயிருக்கிறார். இரவு வேளையில் அவர் இருளாகயிருக்கிறார். இரவு வேளை கருப்பாகயிருந்தாலும், அதுவும் தேவனுடைய பார்வையில் அழகாகத்தான் இருக்கிறது. பகல்வேளை வெளிச்சமாகயிருந்தாலும், அதுவும் தேவனுக்குப் பிடித்திருக்கிறது. தேவனுடைய தெய்வீக பராமரிப்பில் ஓர் அற்புதமான ஒற்றுமை காணப்படுகிறது. தேவனுடைய பராமரிப்புக்களெல்லாமே ஒன்றுக்கொன்று தொடர்புடையவை.

சீதோஷ்ணநிலமை மாறிக்கொண்டே வருகிறது. ஆனாலும் எல்லா சீதோஷ்ண காலங்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. அவையெல்லாமே தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது. கர்த்தரை நம்புகிறவர்கள், எல்லா சூழ்நிலைகளிலும், எல்லா சீதோஷ்ண நிலைகளிலும், கர்த்தருக்குள் மகிழ்ச்சியாகயிருப்பார்கள். அவர்களுடைய இருதயம் எப்போதும் ஆறுதலடைந்திருக்கும். அவர்களுக்குள் சந்தோஷமும் சமாதானமும் நிரம்பியிருக்கும்.

தேவனுடைய தெய்வீக பராமரிப்பின் பரிபூரணத்தை நாம் இன்னும் முழுமையாகக் கண்டுபிடிக்க முடியவில்லை. தேவனுடைய பராமரிப்பை நாம் ஓரளவு காண்கிறோம். நாம் பார்ப்பது வரையிலும், அதில் தேவனுடைய மகிமை வெளிப்படுகிறது. ஆனாலும் தேவனுடைய வெளிப்பாடுகளெல்லாமே நமக்கு இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை. நமக்கு மறைவான இரகசியங்கள் இன்னும் ஏராளமாய் உள்ளன. வெளிப்படுத்தப்படாதவை கர்த்தருக்கே உரியவை.

கர்த்தர் இந்த உலகத்தை நம்முடைய உள்ளத்திலே வைத்திருக்கிறார். ஆனாலும் நம்மால் இந்த உலகத்தை இன்னும் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. தேவன் ஆதிமுதல் அந்தமட்டும் ஏராளமான கிரியைகளைச் செய்துவருகிறார். தேவனுடைய கிரியைகளை மனுஷனால் இன்னும் பூரணமாய்க் கண்டுபிடிக்க முடியவில்லை.

தேவனுடைய தெய்வீக பராமரிப்புக்களைக் கண்டுபிடிப்பதற்கு, நாம் பொறுமையோடு காத்திருக்கவேண்டும். நம்முடைய சுயபுத்தியினாலோ, சுயபக்தியினாலோ, சுயமுயற்சியினாலோ தேவனுடைய இரகசியங்களை நம்மால் கண்டுபிடிக்க முடியாது. தேவன் ஆதிமுதல் அந்தமட்டும் செய்து வரும் காரியங்களை மனுஷன் கண்டுபிடியான். ஆகையினால் காலம் நிறைவேறுவதற்கு முன்பாக, தேவனுடைய இரகசியங்களை நாம் பூரணமாய் அறிந்துகொள்வதற்கு முன்பாக, எதையும் அவசரப்பட்டு தீர்மானம்பண்ணக்கூடாது.

படம் வரையும்போதே அதனுடைய அழகை முழுமையாய் இரசிக்க முடியாது. கட்டிடம் கட்டப்படும்போதே அதற்குள் குடியிருக்க முடியாது. எல்லாம் செய்து முடித்த பின்புதான் அது பூரணமாகயிருக்கும். ஓவியர் தான் வரைகிற படத்தை பூரணமாய் வரைந்து முடித்த பின்புதான் அதன் முழுமையான அழகு நமக்குத் தெரியவரும். தேவனுடைய கிரியைகளும் அதுபோலவே நமக்கு இன்னும் முழுமையாய்த் தெரியவில்லை.

நாம் தேவனுடைய கிரியைகளின் ஒரு பகுதியை மாத்திரமே பார்த்திருக்கிறோம். தேவன் ஆதிமுதல் அந்தமட்டும் கிரியை செய்து வருகிறார். அவர் ஆதியிலே செய்த கிரியைகளெல்லாம் நமக்குத் தெரியாது. தேவனுடைய தெய்வீக ஆலோசனைகளில் காணப்பட்ட ஆலோசனைகளும் நமக்குத் தெரியாது. தேவன் முடிவில் என்ன செய்வார் என்பதும் நமக்குத் தெரியாது.

ஆரம்பத்தைப் பார்க்கிலும் முடிவு மகிமையானது. ஆனாலும் நம்மால் இன்னும் மகிமையான அந்த முடிவைப் பார்க்க முடியவில்லை. தேவனுடைய கிரியைகளை நாம் பிரத்தியட்சமாய்ப் பார்க்க முடியாதபடி ஒரு திரை நமக்கு மறைவாயிருக்கிறது. அந்தத் திரை கிழிக்கப்படவேண்டும். அப்போதுதான் தேவனுடைய கிரியைகளை நம்மால் பூரணமாய்க் காணமுடியும்.

தேவன் உலகத்தையும் அவர்கள் உள்ளத்திலே வைத்திருக்கிறார். இந்த வாக்கியத்திற்கு வேதபண்டிதர்கள் இரண்டு விதமாக வியாக்கியானம் சொல்லுகிறார்கள். அவையாவன :

1. தேவன் நம்முடைய உள்ளத்திலே தம்முடைய கிருபையை வைத்திருக்கிறார். ஆகையினால் நம்முடைய சுயபுத்தியினால் தேவனுடைய கிரியைகளை அறிந்துகொள்வதைவிட, அதிகமாய் அறிந்துகொள்ள முடிகிறது. நாம் இந்த உலகத்தை நோக்கிப் பார்க்கும்போது, எல்லா காரியங்களையும் தேவனுடைய சிருஷ்டிப்போடும், அவருடைய மகிமையோடும் தொடர்பு படுத்தியே பார்க்கவேண்டும். அப்போதுதான் தேவனுடைய சிருஷ்டிப்பின் மகிமையும் பிரமாண்டமும் நமக்குப் புரியும்.

2. தேவன் இந்த உலகத்தை நம்முடைய உள்ளத்தில் மறைவாக வைத்திருக்கிறார். ஆகையினால் தேவனுடைய கிரியைகளை நம்மால் எந்த அளவுக்கு அறிந்துகொள்ள முடியுமோ, அந்த அளவுக்குக்கூட நம்மால் அறிந்து கொள்ள முடியவில்லை. தேவன் நம்முடைய உள்ளத்திலே உலகத்தை வைத்திருக்கிறார். உலகப்பிரகாரமான காரியங்களை வைத்திருக்கிறார். நமக்குள்ளே உலகசிநேகமும், உலகக்கவலைகளும் நிரம்பியிருக்கிறது. ஆகையினால் தேவனுடைய சிருஷ்டிப்பின் கிரியையைக் காண்பதற்கு நமக்கு நேரமுமில்லை, விருப்பமுமில்லை. எல்லாவற்றிலும் தேவனுடைய கரம் தங்கியிருக்கிறது என்பதை நம்மால் காணவும் முடியவில்லை. நம்முடைய மனக்கண்கள் பிரகாசமிழந்து காணப்படுகிறது.

மகிழ்ச்சியாயிருப்பதும், நன்மை செய்வதும் பிர 3:12,13

பிர 3:12. மகிழ்ச்சியாயிருப்பதும், உயிரோடிருக்கையில் நன்மை செய்வதுமேயல்லாமல், வேறொரு நன்மையும் மனுஷனுக்கு இல்லையென்று அறிந்தேன்.

பிர 3:13. அன்றியும் மனுஷர் யாவரும் புசித்துக் குடித்து தங்கள் சகலப் பிரயாசத்தின் பலனையும் அநுபவிப்பது தேவனுடைய அநுக்கிரகம்.

எல்லாம் மாயை என்று சாலொமோன் சொல்லுகிறார். ஆனாலும் மாயையான காரியத்திலும், நன்மையான காரியம் இருக்கிறது. நாம் நன்மை செய்யும்போது நமக்கு நன்மை உண்டாகும். நம்முடைய குடும்பத்திற்கும், நம்முடைய உற்றார் உறவினர்களுக்கும் நன்மை உண்டாகும். நாம் உயிரோடிருக்கையில் நன்மை செய்தால், அதனால் பொதுஜனங்களுக்கும், விசேஷமாய்த் தரித்திரருக்கும் உதவி கிடைக்கும். நம்முடைய ஐசுவரியங்கள், செல்வாக்குகள், அதிகாரங்கள் ஆகியயெல்லாவற்றையும் நன்மை செய்வதற்கு மாத்திரமே பயன்படுத்தவேண்டும்.

நாம் உயிரோடிருக்கையில் நன்மை செய்யவில்லையென்றால், அதன்பின்பு நன்மை செய்வதற்கு நமக்கு வாய்ப்பே இருக்காது. நாம் இந்தப் பிரபஞ்சத்தில் உயிரோடிருக்கிற காலம் மாத்திரமே, நாம் கிரியை செய்யக்கூடிய காலம். தேவன் நம்முடைய ஜீவியகாலத்தில் நமக்குக் கொடுத்திருக்கும் வாய்ப்புக்களை நல்லமுறையில் பயன்படுத்தினால் நமக்கு மகிழ்ச்சியும் நன்மையும் உண்டாகும். மகிழ்ச்சியாயிருப்பதும், உயிரோடிருக்கையில் நன்மை செய்வதுமேயல்லாமல், வேறொரு நன்மையும் நமக்கு இல்லை.

நாம் இப்பிரபஞ்சத்தில் ஜீவிக்கும் காலத்தில், எப்படி கிரியை செய்கிறோம் என்பதன் அடிப்படையிலேயே, நம்முடைய நித்திய ஜீவன் அமையும். இந்த உலகத்தில் நாம் உயிரோடிருக்கையில், ஏராளமான பாவங்களைச் செய்து மாம்சத்தின் இச்சைகளைப் பூர்த்திசெய்தால், நாம் நித்திய காலமாய் நரகத்தில் தள்ளப்படுவோம். நரகத்தில் நமக்கு சமாதானமும் சந்தோஷமும் இருக்காது. அங்கு அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்.

நாம் இப்பிரபஞ்சத்தில் ஜீவிக்கிற காலம் வரையிலும் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கவேண்டும். மனுஷர் யாவரும் புசித்து குடித்து, தங்கள் சகல பிரயாசத்தின் பலனை அனுபவிப்பது தேவனுடைய அநுக்கிரகம். நாம் எந்த வேலையைச் செய்தாலும் அதைக் கர்த்தருக்காக செய்யவேண்டும். கர்த்தரை நம்பி நன்மை செய்யவேண்டும். நம்முடைய கிரியைகளெல்லாவற்றிலும் நாம் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கவேண்டும். கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற ஆசீர்வாதங்களுக்காகவும், பராமரிப்புக்களுக்காகவும் நாம் கர்த்தருக்கு நன்றி சொல்லவேண்டும்.

தேவன் செய்வது எதுவோ அது என்றைக்கும் நிலைக்கும் பிர 3:14

பிர 3:14. தேவன் செய்வது எதுவோ அது என்றைக்கும் நிலைக்கும் என்று அறிவேன்; அதினோடே ஒன்றும் கூட்டவுங்கூடாது, அதிலிருந்து ஒன்றும் குறைக்கவுங்கூடாது; மனுஷர் தமது சமுகத்தில் பயந்திருக்கும்படி தேவன் இப்படிச் செய்துவருகிறார்.

தேவனுடைய பராமரிப்பில் நாம் திருப்தியடையவேண்டும். தேவன் செய்வது எதுவோ அது என்றைக்கும் நிலைக்கும். அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார். தேவனே சர்வசிருஷ்டிகர். அவர் சர்வசிருஷ்டிகளையும் போஷித்துப் பராமரிக்கிறார். அவர் கிருபையும் கரிசனையுமுள்ளவர். தேவனுடைய சித்தம் நிறைவேறும். நம்முடைய ஜீவியத்தில் சில காரியங்கள் நடைபெறும்போது, தேவனுடைய சித்தம் நிறைவேறட்டும் என்று அவருடைய சமுகத்தில் நாம் அமைதியாய்க் காத்திருக்கவேண்டும்.

தேவன் செய்ய நினைப்பது எதுவும் ஒருபோதும் தடைபடாது. தேவன் தம்முடைய சித்தத்தின் பிரகாரமும், திட்டத்தின் பிரகாரமும் எல்லா காரியங்களையும் செய்கிறார். தேவனுடைய சித்தத்தில் அவருடைய ஞானம் வெளிப்படுகிறது. தேவன் யாரிடத்திலும் ஆலோசனை கேட்கவேண்டிய அவசியமில்லை. அவர் யோசனையில் பெரியவர். தேவனுடைய சித்தமும், விருப்பமும், ஆலோசனைகளும் ஒருபோதும் மாறுவதில்லை. தேவனாகிய கர்த்தர் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராயிருக்கிறார்.

தேவனுடைய கிரியைகள் எல்லாமே பரிபூரணமானவை. நாம் அதனோடே ஒன்றும் கூட்டவும் கூடாது. அதிலிருந்து ஒன்றும் குறைக்கவும் கூடாது. தேவனுடைய கிரியைகளை நம்முடைய சித்தத்தின் பிரகாரமாக ஆராய்ந்து பார்க்காமல், தேவனுடைய சித்தத்தை முன்னிருத்தி ஆராய்ந்து பார்க்கவேண்டும். அப்போதுதான் தேவனுடைய பரிபூரணமான சித்தம் நமக்குத் தெரியவரும்.

தேவனுடைய கிரியைகளில் ஒரு குறைவுமில்லை. அவர் கூடுதலாகவும் எதுவும் செய்யமாட்டார். தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக எது தேவையோ அதை மாத்திரமே செய்வார். தாம் செய்ய விரும்புகிற காரியத்தை அவர் செய்யாமல் இருக்கவுமாட்டார். தேவன் எதையும் அரைகுறையாகச் செய்து, அப்படியே விட்டுவிடுகிறவரல்ல. தேவன் ஆரம்பித்ததை முடிப்பார். அவர் சொல்லுகிறதை செய்வார். செய்கிறதை சொல்லுவார். தேவனுடைய கிரியைகளெல்லாமே முடிவானவை. அவை அனைத்தும் பரிபூரணமானவை. தேவனுடைய கிரியைகளெல்லாமே முக்கியமானவை. பிரயோஜனமானவை. நமக்கு அவசியமானவை. தேவையானவை.

முன் நடந்ததே இப்பொழுதும் நடக்கிறது பிர 3:15

பிர 3:15. முன் நடந்ததே இப்பொழுதும் நடக்கிறது; இனி நடக்கப்போகிறதும் முன்னமே நடந்தது; நடந்ததையோ தேவன் விசாரிப்பார்.

நாம் ஜீவிக்கிற இந்த உலகத்தில் ஏராளமான மாற்றங்களைக் காண்கிறோம். நாம் தேவனுடைய பராமரிப்புக்களை நோக்கிப் பார்க்கும்போது, அவற்றின் ஆரம்பத்தைப் பார்ப்பதுபோல, அவற்றின் முடிவையும் பார்க்கவேண்டும். இந்தப் பிரபஞ்சத்தில் எத்தனை மாற்றங்கள் நடைபெற்றாலும், தேவனுடைய சித்தத்தில் ஒரு மாற்றமும் உண்டாவதில்லை. தேவனுடைய ஆளுகையிலும் மாற்றமில்லை. அவருடைய விருப்பத்திலும் மாற்றமில்லை. அவருடைய வார்த்தையிலும் மாற்றமில்லை. எல்லா மாற்றங்களும் தேவனுடைய மாறாத சித்தத்தின் பிரகாரமாகவே நடைபெறுகிறது.

இப்பொழுது நடக்கிற எல்லா காரியங்களும் இதற்கு முன்பே நடைபெற்றிருக்கிறது. இனிமேல் நடக்கப்போகிறதும் இதற்கு முன்பு நடந்திருக்கிறது. முன்பு நடந்ததுதான் இப்போதும் நடக்கிறது. எதுவும் புதிதாய் நடைபெறவில்லை என்று சாலொமோன் சொல்லுகிறார். நாம் இந்தப் பிரபஞ்சத்தில் ஏராளமான மாற்றங்களைப் பார்த்தாலும், தேவனுடைய பார்வையில் எதுவுமே மாறவில்லை. எல்லாம் அப்படியே இருக்கிறது. தேவனுடைய கிரியைகளிலும் மாற்றமில்லை. அவர் ஏற்கெனவே நடப்பித்த கிரியைகளைத்தான் இப்போதும் நடப்பிக்கிறார். இனிமேலும் அதே கிரியைகளைத்தான் நடப்பிப்பார்.

நியாயஸ்தலமும் நீதிஸ்தலமும் பிர 3:16,17

பிர 3:16. பின்னும் சூரியனுக்குக்கீழே நான் நியாயஸ்தலத்தைக் கண்டேன், அங்கே அநியாயம் இருந்தது; நீதிஸ்தலத்தையும் கண்டேன், அங்கே அநீதி இருந்தது.

பிர 3:17. சகல எண்ணங்களையும் சகல செய்கைகளையும் நியாயந்தீர்க்குங் காலம் இனி இருக்கிறபடியால் சன்மார்க்கனையும் துன்மார்க்கனையும் தேவன் நியாயந்தீர்ப்பார் என்று என் உள்ளத்தில் எண்ணினேன்.

சாலொமோன் இந்தப் பிரபஞ்சத்தில் தான் பார்க்கிற இன்னும் அநேகக் காரியங்களை இங்கு எழுதுகிறார். ஜனங்களிடத்தில் தெய்வபயமில்லை. மனுஷர் மத்தியிலே தெய்வபக்தியுமில்லை. எல்லாம் மாயையாயிருக்கிறது. மனுஷரிடத்தில் ஜீவனும் பெலனும் இருக்கலாம். அதிகாரமும் வல்லமையும் இருக்கலாம். ஆனாலும் அவர்களிடத்தில் தெய்வபயமில்லையென்றால், அவர்களுக்கு மற்றவையெல்லாம் இருந்தாலும், அவற்றால் ஒரு பிரயோஜனமுமில்லை. தெய்வ பயத்தோடு கூடிய ஜீவனே நமக்கு மெய்யான ஆசீர்வாதம்.

மனுஷனும் மாயையாயிருக்கிறான். விருதாவாய் ஜீவிக்கிறான். தான் ஒன்றுமில்லாதவனாயிருந்தும், தன்னை மிகப்பெரியவனாகக் காண்பித்துக்கொள்ள வேஷம் போடுகிறான். மாயையான மனுஷன் சிங்காசனத்தில் அமர்ந்திருக்கிறான். நீதிஸ்தலத்திலும், நியாயஸ்தலத்திலும் உட்கார்ந்திருக்கிறான். தேவனுடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்து, அவன் நீதியாயும், நியாயமாயும் தீர்ப்பு சொல்லவேண்டும். அவனுடைய வாயின் வார்த்தைகளில் நீதியும், சத்தியமும், நியாயமும் நிரம்பியிருக்கவேண்டும். அப்படிப்பட்ட நியாயாதிபதியையே கர்த்தர் அங்கீகரிக்கிறார். நீதிமான் கர்த்தருடைய ஊழியக்காரனாக நியாயஸ்தலத்தில் அமர்ந்து நீதியான தீர்ப்பு சொல்லுகிறான். கர்த்தருக்கு பயப்படும் பயம் இல்லாதவன் மாயையாயிருக்கிறான். அவன் நியாயஸ்தலத்திலும், நீதிஸ்தலத்திலும் அமர்ந்திருந்தாலும், நீதியை பேசாமல், அநீதியைப் பேசுகிறான். நியாயத்தைப் புரட்டுகிறான்.

சாலொமோன் சூரியனுக்குக் கீழே நியாயஸ்தலத்தைக் காண்கிறார். அங்கு அநியாயம் இருக்கிறது. அவர் நீதிஸ்தலத்தையும் காண்கிறார். அங்கே அநீதியிருக்கிறது. நியாயாதிபதிகள் நீதியாய்த் தீர்ப்பு சொல்வதில்லை. மனுஷன் உயர்ந்த ஸ்தலத்திலிருக்கிறான். ஆனால் அவனிடத்தில் நற்குணமில்லை. அவன் நியாயஸ்தலத்தில் அமர்ந்திருந்தாலும், நியாயாதிபதியின் குணாதிசயம் அவனிடத்தில் காணப்படவில்லை. மனுஷனுக்கு கனமும், மதிப்பும், மரியாதையும் இருக்கிறது. ஆனால் அவனிடத்தில் தேவனைப்பற்றிய அறிவு இல்லை. இப்படிப்பட்டவர்கள் மிருகங்களைப் போல இருக்கிறார்கள். அவர்கள் மிருகங்களைப்போலவே அழிந்துபோவார்கள்.

நியாயஸ்தலத்தில் அநியாயம் இருக்கக்கூடாது. நீதிஸ்தலத்தில் அநீதியிருக்கக்கூடாது. அங்கு அநியாயமும் அநீதியும் இருக்குமென்றால், நியாயஸ்தலமும், நீதிஸ்தலமும் இல்லாமலிருப்பதே நல்லது. நியாயாதிபதி அநீதியுள்ளவனாக இருப்பானென்றால், நியாயாதிபதி இல்லாமலிருப்பதே நல்லது.

நியாயாதிபதியினிடத்தில் வழக்குகளை விசாரித்து நீதியான தீர்ப்பு சொல்லுகிற அதிகாரமுள்ளது. அவர் தன்னிடத்திலுள்ள அதிகாரத்தை நீதியையும், நியாயத்தையும், சத்தியத்தையும் வெளிப்படுத்த பயன்படுத்தவேண்டும். நியாயாதிபதியின் அதிகாரம் நீதியை நிலைநிறுத்தவேண்டும். அவன் தன்னுடைய அதிகாரத்தை அநியாயமாய்த் தீர்ப்பு சொல்லுவதற்குப் பயன்படுத்தினால், அவனிடத்தில் அதிகாரமில்லாமல் இருப்பதே நல்லது.

நியாயாதிபதி நீதியாய்த் தீர்ப்பு செய்யவில்லையென்றால், அவரை தேவன் நியாயந்தீர்ப்பார். தேவனிடத்தில் பட்சபாதமில்லை. அவர் சன்மார்க்கனையும் துன்மார்க்கனையும் நியாயந்தீர்ப்பார். அவர் சகல எண்ணங்களையும் சகல செய்கைகளையும் நியாயந்தீர்ப்பார். நியாயாதிபதி, அநியாயமான தீர்ப்பைச் சொன்னால், அது இறுதியான தீர்ப்பாகாது. சத்தியமான தீர்ப்பே நிலைத்து நிற்கும். மெய்யான தீர்ப்புதான் இறுதியான தீர்ப்பு. பொய்யான தீர்ப்பு இறுதியானதல்ல. இந்தப் பிரபஞ்சத்தின் நியாயாதிபதிகள் நியாயத்தீர்ப்பு சொன்னாலும், அவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற காலம் வரப்போகிறது. கர்த்தர் நீதிமானையும் துன்மார்க்கனையும் நியாயந்தீர்ப்பார். கர்த்தர் நீதிக்காக வழக்காடுவார். நீதிமான்களுக்காக பரிந்து பேசுவார்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்மிடத்தில் நீதியும் நியாயமும் இருக்கவேண்டும். நமக்கு இப்பிரபஞ்சத்து நியாயஸ்தலத்திலும், நீதிஸ்தலத்திலும் நீதியான தீர்ப்பு கிடைக்காவிட்டாலும், தேவனுடைய நியாயஸ்தலத்தில் நமக்கு நிச்சயமாகவே நீதியான தீர்ப்பு கிடைக்கும். கர்த்தர் நியாயஸ்தலத்தில் அமர்ந்திருக்கும் போதுதான் நமக்கு மெய்யான ஆறுதலும், மெய்யான சந்தோஷமும் கிடைக்கும். அந்த நியாயத்தீர்ப்பு நாளுக்காக நாம் பொறுமையோடு காத்திருக்கவேண்டும். இந்த உலகத்து நியாயஸ்தலத்தில் நமக்கு அநியாயமான தீர்ப்பு சொல்லப்பட்டாலும், தேவனுடைய நியாயஸ்தலத்தில் நம்முடைய வழக்கு மறுபடியும் விசாரிக்கப்படும். தேவனே நியாயஸ்தலத்தில் அமர்ந்திருந்து நம்முடைய வழக்குகளை விசாரிப்பார்.

மனுஷர்கள் நம்முடைய வழக்குகளை செவிகொடுத்து கேட்காவிட்டாலும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் நம்முடைய நியாயங்களையும், வேண்டுதல்களையும், விண்ணப்பங்களையும் கவனமாய்ச் செவிகொடுத்துக் கேட்பார். நமக்கு விரோதமாய்ச் சொல்லப்பட்ட அநீதியான தீர்ப்புகளை நீக்கிப்போட்டு, நமக்கு நியாயமான தீர்ப்புக் கொடுப்பார்.

தேவனுடைய நீதிஸ்தலத்தையும், நியாயஸ்தலத்தையும் நாம் இந்தப் பிரபஞ்சத்தில் இன்னும் பிரத்தியட்சமாய் காணாமலிருக்கலாம். அது தேவன் நியமித்த காலத்தில் நிச்சயமாகவே நடைபெறும். "சர்வவல்லவருக்குக் காலங்கள் மறைக்கப்படாதிருக்க, அவரை அறிந்தவர்கள் அவர் நியமித்த நாட்களை அறியாதிருக்கிறதென்ன?" (யோபு 24:1).

மனுபுத்திரரும் மிருகங்களும் பிர 3:18-22

பிர 3:18. மனுபுத்திரர் தாங்கள் மிருகங்களைப்போல் இருக்கிறார்களென்பதை அவர்கள் காணும்படிக்கு தேவன் அவர்களைச் சோதிக்கிறாரென்று நான் மனுஷருடைய நிலைமையைக்குறித்து என் உள்ளத்தில் எண்ணினேன்.

பிர 3:19. மனுபுத்திரருக்குச் சம்பவிக்கிறது மிருகங்களுக்கும் சம்பவிக்கும்; அவர்களுக்கும் இவைகளுக்கும் ஏக சம்பவமுண்டு; இவைகள் சாகிறதுபோலவே அவர்களும் சாகிறார்கள்; ஜீவன்களுக்கெல்லாம் சுவாசம் ஒன்றே; மிருகத்தைப்பார்க்கிலும் மனுஷன் மேன்மையுள்ளவன் அல்ல; எல்லாம் மாயையே.

பிர 3:20. எல்லாம் ஒரே இடத்துக்குப் போகிறது; எல்லாம் மண்ணிலே உண்டாகிறது, எல்லாம் மண்ணுக்குத் திரும்புகிறது.

பிர 3:21. உயர ஏறும் மனுஷனுடைய ஆவியையும், தாழ பூமியிலிறங்கும் மிருகங்களுடைய ஆவியையும் அறிகிறவன் யார்?

பிர 3:22. இப்படியிருக்கிறபடியால், மனுஷன் தன் செய்கைகளில் மகிழ்ச்சியாயிருக்கும் நன்மையேயல்லாமல், வேறே நன்மை இல்லையென்று கண்டேன்; இதுவே அவன் பங்கு; தனக்குப் பின்வரும் காரியங்களைக் காணும்படிக்கு அவனைத் திரும்பிவரப் பண்ணுகிறவன் யார்?

மனுஷன் இப்பிரபஞ்சத்தில் உயிரோடிருக்கும் காலமெல்லாம் மாயையாகவே இருக்கிறான். விருதாவாக வேஷம் போடுகிறான். இப்பிரபஞ்சத்தில் மனுபுத்திரருக்கு என்னென்ன காரியங்களெல்லாம் சம்பவிக்கிறது என்பதை சாலொமோன் இங்கு விரிவாகச் சொல்லுகிறார். மனுஷரிடத்தில் கர்த்தருக்குப் பயப்படும் பயம் காணப்படவேண்டும். கர்த்தருக்குப் பயப்படுவதே ஞானத்தின் ஆரம்பம். இந்த ஞானம் மிருகங்களுக்கு இல்லை. இதுவே மனுபுத்திரரை மிருகங்களிலிருந்து வேறுபடுத்திக் காண்பிக்கிறது. கர்த்தருக்கு பயப்படும் பயமில்லாத மனுபுத்திரர் மிருகங்களைப்போல இருக்கிறார்கள். இதை மனுஷர் காணவேண்டும் என்பதற்காகவே, தேவன் மனுபுத்திரரை சோதிக்கிறார்.

இந்தப் பிரபஞ்சத்தில் நமக்கு பாடுகளும், வேதனைகளும் வரும்போது, நாம் தேவன்மீது குற்றம் சொல்லக்கூடாது. கர்த்தர் இந்தப் பிரபஞ்சத்தை மனுஷனுக்கு ஆசீர்வாதமாகக் கொடுக்காமல், ஒரு சிறைச்சாலையைப்போல கொடுத்திருக்கிறார் என்று மனவேதனைப்படக்கூடாது. இந்த உலகம் நமக்கு சிறைச்சாலையல்ல. உலகக்காரியங்களில் சிக்கிக்கொள்கிறவர்கள்தான், இந்த உலகத்தில் உலகக்காரியங்களினால் கட்டப்பட்டிருப்பார்கள். பாவங்களில் கட்டப்பட்டிருப்பார்கள். அவர்களுக்கு தங்கள் கட்டுகளிலிருந்து எப்படி விடுதலை பெறுவது என்பது தெரியாது.

கர்த்தர் இந்த உலகத்தில் நமக்கு ஏராளமான ஆசீர்வாதங்களைக் கொடுத்திருக்கிறார். அவையெல்லாமே நம்முடைய நன்மைக்காகவே கொடுக்கப்பட்டிருக்கிறது. நாம் இந்த உலகத்தில் கர்த்தருக்குப் பயந்து ஜீவிக்கவேண்டும். அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும். நம்முடைய ஜீவியத்தில் கர்த்தர் அனுமதிக்கிற காரியத்தை மாத்திரமே செய்யவேண்டும். அவர் தடைபண்ணியிருக்கிற காரியத்தை நாம் செய்ய விரும்பவும் கூடாது. அதை செய்யவேண்டுமென்று முயற்சி பண்ணவும் கூடாது. நாம் கர்த்தரோடு சமாதானமாய் ஜீவிக்கவேண்டும். நாம் ஒருபோதும் கர்த்தரோடு யுத்தம்பண்ணுகிறவர்களாய் இருக்கக்கூடாது.

கர்த்தர் மனுபுத்திரரை தேவதூதரைவிட சற்று தாழ்வான அந்தஸ்தில் சிருஷ்டித்திருக்கிறார். நாம் மிருகங்களைவிட உயர்ந்தவர்கள். தேவதூதர்களைவிட தாழ்ந்தவர்கள். ஆனால் மனுஷரில் சிலர் தங்களுடைய உயர்வான நிலமையைப் புரிந்துகொள்ளாமல், மிருகங்களைப் போல ஜீவிக்கிறார்கள். தங்களுடைய வேதனைக்கும், வருத்தத்திற்கும் இவர்கள் தேவனைக் குற்றப்படுத்துகிறார்கள். நம்முடைய சாபத்திற்கு நாம் தான் காரணம். தேவன்மீது நாம் வீணாய்க் குறைசொல்லக்கூடாது.

"ஜாதிகள் தங்களை மனுஷரென்று அறியும்படிக்கு, அவர்களுக்குப் பயமுண்டாக்கும், கர்த்தாவே. (சேலா)" *(சங் 9:20)* என்று தாவீது சொல்லுகிறார். இருதயத்தில் பெருமையும் அகந்தையுமுள்ள மனுஷன், தன்னை மனுஷனைவிட அதிகமாய் உயர்த்துகிறான். நாம் மனுஷர்தான் என்பதை மறந்துவிடக்கூடாது. நாம் மனுஷர் என்பதை கர்த்தர் தாமே நமக்கு உணர்த்தவேண்டும்.

துன்மார்க்கர் அநியாயமும் அக்கிரமமும் செய்கிறார்கள். அவர்கள் மனுஷர்களாகயிருந்தாலும், அவர்களிடத்தில் மனுஷசுபாவத்திற்குப் பதிலாக, மிருக சுபாவம் காணப்படுகிறது. இப்படிப்பட்டவர்கள் மிருகங்களைப்போலவே இருக்கிறார்கள். தங்களிடத்தில் மனுஷசுபாவம் இல்லையென்பதையும், அதற்குப் பதிலாக தங்களிடத்தில் மிருகசுபாவம் இருக்கிறது என்பதையும் கர்த்தர் துன்மார்க்கருக்கு வெளிப்படுத்தவேண்டும்.

உலகப்பிரகாரமான மனுஷன் தன்னுடைய மாம்ச இச்சைகளை பூர்த்தி செய்யவேண்டும் என்று பேராசைப்படுகிறான். இவனிடத்தில் கர்த்தருக்குப் பயப்படும் பயம் இருக்காது. உலகசிநேகம் இருக்கும். இப்படிப்பட்ட துன்மார்க்கமான மனுபுத்திரர் மிருகங்களைப்போலவே இருக்கிறார்கள். இவர்கள் உருவத்தில் மனுஷர்களாகயிருந்தாலும், இவர்களிடத்தில் மிருகங்களின் சுபாவம்தான் இருக்கிறது. இப்படிப்பட்டவர்கள் மிருகங்களைவிட மேலானவர்களல்ல.

துன்மார்க்கருடைய இருதயத்தில் மாயை நிரம்பியிருக்கிறது. இவர்கள் தேவனை அறியார்கள். தேவனை அறியவேண்டுமென்று விரும்பார்கள். மிருகங்களுக்கு சம்பவிப்பதே துன்மார்க்கருக்கும் சம்பவிக்கும். மிருகங்கள் சாகிறதுபோலவே மனுபுத்திரரும் சாகிறார்கள். மனுபுத்திரருக்கும் மிருகங்களுக்கும் ஒன்றுபோலவே நடைபெறுகிற சில சம்பவங்கள் உண்டு. ஜீவன்களுக்கெல்லாம் சுவாசம் ஒன்றுதான். துன்மார்க்கமான மனுஷன் மிருகத்தைப் பார்க்கிலும் மேன்மையுள்ளவனல்ல. துன்மார்க்கனுக்கு எல்லாம் மாயையே.

சரீரத்தைப் பொறுத்தவரையில், மனுபுத்திரருடைய சரீரங்களுக்கும், மிருகங்களின் சரீரங்களுக்கும் ஒன்றுபோலவே நடைபெறுகிறது. மனுபுத்திரரின் சரீரமும், மிருகங்களின் சரீரமும் ஒரே இடத்திற்குப் போகிறது. எல்லாம் மண்ணிலே உண்டாகிறது. எல்லாம் மண்ணுக்குத் திரும்புகிறது. மனுபுத்திரர் சாகிறதுபோலவே மிருகங்களும் சாகிறது.

சாலொமோன் மனுபுத்திரரையும், மிருகங்களையும் நோக்கிப் பார்க்கிறார். எல்லாம் ஒரே இடத்திற்குப் போகிறது என்று சொல்லுகிறார். மனுஷருடைய மரித்துப்போன சரீரமும், மிருகங்களுடைய மரித்துப்போன சரீரமும் ஒன்றுபோலவே இருக்கிறது. இரண்டுமே ஒரே இடத்திற்குப் போகிறது. இவை இரண்டும் மண்ணினாலே உண்டாயிற்று. மரித்த பின்பு இவையெல்லாமே மண்ணுக்குத் திரும்புகிறது என்று சாலொமோன் சொல்லுகிறார்.

மனுபுத்திரருக்கு சம்பவிக்கிறது மிருகங்களுக்கும் சம்பவிக்கிறது. சரீரத்தைப் பொறுத்தவரையில் மனுபுத்திரரின் சரீரத்திற்கும் மிருகங்களின் சரீரத்திற்கும் அதிக வித்தியாசமில்லை. ஆனால், மனுஷருடைய ஆவிக்கும், மிருகங்களின் ஆவிக்கும் அதிக வித்தியாசமுண்டு. சரீரத்தை நாம் பிரத்தியட்சமாய்ப் பார்க்கிறோம். ஆனால் ஆவியை பிரத்தியட்சமாய்ப் பார்க்க முடிவதில்லை. மனுஷன் மரித்துப்போன பின்பு அவனுடைய ஆவி உயரே ஏறுகிறது. தன்னை உண்டாக்கின ஆவிகளின் பிதாவாகிய தேவனிடத்திற்குப் போகிறது. மனுஷன் மரித்தாலும், அவனுடைய ஆவி சரீரத்தோடு மரித்துப்போவதில்லை. மனுஷனுடைய ஆவி பாதாளத்தின் வல்லமைக்குத் தப்புவிக்கப்படும்.

"ஆனாலும் தேவன் என் ஆத்துமாவைப் பாதாளத்தின் வல்லமைக்குத் தப்புவித்து மீட்பார், அவர் என்னை ஏற்றுக்கொள்வார் (சேலா.)" (சங் 49:15) என்று சங்கீதக்காரர் சொல்லுகிறார்.

மனுஷனுடைய ஆத்துமா விளக்குத்தண்டின்மீது பிரகாசமாக எரிந்துகொண்டிருக்கிற விளக்கைப்போன்றது. விளக்குத்தண்டிலிருந்து விளக்கை வெளியே எடுத்தாலும் விளக்கு பிரகாசமாக எரிந்துகொண்டுதான் இருக்கும். விளக்கு வெளிச்சம் கொடுக்கும். விளக்குத்தண்டு வெளிச்சம் கொடுக்காது. விளக்கு இருந்தால்தான் விளக்குத்தண்டிற்கு மேன்மை. விளக்கை எடுத்துவிட்டால், விளக்குத்தண்டால் பிரயோஜனமில்லை. நம்முடைய சரீரம் விளக்குத்தண்டைப்போன்றது. நம்முடைய சரீரத்தில் ஆவியும் ஆத்துமாவும் இருக்கும் வரையில்தான், நம்முடைய சரீரத்திற்கு மதிப்பு உண்டு. நம்முடைய சரீரத்திலிருந்து ஆவியும் ஆத்துமாவும் பிரித்து எடுக்கப்பட்டுவிட்டால், அந்த சரீரத்தால் பிரயோஜனமில்லை.

மனுபுத்திரருக்கு கண்கள் இருக்கிறதுபோலவே மிருகங்களுக்கும் கண்கள் இருக்கிறது. இவை மாம்சப்பிரகாரமான கண்கள். கர்த்தர் மனுபுத்திரருக்கு மனக்கண்களைக் கொடுத்திருக்கிறார். இவை மனுபுத்திரருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற விசேஷித்த மேன்மை. மிருகங்களுக்கு மனக்கண்கள் கிடையாது. நம்முடைய சரீரப்பிரகாரமான கண்களால் உலகத்திற்குரிய காரியங்களைப் பார்க்கிறோம். நம்முடைய மனக்கண்களால் ஆவிக்குரிய காரியங்களைப் பார்க்க முடியும். நம்முடைய மனக்கண்கள் பிரகாசமாயிருக்கவேண்டும். மனக்கண்கள் மங்கிப்போயிருந்தால் நம்மால் தெளிவாகப் பார்க்க முடியாது.

மனுபுத்திரரில் சிலர், தங்களிடத்தில் ஆவியும் ஆத்துமாவும் இருப்பதையே மறந்துவிடுகிறார்கள். தங்களுக்கும் மிருகங்களுக்கும் வித்தியாசமில்லை என்று நினைக்கிறார்கள். மனுபுத்திரருக்கு சம்பவிக்கிறது மிருகங்களுக்கும் சம்பவிக்கிறது என்றும் சொல்லுகிறார்கள். ஜீவன்களுக்கெல்லாம் சுவாசம் ஒன்றே என்றும், மிருகங்கள் சாகிறதுபோல மனுபுத்திரரும் சாகிறார்கள் என்று சொல்லி, தங்களுடைய ஆவிக்குரிய நிலமையை உணராதிருக்கிறார்கள். கர்த்தர் நமக்கு மனக்கண்களைக் கொடுத்திருக்கிறார். அதைப் பயன்படுத்தி ஆவிக்குரிய காரியங்களைப் பார்க்கவேண்டும். மனுஷனுடைய ஆவி கர்த்தருடைய சமுகத்தில் உயரே ஏறும் என்பதையும், மிருகங்களுடைய ஆவியோ தாழ பூமியில் இறங்கும் என்பதையும் உணரவேண்டும்.

மனுஷன் தன்னுடைய செய்கையில் மகிழ்ச்சியாயிருக்கவேண்டும். நம்முடைய மனச்சாட்சி சுத்தமாயிருந்தால்தான், நம்முடைய செய்கையும் சுத்தமாயிருக்கும். நீதியிருக்க வேண்டிய இடத்தில் அநீதியிருக்கக்கூடாது. மெய் இருக்கவேண்டிய இடத்தில் பொய் இருக்கக்கூடாது. நியாயஸ்தலத்தில் அநியாயமும் நீதிஸ்தலத்தில் அநீதியும் பிரவேசிப்பதற்கு நாம் அனுமதிக்கக்கூடாது. அப்போதுதான் நம்முடைய செய்கைகளில் நம்மால் மகிழ்ச்சியாயிருக்க முடியும். இதுவே நமக்கு நன்மையானது. இதுவே நமக்கு மெய்யான சந்தோஷத்தைத் தரும்.

கர்த்தர் நம்முடைய கரங்களில் வேலைகளைக் கொடுக்கும்போது, அதை சந்தோஷமாய்ச் செய்யவேண்டும். அந்த வேலைகளில் நாம் மகிழ்ச்சியாயிருக்கவேண்டும். வேலைகள் நமக்கு பாரமானவை என்று வேதனைப்படக்கூடாது. நம்முடைய வேலைகளை வருத்தப்பட்டு செய்யக்கூடாது. அதை சந்தோஷத்தோடு செய்யவேண்டும். நாம் எதைச் செய்தாலும், அதைக் கர்த்தருக்காக செய்கிறோம் என்னும் நிச்சயம் நம்மிடத்தில் காணப்படவேண்டும். கர்த்தரை நோக்கிப் பார்த்தால்தான் நமக்கு மெய்யான சந்தோஷம் கிடைக்கும். உலகத்தை நோக்கிப் பார்த்தால் வேதனையும் மனச்சோர்வும் தான் கிடைக்கும்.

4 அதிகாரம்

இந்தப் பிரபஞ்சத்தில் ஒடுக்கப்படுகிறவர்கள் ஏராளமானோர் இருக்கிறார்கள். அவர்களைத் தேற்றுவதற்கு யாருமேயில்லை. ஒடுக்குகிறவர்களும், ஒடுக்கப் படுகிறவர்களும் பொறுமையில்லாமலிருக்கிறார்கள் (பிர 4:1-3). மனுஷனுடைய இருதயத்தில் பொறாமைக் குணம் இருக்கிறது. நம்மிடத்தில் வருத்தமும் மனசஞ்சலமும் இருக்கக்கூடாது. மன அமைதியும், பூரண திருப்தியும் இருக்கவேண்டும் (பிர 4:4-6). உலகப்பிரகாரமான ஐசுவரியங்களை திரளாய் சேமிக்கவேண்டும் என்று சிலர் பேராசைப்படுகிறார்கள். பேராசை வருத்தத்தையும் மனசஞ்சலத்தையும் கொடுக்கும். அது மன அமைதியை நீக்கிப்போடும் (பிர 4:7,8).

நாம் தனியாகயிருந்து கஷ்டப்படுவதைப் பார்க்கிலும், நமக்கு உதவிக்காரர் இருப்பது மிகவும் பிரயோஜனமாயிருக்கும். ஒருவருக்கொருவர் உதவிசெய்யும்போது நம்முடைய பாரம் குறையும் (பிர 4:9-12). ராஜா புத்தியுள்ளவனாயிருக்கவேண்டும். ராஜாசனம் நிலையானதல்ல. அரசகுடும்பத்திலிருந்துதான் ராஜாக்கள் வருவார்கள் என்னும் நிச்சயமுமில்லை (பிர 4:13,14). ஜனங்கள் அதிகாரத்திலிருப்பவர்களைச் சார்ந்துகொள்வார்கள். இது எக்காலத்திலும் நடைபெற்று வருகிற அது பொதுவான சம்பவம் (பிர 4:15,16).

ஒடுக்கப்பட்டவர்களின் கண்ணீர் பிர 4:1

பிர 4:1. இதற்குப்பின்பு நான் சூரியனுக்குக் கீழே செய்யப்படும் கொடுமைகளையெல்லாம் சிந்தித்துப் பார்த்தேன்; இதோ, ஒடுக்கப்பட்டவர்களின் கண்ணீரைக் கண்டேன், அவர்களைத் தேற்றுவாரில்லை; ஒடுக்குகிறவர்கள் பட்சத்தில் பெலம் இருந்தது, அப்படியிருந்தும் தேற்றுவாரில்லை.

சாலொமோனுடைய ஆத்துமா மிகவும் விசாலமாயிருக்கிறது. "தேவன் சாலொமோனுக்கு மிகுதியான ஞானத்தையும் புத்தியையும், கடற்கரை மணலத்தனையான மனோவிருத்தியையும் கொடுத்தார். சகல கிழக்கத்திப் புத்திரரின் ஞானத்தையும் எகிப்தியரின் சகல ஞானத்தையும் பார்க்கிலும் சாலொமோனின் ஞானம் சிறந்ததாயிருந்தது" (1இராஜா 4:29,30). அவருடைய இருதயம் ஞானத்தினால் நிரம்பியிருப்பதுபோல, இரக்கத்தினாலும், மனதுருக்கத்தினாலும் நிரம்பியிருக்கிறது. அவர் திக்கற்ற பிள்ளைகள்மீதும், ஒடுக்கப்பட்டவர்கள்மீதும் மனதுருக்கம் காண்பிக்கிறார்.

ஒடுக்கப்பட்டவர்களுடைய நீதி சபையில் அறிவிக்கப்படுவதில்லை. அவர்களுக்கு உதவி செய்வாரும் ஒருவருமில்லை. சாலொமோன் நியாயஸ்தலத்தையும், நீதிஸ்தலத்தையும் ஆராய்ந்து பார்க்கிறார். "பின்னும் சூரியனுக்குக்கீழே நான் நியாயஸ்தலத்தைக் கண்டேன், அங்கே அநியாயம் இருந்தது; நீதிஸ்தலத்தையும் கண்டேன், அங்கே அநீதி இருந்தது. சகல எண்ணங்களையும் சகல செய்கைகளையும் நியாயந்தீர்க்குங்காலம் இனி இருக்கிறபடியால் சன்மார்க்கனையும் துன்மார்க்கனையும் தேவன் நியாயந்தீர்ப்பார் என்று என் உள்ளத்தில் எண்ணினேன்" (பிர 3:16,17) என்று சொல்லுகிறார்.

சாலொமோன் இதுவரையிலும் நீதிஸ்தலத்தையும், நியாயஸ்தலத்தையும் ஆராய்ந்து பார்த்துவிட்டு, இப்போது ஒடுக்கப்பட்டவர்களையும், திக்கற்றவர்களையும், நீதிமறுக்கப் பட்டவர்களையும் நோக்கிப் பார்க்கிறார். சாலொமோன் மிகச்சிறந்த பிரசங்கி. இந்த அதிகாரம் முழுவதிலும் சாலொமோனுடைய பிரசங்கஞானம் வெளிப்படுகிறது.

சாலொமோன் ஒடுக்கப்பட்டவர்களின் கண்ணீரைக் காண்கிறார். அவர்கள் தங்களுக்குள் வேதனைகளையும், துன்பங்களையும், துக்கங்களையும் அனுபவித்து வருகிறார்கள். கண்ணீர் விட்டு அழுகிறார்கள். ஆனாலும் அவர்களைத் தேற்றுகிறவர்கள் ஒருவருமில்லை. வேலையாட்களையும், கூலியாட்களையும் அவர்களுடைய எஜமான்கள் ஒடுக்குகிறார்கள். கடன் வாங்கினவர்களை கடன்கொடுத்தவர்கள் ஒடுக்குகிறார்கள். சில சமயங்களில் கடன்வாங்கியவர்களும் கடனை முறைப்படி திரும்பச் செலுத்துவதில்லை. அவர்கள் தங்களுக்கு கடன்கொடுத்தவர்களை ஏமாற்றுகிறார்கள்.

நிலத்திற்கு சொந்தக்காரர்கள் தங்கள் நிலத்தில் பாடுபடுகிறவர்களை ஒடுக்குகிறார்கள். சில சமயங்களில் நிலத்தில் வேலை செய்கிறவர்கள்கூட, தங்கள் எஜமானின் நிலத்தை அநியாயமாய் அபகரித்துக்கொள்கிறார்கள். தாய் தகப்பன் இல்லாத பிள்ளைகளை, அவர்களை வளர்க்கிறவர்கள் ஒடுக்குகிறார்கள். நீதி நியாயமில்லாத நியாயாதிபதிகளும், கொடுமையான பிரபுக்களும், ஜனங்களுடைய வழக்குகளை நீதியாய் விசாரிக்காமல், நீதியான தீர்ப்பு சொல்லாமல் திக்கற்றவர்களை ஒடுக்குகிறார்கள்.

சாலொமோன் ஒடுக்கப்பட்டவர்களின் கண்ணீரைக் காண்கிறார். அவர்களால் தங்களுக்குத் தாங்களே உதவிசெய்து கொள்ள முடியவில்லை. அவர்களால் கண்ணீர் விடாமல் இருக்கவும் முடியவில்லை. தங்களுடைய கண்ணீர்களை அவர்களால் துடைக்கவும் முடியவில்லை. இவர்களை ஒடுக்குகிறவர்களிடத்தில் பெலமிருக்கிறது. அதிகாரமிருக்கிறது. அதிகாரத்திலுள்ளவர்கள் தப்பு செய்தாலும், அதைத் தட்டிக்கேட்பதற்கு ஆள் இல்லை. பிரபுக்கள் எதைச் செய்தாலும், அதைப் புகழவேண்டியது ஜனங்கள்மீது சுமத்தப்பட்ட கடமையாகயிருக்கிறது.

தரித்திரர்கள் கடினமாக உழைத்தாலும், அவர்களுக்கு வேலை கொடுக்கிறவர்கள் அவர்களை அநியாயமாய் ஒடுக்குகிறார்கள். அவர்களுக்கு நியாயமாகக் கொடுக்கப்படவேண்டிய கூலியையும் கொடுப்பதில்லை. தரித்திரர்கள் ஒடுக்கப்பட்டாலும், அவர்களுடைய கைகள் பெலமுள்ளதாயிருக்கிறது. அவை கடினமாய் உழைக்கிறது.

மரித்தவர்கள் பாக்கியவான்கள் பிர 4:2,3

பிர 4:2. ஆதலால் இன்னும் உயிரோடிருந்து பிழைக்கிறவர்களைப் பார்க்கிலும் முன்னமே காலஞ்சென்று மரித்தவர்களையே பாக்கியவான்கள் என்றேன்.

பிர 4:3. இவ்விருதிறத்தாருடைய நிலைமையைப்பார்க்கிலும் இன்னும் பிறவாதவனுடைய நிலைமையே வாசி; அவன் சூரியனுக்குக் கீழே செய்யப்படும் துர்ச்செய்கைகளைக் காணவில்லையே.

இப்பிரபஞ்சத்திலுள்ள ஜனங்கள் வித்தியாசமாயிருக்கிறார்கள். சிலர் ஒடுக்குகிறார்கள். சிலர் ஒடுக்கப்படுகிறார்கள். ஒடுக்கப்படுகிறவர்கள் வஞ்சிக்கப்பட்டாலும், அவர்கள் ஐசுவரியவான்களைப் பார்த்து பொறாமைப்படுகிறார்கள். மரித்துப் போனவர்களோடு தங்களை ஒப்பிட்டு, அவர்கள்மீது பொறாமைப்படுகிறார்கள். உயிரோடிருந்து, கடினமாய் வேலை செய்து, ஒடுக்கப்பட்டு கஷ்டப்படுவதைவிட, ஏற்கெனவே மரித்துப்போனவர்கள் பாக்கியவான்கள் என்று நினைக்கிறார்கள். மரித்தவர்களுக்கு பாடுகள் இருக்காது. அவர்களை யாரும் ஒடுக்கமாட்டார்கள்.

சாலொமோன் ஒடுக்கப்பட்டவர்களின் கண்ணீரை நோக்கிப் பார்த்து, அவர்களுடைய உள்ளத்தில் காணப்படுகிற வேதனைகளைப் புரிந்துகொள்கிறார். ஒடுக்கப்படுகிறவர்களின் மனதில் உண்டாகும் வேதனையான எண்ணங்களை சாலொமோனும் அங்கீகரிக்கிறார். இன்னும் உயிரோடிருந்து பிழைக்கிறவர்களைப் பார்க்கிலும், முன்னமே காலஞ்சென்று மரித்தவர்கள் பாக்கியவான்கள் என்று சாலொமோன் சொல்லுகிறார்.

ஏற்கெனவே மரித்தவர்களைவிட, இன்னும் பிறவாதவர்கள், மிகவும் பாக்கியவான்கள். பிறவாத பிள்ளைகள், சூரியனுக்குக் கீழே செய்யப்படும் துர்ச்செய்கைகளைக் காண்பதில்லை. ஒடுக்கப்படுகிறவர்கள் வேதனைகளை அனுபவிக்கிறார்கள். பாடுகளை சுமக்கிறார்கள். மரித்துப்போனவர்கள்கூட, ஏற்கெனவே வேதனைகளை அனுபவித்தவர்கள். இன்னும் பிறவாதவர்களோ, இன்னும் எந்த வேதனையையும் அனுபவிக்கவில்லை. ஆகையினால் உயிரோடிருந்து ஒடுக்கப்பட்டவர்களைப் பார்க்கிலும், காலஞ்சென்று மரித்தவர்களைப் பார்க்கிலும், இன்னும் பிறவாதவனுடைய நிலமையே வாசி என்று சாலொமோன் சொல்லுகிறார்.

ஜீவனோடிருக்கிறவர்கள் இந்தப் பிரபஞ்சத்தில் அநேகப் பாடுகளை அனுபவிக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் உயிரோடிருக்கிறவர்களுக்கு சஞ்சலமும் வருத்தமும் உண்டாகிறது. இந்த சஞ்சலமும் வேதனையும், அவர்கள் ஜீவனோடிருக்கிற காலம் வரையிலும் அவர்களைத் தொடர்ந்து வரும். மரித்த பின்பு மனுஷருக்கு வேதனையோ, சஞ்சலமோ, வருத்தமோ இராது. ஆகையினால் இன்னும் உயிரோடிருந்து பிழைக்கிறவர்களைப் பார்க்கிலும், முன்னமே காலஞ்சென்று மரித்தவர்களை சாலொமோன் பாக்கியவான்களாகக் காண்கிறார். இவ்விருதிறத்தாருடைய நிலமையைப் பார்க்கிலும் இன்னும் பிறவாதவனுடைய நிலமையே வாசி என்றும் சாலொமோன் சொல்லுகிறார்.

இந்த உலகத்தில் பிறந்து, ஜீவனோடிருந்து, பின்பு மரித்துப்போனவன்கூட, தன்னுடைய ஜீவியகாலத்தில் அநேக பாடுகளையும் வேதனைகளையும் அனுபவித்திருப்பான்.

இந்த உலகத்தில் பிறவாதிருக்கிறவனுக்கு, இப்பிரபஞ்சத்தின் பாடுகளையும் வேதனைகளையும் பற்றி ஒன்றும் தெரியாது. ஆகையினால் இன்னும் பிறவாதவனுடைய நிலமையே நன்மையானது என்று சாலொமோன் சொல்லுகிறார்.

இந்தப் பிரபஞ்சத்தில் இன்னும் பிறவாதவன், சூரியனுக்குக் கீழே செய்யப்படும் துர்ச்செய்கைகளை காணவில்லை. இந்தப் பிரபஞ்சத்தில் என்ன நடைபெறுகிறது என்பதே அவனுக்குத் தெரியாது. இந்தப் பிரபஞ்சத்தில் நடைபெறும் துர்க்கிரியைகளில், இன்னும் பிறவாதவனுக்கு பங்குமில்லை பாத்தியமுமில்லை. அதனால் அவனுக்கு வேதனையுமில்லை.

இந்தப் பிரபஞ்சத்தில் நல்லவர்களுக்கும், நீதிமான்களுக்கும் அநேகப் பிரச்சனைகளும் பாடுகளும் வரலாம். இவர்கள் தங்கள் கஷ்டங்களைத் தாங்கிக்கொள்வார்கள். அவற்றை சகித்துக்கொள்வார்கள். இந்த உலகத்தில் தாங்கள் ஏன் பிறந்தோம் என்று வேதனைப்படமாட்டார்கள். தங்களுடைய ஜீவியத்தின் எல்லா சூழ்நிலைகளிலும் மனரம்மியமாயிருக்க கற்றுக்கொள்வார்கள்.

இந்தப் பிரபஞ்சத்தில் நாம் ஜீவிக்கிற காலம் வரையிலும், கர்த்தரை மகிமைப்படுத்த நமக்கு வாய்ப்பு கிடைக்கும். நாம் அக்கினியின் நடுவாகக் கடந்துசென்றாலும், தண்ணீர்களைத் தாண்டிச் சென்றாலும், கர்த்தருடைய நாமம் மகிமைப்படவேண்டும் என்பதே நம்முடைய பிரதான விருப்பமாயிருக்கவேண்டும்.

நாம் இந்தப் பிரபஞ்சத்தில் பிறந்தால்தான், இங்கு நம்மால் கர்த்தரை மகிமைப்படுத்த முடியும். ஆகையினால் கர்த்தருடைய பிள்ளைகள், தாங்கள் இந்தப் பூமியில் பிறந்திருக்கக்கூடாது என்று விரும்பமாட்டார்கள். தாங்கள் இந்தப் பிரபஞ்சத்தில் பிறந்திருப்பதினால், கர்த்தரைத் துதிப்பதற்கு தங்களுக்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்பதைப் புரிந்துகொள்வார்கள். எல்லா சூழ்நிலைகளிலும் கர்த்தரை மகிமைப்படுத்துவார்கள்.

அயலானுடைய பொறாமை
பிர 4:4

பிர 4:4. மனுஷன் படும் எல்லாப் பிரயாசமும், பயன்படும் எல்லாக் கிரியையும், அயலானுடைய பொறாமைக்கு ஏதுவாயிருக்கிறதை நான் கண்டேன்; இதுவும் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது.

ஒரு மனுஷன் கடினமாய் உழைத்து, நியாயமாய் சம்பாத்தியம்பண்ணி, தன்னுடைய வாழ்க்கையில் உயரும்போது, மற்றவர்கள் அவனைப் பார்த்து பொறாமைப்படுவார்கள். இவனுடைய எல்லா பிரயாசமும் நீதியாயும், எல்லா கிரியைகளும் உண்மையாயும் இருக்கலாம். ஆனாலும் இவனுடைய அயலான் இவனைப் பார்த்து பொறாமைப்படுவான். இவன் கண்ணியமாகவும், நேர்மையாகவும் உழைத்திருப்பான். நியாயமான வழியில் சம்பாத்தியம் பண்ணியிருப்பான். ஆனாலும் மற்றவர்கள் இவனைப் பார்த்து பொறாமைப்படுவார்கள்.

காயீன் தன் சகோதரன் ஆபேலைப் பார்த்து பொறாமைப்பட்டான். ஏசா தன் சகோதரன் யாக்கோபைப் பார்த்து பொறாமைப்பட்டான். ராஜாவாகிய சவுல் தாவீதைப் பார்த்து பொறாமைப்பட்டார். ஆபேலும், யாக்கோபும், நேர்மையுள்ளவர்களாயிருந்தார்கள். சரியான காரியங்களைச் செய்தார்கள். ஆனாலும் இவர்களுடைய சகோதரர்கள் இவர்கள்மீது பொறாமைப்பட்டார்கள். பொறாமை ஒரு எலும்புருக்கி. இது மனுஷனுடைய ஜென்ம சுபாவத்தில் கலந்திருக்கிறது. இது நம்முடைய ஜென்ம பாவத்தினால் நம்முடைய இருதயத்தில் நிரம்பியிருக்கிறது.

நாம் மற்றவர்கள் முன்னேறுவதைப் பார்க்கவேண்டும். அவர்களுடைய கடின உழைப்புக்களைக் கண்டுபிடிக்கவேண்டும். அவர்கள் தங்கள் வாழ்க்கையில் எப்படி முன்னேறினார்கள் என்பதை ஆராய்ந்து அறியவேண்டும். அவர்களைப் பார்த்து நாம் சோர்ந்து விடக்கூடாது. நாம் வாழ்க்கையில் அவர்களைப்போல முன்னேறவில்லையே என்று வருத்தப்படக்கூடாது. அவர்கள்மீது பொறாமைப்படவும் கூடாது. நாம் மற்றவர்களுடைய கடின உழைப்பையும், நிர்வாகத்திறமையையும் பார்த்து, நாமும் கடினமாய் உழைக்க பழகிக்கொள்ளவேண்டும். நம்முடைய நிர்வாகத்திறமையையும் மேம்படுத்திக்கொள்ள வேண்டும். வாழ்க்கையில் முன்னேறிய மற்றவர்களைப் பார்த்து பொறாமைப்படுவதற்குப் பதிலாக, அவர்களுடைய நற்கிரியைகளையும், கடின உழைப்புகளையும், ஆற்றல்களையும் திறமைகளையும், நமக்குள்ளும் வளர்த்துக்கொள்ள பிரயாசப்படவேண்டும்.

மற்றவர்கள் நம்மீது பொறாமைப்படும்போது நாம் சோர்ந்து போய்விடக்கூடாது. நாம் கர்த்தரை நம்பி நன்மை செய்யவேண்டும். ஒருவேளை மனுஷர்கள் நம்மைப் புகழாமல் நம்மீது பொறாமைப்படலாம்.

நமக்கு விரோதமாக தூஷணவார்த்தைகளைப் பேசலாம். ஆனாலும் நாம் நற்கிரியைகளை சோர்ந்து போகாமல் செய்யவேண்டும். நம்முடைய கைகளின் கிரியைகளில் உண்மையிருக்கவேண்டும். நாம் கர்த்தருக்கு முன்பாக உண்மையும் உத்தமமும் உள்ளவர்களாயிருக்கவேண்டும். அப்போது கர்த்தரே நம்மைப் புகழுவார். மனுஷருடைய புகழ்ச்சியைவிட கர்த்தருடைய புகழ்ச்சியே நமக்கு ஆசீர்வாதமானது. நாமும் மனுஷர் புகழ்ச்சியை நாடாமல், கர்த்தருக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தவேண்டும். கர்த்தருக்கு நம்மை ஒப்புக்கொடுத்து கடினமாயும், நேர்மையாயும் உழைக்கவேண்டும். கர்த்தரை நம்பி நன்மை செய்யும்போது, நமக்கு கர்த்தரிடத்திலிருந்து ஆசீர்வாதம் வரும்.

மூடன்
பிர 4:5,6

பிர 4:5. மூடன் தன் கைகளைக் கட்டிக் கொண்டு, தன் சதையையே தின்கிறான்.

பிர 4:6. வருத்தத்தோடும் மனச்சஞ்சலத்தோடும் இரண்டு கைப்பிடியும் நிறையக் கொண்டிருப்பதைப் பார்க்கிலும், அமைச்சலோடு ஒரு கைப்பிடி நிறையக் கொண்டிருப்பதே நலம்.

சோம்பேறியாயிருக்கிறவன் தனக்குத் தானே கேடு செய்துகொள்கிறான். தன்னுடைய வேலைகளை ஒழுக்கமில்லாமலும், உற்சாகமில்லாமலும், தாறுமாறாகச் செய்கிறவன் அநேகத் தீங்குகளை அனுபவிப்பான். மூடன் தன் கைகளைக் கட்டிக்கொண்டு தன் சதையையே தின்கிறான். கைகளைக் கட்டிக்கொண்டு யாராலும் வேலை செய்ய முடியாது. கைகளால் கிரியை நடப்பிப்பதுதான் வேலை. ஆனாலும் மூடனோ தன் கைகளைக் கட்டிக்கொண்டு வேலை செய்யலாம் என்று நினைக்கிறான்.

கைகளைக் கட்டிக்கொண்டால் தன்னுடைய சரீரத்திற்கு இதமாகயிருக்கும் என்று மூடன் நினைக்கிறான். வெளியின் குளிர் தன்னைத் தாக்காதவாறு, தன் கைகளைக் கட்டிக்கொண்டு தனக்கு அனல் உண்டுபண்ணுகிறான். இப்படிப்பட்டவனுக்கு போஜனம் கிடைக்காது. ஆனாலும் இவனால் பசியை அடக்க முடியாது. ஆகையினால் இவன் தன் சதையையே தின்கிறான். இவனுடைய தரித்திரத்திற்கு இவனே காரணம். ஒரு வேலையும் செய்யாமல், தன்னுடைய கைகளைக் கட்டிக்கொண்டு நிற்பதினால், இவனுக்கு சம்பளம் கிடைக்காது. கையில் பணம் இல்லையென்றால் சாப்பிடவும் முடியாது. இவனுடைய தரித்திர நிலமைக்கு இவனே காரணம்.

பசியும் பட்டினியாகவும் இருந்தால் இவனுடைய சரீர ஆரோக்கியம் கெட்டுப்போகும். சாப்பிடுவதற்கு ஒன்றுமில்லாமல், பட்டினியாயிருப்பான். இவனுடைய சரீரம் எலும்பும் தோலுமாயிருக்கும். ஒரு வேலையும் செய்யாமல் தன் கையைக் கட்டிக்கொண்டு நிற்கிறவன், தன் சதையையே தின்று, எலும்பும் தோலுமாயிருப்பான்.

வருத்தத்தோடும் மனசஞ்சலத்தோடும் இரண்டு கைப்பிடியும் நிறைய கொண்டிருப்பது நமக்கு மெய்யான ஆசீர்வாதமல்ல. இதைப் பார்க்கிலும் அமைச்சலோடும் ஒரு கைப்பிடி நிறைய கொண்டிருப்பதே நலம் என்று சாலொமோன் சொல்லுகிறார். இந்த வாக்கியத்திற்கு வேதபண்டிதர்கள் இரண்டு விதமாக வியாக்கியானம் பண்ணுகிறார்கள். அவையாவன :

1. சோம்பேறி தான் சோம்பலாயிருப்பதற்கும் காரணம் சொல்லுவான். ஒரு வேலையும் செய்யாமல், சும்மாயிருந்து கொஞ்சமாய்க் கிடைத்தாலும், கடினமாகவும், நேர்மையாகவும் உழைத்து, ஏராளமாய் கிடைப்பதைவிட போதும் என்று சோம்பேறி நினைக்கிறான். தான் சோம்பேறியாகயிருப்பதினால் தனக்கு நஷ்டமில்லையென்று, தனக்குத்தானே காரணம் சொல்லிக்கொள்கிறான்.

2. நாம் சோம்பேறியாயிருக்கக்கூடாது. வேலை செய்யவேண்டும். அதே வேளையில் நாம் எப்போதுமே வேலை செய்துகொண்டிருக்கவும் முடியாது. ஓய்வும் வேண்டும். எப்போதும் ஓய்வெடுப்பது சோம்பல்தனம். எப்போதும் வேலை செய்வது வெறித்தனம். நம்மிடத்தில் இவ்விரண்டிற்கும் பொதுவான நிலமை காணப்பட வேண்டுமென்று சாலொமோன் ஆலோசனை சொல்லுகிறார். நம்முடைய தொழிலில், உண்மையும் கண்ணியமும் இருக்கவேண்டும். பணத்தின்மீது பேராசைப்பட்டு, தவறான வழிகளில் போய்விடக்கூடாது.

கர்த்தர் நம்முடைய தேவைகளைச் சந்தித்தால் அதுவே போதுமென்று நினைக்கவேண்டும். போதுமென்கிற மனதுடனே கூடிய தெய்வபக்தியே மிகுந்த ஆதாயம். நம்மிடத்தில் ஒரு கைப்பிடி மாத்திரம் இருந்தாலும், நம்முடைய இருதயத்தில் நிறைவான நிம்மதியும் அமைதியும் இருக்கவேண்டும். இதுவே நமக்கு மெய்யான ஆசீர்வாதம். மனதில் நிம்மதியில்லாமல், சந்தோஷமும் சமாதானமுமில்லாமல், நம்முடைய இருதயத்தில் வருத்தமும் மனசஞ்சலமும் நிரம்பியிருக்கும்போது, நம்மிடத்தில் இரண்டு கைப்பிடியும் நிறைய இருந்தாலும் அது ஆசீர்வாதமல்ல.

நம்முடைய கைப்பிடியில் என்ன இருக்கிறது என்பதைவிட, நம்முடைய இருதயத்தில் என்ன இருக்கிறது என்பதுதான் முக்கியம். நாம் நம்முடைய கையைப் பார்க்காமல் நம்முடைய இருதயத்தைப் பார்க்கவேண்டும். எல்லாவற்றிலும் நிதானம் இருக்கவேண்டும். நிதானமான தொழில், நிதானமான வருமானம். இதுவே நமக்கு மிகப்பெரிய பாக்கியம்.

ஒண்டிக்காரன்
பிர 4:7,8

பிர 4:7. பின்பு நான் திரும்பிக்கொண்டு சூரியனுக்குக் கீழே மாயையான வேறொரு காரியத்தைக் கண்டேன்.

பிர 4:8. ஒருவன் ஒண்டிக்காரனாயிருக்கிறான்; அவனுக்கு உடனாளியுமில்லை, அவனுக்குப் பிள்ளையும் சகோதரனுமில்லை; அப்படியிருந்தும் அவன் படும் பிரயாசத்துக்கு முடிவில்லை; அவன் கண் ஐசுவரியத்தால் திருப்தியாகிறதுமில்லை; நான் ஒரு நன்மையையும் அநுபவியாமல் யாருக்காகப் பிரயாசப்படுகிறேன் என்று அவன் சிந்திக்கிறதுமில்லை; இதுவும் மாயை, தீராத தொல்லை.

சாலொமோன் இந்த உலகத்தில் ஏராளமான மாயையான காரியங்களைப் பார்க்கிறார். இந்த உலகத்தில் அநேகர் அதிகமாய் சம்பாதிப்பார்கள். ஆனால் தாங்கள் சம்பாதித்ததை அனுபவிக்கமாட்டார்கள். இவர்களிடத்தில் ஐசுவரியம் அதிகமாயிருக்கும். ஆனால் மன அமைதியும், சந்தோஷமும் சிறிதும் இருக்காது. இப்படிப்பட்டவர்கள் சிறிதும் ஓய்வெடுக்காமல் கடினமாய் உழைப்பார்கள். அதிகமாய் சம்பாதிப்பார்கள். ஆனால் தாங்கள் சம்பாதித்த பணத்தை செலவு பண்ணுவதற்கு நேரம் ஒதுக்கமாட்டார்கள். தன்னுடைய பாடுகளை மாத்திரம் பார்க்கிறவன் சுயநலக்காரன். இவன் மற்றவர்களைப் பற்றி சிந்திக்கவுமாட்டான். இவனுக்கு மற்றவர்கள்மீது கரிசனையும் இருக்காது. சாலொமோன் இப்படிப்பட்டவனை ஒண்டிக்காரன் என்று சொல்லுகிறார்.

ஒண்டிக்காரன் தன்னைப்பற்றி மாத்திரமே யோசிப்பான். மற்றவர்களைப்பற்றிய யோசனை இவனிடத்தில் கொஞ்சமும் இருக்காது. தன்னைப்போல மற்றவர்களும் நன்றாயிருக்கவேண்டும் என்று நினைக்கமாட்டான். ஒண்டிக்காரனுக்கு ஒருவனும் சிநேகிதனாயிருக்கமாட்டார்கள். இப்படிப்பட்டவன் தன்னுடைய வேலைக்கு அடிமையாயிருப்பான். தான் செய்கிற தொழிலில் முழுமையாய் ஈடுபட்டு, அந்தத் தொழிலுக்கே இவன் அடிமையாகிவிடுவான். ஒரு சிலர் போதைக்கும் மதுபானத்திற்கும் அடிமைகளாயிருப்பதுபோல இவன் வேலைக்கும், தொழிலுக்கும், வியாபாரத்திற்கும் அடிமையாயிருக்கிறான்.

ஒண்டிக்காரனாயிருப்பவன் தனக்குத் தானே சிந்தனைபண்ணிக்கொள்வான். மற்றவர்களுடைய ஆலோசனைகளைக் கேட்கவுமாட்டான். தன்னுடைய வீட்டில் தான் மாத்திரமே பேசவேண்டும் என்று எதிர்பார்ப்பான். தன்னுடைய பேச்சை, தன் வீட்டிலுள்ளவர்கள் எல்லோரும் கேட்டு கீழ்ப்படியவேண்டும் என்று எதிர்பார்ப்பான். தன்னுடைய வார்த்தைக்கு ஒருவரும் கீழ்ப்படியவில்லையென்றாலும், அதற்காக கவலைப்படவுமாட்டான். தனியாகயிருப்பான்.

ஒண்டிக்காரனுக்கு பிள்ளையும் சகோதரனும் இருக்கமாட்டார்கள். தன்னுடைய காரியங்களை தானே பார்த்துக்கொள்வான். இவன் சந்தோஷமாகயிருக்கவேண்டும் என்றும் விரும்பமாட்டான். குடும்பத்தினர் சந்தோஷமாகயிருக்க வேண்டுமென்றால், அதற்கு பணம் செலவாகும் என்று பயந்து, குடும்ப சந்தோஷத்திற்காக கொஞ்சமும் செலவுபண்ணமாட்டான். அப்படியிருந்தும் அவன் படும் பிரயாசத்திற்கு முடிவு இருக்காது. அவனுக்குத் திருப்தியிருக்காது.

ஒண்டிக்காரனுடைய கண் திருப்தியாகிறதில்லை. அவனிடத்தில் எவ்வளவு ஐசுவரியம் இருந்தாலும், அது தனக்குப் போதுமென்று நினைக்கமாட்டான். ஒண்டிக்காரனுக்கு வயிறு நிறைய சாப்பாடு இருக்கும். ஓயாத வேலையிருக்கும். தொழிலிருக்கும். இந்த உலகத்தில் சம்பிரமமாய் வாழ்வதற்கு தேவையான எல்லா வசதிகளும் இருக்கும். ஆனாலும் அவனுடைய கண்கள் மாத்திரம் தேவையோடிருக்கும். கண்களின் தேவைகள் ஒருபோதும் பூர்த்தியாகாது. ஐசுவரியத்தினால் அவனுடைய கண்கள் ஒருபோதும் திருப்தியடையாது.

ஒண்டிக்காரனுக்கு அநேக வசதிகள் இருந்தாலும், அதை அவன் அனுபவிக்கமாட்டான். அவன் படும் பிரயாசத்திற்கு முடிவு இருக்காது. அவனுடைய ஆத்துமா நன்மையை அனுபவிக்காமல் தாகத்தோடிருக்கும். தான் ஏன் ஒண்டிக்காரனாகயிருக்கிறோம் என்பதுகூட இவனுக்குத் தெரிவதில்லை. இவனுக்கு உடனாளியுமில்லை. இவனுக்கு பிள்ளையுமில்லை. சகோதரனுமில்லை. இவனுக்கு வேண்டியவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். தரித்திரர்கள் யாரும் இவனிடத்தில் வந்து உதவி பெற்றுக்கொள்ளவும் முடியாது.

ஒண்டிக்காரன் இந்தப் பிரபஞ்சத்தில் ஒன்றும் அனுபவிக்கமாட்டான். இவனுக்கு எல்லாம் இருக்கும். ஆனாலும் இவன் எதையும் அனுபவிக்கமாட்டான். எப்போதும் பிரயாசப்பட்டு ஐசுவரியத்தைச் சேர்த்துக் கொண்டேயிருப்பான். தான் யாருக்காக பிரயாசப்படுகிறான் என்பதை அவன் சிந்தித்துப் பார்ப்பதுமில்லை.

நாம் இந்தப் பிரபஞ்சத்தில் கஷ்டப்பட்டு வேலை செய்யும்போது, அந்தப் பிரயாசத்தின் பலனை யார் அனுபவிக்கிறார்கள் என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். நாம் படுகிற பிரயாசம் தேவை தானா என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். நம்முடைய பிரயாசத்தினால், நமக்கும் மற்றவர்களுக்கும் நன்மை உண்டாகுமா என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

நமக்கும் பிரயோஜனமில்லாமல், மற்றவர்களுக்கும் பிரயோஜனமில்லாமல் பிரயாசப்படுவதினால் ஒரு பிரயோஜனமுமில்லை. நாம் இதைச் சிந்தித்துப் பார்க்கவில்லையென்றால் நம்முடைய பிரயாசம் மாயையாகவும், அது நமக்கு தீராத தொல்லையாகவும் இருக்கும்.

இருவர் கூடியிருப்பது நலம் பிர 4:9-12

பிர 4:9. ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம்; அவர்களுடைய பிரயாசத்தினால் அவர்களுக்கு நல்ல பலனுண்டாகும்.

பிர 4:10. ஒருவன் விழுந்தால் அவன் உடனாளி அவனைத் தூக்கிவிடுவான்; ஒண்டியாயிருந்து விழுகிறவனுக்கு ஐயோ, அவனைத் தூக்கிவிடத் துணையில்லையே.

பிர 4:11. இரண்டுபேராய்ப் படுத்துக் கொண்டிருந்தால் அவர்களுக்குச் சூடுண்டாகும்; ஒண்டியாயிருக்கிறவனுக்குச் சூடுண்டாவது எப்படி?

பிர 4:12. ஒருவன் யாதாமொருவன் மேற்கொள்ள வந்தால் இருவரும் அவனுக்கு எதிர்த்து நிற்கலாம்; முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது.

ஒண்டிக்காரனாயிருப்பதை விட, நம்முடைய சமுதாயத்திலுள்ள மற்ற ஜனங்களோடு கூடியிருப்பது நமக்கு நல்லது. நாம் பிறரோடு சேர்ந்து, ஐக்கியமாக ஜீவிக்க பழகிக்கொள்ளவேண்டும். நல்லவர்களோடு பழகவேண்டும். நல்ல சகவாசம் வேண்டும். நாம் எல்லோருமே நமக்காகத்தான் ஜீவிக்கிறோம். மற்றவர்கள் மூலமாக நமக்கு நன்மை உண்டாகும்போது, நாம் அவற்றைப் பெற்றுக்கொள்ள தயங்கக்கூடாது. மற்றவர்களுடைய உதவிகளையும், ஒத்தாசைகளையும் நாம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால், நாம் ஒண்டிக்காரராயிருக்கக்கூடாது. நாம் பிறரோடு சேர்ந்து வாழவேண்டும்.

ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம் என்று சாலொமோன் சொல்லுகிறார். தேவனாகிய கர்த்தரும் ஏதேன் தோட்டத்தில், ஆதாம் தனிமையாயிருப்பதைப் பார்த்து, "மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல" (ஆதி 2:18) என்று சொன்னார். கர்த்தர் ஆதாமுக்கு ஏற்ற துணையை உண்டாக்கினார். கர்த்தர் மனுபுத்திரருக்கு திருமண உறவுகளையும், சிநேகத்தையும் கொடுத்திருக்கிறார்.

ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம். ஒருவன் தனிமையாயிருந்து சந்தோஷமாயிருப்பதை விட, அவன் மற்றவர்களோடு சேர்ந்து சந்தோஷப்படும்போது, அந்த சந்தோஷம் அதிகமாயிருக்கும். அவர்களுடைய பிரயாசத்தினால் அவர்களுக்கு நல்ல பலன் உண்டாகும். ஒருவன் தனக்காக மாத்திரம் பிரயாசப்படும்போது, அவனே அவனுக்கு எஜமானாகவும் இருக்கிறான். அவனே அவனுக்கு வேலையாளாகவும் இருக்கிறான். தனிமையாகயிருக்கிறவன் தனக்குத்தானே சந்தோஷத்தைக் கொடுத்துக்கொள்ள வேண்டும். அவனே அவனுக்கு எஜமானாகயிருப்பதினால், அவனுடைய சம்பளம் அவனிடத்திலிருந்து மாத்திரமே வரும்.

நாம் மற்றவர்களோடு அன்பாகவும், சிநேகமாகவும் பழகும்போது, நமக்கு அநேக சிநேகிதர்கள் மூலமாய் நல்ல பலன் கிடைக்கும். அநேகர் மூலமாய் நமக்கு சந்தோஷம் கிடைக்கும். மற்றவர்களோடு கூடியிருக்கிறவர்களுக்கு நல்ல பலன் உண்டாகும் என்று சாலொமோன் சொல்லுகிறார். நம்முடைய அன்பு பரிசுத்தமாயிருக்கவேண்டும். இந்த அன்புக்காக நாம் எடுக்கிற எல்லா பிரயாசங்களுக்கும் ஈடாக, நமக்கு நல்ல பலன் உண்டாகும். சாலொமோன் இந்தச் சத்தியத்தை விளக்குவதற்கு சில எடுத்துக்காட்டுக்களையும் சொல்லுகிறார்.

நல்ல சிநேகத்தினால் நமக்கு நன்மை உண்டாகும். நல்ல சம்பாஷணைகளைப் பேசுவதினால் நமக்கு மிகுந்த ஆதாயம் கிடைக்கும். பிரயாணம் பண்ணும்போது, தனியாய் பிரயாணம் பண்ணுவதற்குப் பதிலாக, மற்றொருவரோடு சேர்ந்து பிரயாணம் பண்ணுவது நமக்கு நல்லது. ஒருவன் கீழே விழுந்தாலும், அவனோடு கூட வருகிற மற்றொருவன் அவனைத் தூக்கிவிடுவான். கீழே விழுந்தவனுக்கு உதவி செய்ய, அவனோடு கூடயிருக்கிறவன் முன்வருவான்.

ஒருவன் பாவத்தில் விழும்போது, அவனுடைய மெய்யான சிநேகிதன், அவனை அவனுடைய பாவத்தின் குழியிலிருந்து தூக்கிவிடுவான். அவன் கர்த்தரோடு ஒப்புரவாகி, கர்த்தருடைய சமுகத்தில் மறுபடியும் கிட்டிச் சேருவதற்கு ஆதரவாயிருப்பான். நம்முடைய அன்பு பரிசுத்தமானதாயும், மாயமற்றதாயும் இருக்கவேண்டும். நம்மிடத்தில் கிருபையும், மனதுருக்கமும் காணப்படவேண்டும். நமக்கு மற்றவர்களுடைய அன்பும் ஆதரவும் தேவை. அதுபோலவே மற்றவர்களும் நம்முடைய அன்பையும் ஆதரவையும் எதிர்பார்க்கிறார்கள்.

விசுவாசிகள் ஒருவருக்கொருவர் ஆதரவாயிருக்கவேண்டும். ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் வளர்ச்சி பெறுவதற்கு விசுவாசிகள் ஒருவருக்கொருவர் உதவியாயிருக்கவேண்டும். ஆவிக்குரிய நல்ல ஆலோசனைகளைச் சொல்லவேண்டும். நன்மை செய்வதற்கு ஒருவரையொருவர் உற்சாகப்படுத்தவேண்டும். சத்துரு ஒருவனை தனியாகப் பார்த்தால், அவனை அவன் எளிதாக மேற்கொள்வான். அவனோடு கூட ஒருவன் இருக்கும்போது, சத்துரு அவனை மேற்கொள்வது கடினம். ஒண்டியாயிருந்து விழுகிறவனை தூக்கிவிடுவதற்கு, அவனுக்கு யாரும் துணையாயிருக்க மாட்டார்கள். ஒண்டியாயிருந்து கீழே விழுந்தவன் தானே எழுந்திருக்கவேண்டும்.

ஒருவனை சத்துரு மேற்கொள்ள வந்தால், தன்னுடைய சிநேகிதனோடு சேர்ந்து, இருவரும் சத்துருவுக்கு எதிர்த்து நிற்கலாம். நம்முடைய ஆவிக்குரிய யுத்தத்தில், விசுவாசிகள் ஒருவருக்கொருவர் துணையாயிருக்கவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய காரியங்களைச் செய்வதற்கும், ஊழியங்களைச் செய்வதற்கும், ஒருவருக்கொருவர் ஆதரவாயிருக்கவேண்டும். தேவனுடைய சமுகத்தில் ஒருவருக்கொருவர் ஆறுதல் சொல்லவேண்டும். பரிசுத்தவான்களின் ஐக்கியத்தினால் அனைவருக்கும் ஆறுதல் கிடைக்கும்.

சாலொமோன் இதைச் சொல்லும்போது "முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது" என்று சொல்லுகிறார். முப்புரிநூல் திரளான அம்புகளைப்போன்றது. தனித்தனியாக இருக்கிற நூல் தனிமையான அம்பைப் போன்றது. ஒரு அம்பு குறி தவறிவிட்டால், மற்றொரு அம்பை எய்வதற்கு வாய்ப்பு இருக்காது. நம்முடைய அம்பறாத்தூணியில், அநேக அம்புகள் இருக்கும்போது, அவை அனைத்தையும் பயன்படுத்தி சத்துருவை வீழ்த்தலாம்.

இரண்டுபேர் ஒன்றுசேரும்போது, அது முப்புரிநூலுக்கு இணையாகயிருக்கும். இரண்டுபேர் பரிசுத்தமான அன்பினாலும், ஐக்கியத்தினாலும் இணையும்போது, பரிசுத்த ஆவியானவரும் அவர்களோடு ஐக்கியமாகயிருக்கிறார். அவர்கள் இருவரோடு சேர்ந்து, ஆவியானவரும் மூன்றாவது நபராக அவர்களைப் பலப்படுத்துகிறார்.

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு, இரண்டு சீஷர்கள் எம்மாவுக்கு போகிற ஊர் வழியாகப் போனார்கள். அவர்கள் கலக்கத்தோடு பேசிக்கொண்டு போனார்கள். உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்து அவர்களோடு சேர்ந்து கொண்டார். அப்போது அவ்விரண்டு சீஷர்களுடைய மனக்கண்களும் திறக்கப்பட்டது. இயேசுகிறிஸ்து அவர்களோடு சேர்ந்தவுடன், அவ்விரண்டு சீஷர்களும் முப்புரிநூலைப்போல வலுவடைந்தார்கள். அவர்களுடைய கலங்கிய ஆத்துமாவுக்கு ஆறுதலுண்டாயிற்று. அவர்களுடைய மனதில் குழப்பம் நீங்கிற்று. தெளிவு உண்டாயிற்று. பலவீனம் நீங்கிற்று. பெலமுண்டாயிற்று. முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது.

ராஜா
பிர 4:13-16

பிர 4:13. இனி ஆலோசனையைக் கேளாத கிழவனும் மூடனுமாகிய ராஜாவைப்பார்க்கிலும், ஏழையும் ஞானியுமாகிய இளைஞனே வாசி.

பிர 4:14. அரசானச் சிறைச் சாலையிலிருந்து புறப்படுவாருமுண்டு; ராஜாங்கத்தில் பிறந்து ஏழையாவாருமுண்டு.

பிர 4:15. சூரியனுக்குக்கீழே ஜீவனுள்ளோர் யாவரும் ராஜாவின் பட்டத்திற்கு வரப்போகிற பிள்ளையின் பட்சத்தில் சார்ந்திருப்பதைக் கண்டேன்.

பிர 4:16. அவர்களுக்குமுன் அப்படிச் செய்த ஜனங்களின் இலக்கத்திற்கு முடிவில்லை; இனி இருப்பவர்கள் இவன்மேலும் பிரியம் வைக்காமற் போவார்கள்; இதுவும் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது.

ராஜாவினிடத்தில் ஞானம் இருக்கவேண்டும். ராஜா மூடனாகயிருந்தால் அவனுடைய ஆளுகையில் நீதியும், நியாயமும் இருக்காது. மூடனாகிய ராஜாவைப்பார்க்கிலும் ஏழையும் ஞானியுமாயிருக்கிறவனே வாசி. ராஜா மந்திரியின் ஆலோசனையைக் கேட்கவேண்டும். ஆலோசனையைக் கேளாத கிழட்டு ராஜாவைப் பார்க்கிலும், ஏழையும் ஞானியுமாகிய இளைஞனே வாசி.

மூடன் தன் இருதயத்தில் இறுமாப்பாயிருப்பான். மூடத்தனமும் இறுமாப்பு குணமும் ஒருவனிடத்தில் சேர்ந்தேயிருக்கும். இறுமாப்புள்ளவன் மற்றவர்களுடைய புத்திமதிகளைக் கேட்கமாட்டான். தனக்கு எல்லாம் தெரியுமென்று ஆணவமாயிருப்பான். ஆனால் அவனுக்கு ஒன்றும் தெரியாது. ராஜா மந்திரிகளின் ஆலோசனைகளைக் கேட்கவேண்டும். தனக்கு ஞானமிருந்தாலும், பிறருடைய ஞானமுள்ள ஆலோசனைகளையும் பெற்றுக்கொண்டு, நீதியாய் ஆட்சிசெய்யவேண்டும்.

ஞானம் முதியோரிடத்திலிருப்பதுபோல இளைஞரிடத்திலும் இருக்கும். நமக்கு ஞானமுள்ள ஆலோசனைகளைச் சொல்லுகிறவர்கள் நம்மைவிட வயதில் முதியவர்களா அல்லது இளைஞர்களா என்று வயதை ஆராய்ச்சி பண்ணக்கூடாது. அவர்களுடைய ஞானத்திற்குச் செவிகொடுக்கவேண்டும். அவர்களுக்கு எவ்வளவு வயதானாலும், அதைப்பற்றி சிந்திக்காமல், அவர்களுடைய ஆலோசனைகளை ஞானமுள்ளதா என்று மாத்திரமே பார்க்கவேண்டும்.

ஒருவனிடத்தில் ஞானமிருக்கும்போது, அவன் மற்றவர்கள் மத்தியில் உயர்ந்திருப்பான். அவன் ஏழையாகயிருந்தாலும், அவன் ஞானியாகயிருப்பானென்றால் அவனுக்கு கனமும், மரியாதையும் கிடைக்கும். பொதுவாக ஏழையினுடைய ஆலோசனைகளுக்கு யாரும் செவிகொடுக்கமாட்டார்கள். அவர்கள் இளைஞராகயிருப்பார்களென்றால், வயது முதிர்ந்தவர்கள் அவர்களுக்கு நிச்சயமாய் செவிகொடுக்கமாட்டார்கள். ஆனாலும் ஆலோசனையைக் கேளாத கிழவனும் மூடனுமாகிய ராஜாவைப் பார்க்கிலும், ஏழையும் ஞானியுமாகிய இளைஞனே வாசி என்று சாலொமோன் ராஜா தன்னுடைய அனுபவத்தின் மூலமாய்ச் சொல்லுகிறார்.

ராஜா ஜனங்கள்மீது பிரியமாயிருக்க வேண்டும். ஜனங்களும் தங்கள் ராஜாவின்மீது பிரியம் வைத்திருக்கவேண்டும். அப்படிப்பட்ட ராஜாவின் ஆளுகை மாத்திரமே நிலைத்திருக்கும். ராஜாவுக்கு வாரிசு இருக்கவேண்டும். ராஜாவின் பட்டத்திற்கு வரப்போகிற பிள்ளையின் பட்சத்தில், அந்தத் தேசத்தின் ஜனங்கள் யாவரும் சார்ந்திருப்பார்கள்.

ராஜஆளுகை ஒருபோதும் நிலைத்திருப்பதில்லை. இப்போது ராஜாவாகயிருக்கிறவர், தன்னுடைய ராஜ்யபாரத்தை இழந்துவிட வாய்ப்புள்ளது. ஒரு சிலர் சிறைச்சாலையிலிருந்து அரசாள புறப்படுகிறார்கள். சிறைச்சாலையில் தண்டனை அனுபவிக்கும் கைதியாகயிருக்கிறவர், சிங்காசனத்தில் ராஜாவாக வீற்றிருந்து ஆட்சி செய்ய வந்துவிடுகிறார். ஒரு சில ராஜாக்கள் சிறிதுகாலம் செல்வச்செழிப்போடிருப்பார்கள். அவர்களுடைய செல்வம் நிலையானதல்ல. ராஜாங்கத்தில் பிறந்து ஏழையாவாருமுண்டு என்று சாலொமோன் சொல்லுகிறார்.

ஜனங்கள் எப்போதுமே மாற்றத்தை விரும்புகிறார்கள். மக்களுக்கு எந்தக் காரியத்திலும் திருப்தி உண்டாவதில்லை. மனுபுத்திரர் தங்கள் மனதிற்கு ஓய்வுகொடுப்பதில்லை. தங்களிடத்தில் என்ன இருக்கிறது என்பதுகூட ஜனங்களுக்கு சரியாகத் தெரியாது. ஆனாலும் தங்களுக்கு எல்லாம் வேண்டுமென்று பேராசைப்படுவார்கள். தங்களிடத்தில் உள்ளதை வைத்து திருப்தியோடிருக்கமாட்டார்கள்.

ராஜாசனத்தில் வீற்றிருந்து இப்போது ஆளுகை செய்கிற ராஜாவின்மீது ஜனங்களுக்குத் திருப்தியிருக்காது. ராஜாவுக்குப் பின்பு அவருடைய பட்டத்திற்கு யார் வரப்போகிறார் என்று ஆவலோடு பார்த்துக்கொண்டிருப்பார்கள். அவர்கள் எதிர்பார்க்கிற பிரகாரம், புதிய ராஜாக்கள் வந்தாலும், அந்த ராஜாவின்மீதும் ஜனங்களுக்குத் திருப்தியிருக்காது. மேலும் ஒரு மாற்றத்தை எதிர்பார்ப்பார்கள். இந்தப் புதிய ராஜாவுக்குப் பதிலாக, இன்னும் ஒரு புதிய ராஜா வந்தால் நன்றாயிருக்கும் என்று ஆசைப்படுவார்கள்.

நிலையில்லாமல், மாற்றத்தை எதிர்பார்க்கிற ஜனங்களின் இலக்கத்திற்கு முடிவில்லை என்று சாலொமோன் சொல்லுகிறார். இப்போதிருக்கிற ராஜாவின்மீது பிரியம் வைக்காமல் இருக்கிற ஜனங்கள், இனிமேல் வரப்போகிற ராஜாவின்மீதும் பிரியம் வைக்காமல் போவார்கள். சாலொமோன் இதை ஆராய்ந்து பார்த்து, இதுவும் மாயையும், மனதிற்கு சஞ்சலமுமாயிருக்கிறது என்று சொல்லுகிறார்.

BELLWETHER INTERNATIONAL

GOOD NEWS PUBLISHERS

இன்று "ஓசன்னா" என்று சொல்லி வாழ்த்துகிறவர்கள், நாளை "சிலுவையிலறையும்" என்று கூக்குரலிடுவார்கள். இது மனுஷருடைய பொதுவான இயல்பு. இன்று வாழ்த்துகிறவர்கள் நாளை சபிப்பார்கள். இவையெல்லாமே மாயையும் மனதிற்கு சஞ்சலமுமாயிருக்கிறது.

5 அதிகாரம்

சாலொமோன் இந்த அதிகாரத்தில் தேவனை ஆராதிப்பது பற்றி எழுதுகிறார். இந்த உலகத்தில் எல்லாம் மாயையாயிருந்தாலும், தேவனும் அவருடைய வார்த்தையும் சத்தியமாயிருக்கிறது. நம்முடைய ஞானத்திலும், கனத்திலும், வல்லமையிலும், தொழிலிலும், வியாபாரத்திலும், ஐசுவரியத்திலும் நமக்கு மெய்யான சந்தோஷம் கிடைக்காது. இவையெல்லாமே மாயையும் மனதிற்கு சஞ்சலமுமாயிருக்கும். நாம் மாயையைப் பின்பற்றினால் நம்முடைய ஜீவியம் பரிதாபமாய் முடியும். நாமும் பரிதபிக்கப்படத் தக்கவர்களாயிருப்போம். வீணான மாயையைப் பின்பற்றுகிறவர்களும் மாயையாகவே இருப்பார்கள்.

நாம் மாயையைக்குறித்து மிகவும் கவனமாயிருக்கவேண்டும். எல்லா காரியங்களிலும் மாயையிருக்கிறது. ஆகையினால் எது மாயை என்பதையும், எது சத்தியம் என்பதையும் நாம் வேறுபிரித்து காணவேண்டும். தேவனுடைய வார்த்தையைக் கேட்பதிலும், தேவனுக்கு காணிக்கையும் பலியும் செலுத்துவதிலும் நாம் உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

நம்முடைய ஜெபமும், நாம் தேவனுக்கு பொருத்தனை பண்ணுவதும் மாய்மாலமாயிருக்கக்கூடாது. அதிலும் உண்மையிருக்கவேண்டும். ஒரு சிலர் ஆவிக்குரிய தரிசனங்களைக் காணாமலேயே, தாங்கள் தெய்வீக சொப்பனங்களைக் கண்டதாகவும், தங்களுக்கு தெய்வீக வெளிப்பாடுகள் கிடைத்ததாகவும் பொய்சொல்லுகிறார்கள். இவர்களைக் குறித்தும் நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

இந்த உலகம் ஒரு மாயை. உலகத்தின் ஐசுவரியமும் மாயை. இந்த உலகத்தின் ஐசுவரியத்தினால் நம்முடைய மனதிற்கு மெய்யான சந்தோஷம் கிடைக்காது. அதற்குப் பதிலாக நம்முடைய மனதிற்கு சஞ்சலமே உண்டாகும். உலக ஐசுவரியத்தினால் நமக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகப்போவதில்லை. செல்வம் அதிகரிக்கும்போது, அவனுக்கு கவலைகளும், பிரச்சனைகளும் அதிகரிக்கும். ஐசுவரியவானுக்கு தூக்கம் சரியாக வராது. ஐசுவரியவான்களுக்கு அநேக ஆபத்துக்கள் வரும். பல சமயங்களில் ஐசுவரியமே, அதை உடையவர்களை அழித்துப்போடும்.

நாம் எவ்வளவுதான் ஐசுவரியம் சேர்த்தாலும், நம்முடைய ஐசுவரியம், நாம் மரிக்கும்போது நம்மோடு கூடவரப்போவதில்லை. நம்முடைய எல்லா ஐசுவரியங்களையும், நாம் இந்த உலகத்தில் விட்டு விட்டுத்தான் போகவேண்டும். ஐசுவரியத்தை அநியாயமாய் சேகரிக்கிறவர்கள் அநேக பாடுகளை அனுபவிக்கிறார்கள். நம்முடைய ஐசுவரியத்தை நாம் நல்லமுறையில் பயன்படுத்தவேண்டும். அதனால் நமக்கும் பிறருக்கும் நன்மை உண்டாகவேண்டும்.

இந்த உலகத்தில் நாம் ஜீவிக்கிற காலம் வரையிலும், இங்கு எப்படி ஜீவிக்கவேண்டுமென்று சாலொமோன் நமக்கு நல்ல ஆலோசனைகளைச் சொல்லுகிறார். நம்முடைய தொழிலையும், வியாபாரத்தையும், ஆவிக்குரிய ஜீவியத்தையும் எப்படி ஆளுகை செய்யவேண்டும் என்றும் சாலொமோன் நமக்கு ஆலோசனை சொல்லுகிறார். நாம் எல்லாவற்றிற்கும் கணக்கு ஒப்புவிக்கவேண்டும். தேவன் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக தம்முடைய ஆசீர்வாதங்களை நமக்குக் கொடுக்கிறார். இவையெல்லாமே தேவனுடைய அநுக்கிரகம்.

தேவாலயம்
பிர 5:1-3

பிர 5:1. நீ தேவாலயத்துக்குப் போகும்போது உன் நடையைக் காத்துக்கொள்; மூடர் பலியிடுவது போலப் பலியிடுவதைப்பார்க்கிலும் செவிகொடுக்கச் சேர்வதே நலம். தாங்கள் செய்கிறது தீமையென்று அறியாதிருக்கிறார்கள்.

பிர 5:2. தேவசமுகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம்பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமலும் இரு; தேவன் வானத்திலிருக்கிறார்; நீ பூமியிலிருக்கிறாய், ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக.

பிர 5:3. தொல்லையின் திரட்சியினால் சொப்பனம் பிறக்கிறதுபோல, வார்த்தைகளின் திரட்சியினால் மூடனுடைய சத்தம் பிறக்கும்.

இந்த உலகம் எல்லாம் மாயையாயிருக்கிறது என்று சொல்லி, சாலொமோன் நம்மை இந்த உலகத்திலிருந்து வேறுபிரித்து அழைத்துச் செல்கிறார். இந்த உலகத்தைவிட்டு வெளியேறி வருகிற நம்மை, சாலொமோன் தேவனிடத்திற்கு அழைத்து வருகிறார். நாம் செய்ய வேண்டிய கடமைகளை நமக்கு நினைவுபடுத்துகிறார். தேவன் தம்முடைய வாசஸ்தலத்தில் வாசம்பண்ணுகிறார். அங்கு கர்த்தருடைய பிள்ளைகள் அவரை பயபக்தியோடு ஆராதனை செய்கிறார்கள். கர்த்தருக்கு பலிகளைச் செலுத்துகிறார்கள். சாலொமோன் நம்மை தேவாலயத்திற்கு அழைத்துப் போகிறார்.

நாம் இந்த உலகத்தைப் பார்த்தால் நமக்கு ஏமாற்றமே உண்டாகும். நம்முடைய ஜீவியத்தில் ஏமாற்றம் உண்டாகாமல், சந்தோஷமும் சமாதானமும் உண்டாகவேண்டுமென்றால், நாம் கர்த்தரை நோக்கிப் பார்க்கவேண்டும். கர்த்தரே சர்வசிருஷ்டிகர். சர்வசிருஷ்டிகளும் தங்கள் சிருஷ்டிகரை நோக்கிப் பார்க்கவேண்டும். நம்முடைய சரீரத்திலும், உள்ளத்திலும் அநேக காயங்களும், வேதனைகளும் இருக்கலாம். இதை உலகப்பிரகாரமான ஔஷதத்தை பயன்படுத்தி குணப்படுத்த முடியாது. தேவனுடைய வார்த்தையும், அவரிடத்தில் நாம் ஏறெடுக்கிற ஜெபமும் நம்முடைய எல்லா காயங்களையும் சொஸ்தமாக்குகிற மெய்யான ஔஷதம்.

நாம் தேவாலயத்திற்குப் போகும்போது நம்முடைய நடையைக் காத்துக்கொள்ள வேண்டும். கர்த்தரிடத்தில் பயபக்தியாயிருக்க வேண்டும். நாம் பயபக்தியோடு கர்த்தரை ஆராதிக்கவேண்டும். இந்த உலகப்பிரகாரமான காரியங்கள் எல்லாமே மாயை. ஆனால் கர்த்தருடைய காரியங்களில் எதுவும் மாயையானதல்ல. நாம் ஆவிக்குரிய உபதேசங்களைச் சரியாகப் புரிந்துகொண்டு, அவற்றை நம்முடைய ஜீவியத்தில் சரியாகப் பயன்படுத்தினால், அவை நமக்கு மிகுந்த ஆசீர்வாதத்தைத் தரும். ஆவிக்குரிய காரியங்களை நாம் சரியாகப் புரிந்துகொள்ளாமல், அவற்றை தப்பிதமாகப் பயன்படுத்தினால், அவை நமக்கு மாயையாகயிருக்கும்.

நாம் தேவாலயத்திற்குப் போகும்போது நம்முடைய நடையைக் காத்துக்கொள்ள வேண்டும். நம்முடைய அயலான், சலித்து, நம்மை வெறுக்காதபடிக்கு, அடிக்கடி அவன் வீட்டில் கால் வைக்கக்கூடாது என்று சாலொமோன் நமக்கு ஆலோசனை சொல்லுகிறார் (நீதி 25:17). நாம் எத்தனை தரம் கர்த்தருடைய ஆலயத்திற்குப் போனாலும், அவர் நம்மை வெறுத்து ஒதுக்குவதில்லை. நாம் தவறான பாதையில் போகக்கூடாது. தேவாலயத்திற்குப் போகும்போதுகூட, நம்முடைய நடையைக் காத்துக்கொண்டு, சரியான பாதையில் தேவாலயத்திற்குப் போகவேண்டும்.

தேவாலயத்திற்குப் போகும்போது, கர்த்தரை ஆராதனை செய்யவேண்டும் என்னும் எண்ணம் மாத்திரமே நம்முடைய இருதயத்தில் நிரம்பியிருக்கவேண்டும். கர்த்தரை ஆராதிக்காமல், வேறு ஏதோ ஒரு காரியத்திற்காக தேவாலயத்திற்குப் போவதினால் நமக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகாது. சுயபெருமைக்காகவோ, ஜனங்கள் மத்தியில் நம்முடைய ஆடை ஆபரணங்களையும், அந்தஸ்துக்களையும் உயர்த்திக் காண்பிக்கவேண்டும் என்பதற்காகவோ, நாம் ஆலயத்திற்குப் போனால் நமக்கு தெய்வீக ஆசீர்வாதம் கிடைக்காது.

கால்துரிதமானவன் தப்பி நடக்கிறான் (நீதி 19:2) என்று சாலொமோன் சொல்லுகிறார். நாம் தேவாலயத்திற்கு கர்த்தரை ஆராதிக்கவேண்டும் என்னும் நோக்கத்தோடு போகாமல், வேறு நோக்கத்திற்காக அங்கு போனால் நம்முடைய கால்களும் நிதானமாய் நடக்காமல் துரிதமாய் நடக்கிறது. நம்முடைய சிந்தனைகள் அங்கும் இங்கும் அலைபாய்ந்து கொண்டிருக்கக்கூடாது. உலகப்பிரகாரமான காரியங்களின்மீது நம்முடைய கவனத்தைச் செலுத்தக்கூடாது. தேவாலயத்திற்குப் போகும்போது, நம்முடைய முழுஇருதயமும் கர்த்தரைப்பற்றிய சிந்தனையினால் நிரம்பியிருக்கவேண்டும்.

மோசே தேவபர்வதமாகிய ஓரேபிலே, எறிகிற முட்செடியின் நடுவிலே தேவனைக் கண்டார். அப்பொழுது தேவன் மோசேயிடம், "உன் கால்களிலிருக்கிற பாதரட்சையை கழற்றிப்போடு, நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி" (யாத் 3:5) என்று சொன்னார். "பாதரட்சையைக் கழற்றிப்போடு" என்னும் வாக்கியத்திற்கு, "உன் நடையைக் காத்துக்கொள்" என்று வேதபண்டிதர்களில் சிலர் வியாக்கியானம் சொல்லுகிறார்கள். பாதரட்சை என்பது இங்கு அடையாளமாகவும், உவமையாகவும், உருவகமாகவும் சொல்லப்பட்டிருக்கிறது என்பது இவர்களுடைய வியாக்கியானம்.

இதுபோன்ற வாக்கியம் யோசுவாவின் புஸ்தகத்திலும் காணப்படுகிறது. "அப்பொழுது கர்த்தருடைய சேனையின் அதிபதி யோசுவாவை நோக்கி: உன் கால்களிலிருக்கிற பாதரட்சைகளைக் கழற்றிப்போடு, நீ நிற்கிற இடம் பரிசுத்தமானது என்றார்; யோசுவா அப்படியே செய்தான்" (யோசு 5:15).

நாம் கர்த்தருடைய ஆலயத்திற்குப் போகும்போது வெறுங்கையோடு போகக்கூடாது. நம்முடைய காணிக்கைகளையும், பலிகளையும் தேவாலத்திற்குக் கொண்டுபோகவேண்டும். நாம் பலியிடுவதிலும் ஒரு ஒழுங்குமுறை இருக்கவேண்டும். நாம் மூடர்களுடைய பலிகளை தேவாலயத்திற்குக்கொண்டு போகக்கூடாது. மூடர்கள் பலியிடுவதுபோல நாம் பலியிடவும் கூடாது. மூடர்கள் சடங்குகளுக்கும், பாரம்பரியங்களுக்கும், புறம்பான காரியங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அவர்களுக்கு அவற்றின் உள்ளான அர்த்தம் தெரிவதில்லை. மெய்யான தாற்பரியத்தைப் புரிந்து கொள்ளாமல், வெளிவேஷமாக பலியிடுவது "மூடர்களுடைய பலி" ஆகும்.

ஒரு காரியம் தீமையென்று தெரியாமலிருப்பதினால்தான் அநேகர் அந்தத் தீமையைச் செய்கிறார்கள். அதைச் செய்த பின்புகூட, தாங்கள் செய்தது தீமையென்பது அவர்களுக்குத் தெரிவதில்லை. இப்படிப்பட்டவர்கள் தாங்கள் செய்த தப்பிதங்களுக்கு மனம் வருந்தமாட்டார்கள். துன்மார்க்கமான மனது பாவத்தை மாத்திரமே யோசிக்கும். பாவம் செய்யவேண்டும் என்று மாத்திரமே தீர்மானம்பண்ணும். தீயமனதிற்கு தீயகாரியங்களைத் தவிர நன்மையான காரியம் எதுவும் தெரியாது. தேவாலயத்திற்குப் போகும்போதுகூட, தீயவர்கள், தீமையான காரியங்களையே யோசிப்பார்கள். தாங்கள் செய்கிறது தீமையென்றுகூட அவர்கள் அறியாதிருக்கிறார்கள்.

நாம் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்பதற்கு எப்போதுமே ஆயத்தமாயிருக்க வேண்டும். தேவனுடைய வார்த்தை வாசிக்கப்படும்போதும், பிரசங்கம் பண்ணப்படும் போதும், நாம் கவனமாய் வசனங்களை செவிகொடுத்து கேட்கவேண்டும். பலியிடுவதைப் பார்க்கிலும் செவிகொடுக்கச் செய்வதே நலம்.

"கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்" (1சாமு 15:22).

"நீங்கள் உங்கள் கைகளை விரித்தாலும், என் கண்களை உங்களைவிட்டு மறைக்கிறேன்; நீங்கள் மிகுதியாய் ஜெபம்பண்ணினாலும் கேளேன்; உங்கள் கைகள் இரத்தத்தினால் நிறைந்திருக்கிறது. உங்களைக் கழுவிச் சுத்திகரியுங்கள்; உங்கள் கிரியைகளின் பொல்லாப்பை என் கண்களுக்கு மறைவாக அகற்றிவிட்டு, தீமைசெய்தலை விட்டு ஓயுங்கள்" (ஏசா 1:15,16).

நாம் தேவாலயத்திலிருக்கும்போது நம்முடைய வார்த்தைகள் அங்கு கேட்கப்படக்கூடாது. நம்முடைய வார்த்தைக்குப் பதிலாக, தேவனுடைய வார்த்தையே நம் மத்தியில் கேட்கப்படவேண்டும். தேவசமுகத்தில் நாம் துணிகரமாய் நம்முடைய வாயினால் பேசாமலும், மனம் பதறி ஒரு வார்த்தையும் சொல்லாமலும் இருக்கவேண்டும். நாம் பேசினாலும் நம்முடைய வார்த்தைகள் சுருக்கமாயிருக்கவேண்டும். தேவனுடைய சமுகத்தில் பயபக்தியோடு பிரவேசிக்கவேண்டும்.

நாம் ஜெபம்பண்ணினாலும், வேண்டுதல்களையும் விண்ணப்பங்களையும் ஏறெடுத்தாலும், பொருத்தனைகளைச் செய்தாலும் மனம் பதறி ஒருபோதும் பேசக்கூடாது. துணிகரமாயும் பேசக்கூடாது. நம்முடைய இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். இருதயத்தின் சிந்தனைகளை நாம் ஆளுகை செய்யவேண்டும். நாம் சுருக்கமாய் பேசினாலும் கருத்தாய்ப் பேசவேண்டும்.

நம்முடைய இருதயத்திலிருக்கிற நினைவுகள் ஒரு விதமாகவும், நம்முடைய வாயின் வார்த்தைகள் வேறுவிதமாகவும் இருந்தால் நமக்கு பிரயோஜனமில்லை. கர்த்தருக்கு முன்பாக நம்மால் எதையும் மறைக்க முடியாது. மனுஷன் முகத்தைப் பார்க்கும்போது கர்த்தர் நம்முடைய இருதயத்தை ஆராய்ந்து பார்க்கிறார். நம்முடைய இருதயத்தின் சிந்தனைகளே அவருக்கு வார்த்தைகளாகயிருக்கும். தேவன் வானத்திலிருக்கிறார். நாம் பூமியிலிருக்கிறோம். ஆகையினால் நம்முடைய வார்த்தைகள் சுருக்கமாயிருக்கவேண்டும்.

நம்முடைய இருதயத்திலிருந்து வார்த்தைகள் புறப்பட்டு வந்தாலும், அந்த வார்த்தைகள் துணிகரமாயிருக்கக்கூடாது. நாம் பதறியும் பேசக்கூடாது. நிதானமாக பயபக்தியோடு பேசவேண்டும். நாம் சர்வவல்லமையுள்ள தேவனுக்கு முன்பாகப் பேசுகிறோம் என்னும் பயமும், பக்தியும் நம்முடைய உள்ளத்தில் நிரம்பியிருக்கவேண்டும். நாம் தேவனுடைய பாதபடியாகிய பூமியிலிருக்கிறோம். தேவன் தம்முடைய கிருபையினால் நம்மோடு பேசுகிறார். அதே கிருபையினாலேயே, நாம் தேவனோடு பேசுவதற்கு அவர் அனுமதிகொடுக்கிறார்.

தேவனுடைய சமுகத்தில் பிரவேசிப்பதற்கு நமக்கு வேறு எந்தவிதமான தகுதியுமில்லை. ஆகையினால் தேவனுக்கு முன்பாக நாம் போகும்போது, மிகுந்த மனத்தாழ்மையோடு, மிகுந்த பயபக்தியோடு, கர்த்தருடைய சமுகத்தில் நம்முடைய ஜெபவார்த்தைகளை ஏறெடுக்கவேண்டும். தொல்லையின் திரட்சியினால் சொப்பனங்கள் பிறக்கிறது. அதுபோலவே வார்த்தைகளின் திரட்சியினால் மூடனுடைய சத்தம் பிறக்கிறது. நாம் தேவனிடத்தில் ஜெபம்பண்ணும்போது நம்முடைய வார்த்தைகள் திரட்சியாயிருக்கவேண்டும் என்னும் அவசியமில்லை. அவை பயபக்தியாயும், சுருக்கமாயும் இருந்தாலே போதுமானது.

பொருத்தனை
பிர 5:4,5

பிர 5:4. நீ தேவனுக்கு ஒரு பொருத்தனை பண்ணிக்கொண்டால், அதைச் செலுத்தத் தாமதியாதே; அவர் மூடரில் பிரியப்படுகிறதில்லை; நீ நேர்ந்துகொண்டதைச் செய்.

பிர 5:5. நீ நேர்ந்துகொண்டதைச் செய்யாமற்போவதைப்பார்க்கிலும், நேர்ந்துகொள்ளாதிருப்பதே நலம்.

நாம் தேவனுக்கு பொருத்தனைபண்ணும்போது மிகவும் கவனமாயிருக்கவேண்டும். நாம் பண்ணிய பொருத்தனையை செலுத்துவதற்கு தாமதிக்கக்கூடாது. நாம் நேர்ந்து கொண்டதை செய்யாமற்போவதைப் பார்க்கிலும், நேர்ந்துகொள்ளாதிருப்பதே நலம் என்று சாலொமோன் சொல்லுகிறார்.

"ஒருவன் கர்த்தருக்கு யாதொரு பொருத்தனை பண்ணினாலும், அல்லது யாதொரு காரியத்தைச் செய்யும்படி ஆணையிட்டுத் தன் ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்திக்கொண்டாலும், அவன் சொல்தவறாமல் தன் வாயிலிருந்து புறப்பட்ட வாக்கின்படியெல்லாம் செய்யக்கடவன்" *(எண் 30:2).*

"என் இக்கட்டில் நான் என் உதடுகளைத் திறந்து, என் வாயினால் சொல்லிய என் பொருத்தனைகளை உமக்குச் செலுத்துவேன்" (சங் 66:14) என்று சங்கீதக்காரர் சொல்லுகிறார்.

"சேனைகளின் கர்த்தாவே, தேவரீர் உம்முடைய அடியாளின் சிறுமையைக் கண்ணோக்கிப் பார்த்து, உம்முடைய அடியாளை மறவாமல் நினைந்தருளி, உமது அடியாளுக்கு ஒரு ஆண் பிள்ளையைக் கொடுத்தால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் நான் அவனைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பேன்; அவன் தலையின்மேல் சவரகன் கத்திபடுவதில்லை என்று அன்னாள் ஒரு பொருத்தனை பண்ணினாள்" (1சாமு 1:11).

நாம் கர்த்தருக்கு பொருத்தனைபண்ணி ஜெபம்பண்ணுவது நல்லது. பொருத்தனைபண்ணினால் அதைச் செலுத்தவேண்டும். தாமதம்பண்ணாமல் உடனே செலுத்திவிடவேண்டும். நாம் எவ்வளவு பொருத்தனைபண்ணினோமோ, அதை முழுமையாய்ச் செலுத்திவிடவேண்டும். நாம் தேவனுக்கு பொருத்தனை பண்ணியது அனைத்துமே அவருக்குத்தான் சொந்தம். அதில் ஒரு பகுதியை நாம் நமக்கென்று எடுத்து, அதை நமக்கு சொந்தமாக்கிக்கொள்ளக்கூடாது.

நாம் கர்த்தருக்கென்று நம்மைப் பொருத்தனைபண்ணி ஒப்புக்கொடுத்தால், நம்மை கர்த்தருடைய சமுகத்தில் பூரணமாய் அர்ப்பணிக்கவேண்டும். கர்த்தருக்கு முன்பாக நாம் பேசுகிற வார்த்தைகளில் மிகவும் கவனமாயிருக்கவேண்டும். ஆகையினால் "தேவசமுகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம்பதறி ஒரு வார்த்தையும் சொல்லாமலும் இரு" (பிர 5:2) என்று சாலொமோன் சொல்லுகிறார்.

நாம் தேவனுக்குப் பொருத்தனை பண்ணியதை சந்தோஷமாய்ச் செலுத்தவேண்டும். அதை சீக்கிரத்திலும் செலுத்தவேண்டும். இதற்கான காரணங்கள் இரண்டை சாலொமோன் இங்கு விரிவாகச் சொல்லுகிறார். அவையாவன:

1. நாம் பொருத்தனை பண்ணியதை, சீக்கிரமாய் செலுத்தாவிட்டால், நாம் தேவனுடைய சமுகத்தை அசட்டைபண்ணுகிறோம். தேவனை வஞ்சிப்பதற்கு முயற்சிபண்ணுகிறோம். தேவனுக்கு ஏதாவது சாக்குபோக்கு சொல்லி, அவரை ஏமாற்றிவிடலாம் என்று நினைக்கிறோம். தேவன் மூடரில் பிரியப்படுகிறதில்லை.

2. நாம் தேவனுக்குப் பொருத்தனைபண்ணி, அதைச் செலுத்தவில்லையென்றால், அது நமக்கு குற்றமாய் எண்ணப்படும். பொருத்தனையை மீறிய பாவத்திற்காக நமக்குத் தண்டனை கொடுக்கப்படும். ஆகையினால் நாம் நேர்ந்துகொண்டதை செய்யாமற்போவதைப் பார்க்கிலும், நேர்ந்துகொள்ளாதிருப்பதே நலம். நாம் தேவனிடத்தில் பொய்சொல்லக்கூடாது.

அனனியா, தன் மனைவியறிய, தேவனுக்கு பொருத்தனைபண்ணியதில், ஒரு பங்கை வஞ்சித்து வைத்துக்கொண்டான். பேதுரு அவனைப் பார்த்து "நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய்சொன்னாய்" (அப் 5:4) என்று சொன்னார். தேவனுக்குப் பொருத்தனைபண்ணி, அதைச் செலுத்தாதிருக்கிறவர்கள், தேவனிடத்தில் பொய்சொல்லுகிறார்கள்.

வார்த்தைகள்
பிர 5:6

பிர 5:6. உன் மாம்சத்தைப் பாவத்துக்குள்ளாக்க உன் வாய்க்கு இடங்கொடாதே; அது புத்திபிசகினால் செய்தது என்று தூதனுக்குமுன் சொல்லாதே; தேவன் உன் வார்த்தைகளினாலே கோபங்கொண்டு, உன் கைகளின் கிரியையை அழிப்பானேன்?

நாம் பொருத்தனை பண்ணும்போது மிகவும் கவனமாயும், எச்சரிப்பாயும் இருக்கவேண்டும். பாவமான எதையும் தேவனுக்கு முன்பாக பொருத்தனை பண்ணக்கூடாது. தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்கள் நம்முடைய ஜீவியத்தில் நிறைவேறவேண்டும் என்று, தேவனுக்குப் பொருத்தனை பண்ணக்கூடாது. தவறான நோக்கத்தோடு பொருத்தனைபண்ணினால், அது நமக்கு சித்திக்காது. நம்முடைய வாய் நம்மை பாவத்திற்குள்ளாக்கிவிடும். "உன் மாம்சத்தை பாவத்திற்குள்ளாக்க உன் வாய்க்கு இடங்கொடாதே" என்று சாலொமோன் சொல்லுகிறார்.

ஏரோது ராஜா சந்தோஷமாகயிருந்தபோது, ஏரோதியாளின் குமாரத்திக்கு, அவசரப்பட்டு பொருத்தனை பண்ணினான். யோவான்ஸ்நானனை சிரச்சேதம்பண்ணி, அவனுடைய சிரசை ஒரு தாலத்தில் வைத்துக் கொடுப்பதாக வாக்குப்பண்ணிவிட்டான். தான் சொன்ன வார்த்தையை அவனால் மீறமுடியவில்லை. ஏரோது தேவனுக்கு முன்பாகவும், மனுஷருக்கு முன்பாகவும் பாவம் செய்தான்.

நாம் தேவனுக்குப் பொருத்தனை பண்ணிவிட்டு, அதன்பின்பு அந்தப் பொருத்தனையைத் திரும்பப் பெறுவதற்காக, அது பற்றி ஆசாரியரிடம் கலந்து பேசிக்கொண்டிருக்கக்கூடாது. சாலொமோன் ஆசாரியர்களை "தூதன்" என்று சொல்லுகிறார். இவர்கள் சேனைகளின் தேவனுடைய தூதர்களாயிருக்கிறார்கள். நாம் தேவனுக்கு முன்பாக பொருத்தனை பண்ணிவிட்டு, அதை ஊழியக்காரருக்கு முன்பாக மறுதலிக்கக்கூடாது. "அது புத்தி பிசகினால் செய்தது என்று தூதனுக்கு முன்பாக சொல்லாதே" என்று சாலொமோன் எச்சரிக்கிறார்.

ஒரு பொருத்தனைபண்ணிவிட்டு, அந்தப் பொருத்தனையை நிறைவேற்றாமலிருப்பதற்கு, காரணங்களைத் தேடிக்கொண்டிருக்கக்கூடாது. ஒரு சிலர் தப்பு செய்துவிட்டு, தண்டனையிலிருந்து தப்பிப்பதற்காக, சட்டத்தில் ஏதாவது ஓட்டை உடைசல்கள் இருக்கிறதா என்று தேடிப் பார்ப்பார்கள். அதுபோல, நாமும் தேவனுக்குப் பொருத்தனை பண்ணிவிட்டு, அதிலிருந்து தப்பிப்பதற்கு, வகைதேடிக்கொண்டிருக்கக்கூடாது.

நாம் பண்ணிய பொருத்தனையை செலுத்தாமல், கர்த்தரை ஏமாற்றக்கூடாது. தம்மை ஏமாற்றும் நம்முடைய வார்த்தைகளை கர்த்தர் ஏற்றுக் கொள்வதில்லை. நம்முடைய வார்த்தைகளினால் தேவன் கோபங்கொள்வார். நம்முடைய கைகளின் கிரியைகளை அழித்துப்போடுவார். தேவன் நீதியும் நியாயமுமுள்ளவர். நாம் சொன்னதை நிறைவேற்றாமல்போனால், தேவனுடைய கோபம் நம்மீது வரும். நம்முடைய விருப்பங்களும் திட்டங்களும் நிறைவேறாது.

தேவனுக்குப் பயந்திரு
பிர 5:7

பிர 5:7. அநேக சொப்பனங்கள் மாயையாயிருப்பதுபோல, அநேக வார்த்தைகளும் வியர்த்தமாயிருக்கும்; ஆகையால் நீ தேவனுக்குப் பயந்திரு.

நாம் தேவனுக்குப் பயந்திருக்கவேண்டும். கர்த்தருக்குப் பயப்படுவதே ஞானத்தின் ஆரம்பம். பழைய ஏற்பாட்டுக்காலத்தில் அநேகர், கர்த்தரிடத்திலிருந்து தரிசனங்களைப் பெற்றுக்கொண்டதாகச் சொன்னார்கள். சாதாரண சொப்பனங்களைக்கூட, கர்த்தருடைய வெளிப்பாடுகள் என்று வியாக்கியானம் பண்ணினார்கள். எரேமியா தீர்க்கதரிசி இவர்களை "பொய்தீர்க்கதரிசிகள்" என்று சொல்லுகிறார்.

"சொப்பனங்கண்டேன், சொப்பனங் கண்டேன் என்று, என் நாமத்தைச் சொல்லிப் பொய்த்தீர்க்கதரிசனம் உரைக்கிற தீர்க்கதரிசிகள் சொல்லுகிறதைக் கேட்டேன். எதுவரைக்கும் இப்படியிருக்கும்? பொய்த் தீர்க்கதரிசனம் சொல்லுகிற தீர்க்கதரிசிகளின் இருதயத்தில் ஏதாகிலுமுண்டோ? இவர்கள் தங்கள் இருதயத்தின் வஞ்சகத்தையே தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிறவர்கள்" (எரே 23:25,26).

அநேக சொப்பனங்களில் உண்மையில்லை. அவை மாயையாயிருக்கிறது. தெளிவான சிந்தனையுடையவர்கள் கூட, சொப்பனங்களினால் குழம்பிப் போய்விடுகிறார்கள். குழப்பத்திலிருக்கிறவர்கள் சுருக்கமாகவும், தெளிவாகவும் பேசமாட்டார்கள். ஏராளமான வார்த்தைகளைப் பேசுவார்கள். அநேக வார்த்தைகள் வியர்த்தமாயிருக்கும் என்று சாலொமோன் சொல்லுகிறார். எல்லாம் நன்றாகயிருந்தாலும், அழிவு வரப்போகிறது என்று சொப்பனத்தை ஆதாரமாக வைத்துச் சொல்லுவார்கள். கர்த்தருடைய பிள்ளைகளுக்கு சொப்பனங்கள் ஆதாரமாயிருக்கக்கூடாது. கர்த்தருடைய எழுதப்பட்ட வார்த்தைகளே ஆதாரமாயிருக்கவேண்டும். அநேக சொப்பனங்கள் மாயையாயிருக்கிறது. மாயை நமக்கு ஆதாரமாயிருக்கும்போது, நாமும் மாயையாயிருப்போம்.

நாம் சொப்பனத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது. அவற்றைத் திரும்பத் திரும்ப பேசி, அவற்றை உண்மையாக்க முயற்சி பண்ணக்கூடாது. நாம் கர்த்தருக்குப் பயப்படவேண்டும். சொப்பனங்களுக்குப் பயப்படக்கூடாது. நம்முடைய குழப்பங்களுக்கு கர்த்தருடைய வார்த்தைதான் தெளிவைக் கொடுக்கும். சொப்பனங்களை ஆதாரமாக வைத்து, நம்முடைய ஜீவியத்திற்கு எந்த முடிவையும் எடுக்கக்கூடாது.

நியாயமும் நீதியும்
பிர 5:8

பிர 5:8. ஒரு தேசத்தில் ஏழைகள் ஒடுக்கப்படுகிறதையும், நியாயமும் நீதியும் புரட்டப்படுகிறதையும் நீ காண்பாயானால், அதைக்குறித்து ஆச்சரியப்படாதே; உயர்ந்தவன் மேல் உயர்ந்தவன் காவலாளியாயிருக்கிறான்; அவர்கள் மேல் உயர்ந்தவரும் ஒருவருண்டு.

ஒரு மனுஷனுடைய இருதயத்தில் நீதியும் நியாயமும், மனுஷநேயமும் இருக்கும்போது, ஏழைகள் ஒடுக்கப்படுவதை அவனால் சகித்துக்கொள்ள முடியாது. தேசத்தில் ஏழைகள் ஒடுக்கப்படுகிறதையும், நீதியும் நியாயமும் புரட்டப்படுகிறதையும் காணும்போது அவனுடைய மனதிலே கோபமுண்டாகும். அவனுடைய இருதயத்தில் அதைக் குறித்து ஆச்சரியமுண்டாகும். சட்டத்தின் பெயராலும், அதிகாரத்தின் பெயராலும் ஏழைகள் ஒடுக்கப்படுகிறார்கள்.

தேசம் பொதுவாக நல்ல தேசமாகயிருக்கலாம். ஆனாலும் தேசத்தின் ஒரு பகுதியில் தீங்கும், கொடுமையும் தாராளமாய் நடைபெற்றுக்கொண்டிருக்கும். தேசத்தின் அந்தப் பகுதியில் ஏழைகள் ஒடுக்கப்படுவார்கள். நீதியும் நியாயமும் புரட்டப்படும். அதைக் காணும்போது, நாம் அதைக் குறித்து ஆச்சரியப்படக்கூடாது என்று சாலொமோன் சொல்லுகிறார்.

ஏழைகளை ஒடுக்குகிறவர்கள் தங்களை பெரியவர்களாகவும், அதிகாரமுள்ளவர்களாகவும் காண்பித்துக் கொள்கிறார்கள். ஒடுக்கப்படுகிறவர்களைவிட தாங்கள் உயர்ந்தவர்கள் என்று நினைக்கிறார்கள். உயர்ந்தவன்மேல் உயர்ந்தவன் காவலாளியாயிருக்கிறான். தனக்குமேல் யாருமில்லை என்று இவர்கள் இறுமாப்பாயும் ஆணவமாயும் நினைக்கிறார்கள். இவர்களுக்கும் மேல் உயர்ந்தவர் ஒருவர் உண்டு. அவரே சர்வவல்லவராகிய சிருஷ்டி கர்த்தர். அவரே வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தவர். அவரே சர்வசிருஷ்டிகளுக்கும் சிருஷ்டி கர்த்தா.

தேசத்தில் உயர்ந்தவர்கள் ஏழைகளை ஒடுக்கும்போது, அவர்கள் நீதியையும் நியாயத்தையும் புரட்டும்போது, அவர்களுக்கு மேலாகயிருக்கிற தேவன், அவர்கள் செய்கிற அநியாயங்களையெல்லாம் நோக்கிப் பார்க்கிறார். தங்களுக்கு எதிராக எதிர்த்து நிற்பதற்கு யாருமில்லை என்று ஏழைகளை ஒடுக்குகிறவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் தேவனோ எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருக்கிறார். அவர் ஏற்றவேளையில் நியாயம் செய்வார். வழக்குகளை நீதியாய் விசாரிப்பார். நியாயத்தையும் நீதியையும் மறுபடியும் ஸ்தாபிப்பார். கர்த்தர் பார்ப்பார். கர்த்தர் கேட்பார்.

பூமியில் விளையும் பலன்
பிர 5:9-12

பிர 5:9. பூமியில் விளையும் பலன் யாவருக்குமுரியது; ராஜாவும் வயலின் பலனால் ஆதரிக்கப்படுகிறான்.

பிர 5:10. பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடைவதில்லை; செல்வப் பிரியன் செல்வப்பெருக்கினால் திருப்தியடைவதில்லை; இதுவும் மாயையே.

பிர 5:11. பொருள் பெருகினால் அதைத் தின்கிறவர்களும் பெருகுகிறார்கள்; அதை உடையவர்கள் தங்கள் கண்களினால் அதைக் காண்பதேயன்றி அவர்களுக்குப் பிரயோஜனம் என்ன?

பிர 5:12. வேலைசெய்கிறவன் கொஞ்சமாய்ப் புசித்தாலும் அதிகமாய்ப் புசித்தாலும் அவன் நித்திரை இன்பமாயிருக்கும்; செல்வனுடைய பெருக்கோ அவனைத் தூங்கவொட்டாது.

ஐசுவரியமும் மாயை என்று சாலொமோன் சொல்லுகிறார். திரளான ஐசுவரியத்தில் மாயையும் திரளாயிருக்கிறது. ஐசுவரியவான் தன்னுடைய ஐசுவரியத்தைப் பார்த்து பெருமைப்படுகிறான். கண்களின் இச்சையானது திருப்தியடையும் என்று எதிர்பார்க்கிறான். அவனுக்கு கண்களின் இச்சையோடு மாம்சத்தின் இச்சைகளும், ஜீவனத்தின் பெருமையும் வந்துவிடுகிறது. ஐசுவரியவானுக்கு அநேக ஆசைகள் இருக்கும். அவற்றில் ஒன்றும் நிறைவேறாது. இதனால் அவனுக்கு சந்தோஷமும் இருக்காது. சமாதானமும் இருக்காது.

பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடைவதில்லை. செல்வப்பிரியன் செல்வப்பெருக்கினால் திருப்தியவைதில்லை. நம்முடைய ஐசுவரியத்தை நாம் நல்லமுறையில் செலவுபண்ணினால்தான் நமக்கு சந்தோஷம் கிடைக்கும். ஐசுவரியத்திற்குமேல் ஐசுவரியத்தை குவித்து வைப்பதினால் நமக்கு சந்தோஷம் வரப்போவதில்லை.

பூமியில் விளையும் பலன் யாவருக்கும் உரியது. நம்முடைய ஜீவியத்திற்கு ஆதாரமான ஏராளமான பயிர் வகைகள் இந்தப் பூமியில் முளைக்கிறது. கர்த்தர் இந்தப் பூமியில் மனுஷனை சிருஷ்டித்தபோது, அதற்கு முன்பாகவே அவனுடைய தேவைகளை சந்திப்பதற்கு தாவரங்களையும், சமுத்திரத்தில் மச்சங்களையும் சிருஷ்டித்தார். பூமியில் விளையும் பலனை யாரும் தங்களுக்கு மாத்திரம் என்று உரிமை கொண்டாட முடியாது. அது யாவருக்குமுரியது. எல்லோருக்குமே தேவையிருக்கிறது. எல்லோருடைய தேவைகளையும் சந்திப்பதற்காகவே பூமியில் பலன் விளைகிறது. பூமியில் விளையும் பலன் யாவருக்கும் போதுமானதாயிருக்கும்.

இந்தப் பூமியே நமக்கு களஞ்சியம். இந்தப் பூமியிலுள்ள விலங்குகளெல்லாம், நம்மோடுகூட இந்தப் பிரபஞ்சத்தில் சஞ்சரிக்கின்றன. அவையும் பூமியில் விளையும் பலனில் பங்குபோட வருகின்றன. பூமியில் விளையும் பலனில் மனுஷருக்குப் பங்கிருப்பதுபோல மிருகங்களுக்கும் பங்கிருக்கிறது. தேசத்திலுள்ள சாதாரண ஜனங்கள் பூமியில் விளையும் பலனால் ஆதரிக்கப்படுவதுபோல, ராஜாவும் வயலின் பலனால் ஆதரிக்கப்படுகிறார். பூமி தன் பலனைக் கொடுக்கவில்லையென்றால், ராஜாவும் பட்டினியாயிருக்கவேண்டியது வரும்.

நிலத்தை உழுது பயிரிட்டு விவசாயம் பண்ணுகிறவர்கள், மனுபுத்திரருக்கு பேருதவியாக யிருக்கிறார்கள். விவசாயமில்லையென்றால் விளைச்சலில்லை. விளைச்சலில்லையென்றால் மனுஷருக்கு புசிக்க ஆகாரமில்லை. மனுஷருடைய ஜீவிய ஆதாரத்திற்கு தேவையான அடிப்படை காரியங்களை விவசாயிகள் சந்திக்கிறார்கள். எல்லா தேசத்திலுமே விவசாய வேலை முக்கியமான வேலையாகவும், அத்தியாவசியமான வேலையாகவும் இருக்கிறது.

கர்த்தர் நம்முடைய தேவைகளைச் சந்திக்கிறார். நம்முடைய அடிப்படைத் தேவைகளெல்லாம் சந்திக்கப்பட்டாலே, நாம் திருப்தியடைய வேண்டும். பணப்பிரியனாகவோ, செல்வப்பிரியனாகவோ இருக்கக்கூடாது. போதுமென்கிற பக்தியுடனே கூடிய தெய்வபக்தியே மிகுந்த ஆதாயம். ஒரு சிலர் ஐசுவரியத்தை தேடிக் குவிப்பார்கள். அதைப் பயன்படுத்த மாட்டார்கள். பணத்தைக் குவிப்பதுபோல, நிலங்களையும், வீடுகளையும், சொத்துக்களையும் வாங்கிக் குவிப்பார்கள். ஆனாலும் அவற்றில் எதையும் பயன்படுத்தமாட்டார்கள். அவையெல்லாம் சும்மாயிருக்கும். இதனால் அவர்களுக்கு ஒரு பிரயோஜனமும் வரப்போவதில்லை. பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடைவதில்லை. செல்வப்பிரியன் செல்வத்தினால் திருப்தியடைவதில்லை. நம்மிடத்தில் பயன்படுத்தாத பணம், நமக்கும் பிரயோஜனமாயிருக்காது, மற்றவர்களுக்கும் பிரயோஜனமாயிருக்காது. நம்மிடத்தில் பணமும் செல்வமும் அதிகரிக்கும்போது, மனக்கவலையும் மனபயமும் அதிகரிக்கிறது.

பொருள் பெருகினால் அதைத் தின்கிறவர்களும் பெருகுகிறார்கள். நம்முடைய தேவைக்கு அதிகமாக நாம் செல்வத்தைப் பெருக்கும்போது, அது நமக்கு ஆசீர்வாதமாயிராது. எவ்வளவுதான் ஒருவனிடத்தில் செல்வம் இருந்தாலும், அவன் தனக்கு இன்னும் அதிகமாய் செல்வம் வேண்டுமென்று ஆசைப்படுவான். இது மனுஷருடைய பொதுவான இயல்பு. மனுஷனுடைய ஆசை ஒருபோதும் திருப்தியடைவதில்லை. பாவமான காரியங்கள்மீது ஆசைப்படுகிறவர்களுக்கு, ஒருபோதும் நன்மை உண்டாகப்போவதில்லை.

ஒரு மனுஷனுக்கு மாம்சத்தின் இச்சைகளும், கண்களின் இச்சைகளும் கண்ணியாயிருக்கும். பொன்னும் வெள்ளியும் மாம்சத்தின் இச்சையைத் திருப்திப்படுத்தாது. ஒருவன் பசியாயிருக்கும்போது, அவனால் பொன்னையும் வெள்ளியையும் புசிக்கமுடியாது. வயிற்றில் பசியிருக்கும்போது, அந்தப் பசியைப் போக்க போஜனம் தேவை. பசிக்கிற வயிறுக்கு, பொன்னுக்கும் மண்ணுக்கும் வித்தியாசமில்லை. இரண்டும் ஒன்றுதான். பசிக்கிற வயிற்றுக்கு இரண்டுமே பிரயோஜனமற்றது.

நமக்கு உலகப்பிரகாரமான ஆஸ்திகள் எவ்வளவு இருந்தாலும், அது நம்முடைய ஆவிக்குரிய தாகத்தைத் தீர்த்து வைக்காது. பொருள் பெருகினால் அதைத் தின்கிறவர்களும் பெருகுகிறார்கள். அதிகமான போஜனம் இருக்கும்போது, அதிகமானோர் அதைப் புசிக்க வருவார்கள். ஒரு மனுஷனுக்கு ஐசுவரியமும் சொத்தும் அதிகரிக்கும்போது, அநேகர் அவனிடத்தில் ஒட்டிக்கொள்வார்கள். அவனுடைய சிநேகிதர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். நம்முடைய சொத்துக்கள் அதிகரிக்கும்போது நம்முடைய தேவைகளும் அதிகரிக்கும். நம்முடைய குடும்பத்திலுள்ளவர்கள் வசதியாயும், சொகுசாயும் வாழப்பழகிக்கொள்வார்கள். வசதி அதிகரிக்க அதிகரிக்க, தேவைகளும் அதிகரித்துக்கொண்டுதான் இருக்கும்.

நம்முடைய வீடு எவ்வளவு பெரியது என்பது முக்கியமல்ல. அதை எப்படி பராமரிக்கிறோம் என்பதுதான் முக்கியம். பராமரிக்காத பெரிய வீட்டைப் பார்க்கிலும், நன்றாய்ப் பராமரிக்கப்படுகிற சிறிய வீடே மிகவும் நல்லது. நம்முடைய வீட்டில் அநேகம் பேர் இருக்கும்போது, எல்லோரும் ஆளுக்கு ஒரு வேலையாகச் செய்து, வீட்டைப் பராமரிக்கவேண்டும். ஒவ்வொருவரும் தங்களுடைய வேலைகளை செய்துகொள்ளப் பழகவேண்டும். நம்மால் முடிந்த உதவிகளை நாம் பிறருக்குச் செய்யவேண்டும். அதில் நமக்கு ஒரு சந்தோஷம் கிடைக்கும்.

நாம் எப்போதுமே மற்றவர்களை எதிர்பார்த்து ஜீவிக்கக்கூடாது. நாம் பிறருடைய உதவிகளை அதிகமாய் எதிர்பார்க்கும்போது, நமக்கு வருத்தமும், வேதனையும், ஏமாற்றமுமே உண்டாகும். வாங்குவதைப் பார்க்கிலும் கொடுப்பதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உபதேசம் செய்திருக்கிறார்.

நாம் ஆசையாய்ச் சேர்த்த ஐசுவரியத்தை, மற்றவர்கள் அனுபவிக்கும்போது நமக்கு சந்தோஷம் இருக்காது. நம்முடைய ஐசுவரியத்தை நாம் பயன்படுத்தவில்லையென்றால், மற்றவர்கள் அதை அனுபவிப்பார்கள். ஐசுவரியத்தை உடையவர்கள் தங்கள் கண்களால் அதைக் காண்பார்கள். இது தவிர ஐசுவரியவான்களுக்கு வேறு நன்மை எதுவும் உண்டாகப்போவதில்லை. நம்முடைய ஐசுவரியம் பெருகும்போது அதை நிர்வாகம்பண்ணுவதும் பெருகுகிறது. நம்முடைய வேலைகளும் அதிகரிக்கிறது. அதோடு நம்முடைய பொறுப்புக்களும், கவலைகளும் கூடுகிறது.

நாம் நித்திரை செய்வது நம்முடைய சரீரத்திற்கு நல்லது. நாம் ஒரு வேலையும் செய்யாமல் நித்திரை பிரியராயிருக்கக்கூடாது. நன்றாய் உழைக்கவேண்டும். போதுமான அளவு நித்திரை பண்ணவேண்டும். ஒரு சிலருக்கு நித்திரை வராது. நித்திரை வந்தாலும் அது இன்பமாயிராது. வேலைசெய்கிறவனுக்கு நித்திரை இன்பமாயிருக்கும். போஜனத்தின் அடிப்படையில் நித்திரை வருவதில்லை. வேலை செய்கிறவன், கொஞ்சமாய்ப் புசித்தாலும், அதிகமாய்ப் புசித்தாலும், அவன் நித்திரை இன்பமாயிருக்கும்.

செல்வனுடைய பெருக்கோ அவனைத் தூங்கவெட்டாது. ஐசுவரியவானுக்கு ஆடம்பரமான படுக்கையிருக்கும். ஆனால் அவனுக்குத் தூக்கம் வராது. நமக்கு எல்லாம் இருந்தும், தூக்கமில்லையென்றால், நம்முடைய சரீரத்திற்கு ஆரோக்கியமில்லை. செல்வப்பிரியன் செல்வப்பெருக்கினால் திருப்தியடைவதில்லை. பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடைவதில்லை. ஆகையினால் இதுவும் மாயையே என்று சாலொமோன் சொல்லுகிறார்.

ஐசுவரியம்
பிர 5:13-17

பிர 5:13. சூரியனுக்குக் கீழே நான் கண்ட வேறொரு கொடிய தீங்குமுண்டு; அதாவது, ஐசுவரியமானது அதை உடையவர்களுக்கே கேடுண்டாகும்படி சேகரித்து வைக்கப்படுவதாம்.

பிர 5:14. அந்த ஐசுவரியம் விக்கினத்தால் அழிந்துபோகிறது; அவன் ஒரு புத்திரனைப் பெறுகிறான், அவன் கையில் யாதொன்றும் இல்லை.

பிர 5:15. தன் தாயின் கர்ப்பத்திலிருந்து நிர்வாணியாய் வந்தான்; வந்ததுபோலவே நிர்வாணியாய்த் திரும்பப் போவான்; அவன் தன் பிரயாசத்தினால் உண்டான பலனொன்றையும் தன் கையிலே எடுத்துக்கொண்டுபோவதில்லை.

பிர 5:16. அவன் வந்தபிரகாரமே போகிறான், இதுவும் கொடுமையான தீங்கு; அவன் காற்றுக்குப் பிரயாசப்பட்டதினால் அவனுக்கு லாபம் என்ன?

பிர 5:17. அவன் தன் நாட்களிலெல்லாம் இருளிலே புசித்து, மிகவும் சலித்து, நோயும் துன்பமும் அடைகிறான்.

ஒரு மனுஷனுக்கு ஐசுவரியம் அதிகமாயிருக்கும்போது, அது அவனுக்கு ஆசீர்வாதமாயிராமல், அதிக கேடாகயிருக்கும். சாலெமோன் சூரியனுக்குக் கீழே அநேகக் கொடிய தீங்குகளைக் காண்கிறார். அவற்றில் இதுவும் ஒன்று. ஐசுவரியமானது அதை உடையவர்களுக்கு கேடுண்டாகும்படி சேகரித்து வைக்கப்படுகிறது என்று சாலொமோன் சொல்லுகிறார். ஐசுவரியவான்களில் அநேகர், தங்களுடைய ஐசுவரியத்தை தீமையான வழிகளில் பயன்படுத்துகிறார்கள். தங்களுக்கும் மற்றவர்களுக்கும், நன்மை உண்டாகும்படி தங்கள் ஐசுவரியத்தைப் பயன்படுத்தாமல், அநேகருக்கு அதனால் கேடுண்டாகும்படி பயன்படுத்துகிறார்கள்.

ஐசுவரியம் தங்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கும் என்று நினைத்து அநேகர் ஐசுவரியத்தைச் சேமித்து வைக்கிறார்கள். அதற்காக கடினமாய் உழைக்கிறார்கள். ஒரு சிலர் பிறரை வஞ்சித்து ஐசுவரியத்தைச் சேமிக்கிறார்கள். ஆனால் அந்த ஐசுவரியமோ அவர்களுக்கு நன்மையை உண்டுபண்ணாமல், கேடு உண்டுபண்ணுகிறது. இந்த ஐசுவரியம் அவர்களுக்கு இல்லையென்றால், அவர்கள் இப்போதிருப்பதைவிட மிகவும் நன்றாயிருப்பார்கள். அவர்களுடைய கேட்டுக்கு, அவர்களுடைய ஐசுவரியமே காரணமாயிற்று.

ஐசுவரியவான்கள் தங்கள் மாம்சத்தின் இச்சைகளைப் பூர்த்தி செய்வதற்காக, தங்களிடத்திலுள்ள திரளான ஐசுவரியத்தை செலவுபண்ணுகிறார்கள். மற்றவர்களை ஒடுக்குவதற்கும், பிறருக்கு அநியாயமும், தீங்கும் செய்வதற்கும் தங்கள் ஐசுவரியத்தைப் பயன்படுத்துகிறார்கள். ஒருவனிடத்தில் ஐசுவரியம் அதிகரிக்கும்போது, அவனுடைய இருதயத்தில் பெருமையும், ஆணவமும், அகம்பாவமும் அதிகரிக்கிறது. இவை அனைத்தும் ஒரு மனுஷனை அழித்துப்போடும்.

ஐசுவரியவான்மீது அநேகர் பொறாமைப்படுவார்கள். அவனுடைய ஐசுவரியத்தை கொள்ளையிடுவதற்கு கொள்ளைக்காரர்கள் முயற்சி செய்வார்கள். ஒருவன் ஐசுவரியவானாகயில்லையென்றால், அவன்மீது யாரும் பொறாமைப்படமாட்டார்கள். அவனுடைய ஐசுவரியத்தைக் கொள்ளையிடவும் மாட்டார்கள். ஒரு மனுஷனுடைய ஐசுவரியம் விக்கினத்தால் அழிந்துபோகிறது. தன்னுடைய ஐசுவரியத்தைப் பாதுகாக்க வேண்டும் என்னும் கவலை ஐசுவரியவானுக்கு வந்துவிடுகிறது. தற்போது தனக்கிருக்கும் ஐசுவரியத்தின்மீது ஐசுவரியவான் திருப்தியடையமாட்டான். தனக்கு இன்னும் ஐசுவரியத்தைப் பெருக்கவேண்டுமென்று ஓய்வில்லாமல் உழைப்பான். அவனுக்கு ஐசுவரியம் சேரும். ஆனால் அவனுடைய சரீர ஆரோக்கியம் கெட்டுப்போகும். அவனுக்கு திரளான சம்பத்து இருக்கும். ஆனால் அதை அனுபவிப்பதற்கு அவனுக்கு ஜீவன் இருக்காது. சீக்கிரத்தில் மரித்துப்போவான். ஒரு சிலர் ஐசுவரியத்தைத் தேடியே அழிந்துபோகிறார்கள். ஐசுவரியத்தைச் சேர்ப்பது மாத்திரமே தங்கள் ஜீவியத்தின் இலக்கு என்று அதிகமாய்ப் பாடுபடுகிறார்கள்.

எல்லோரும் மரிப்பதுபோலவே, ஐசுவரியவானும் ஒரு நாளில் மரித்துப்போவான். நாம் மரிக்கும்போது நம்முடைய ஐசுவரியம் நம்மோடு கூடவராது. நாம் அதை இந்த உலகத்தில் விட்டுவிட்டுத்தான் போகவேண்டும். நாம் கஷ்டப்பட்டு சம்பாதித்த ஐசுவரியத்தை, யாரோ ஒருவர் அனுபவிக்கப்போகிறார்கள்.

ஐசுவரியவானுக்கு ஒரு புத்திரன் பிறக்கும்போது, அவனே தன் தகப்பனுடைய ஐசுவரியத்தை அனுபவிப்பான். அந்த ஐசுவரியம் அவனுக்கு நன்மை செய்யுமா, அல்லது தீமை செய்யுமா என்பது தகப்பனுக்குத் தெரியாது. தகப்பன் சேமித்து வைக்கும் ஐசுவரியத்தினால், அவனுடைய பிள்ளைகள் கெட்டுப்போவதற்கும் வாய்ப்புண்டு.

ஒவ்வொரு மனுஷனும் தன் தாயின் கர்ப்பத்திலிருந்து நிர்வாணியாகவே வருகிறான். மரிக்கும்போது, ஒவ்வொரு மனுஷனும், வந்ததுபோலவே, நிர்வாணியாய்த் திரும்பிப்போவான். தன் பிரயாசத்தினால் உண்டான பலன் ஒன்றையும், ஒருவனும் தன் கையிலே எடுத்துக்கொண்டு போவதில்லை. அவன் வந்த பிரகாரமே போகிறான். சாலொமோன் இப்படிப்பட்ட சம்பவத்தை ஆராய்ந்து பார்த்து, இதுவும் கொடுமையான தீங்கு என்று சொல்லுகிறார்.

காற்றிலே தூசி பறப்பதுபோல நாமும் இந்தப் பிரபஞ்சத்தில் அங்கும் இங்குமாக அலைந்துகொண்டிருக்கிறோம். பறக்கிற தூசி, ஏற்ற வேளை வரும்போது, மறுபடியும் பூமியின்மீது வந்து படியும். பூமியிலிருந்து புறப்பட்ட தூசி, பூமிக்கே திரும்பி வரும். அதுபோலவே இந்தப் பூமியிலிருந்து உண்டான மனுஷன், இந்தப் பூமிக்குத் திரும்பி வருவான். மண்ணான மனுஷன் மண்ணுக்குத் திரும்புவான். நம்முடைய சரீரம் மண்ணுக்குத் திரும்பினாலும், நம்முடைய ஆத்துமா பரலோகத்திற்குப் போகவேண்டும். அது சுத்திகரிக்கப்பட்டிருந்தால் மாத்திரமே, பரலோகத்திற்குப் போகும். நாம் இந்தப் பிரபஞ்சத்தில் திரளான ஐசுவரியத்தைச் சேமித்து வைத்திருந்தாலும், நம்முடைய ஆத்துமா அசுத்தமாயிருந்தால், நம்முடைய முடிவு பரிதாபமானதாகயிருக்கும். நம்முடைய ஐசுவரியத்தினால் நமக்கு இந்தப் பிரபஞ்சத்தில் சொற்பகாலம் சந்தோஷம் கிடைக்கலாம். ஆனால், நம்முடைய ஆத்துமாவுக்கு, நித்திய சந்தோஷம் உண்டாகவேண்டுமென்றால், நம்முடைய ஆத்துமா சுத்தமாயிருக்கவேண்டும்.

ஐசுவரியவான் காற்றுக்குப் பிரயாசப்படுகிறான் என்றும், அதனால் அவனுக்கு லாபமில்லையென்றும் சாலெமோன் சொல்லுகிறார். நம்மிடத்தில் திரளான ஐசுவரியம் இருந்தும், நம்முடைய ஆத்துமா பரிசுத்தமில்லாமல் அழிந்துபோனால், நம்முடைய நிலமை மிகவும் பரிதாபமாயிருக்கும். இது நமக்கு ஏற்பட்டிருக்கிற கொடிய தீங்கு. நாம் இந்தப் பிரபஞ்சத்தில் ஜீவிக்கும்போது, இந்தப் பிரபஞ்சமே நம்முடைய நித்திய வாசஸ்தலம் என்று நினைக்கக்கூடாது. ஒரு சிலர் இந்த உலகத்தோடு நன்றாய் ஒட்டிக்கொண்டிருப்பார்கள். பசை வைத்து ஒட்டியதுபோல அவர்கள் இந்த உலகக்காரியங்கள்மீது ஒட்டியிருப்பார்கள். உலகக்காரியங்களிலிருந்து அவர்களைப் பிரிக்கவே முடியாது. உலகசந்தோஷத்திற்கு ஐசுவரியமே ஆதாரம் என்று இவர்கள் தப்பிதமாய் நினைக்கிறார்கள்.

நம்முடைய கைகளின் பிரயாசத்தினால் நமக்கு ஐசுவரியம் உண்டாகலாம். நாம் மரிக்கும்போது இந்த ஐசுவரியத்தை நம்மோடுகூட எடுத்துக்கொண்டு போகமுடியாது. நாம் காற்றுக்குப் பிரயாசப்பட்டதுபோல, இந்தப் பிரபஞ்சத்தில் ஐசுவரியத்தைச் சேர்க்கப் பிரயாசப்படுகிறோம். இதனால் நமக்கு மெய்யான பலன் ஒன்றுமில்லை. ஐசுவரியம் போன்ற உலகக்காரியங்களெல்லாம், இம்மையிலேயே நின்றுவிடும். இவற்றில் எதுவும் மறுமைக்கு வராது. நாம் கர்த்தருக்காக இந்தப் பிரபஞ்சத்தில் ஊழியம் செய்தால், கர்த்தர் நமக்குக் கொடுக்கும் கிருபையும் ஆசீர்வாதமும், நமக்கு இம்மையிலும் நிலைத்திருக்கும். அது மறுமையிலும் நம்மோடு கூட வரும். ஆகையினால், விசுவாசிகளாகிய நாம் அழிந்துபோகிற உலகப்பொருளுக்காக அதிகமாய்ப் பிரயாசப்படாமல், நித்திய காலமாய் நிலைத்திருக்கிற ஆவிக்குரிய காரியங்களில் நாம் கவனம் செலுத்தவேண்டும்.

ஒருவனிடத்தில் அதிகமான ஐசுவரியம் இருக்கும்போது, அவனுடைய மனதில் சஞ்சலமும், குழப்பமும், பயமும், கவலையும் நிரம்பியிருக்கும். உலக சிநேகத்திலிருக்கிறவர்கள் உலகக் கவலைகளில் சிக்கிக்கொள்வார்கள்.

இந்தப் பிரபஞ்சத்தில் மனுஷன் பட்ட பிரயாசமெல்லாம், காற்றைப்போல, அவனை விட்டு விலகிப்போய்விடும். அவன் காற்றுக்குப் பிரயாசப்பட்டான். ஆனால் அந்தக் காற்றோ அவனோடுகூட எப்போதும் இருப்பதில்லை.

நம்முடைய ஐசுவரியத்தின்மீது நம்முடைய இருதயம் பதிந்திருக்குமானால், நம்முடைய மனதில் நிம்மதியிருக்காது. சந்தோஷம் இருக்காது. சமாதானம் இருக்காது. நமக்கு ஆறுதலான மரணமும் கிடைக்காது. நாம் இங்கு ஜீவிக்கும்போது ஆறுதலோடும், மனஅமைதியோடும் ஜீவிக்கவும் முடியாது. ஐசுவரியவான் இப்பிரபஞ்சத்தில் வாழ்கிற நாட்களிலெல்லாம், இருளிலே ஜீவிக்கிறான். இருளிலே புசித்து, மிகவும் சலித்து, நோயும் துன்பமும் அடைகிறான்.

தேவனே நமக்கு ஜீவியகாலத்தைக் கொடுத்திருக்கிறார். நம்முடைய காலங்கள் கர்த்தருடைய கரத்திலிருக்கிறது. நாம் உயிரோடிருக்கும்படி அருளிச்செய்த நாளெல்லாம், நாம் தேவனுக்குப் பிரியமானவர்களாகவும், பிரயோஜனமானவர்களாவும் ஜீவிக்க வேண்டும். ஆனால் ஐசுவரியத்தின்மீது தங்கள் இருதயத்தைப் பதிய வைத்திருக்கிறவர்களோ, தங்கள் ஜீவியகாலமெல்லாம் புசித்து, குடித்து, மிகவும் சலித்து, நோயும் துன்பமும் அடைகிறார்கள்.

இந்தப் பிரபஞ்சத்தில் நாம் படும் பிரயாசத்தின் பலனை நாம் அனுபவிக்கவேண்டும். இதுவே நமக்கு நலமும் உத்தமுமான காரியம். நாம் சேகரித்து வைத்த சம்பத்துக்களை, நமக்கு சம்பந்தமில்லாத மற்றவர்கள் அனுபவிப்பது நமக்கு சந்தோஷத்தைக் கொடுக்காது. நம்முடைய உழைப்பின் பலனை, மற்றவர்கள் அனுபவிப்பதைப் பார்க்கும்போது, நம்முடைய மனம் சலித்துப்போகும். நம்முடைய இருதயத்தில் துன்பம் உண்டாகும். சரீரத்திற்கு நோய் வரும். நம்முடைய ஜீவியம் ஆசீர்வாதமாயிராது.

"நீங்கள் அதிகாலையில் எழுந்து, நேரப்பட வேலையிலே தரித்து, வருத்தத்தின் அப்பத்தைச் சாப்பிடுகிறதும் விருதா; அவரே தமக்குப் பிரியமானவனுக்கு நித்திரை அளிக்கிறார்" (சங் 127:3). கர்த்தருடைய பிள்ளைகள் வருத்தத்தின் அப்பத்தைச் சாப்பிடக்கூடாது. சந்தோஷத்தின் அப்பத்தைச் சாப்பிடவேண்டும். அதை சாப்பிடும்போதும் நமக்கு சந்தோஷம் வேண்டும். சாப்பிட்ட பின்பும் நமக்கு திருப்தி வேண்டும். நம்முடைய வருத்தத்தின் அப்பத்தை, மற்றவர்கள் சந்தோஷமாய்ப் புசிப்பதை, நாம் பார்க்கும்போது, நமக்கு மனவேதனை உண்டாகும். நாம் கர்த்தருக்குப் பிரியமான பிள்ளைகளாகயிருக்கும்போது, கர்த்தர் கொடுக்கும் ஆசீர்வாதங்களெல்லாமே நமக்கு பிரயோஜனமுள்ளதாயிருக்கும். கர்த்தர் நம்முடைய கைகளின் பிரயாசங்களை ஆசீர்வதிப்பார். அவை நமக்கு ஆசீர்வாதமாயிருக்கும்.

தேவனுடைய அநுக்கிரகம் பிர 5:18-20

பிர 5:18. இதோ, உயிரோடிருக்கும்படி தேவன் அருளிச்செய்த நாளெல்லாம் மனுஷன் புசித்துக் குடித்து, சூரியனுக்குக் கீழே தான் படும் பிரயாசம் அனைத்தின் பலனையும் அநுபவிப்பதே நலமும் உத்தமுமான காரியமென்று நான் கண்டேன், இதுவே அவன் பங்கு.

பிர 5:19. தேவன் ஐசுவரியத்தையும் சம்பத்தையும் எவனுக்குக் கொடுத்திருக்கிறாரோ, அவன் அதிலே புசிக்கவும், தன் பங்கைப் பெறவும், தன் பிரயாசத்திலே மகிழ்ச்சியாயிருக்கவும் அவனுக்கு அதிகாரம் அளிப்பது தேவனுடைய அநுக்கிரகம்.

பிர 5:20. அவனுடைய இருதயத்திலே மகிழும்படி தேவன் அவனுக்கு அநுக்கிரகம் பண்ணுகிறபடியினால், அவன் தன் ஜீவனுள்ள நாட்களை அதிகமாய் நினையான்.

ஐசுவரியம் ஒரு மாயை. ஆனாலும் நாம் ஐசுவரியத்தை நல்ல வழிகளில் பயன்படுத்தும்போது, அது நமக்கு ஆசீர்வாதமாயிருக்கும். ஐசுவரியத்தை அதிகமாய் சேகரிக்கவேண்டும் என்று பேராசைப்பட்டு, அதை அதிகமாகச் சேகரித்து, அதைத் தவறான வழிகளில் பயன்படுத்தி, நமக்கு நாமே தீங்குகளை வரவழைத்துக்கொள்ளக்கூடாது. நம்முடைய ஐசுவரியத்தினால் நாம் தேவனை ஆராதிக்கவேண்டும். நம்முடைய ஐசுவரியம் தேவனுடைய ஊழியத்திற்குப் பயன்படவேண்டும். நம்முடைய ஐசுவரியத்தினால் நற்கிரியைகளைச் செய்யவேண்டும். நமக்கும், நம்முடைய குடும்பத்தாருக்கும், நன்மையும் ஆறுதலும் உண்டாக நம்முடைய ஐசுவரியங்களைப் பயன்படுத்தவேண்டும்.

சாலொமோன் ஐசுவரியத்தைப்பற்றி ஏற்கெனவே விரிவாகச் சொல்லியிருக்கிறார். "மனுஷன் புசித்துக் குடித்து, தன் பிரயாசத்தின் பலனை அநுபவிப்பதைப் பார்க்கிலும், அவனுக்கு ஒரு நன்மையும் இல்லை; இதுவும் தேவனுடைய கரத்திலிருந்து வருகிறது என்று நான் கண்டேன்" (பிர 2:24).

"உயர ஏறும் மனுஷனுடைய ஆவியையும், தாழ பூமியிலிறங்கும் மிருகங்களுடைய ஆவியையும் அறிகிறவன் யார்? இப்படியிருக்கிறபடியால், மனுஷன் தன் செய்கைகளில் மகிழ்ச்சியாயிருக்கும் நன்மையையேயல்லாமல், வேறே நன்மை இல்லையென்று கண்டேன்; இதுவே அவன் பங்கு; தனக்குப் பின்வரும் காரியங்களைக் காணும்படிக்கு அவனைத் திரும்பிவரப் பண்ணுகிறவன் யார்?" (பிர 3:21,22).

நம்முடைய ஜீவன் தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் ஈவு. நம்முடைய நாட்கள் தேவனுடைய கரத்திலிருக்கிறது. தேவனே நமக்கு, நம்முடைய ஜீவியநாட்களை நியமித்திருக்கிறார். "அவனுடைய நாட்கள் இம்மாத்திரம் என்று குறிக்கப்பட்டிருக்கையால், அவனுடைய மாதங்களின் தொகை உம்மிடத்தில் இருக்கிறது; அவன் கடந்துபோகக்கூடாத எல்லையை அவனுக்கு ஏற்படுத்தினீர்" (யோபு 14:5).

நாம் உயிரோடிருக்கும்படி, தேவன் நமக்கு அருளிச் செய்த நாளெல்லாம், நாம் தேவனுக்குப் பிரியமானவர்களாயும், பிரயோஜனமுள்ளவர்களாயும் ஜீவிக்க வேண்டும். கர்த்தருடைய ஊழியத்தை சந்தோஷமாய்ச் செய்யவேண்டும். நம்முடைய இருதயத்தில் சமாதானமும், சந்தோஷமும் நிரம்பியிருக்கவேண்டும். நாம் எந்த வேலையைச் செய்தாலும் அதை கர்த்தருக்காக செய்யவேண்டும். கர்த்தரை நம்பி நன்மை செய்யவேண்டும்.

நாம் புசிப்பதற்காக சம்பாதிக்கிறோம். சம்பாதிப்பதற்காக வேலை செய்கிறோம். நமக்கு எவ்வளவு தேவை என்பதும், என்ன தேவை என்பதும், நமக்கு நன்றாய்த் தெரியும். ஆகையினால் எல்லாவற்றிலும் நாம் நிதானமாயிருப்பது நமக்கு நல்லது. ஒரு சிலர் சிறிதும் ஓய்வெடுக்காமல், எப்போதும் வேலை செய்துகொண்டேயிருப்பார்கள். அப்படிப்பட்டவர்கள் தங்கள் பிரயாசத்தின் பலனை அனுபவிக்க முடியாமல், சரீரத்தில் நோய்வாய்ப்பட்டு, சீக்கிரத்தில் மரித்துப்போவார்கள். இவர்கள் தங்கள் வேலைகளுக்கும், தொழில்களுக்கும், வியாபாரங்களுக்கும் அடிமையாயிருந்து, கடினமாய் உழைப்பார்கள்.

நாம் தொழிலுக்கு அடிமையாயிருக்க க்கூடாது. நம்முடைய தொழில் நமக்கு அடிமையாயிருக்கவேண்டும். நம்முடைய திட்டத்தின் பிரகாரம் நாம் வேலை செய்யவேண்டும். ஒவ்வொரு மனுஷனும் சூரியனுக்குக்கு கீழே தான் படும் பிரயாசம் அனைத்தின் பலனையும் அனுபவிப்பதுதான், அவனுக்கு நலமும் உத்தமுமுமான காரியம். இதுவே அவனுடைய பங்கு. இந்த ஆசீர்வாதத்தைத் தவிர, அவனுடைய பிரயாசத்தின் பலனுக்கு வேறு ஆசீர்வாதம் எதுவும் வரப்போவதில்லை.

ஒவ்வொரு மனுஷனுக்கும் தேவன் ஆயுசுகாலத்தை நியமித்திருக்கிறார். தேவன் அருளிச்செய்த இந்த நாட்களில் மாத்திரம்தான் அவன் உயிரோடிருப்பான். அக்காலத்தில் அவன் புசித்து, குடித்து, தன்னுடைய கைகளின் பிரயாசத்தினால் உண்டான பலனை அனுபவிக்கவேண்டும். இதுவே அவனுக்கு நலமும் உத்தமமுமானது.

தேவன் நமக்கு ஐசுவரியத்தையும் சம்பத்தையும் கொடுத்திருக்கிறார். நாம் இதை சந்தோஷமாய், கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து பயன்படுத்தவேண்டும். அப்போதுதான் நமக்கு ஐசுவரியத்தையும் சம்பத்தையும் கொடுத்த கர்த்தரை மகிமைப்படுத்துவோம். நம்முடைய ஐசுவரியத்தினால் நமக்கு வேதனைகளும், கவலைகளும், பாடுகளும், பயங்களும் வந்தால், நமக்கு ஐசுவரியத்தைக் கொடுத்த தேவனை மகிமைப்படுத்தமாட்டோம்.

நம்மிடத்தில் ஐசுவரியமும் சம்பத்தும் எவ்வளவு இருந்தாலும், அது தேவனுடைய அநுக்கிரகம் என்று நாம் நினைக்கவேண்டும். கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் ஒருபோதும் தடைப்படாது. கர்த்தருடைய சித்தம் மாத்திரமே நிறைவேறும். தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற சம்பத்தில் புசிக்கவும், நம்முடைய பங்கைப் பெறவும், நம்முடைய பிரயாசத்தில் மகிழ்ச்சியாயிருக்கவும், தேவன் நமக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார். இதுவும் தேவனுடைய அநுக்கிரகம்.

தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற ஐசுவரியத்திற்கு, நாம் அவருக்குக் கணக்கு ஒப்புவிக்கவேண்டும். நாம் தேவனுடைய உக்கிராணக்காரர்களாக இருக்கிறோம். உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனாகவும், விவேகமுள்ளவனாகவும் இருப்பது மிகவும் அவசியம். தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் ஐசுவரியத்தை, அவருடைய நாமமகிமைக்காகவும், அவருடைய பிள்ளைகளின் பிரயோஜனத்திற்காகவும் பயன்படுத்தவேண்டும். நம்முடைய ஐசுவரியத்தினால் நமக்கும் பிறருக்கும் நன்மை உண்டாகவேண்டும். இதுவே நலமும் உத்தமுமான காரியம்.

தேவன் தம்முடைய தெய்வீக பராமரிப்பில் நமக்கு அநேக ஆசீர்வாதங்களைக் கொடுத்திருக்கிறார். தம்முடைய கிருபையை நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். அவருடைய கிருபைகளில், அவருடைய அநுக்கிரகமமே நமக்கு மெய்யான ஆசீர்வாதம். தேவனுடைய எல்லா ஈவுகளிலும், தேவனுடைய அநுக்கிரகமமே, மேலான ஈவு.

நம்முடைய இருதயத்தில் தேவனைப்பற்றிய சிந்தை நிரம்பியிருக்கவேண்டும். தேவனுடைய சித்தத்திற்கும், விருப்பத்திற்கும் நாம் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். நாம் தேவனுக்காக ஊழியம் செய்யும்போது, அது நமக்கு வேதனையாகவோ, பாடுநிரம்பியதாகவோ இராது. நம்முடைய இருதயத்தில் சோர்வும் உண்டாகாது. கர்த்தருடைய ஊழியம் நம்முடைய இருதயத்திற்கு மகிழ்ச்சியைத் தரும். நம்முடைய இருதயத்திலே மகிழும்படி தேவன் நமக்கு அநுக்கிரகம்பண்ணுவார்.

நம்முடைய இருதயத்தில் மெய்யான சந்தோஷம் இருக்கும்போது, நம்முடைய ஜீவியகாலத்தில் நாம் படும் பாடுகளையும், வேதனைகளையும் அதிகமாய் நினைக்கமாட்டோம். கர்த்தருடைய அநுகிரகத்தைப் பெற்றுக்கொள்கிறவர்கள், தங்கள் ஜீவனுள்ள நாட்களை அதிகமாய் நினையார். தங்களுடைய வருத்தங்களையும், கண்ணீர்களையும் அதிகமாய் நினைத்துப் பார்க்கமாட்டார்கள். தங்களுடைய வேலையின் நாட்களையும், துக்க நாட்களையும் அதிகமாய் நினைக்கமாட்டார்கள். தங்கள் வேதனைகளையெல்லாம் சீக்கிரத்திலே மறந்துவிடுவார்கள்.

எல்லோருடைய வாழ்க்கையிலும் மகிழ்ச்சியான சம்பவங்களும், துக்கமான சம்பவங்களும் நடைபெற்றிருக்கும். நாம் துக்கங்களையும், வேதனைகளையும் எப்போதும் நினைத்துக்கொண்டிருந்தால் நமக்கு சந்தோஷம் இருக்காது. நம்முடைய இருதயத்தில் மகிழ்ச்சியிருக்காது. வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்கள், தங்கள் பாரங்களையெல்லாம் கர்த்தருடைய சமுகத்தில் இறக்கி வைத்துவிடவேண்டும். தேவனே நம்முடைய இருதயத்திலே சந்தோஷத்தையும், சமாதானத்தையும் அநுக்கிரகம்பண்ணுகிறவர்.

நாம் சோம்பேறியாயிராமல் வேலை செய்யவேண்டும். வேலை செய்தாலும் ஓய்வெடுக்கவேண்டும். எல்லாவற்றிலும் நாம் நிதானமாயிருக்கவேண்டும். அப்போதுதான் நம்முடைய பிரயாசத்தில் நாம் மகிழ்ச்சியாயிருக்க முடியும். நம்முடைய பிரயாசத்தின் பலன் அனைத்தையும் நம்மால் பூரணமாய் அனுபவிக்க முடியும். சாலொமோன் மனுஷருடைய பாடுகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்துவிட்டு, முடிவில், "தேவன் ஐசுவரியத்தையும் சம்பத்தையும் எவனுக்குக் கொடுத்திருக்கிறாரோ, அவன் அதிலே புசிக்கவும், தன் பங்கைப் பெறவும், தன் பிரயாசத்திலே மகிழ்ச்சியாயிருக்கவும் அவனுக்கு அதிகாரம் அளிப்பது தேவனுடைய அநுக்கிரகம்" என்று சொல்லுகிறார்.

6 அதிகாரம்

உலகமும் மாயை, உலகத்திலுள்ள ஐசுவரியமும் மாயை. இந்த இரகசியத்தை சாலொமோன் ராஜா தன்னுடைய ஜீவியத்தில் கண்டுகொண்டார். ஞானமுள்ளவனிடத்தில் உள்ள ஐசுவரியம் பிரயோஜனமுள்ளதாயிருக்கும். அவனிடத்தில் கஞ்சத்தனம் இருக்காது. நன்மையான காரியங்களுக்கு அவன் தன்னிடத்திலுள்ள ஐசுவரியத்தைச் செலவுபண்ணுவான். பேராசைக்காரனிடத்திலுள்ள ஐசுவரியம் யாருக்கும் பிரயோஜனப்படாது.

மனுஷருக்குள்ளே பெரும்பாலும் நடந்துவருகிற பொதுவான சம்பவங்களை சாலொமோன் இந்த அதிகாரத்தில் சொல்லுகிறார். ஒரு சிலரிடத்தில் செல்வமும், சம்பத்தும், கனமும் அதிகமாயிருக்கும். தேவனே இவற்றை மனுஷனுக்குக் கொடுக்கிறார். சில மனுஷரிடத்தில் ஐசுவரியம் அதிகமாயிருக்கும். அதை அனுபவிப்பதற்கு பிள்ளைகளும் அவனுக்கு அதிகமாய் பிறந்திருப்பார்கள். அவனுடைய ஜீவியகாலமும் நீடித்திருக்கும் (பிர 6:1-3). ஆனாலும், அந்த மனுஷனிடத்தில் சந்தோஷம் இருக்காது. கர்த்தர் இவனுக்கு செல்வத்தைக் கொடுத்திருப்பார். ஆனால் அதை அனுபவிக்கும் சக்தியை அவனுக்குக் கொடுக்காதிருப்பார்.

ஒரு சிலருக்கு எல்லா வசதிகளும் இருக்கும். ஆனால் அதை அனுபவிக்கும் சரீர ஆரோக்கியம் இருக்காது. அவனுக்குத் திருப்தி உண்டாகாது. அவன் மரித்த பின்பு அவனை அடக்கம்பண்ணுவதற்குக்கூட பிரேதக் கல்லறையிருக்காது. இப்படிப்பட்ட மனுஷன் பரிதாபமானவன். இவனைவிட கருவழிந்த பிண்டமே வாசி என்று சாலொமோன் சொல்லுகிறார்.

கருவழிந்த பிண்டம் இன்னும் சூரியனைக் காணவில்லை, அது ஒன்றையும் அறியவுமில்லை. அது மாயையாய்த் தோன்றி இருளில் மறைந்துவிடுகிறது (பிர 6:4,5). உலகப்பொருள்மீது உண்டாகிற பேராசை ஒருபோதும் ஒழிந்துபோவதில்லை. அது மனுஷருடைய இருதயத்தில் எப்போதும் கிரியை நடப்பிக்கிறது (பிர 6:6). நம்முடைய ஐசுவரியம் நம்முடைய வயிற்றுக்குப் போஜனத்தைக் கொடுக்கும். அது நம்முடைய மனதிற்கு ஒருபோதும் சந்தோஷத்தையும், சமாதானத்தையும், திருப்தியையும் கொடுக்காது. (பிர 6:7,8). பேராசைக்காரர்களிடத்தில் அநேக ஆசைகள் இருக்கும். அவை அவர்களை வருத்தும் (பிர 6:9).

மனுஷனுக்கு எவ்வளவுதான் ஐசுவரியம் வந்து சேர்ந்தாலும், அவன் எப்போதுமே மனுஷனாகத்தான் இருப்பான். ஐசுவரியம் எந்த மனுஷனையும் தேவதூதனாக்காது (பிர 6:10). மனுஷருக்கு மாயையினால் ஒரு பிரயோஜனமும் உண்டாகாது. மாயை நிழலைப்போன்றது. மனுஷன் மரித்துப்போன பின்பு, அவனுடைய ஐசுவரியம் அவனுக்கு எவ்விதத்திலும் உதவி செய்யாது.

செல்வமும் சம்பத்தும் கனமும் பிர 6:1-3

பிர 6:1. சூரியனுக்குக் கீழே நான் கண்டவேறொரு தீங்குமுண்டு; அது மனுஷருக்குள்ளே பெரும்பாலும் நடந்துவருகிறது.

பிர 6:2. அதாவது, ஒருவனுக்கு தேவன் செல்வத்தையும் சம்பத்தையும் கனத்தையும் கொடுக்கிறார்; அவன் என்ன இச்சித்தாலும் அதெல்லாம் அவனுக்குக் குறைவில்லாமல் கிடைக்கும்; ஆனாலும் அவைகளை அநுபவிக்கும் சக்தியை தேவன் அவனுக்குக் கொடுக்கவில்லை; அந்நிய மனுஷன் அதை அநுபவிக்கிறான்; இதுவும் மாயையும், கொடிய நோயுமானது.

பிர 6:3. ஒருவன் நூறு பிள்ளைகளைப் பெற்று, அநேகம் வருஷம் ஜீவித்து, தீர்க்காயுசை அடைந்திருந்தாலும், அவன் ஆத்துமா அந்தச் செல்வத்தால் திருப்தியடையாமலும், அவனுக்குப் பிரேதக்கல்லறை முதலாய் இல்லாமலும் போகுமானால், அவனைப்பார்க்கிலும் கருவழிந்த பிண்டம் வாசி என்கிறேன்.

நம்மிடத்திலுள்ள ஐசுவரியத்தை நாம் நன்மையான காரியங்களுக்குப் பயன்படுத்தவேண்டும். நம்மிடத்தில் ஐசுவரியம் இருந்தும், அதை நல்ல காரியத்திற்குப் பயன்படுத்தவில்லையென்றால், அந்த ஐசுவரியத்தினால் யாருக்கும் நன்மை உண்டாகாது. பயன்படுத்தப்படாத ஐசுவரியம் நன்மை செய்வதற்குப் பதிலாக தீமை செய்யும். சாலொமோன் சூரியனுக்குக் கீழே இந்தத் தீங்கைக் காண்கிறார். இது மனுஷருக்குள்ளே பெரும்பாலும் நடந்துவருகிறது என்றும் சொல்லுகிறார்.

சாலொமோன் சமஸ்த இஸ்ரவேல் தேசத்திற்கும் ராஜாவாயிருக்கிறார். ஜனங்கள் மத்தியிலே காணப்படுகிற எல்லாத் தீங்குகளையும் கவனமாய்ப் பார்க்கிறார். மனுஷரில் சிலர் ஊதாறித்தனமாகச் செலவு செய்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் உருப்படாமல் போய்விடுகிறார்கள். வேறு சிலரோ கஞ்சத்தனமாகயிருக்கிறார்கள். தங்களிடத்தில் பணம் இருந்தாலும், அதை எதற்கும் செலவு பண்ணமாட்டார்கள். சாலொமோன் இந்தத் தீங்குகளையெல்லாம் பார்க்கிறார்.

மனுஷனுடைய சுபாவத்தில் தீயகுணங்கள் இயல்பாகவே இருக்கிறது. ஊதாறித்தனமும் கஞ்சத்தனமும் மனுஷனுடைய இரத்தத்தில் கலந்திருக்கிறது. செல்வம் செல்லவேண்டும். அது ஒரே இடத்தில் தங்கியிருக்கக்கூடாது. கெட்டிக்கிடக்கிற தண்ணீர் கெட்டுப்போகும். அதுபோலவே செலவு பண்ணப்படாமல், ஓரிடத்தில் நீண்டகாலமாய் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் பணமும் கெட்டுப்போகும். யாருக்கும் பயன்படாமல், எந்த நல்ல காரியத்திற்கும் செலவு பண்ணப்படாமலிருக்கிற செல்வத்தினால் தீமைகள் உண்டாகும்.

சாலொமோனுக்கு செல்வத்தைப்பற்றி நன்றாய்த் தெரியும். அவருடைய காலத்தில் அவர் மிகப்பெரிய ஐசுவரியவானாயிருந்தார். ஆனாலும் ஒரு சிலர் தங்களிடத்திலுள்ள செல்வத்தை, எந்த நற்கிரியைகளுக்கும் பயன்படுத்தாமல், கஞ்சத்தனமாகயிருந்து, அவற்றை குவித்து வைப்பதை சாலொமோன் பார்க்கிறார். மனுஷருடைய கஞ்சத்தனத்திற்கு விரோதமாக சாலொமோன் கருமிகளைக் கடிந்துகொள்கிறார்.

நம்மிடத்திலுள்ள ஐசுவரியம், நம்முடைய சுயபலத்தினாலோ, சுயபராமக்கிரமத்தினாலோ, சுயமுயற்சியினாலோ நமக்கு வரவில்லை. தேவனே நமக்கு செல்வத்தையும், சம்பத்தையும், கனத்தையும் கொடுக்கிறார். இவையெல்லாம் தேவனுடைய ஈவுகள். தேவனுடைய தெய்வீக பராமரிப்பினால் இவை நமக்கு ஈவாகக் கிடைத்திருக்கிறது. தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற ஈவுகளை, அவருடைய நாமமகிமைக்காகவும், அவருடைய பிள்ளைகளின் பிரயோஜனத்திற்காகவும் பயன்படுத்தவேண்டும்.

கர்த்தரே நமக்கு செல்வத்தையும், சம்பத்தையும், கனத்தையும் கொடுத்திருக்கிறார். ஆனாலும் நம்மில் அநேகர், கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற ஆசீர்வாதங்களை, நன்மையான காரியங்களுக்குப் பயன்படுத்துவதில்லை. நாம் என்ன இச்சித்தாலும் அதெல்லாம் நமக்கு குறைவில்லாமல் கிடைக்கிறது. தேவன் நம்மை தாராளமாய் ஆசீர்வதித்திருக்கிறார். நமக்கு செல்வத்தின்மீது ஆசையிருக்கிறது. ஆனால் நம்முடைய ஆத்துமாவைப்பற்றி நமக்கு அக்கறையில்லை. நம்முடைய ஆத்துமா, நம்மிடத்திலுள்ள செல்வத்தினால் ஒருபோதும் திருப்தியடைவதில்லை.

தேவனிடமிருந்து நமக்கு செல்வம் வருகிறது. அது நமக்குத் தேவை தான். அதைவிட தேவனுடைய கிருபை நமக்கு அதிகமாய்த் தேவைப்படுகிறது. நாம் செல்வத்தைவிட தேவகிருபையையே அதிகமாய் நாடவேண்டும். நாம் இச்சித்ததெல்லாம் நமக்கு கிடைத்தாலும், நமக்குத் திருப்தி உண்டாகப்போவதில்லை. தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற ஈவுகளை நாம் அனுபவிக்கவேண்டுமென்றால், தேவனுடைய கிருபை நமக்கு வேண்டும். அவைகளை அனுபவிக்கும் சக்தியை தேவனே நமக்குக் கொடுக்கவேண்டும்.

ஒரு சிலருக்கு பிள்ளை குட்டிகள் ஏராளமாயிருக்கும். குடும்பம் நிறைய பிள்ளைகள் இருப்பார்கள். ஒரு சிலர் நூறு பிள்ளைகளைப் பெற்று, அநேக வருஷம் ஜீவிப்பார்கள். அவர்களுடைய பெயர்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும். வீடுகள் விசாலமாய்க் கட்டப்பட்டிருக்கும். குடும்பத்தில் ஒரு குறையும் இராது. அவர்களுக்கு சரீர வியாதியும் இருக்காது. அநேக வருஷம் ஜீவித்து தீர்க்காயுசை அடைந்திருப்பார்கள். இவர்களிடத்தில் உலகப்பிரகாரமான ஆசீர்வாதம் இருக்கும். ஆனால் ஆவிக்குரிய ஆசீர்வாதம் இருக்காது. அவர்களுடைய சரீரத்திற்கு சந்தோஷம் கிடைக்கும். ஆனால் அவர்களுடைய ஆத்துமாவுக்கு சந்தோஷம் கிடைக்காது. ஒருவன் ஐசுவரியவானாயிருந்தாலும், அவனுடைய ஆத்துமா, அவனுடைய ஐசுவரியத்தினால் திருப்தியடையப் போவதில்லை.

தேவனே நமக்கு செல்வத்தையும் சம்பத்தையும் கனத்தையும் தாராளமாய்க் கொடுத்திருக்கிறார். நம்மை அவர் அதிகமாய் ஆசீர்வதித்திருக்கிறார். கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிற நாம், கர்த்தருக்கு நன்றி சொல்லவேண்டும். நம்முடைய சரீரத்தில் இருதயம் ஒரு சிறிய அவயவம். நமக்கு திரளான ஆசீர்வாதங்களைக் கொடுத்திருக்கிற கர்த்தருக்கு, நம்முடைய சிறிய இருதயத்தை காணிக்கையாய்க் கொடுக்கவேண்டும். நம்முடைய இருதயத்தில் தேவனுடைய சித்தமும், அவருடைய விருப்பமும் நிரம்பியிருக்கவேண்டும். ஆனால் மனுஷனோ தன்னுடைய இருதயத்தில் பேராசையை நிரப்பி வைத்திருக்கிறான். இதனால் அவனுடைய இருதயத்திற்கு ஆறுதல் கிடைப்பதில்லை.

மனுஷனுக்கு ஆகாரம் இருக்கும். ஆனால் அதைப் புசிக்கும் ஆரோக்கியம் இருக்காது. கர்த்தர் அநேக ஆசீர்வாதங்களை மனுஷருக்குக் கொடுத்தாலும், அவைகளை அனுபவிக்கும் சக்தியை அவர்களுக்குக் கொடுப்பதில்லை. தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற ஆசீர்வாதங்களை, அவருடைய நாமமகிமைக்காக பயன்படுத்தவேண்டும். கர்த்தருடைய சித்தமும், விருப்பமும், நம்முடைய சித்தமாயும் விருப்பமாயும் இருக்கவேண்டும். நாம் கர்த்தருக்காக ஜீவிக்கவேண்டும். அப்போதுதான் கர்த்தருடைய ஆசீர்வாதம் நமக்குள்ளே தங்கியிருக்கும். கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற ஆசீர்வாதங்களை நம்மால் அனுபவிக்க முடியும். தேவனிடமிருந்தே ஆசீர்வாதமும் வருகிறது, அதை அனுபவிக்கும் சக்தியும் வருகிறது.

தேவன் ஒரு மனுஷனுக்கு செல்வத்தையும், சம்பத்தையும், கனத்தையும் கொடுக்கும்போது, அதை அவனால் அனுபவிக்க முடியவில்லையென்றால், அவனுடைய நிலமை மிகவும் பரிதாபமாயிருக்கும். அந்த மனுஷனுக்கு உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்கள் அதிகமாயிருந்தாலும், அதை அனுபவிக்கும் சக்தி அவனுக்கு இல்லையென்றால் அவனுடைய நிலமை கேடுள்ளதாயிருக்கும். அவனுடைய செல்வத்தையும், சம்பத்தையும் அந்நிய மனுஷன் அனுபவிப்பான். சாலொமோன் இதைப் பார்த்து, "இதுவும் மாயையும், கொடிய நோயுமானது" என்று சொல்லுகிறார்.

நமக்கு கர்த்தரே ஆசீர்வாதத்தைக் கொடுக்கிறார். அதை நாம் நல்லமுறையில் பயன்படுத்தவேண்டுமென்று எதிர்பார்க்கிறார். கர்த்தர் கொடுக்கும் ஆசீர்வாதங்களை, நாம் அவருடைய நாமத்திற்கு மகிமையாகப் பயன்படுத்தவில்லையென்றால், அவைகளை அனுபவிக்கும் சக்திகளை தேவன் நமக்குக் கொடுக்கமாட்டார். நம்மால் ஒரு காரியத்தை அனுபவிக்க முடியவில்லையென்றால், அது நமக்கு இருந்தும் ஒன்றுதான், இல்லாமலிருப்பதும் ஒன்றுதான். இது நமக்கு மாயையாகயிருக்கும். இது நமக்கு கொடிய நோயாகயிருக்கும். நம்முடைய இருதயத்தின் மாறுபாடுகளினால் நமக்கு இப்படிப்பட்ட கொடிய நோய் வருகிறது.

மனுஷன் இந்தப் பிரபஞ்சத்தில் ஜீவிக்கிற காலம் வரையிலும் அநேகக் காரியங்களுக்கு ஆசைப்படுகிறான். தனக்கு செல்வமும், சம்பத்தும், கனமும் வேண்டுமென்று விரும்புகிறான். தனக்கு ஏராளமான பிள்ளைகள் பிறக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறான். அநேகம் வருஷம் ஜீவித்து, தீர்க்காயுசைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று ஆசைப்படுகிறான். ஒருசிலருக்கு, தாங்கள் இச்சித்ததெல்லாம், குறைவில்லாமல் கிடைத்திருக்கும். ஆனாலும், அவர்களுடைய ஆத்துமாவில் திருப்தியிருக்காது. அவனுக்கு பிரேதக்கல்லறைகூட இருக்காது. அவன் மரித்த பின்பு அவனுக்கு நல்லடக்கம் கூட நடைபெறாது. செத்த மிருகங்கள் மண்ணிலே புதைக்கப்படுவதுபோல இவனுடைய சரீரம் புதைக்கப்படும். இப்படிப்பட்டவனை விட கருவழிந்த பிண்டம் வாசி என்று சாலொமோன் சொல்லுகிறார்.

கருவழிந்த பிண்டம்
பிர 6:4-6

பிர 6:4. அது மாயையாய்த் தோன்றி இருளிலே மறைந்துபோய்விடுகிறது; அதின்பேர் அந்தகாரத்தால் மூடப்படும்.

பிர 6:5. அது சூரியனைக் கண்டதுமில்லை, ஒன்றையும் அறிந்ததுமில்லை; அவனுக்கு இல்லாத அமைச்சல் அதற்கு உண்டு.

பிர 6:6. அவன் இரண்டாயிரம் வருஷம் பிழைத்திருந்தாலும் ஒரு நன்மையையும் காண்பதில்லை; எல்லாரும் ஒரே இடத்துக்குப் போகிறார்கள் அல்லவா?

கருவழிந்த பிண்டம் தாயின் கர்ப்பத்திலேயே அழிந்துபோகிறது. சாலொமோன் பல சந்தர்ப்பங்களில் கருவழிந்த பிண்டத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறார். தாயின் கர்ப்பத்தில் கரு வளர்ச்சி பெறவேண்டும். அது ஜீவனோடிருக்கவேண்டும். ஏற்ற வேளை வரும்போது தாய்க்கு சுகப்பிரசவம் நேரிட்டு, தாயும் சேயும் சுகமாகப் பிரிக்கப்படவேண்டும். இருவருமே ஆரோக்கியமாயிருக்கவேண்டும். இதுவே அனைவருக்கும் சந்தோஷம். கருவழிந்த பிண்டம் துக்கத்திற்கு அடையாளம். கரு அழியும்போது தாய்க்கு சோகமும், துக்கமும், வேதனையும் உண்டாகும்.

கருவழிந்த பிண்டம் மாயையாய்த் தோன்றுகிறது. அது இருளிலே மறைந்து போய்விடுகிறது. அது கருவிலிருப்பதுகூட நமக்குத் தெரிவதில்லை. அதைப்பற்றி யாரும் கவனிப்பதுமில்லை. அதற்கு பெயர் கொடுப்படுவதில்லை. கரு உற்பத்தியாவதற்கு முன்பாகவே, அதற்கு பெயர் கொடுத்தாலும், அந்தப் பெயர் நிலைத்து நிற்பதில்லை. அதின் பெயர் அந்தகாரத்தால் மூடப்படும்.

கருவழிந்த பிண்டம் சூரியனைக் கண்டதுமில்லை. அது ஒன்றையும் அறிந்ததுமில்லை. அது தாயின் கர்ப்பத்தில் இருளிலிருக்கும். கர்ப்பத்திலிருந்து வெளியேறியவுடனேயே, மண்ணுக்குள் புதைக்கப்படும். அதற்கு சூரியவெளிச்சத்தைக் காண்பதற்கு வாய்ப்பு இருக்காது. அதற்கு ஒன்றுமே தெரியாது. கருவழிந்த பிண்டம் தன் தாயின் வயிற்றில் எத்தனை வருஷம் இருந்தாலும், அது ஒரு நன்மையும் காண்பதில்லை.

இந்தப் பிரபஞ்சத்தில் பிறந்து, வளர்ந்து மரித்துப்போகிறவர்கள், தங்கள் கல்லறைக்குப் போவதுபோலவே, கருவழிந்த பிண்டங்களும் தங்கள் கல்லறைகளுக்கு போகும். எல்லாரும் ஒரே இடத்திற்குத்தான் போகிறார்கள். ஆனாலும், கருவழிந்த பிண்டம், இந்தப் பூமியில் ஒரு நன்மையும் காணாமலேயே கல்லரைக்குப் போகிறது.

மனுஷன் படும் பிரயாசம்
பிர 6:7

பிர 6:7. மனுஷன் படும் பிரயாசமெல்லாம் அவன் வாய்க்காகத்தானே; அவன் மனதுக்கோ திருப்தியில்லை.

ஒரு சிலர் உலகப்பிரகாரமான ஐசுவரியங்களை தங்களுக்கு அதிகமாய்ச் சேமித்து வைக்கிறார்கள். அதன் மூலமாய் தங்களுக்கு அதிகமான சந்தோஷம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறார்கள். ஆனால் ஐசுவரியம் யாருக்கும் மெய்யான சந்தோஷத்தைக் கொடுக்காது. ஐசுவரியமும் ஒரு மாயை என்று சாலொமோன் சொல்லுகிறார்.

ஒரு சிலர் ஐசுவரியத்தைச் சேர்ப்பதற்காக கடினமாய் பிரயாசப்படுகிறார்கள். இந்த உலகத்தில் அதிகமாய் உழைக்கிறார்கள். அவர்களுடைய உழைப்பை அவர்களால் நிறுத்த முடியாது. ஓய்வில்லாமல் உழைக்கிறார்கள். மனுஷன் படும் பிரயாசமெல்லாம் அவன் வாய்க்காகத்தான் என்று சாலொமோன் சொல்லுகிறார். அவன் எவ்வளவுதான் பிரயாசப்பட்டாலும், அவனுடைய மனதிற்கு திருப்தியில்லாமல் போகிறது. அவனுடைய உழைப்பின் ஊதியம், அவனுடைய போஜனத்தில் செலவழிந்து போகிறது.

நம்முடைய வயிற்றுக்குப் போஜனம் தேவை. நம்மால் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மாத்திரமே புசிக்க முடியும். நம்மிடத்தில் எவ்வளவு போஜனம் இருந்தாலும், ஒரு அளவுக்குமேல் நம்மால் புசிக்க முடியாது. புசிப்பதற்கு நமக்கு போஜனமும் வேண்டும். நாம் புசிக்கும் போஜனம் நமக்குள் ஜீரணிக்கவும் வேண்டும். நம்முடைய சரீரத்தில் புசிப்பதற்கு ஆரோக்கியமும் வேண்டும். இவையெல்லாம் சரியாகயிருந்தால்தான், நம்முடைய ஜீவியம் பிரச்சனையில்லாமலிருக்கும்.

ஒரு சிலர் அதிகமாக ஐசுவரியத்தைச் சேமிக்க வேண்டும் என்று பேராசைப்படுகிறார்கள். இதற்காக அதிகமாய் உழைக்கிறார்கள். அவர்களுடைய உழைப்பின் ஊதியமெல்லாம், அவர்களுடைய வாயினால் போஜனமாகப் புசிக்கப்படுகிறது. நாம் எவ்வளவுதான் புசித்தாலும் நமக்கு திருப்தி உண்டாகப்போவதில்லை. சீக்கிரத்தில் பசியுண்டாகும். பசிக்கும்போது புசிக்கவேண்டும். மனுஷன் பிரயாசப்படுவதும், புசிப்பதும், மாறி மாறி நடைபெறுகிறது. புசிப்பதினால் மனுஷனுடைய பசியடங்கும். ஆனால் போஜனத்தால் நம்முடைய ஆத்துமாவுக்கு பிரயோஜனமில்லை. நம்முடைய ஆத்தும தாகத்தை போஜனம் தீர்த்து வைக்காது. நாம் எவ்வளவுதான் புசித்தாலும், நம்முடைய வயிற்றுக்குத் திருப்தி உண்டாகுமேயல்லாமல், நம்முடைய மனதிற்கு ஒருபோதும் திருப்தி உண்டாகப்போவதில்லை.

ஏழை
பிர 6:8

பிர 6:8. இப்படியிருக்க, மூடனைப்பார்க்கிலும் ஞானிக்கு உண்டாகும் மேன்மை என்ன? ஜீவனுள்ளோருக்கு முன்பாக நடந்துகொள்ளும்படி அறிந்த ஏழைக்கும் உண்டாகும் மேன்மை என்ன?

ஒரு சிலர் ஞானமில்லாத மூடராயிருப்பார்கள். அவர்களிடத்திலும் உலகப்பிரகாரமான ஐசுவரியம் அதிகமாயிருக்கும். அவர்கள் தங்கள் ஐசுவரியத்தைச் சந்தோஷமாய் அனுபவிப்பார்கள். ஞானிகள் சந்தோஷமாயிருப்பதைப்போல மூடனும் சந்தோஷமாயிருப்பான். இப்படியிருக்கும்போது மூடனைப் பார்க்கிலும் ஞானிக்கு ஒரு மேன்மையும் உண்டாகப்போவதில்லை.

ஞானியைப்போலவே மூடனும் நல்ல வஸ்திரத்தை அணிந்திருப்பான். சம்பிரமமாய் ஜீவிப்பான். நேர்த்தியான போஜனங்களைப் புசிப்பான். சமுதாயத்தில் ஞானி நன்றாய்த் தோற்றமளிப்பதுபோல, மூடனும் நன்றாய்த் தோற்றமளிப்பான். உலகப்பிரகாரமான தோற்றத்தில் ஞானிக்கும் மூடனுக்கும் வித்தியாசமிருக்காது. ஆனாலும் மூடனுடைய மனதும் ஞானியின் மனதும் ஒன்றுபோலிருப்பதில்லை. ஞானியின் மனது ஞானத்தால் நிரம்பியிருக்கும். ஞானி எல்லாவற்றையும் நிதானமாய் ஆராய்ந்து பார்ப்பான்.

இந்தப் பிரபஞ்சத்தில் ஐசுவரியவான்களைப்போல ஏழைகளும் வேலை செய்கிறார்கள். வியாபாரம் பண்ணுகிறார்கள். தொழில்களை நேர்த்தியாய்ச் செய்கிறார்கள். நன்றாக நிர்வாகம்பண்ணுகிறார்கள். அவர்களும் தங்களால் முடிந்த வரையில் உலகப்பிரகாரமான ஐசுவரியங்களைச் சம்பாதிக்கிறார்கள். ஐசுவரியவானுக்கு அநேகக் கவலைகள் இருக்கும். ஏழைக்கு குறைவான கவலைகளே இருக்கும்.

ஐசுவரியவானைப் பார்த்து அநேகர் பொறாமைப்படுவார்கள். ஏழையைப் பார்த்து ஒருவனும் பொறாமைப்படப்போவதில்லை. ஐசுவரியவானை அவனுடைய அயலகத்தார் மதிப்பதுபோல, ஏழையையும் அவனுடைய உற்றார் உறவினர்கள் மதிக்கிறார்கள். ஏழைக்கு மனுஷநேயம் அதிகமாயிருக்கும். மனுஷர்மீது பிரியமாயிருப்பதற்கு நேரமும் இருக்கும். ஐசுவரியவானுக்கோ, ஐசுவரியத்தைச் சம்பாதிப்பதற்கே நேரம் போதாது. ஜீவனுள்ளோருக்கு முன்பாக எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதை ஏழைகள் நன்றாய் அறிந்திருப்பார்கள். இவர்கள் ஏழைகளாகயிருந்தாலும், ஐசுவரியவான்களைப்போல, சமுதாயத்தில் ஒழுக்கமாயும், கண்ணியமாயும் ஜீவிப்பார்கள். உலகப்பிரகாரமான ஜீவியத்தில் ஏழைக்கும் ஐசுவரியவானுக்கும் அதிகமான வித்தியாசம் இருப்பதில்லை.

ஆசை
பிர 6:9

பிர 6:9. ஆசையானது அலைந்துதேடுகிறதைப் பார்க்கிலும் கண் கண்டதே நலம்; இதுவும் மாயையும், மனதைச் சஞ்சலப்படுத்துகிறதுமாயிருக்கிறது.

நம்மிடத்திலுள்ளதை நாம் சந்தோஷமாய் அனுபவிக்கவேண்டும். நம்மிடத்தில் இல்லாததற்காக ஏங்கிக்கொண்டிருக்கக்கூடாது. நம்மிடத்தில் இல்லாத அநேக பொருட்கள் பிறரிடத்தில் இருக்கலாம். நம்மிடத்தில் அவை இல்லையே என்று நினைத்து சோர்ந்துபோய்விடக்கூடாது. இல்லாத பொருள்மீது அதிகமாய் ஆசைப்படவும் கூடாது. பேராசை வரும்போது மனதிலுள்ள நிம்மதி போய்விடும்.

ஒரு சிலர் ஆசைப்பட்டு பல பொருட்களை அலைந்து தேடுவார்கள். ஒன்றையும் கண்டுபிடிக்கமாட்டார்கள். இப்படிப்பட்ட பிரயாசத்தினால் நமக்கு ஒரு நன்மையும் உண்டாகப்போவதில்லை. இல்லாத பொருளைவிட, நம்முடைய கண்களால் காணும் பொருளே நமக்கு நல்லது. கண் கண்டதே நலம் என்று சாலொமோன் சொல்லுகிறார்.

நம்மிடத்திலுள்ள பொருளுக்காக நாம் சந்தோஷப்படவேண்டும். மனத்திருப்தியோடிருக்க வேண்டும். நம்மிடத்தில் சம்பத்து கொஞ்சமாயிருந்தாலும், சந்தோஷமும், சமாதானமும், திருப்தியும் அதிகமாயிருக்கவேண்டும். பேராசைப்படுகிறவனுக்கு மனநிம்மதியிருக்காது. போதுமென்கிற மனதுள்ளவனுக்கோ மனதிருப்தியிருக்கும். பேராசையைவிட மனதிருப்தியே மேன்மையானது. நம்முடைய கண்கள் காணும் பொருட்கள்மீது கவனம் வைத்து, அவற்றில் சந்தோஷப்படவேண்டும். இல்லாத பொருட்கள்மீது ஆசைப்பட்டு, அதை அலைந்து தேடி, நம்முடைய மனநிம்மதியை கெடுத்துப் போடக்கூடாது.

நாம் உலகப்பொருட்கள்மீது பிரியம் வைக்காமல், கர்த்தர்மீது பிரியம் வைக்கவேண்டும். நம்முடைய கண்களை உலகத்தின்மீது பதித்து வைக்காமல், கர்த்தர்மீதே பதித்து வைக்கவேண்டும். உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகை. நாம் கர்த்தரை சார்ந்துகொள்ளும்போது, நம்முடைய ஆத்துமாவுக்கு இளைப்பாறுதலும், சந்தோஷமும் கிடைக்கும். உலகத்தை சார்ந்துகொண்டால் நம்மிடத்திலுள்ள சந்தோஷம் நம்மைவிட்டு விலகிப்போய்விடும். ஒருவன் இந்த உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்தினாலும், தன்னுடைய ஜீவனை நஷ்டப்படுத்தினால், அவனுக்கு ஒரு லாபமும் இல்லை. எல்லாமே நஷ்டந்தான்.

மனுஷன்
பிர 6:10

பிர 6:10. இருக்கிறவன் எவனும் தோன்றுமுன்னமே பேரிடப்பட்டிருக்கிறான்; அவன் மனுஷனென்று தெரிந்திருக்கிறது; தன்னிலும் பலத்தவரோடே போராட அவனால் கூடாது.

இந்தப் பிரபஞ்சத்தில் நமக்கு எவ்வளவுதான் ஐசுவரியம் இருந்தாலும், எவ்வளவுதான் அதிகாரம் இருந்தாலும், எவ்வளவுதான் பேரும் புகழும் இருந்தாலும், நாம் இன்னும் மனுஷராக மாத்திரமே இருப்போம். மனுக்குலத்திலுள்ள எல்லோருக்கும் நடக்கிற பொதுவான காரியங்களே நமக்கும் நடக்கும். ஒரு தரம் பிறப்பதும் ஒரு தரம் மரிப்பதும் எல்லா மனுஷருக்கும் நியமிக்கப்பட்டிருக்கிறது. இது ஐசுவரியவானுக்கும் பொதுவானது. தரித்திரனுக்கும் பொதுவானது.

நாம் இந்தப் பிரபஞ்சத்தில், அநேக காரியங்களைத் தேடிக்கொண்டிருக்கிறோம். அதிகமாய்ப் பிரயாசப்படுகிறோம். ஓய்வில்லாமல் உழைக்கிறோம். அதிகமாய்ப் பேசுகிறோம். இருக்கிறவன் எவனும் தோன்றும் முன்னமே பேரிடப்பட்டிருக்கிறான் என்று சாலொமோன் சொல்லுகிறார். நாம் பிறப்பதற்கு முன்பாகவே நமக்கு "மனுஷன்" என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. தேவனே நமக்கு இந்தப் பெயரைக் கொடுத்திருக்கிறார். அவர் நம்மைப் பார்க்கும்போது, நம்மை மனுஷனாகத்தான் பார்க்கிறார்.

மனுஷன் என்னும் பெயர் உயர்ந்த பெயரல்ல. அது ஒரு தாழ்மையான பெயர். ஆதியிலே தேவன் மனுஷனை சிருஷ்டித்தார். அவர்களை ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்தார். அவர்களை சிருஷ்டித்த நாளிலே, தேவன் அவர்களுக்கு "மனுஷர்" என்று பேரிட்டார் (ஆதி 5:2). அவர்களுக்கு "ஆதாம்" என்று பேரிட்டார். ஆதாம் என்னும் பெயருக்கு "சிவப்பு மண்" என்று பெயர். எல்லா மனுஷரிடத்திலும் ஆதாமின் சுபாவம்தான் இருக்கிறது. தேவனுடைய பார்வையில் எல்லோருமே சிவப்பு மண்ணாகத்தான் இருக்கிறோம். நாம் பெரிய ஐசுவரியவான்களாகயிருந்தாலும், தலைவர்களாகயிருந்தாலும், நம்மைப்பற்றி நினைக்கும்போது, நாம் மனுஷர் என்று நினைவுகூரவேண்டும். "ஜாதிகள் தங்களை மனுஷரென்று அறியும்படிக்கு, அவர்களுக்குப் பயமுண்டாக்கும், கர்த்தாவே. *(சேலா)" (சங் 9:20)* என்று சங்கீதக்காரர் சொல்லுகிறார்.

மாயை
பிர 6:11,12

பிர 6:11. மாயையைப் பெருகப்பண்ணுகிற அநேக விசேஷங்கள் உண்டாயிருக்கிறபடியால் அதினாலே மனுஷருக்குப் பிரயோஜனமென்ன?

பிர 6:12. நிழலைப்போன்ற மாயையான தன் ஜீவகாலத்தைப் போக்கும் மனுஷனுக்கு இந்த ஜீவனில் நன்மை இன்னதென்று அறிந்தவன் யார்? தனக்குப்பின்பு சூரியனுக்குக் கீழே சம்பவிக்குங்காரியம் இன்னதென்று மனுஷனுக்கு அறிவிப்பவன் யார்?

இந்தப் பிரபஞ்சத்தில் மாயையை அதிகரிக்கிற காரியங்கள் ஏராளமாய் உள்ளன. ஐசுவரியத்தை திரளாய்ச் சேர்ப்பதும், உலகப்பிரகாரமான சந்தோஷத்தை விரும்புவதும் இந்தப் பிரபஞ்சத்தில் அதிகமாய்க் காணப்படுகிறது. ஆனால் இவற்றினால் நமக்கு மெய்யான சந்தோஷம் வரப்போவதில்லை. சந்தோஷத்திற்குப் பதிலாக, மனவருத்தமும், மனவேதனையும் நமக்கு வருகிறது. இவையெல்லாம் மாயையை பெருகப்பண்ணுகிறதேயல்லாமல், நம்முடைய சந்தோஷத்தைப் பெருகப்பண்ணுகிறதில்லை.

நமக்கு எது தேவை என்பதுகூட நமக்கு சரியாகத் தெரியவில்லை. நாம் பல காரியங்கள்மீது ஆசைப்படுகிறோம். அவை நமக்கு சந்தோஷத்தைத் தரும் என்று எதிர்பார்க்கிறோம். ஆனால் அவை நமக்கு சந்தோஷத்தைத் தருவதில்லை. அவற்றால் நம்முடைய மனதிற்கு திருப்தி உண்டாவதில்லை. இதனால் நம்முடைய மனதில் வேதனையும், வருத்தமும், சஞ்சலமும் அதிகரிக்கிறது.

நமக்கு எது நன்மையானது என்பதை நாம் அறிந்திருக்கவேண்டும். நம்மிடத்தில் மெய்யான ஞானம் இருக்கும்போது, நாம் எதையும் அவசரப்பட்டு செய்யமாட்டோம். ஒவ்வொரு காரியத்தையும் நிதானமாய் ஆராய்ந்து அறிந்துகொள்வோம். இந்த ஜீவனில் நன்மை இன்னதென்று நாம் அறிந்திருக்கவேண்டும். நம்முடைய ஜீவன் நிழலைப்போல மாயையாயிருக்கிறது. நம்முடைய ஜீவியமும் நிழலைப்போலவே கழிந்துபோகிறது. நிலையில்லாத நம்மால், நன்மையானது இன்னதென்பதை அறிந்துகொள்ள முடிவதில்லை. எது நன்மையானது என்பதை நாம் அறிந்திருந்தால், அந்த நன்மையைப் பெற்றுக்கொள்ள நாம் பிரயாசப்படுவோம்.

நம்முடைய இருதயத்திற்கு நன்மைக்கும் தீமைக்கும் வித்தியாசம் தெரிவதில்லை. சில காரியங்கள் நமக்கு நன்மையாயிருக்கும் என்று நினைப்போம். அதை கஷ்டப்பட்டு பெற்றுக்கொள்வோம். அதைப் பெற்றுக்கொண்ட பின்புதான், அது நமக்கு நன்மையானதல்ல என்பதும், அது நமக்கு தீமையானது என்பதும் தெரியவரும். அநேகக் காரியங்கள் நமக்கு நன்மை செய்வதற்குப் பதிலாக தீமை செய்கிறது. எல்லாமே மாயையாயிருக்கிறது.

சூரியனுக்குக் கீழே அநேகக் காரியங்கள் சம்பவிக்கிறது. நமக்குப் பின்பு, சூரியனுக்குக் கீழே என்னென்ன காரியங்கள் சம்பவிக்கும் என்பது நமக்குத் தெரியாது. இதை யாராலும் நமக்கு அறிவிக்கவும் முடியாது. தனக்குப் பின்பு என்னென்ன காரியங்கள் நடைபெறும் என்னும் நிச்சயம் யாருக்குமில்லை. ஆகையினால் நமக்குப் பின்வரும் காரியங்கள்மீது நம்பிக்கை வைத்து, நம்மால் சந்தோஷமாயிருக்க முடியாது. நம்முடைய பிள்ளைகள் எப்படியிருப்பார்கள் என்பதும் நமக்குத் தெரியாது. நமக்குப் பின்பு நம்முடைய குடும்பத்தாருக்கு என்ன சம்பவிக்கும் என்பதும் நமக்குத் தெரியாது.

மனுஷனுடைய அறிவு குறைவுள்ளது. அவனுக்குத் தன்னைப்பற்றியும் தெரிவதில்லை. தனக்கு எது நன்மையானது என்பதும் தெரிவதில்லை. தன்னுடைய காலத்திற்குப் பின்பு, இந்தப் பிரபஞ்சத்தில் என்ன நடைபெறும் என்பதும் தெரிவதில்லை. மனுஷன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருக்கிறான். எல்லா மனுஷருமே ஞானத்தில் குறைவுள்ளவர்களாயிருக்கிறார்கள். தனக்குப் பின்பு சூரியனுக்குக் கீழே என்ன சம்பவிக்கும் என்பதும் மனுஷனுக்குத் தெரியாது, அதை அவனுக்கு அறிவிக்குமளவுக்கு யாருக்கும் ஞானமுமில்லை.

இனிமேல் நடைபெறப்போகிற சம்பவங்கள் நமக்குத் தெரியாமலிருப்பது போலவே, மற்றவர்களுக்கும் தெரியாமலிருக்கிறது. ஆகையினால் இவையெல்லாமே மாயை என்று சாலெமோன் சொல்லுகிறார். அறியாத காரியங்கள் கர்த்தருக்கே உரியது. வெளிப்படுத்தப்பட்டிருக்கிற இரகசியங்களோ நமக்கும், நம்முடைய சந்ததியாருக்குமுரியது.

7 அதிகாரம்

இந்தப் பிரபஞ்சத்தின் மாயையை விவரிப்பதற்கு சாலொமோன் அநேக எடுத்துக்காட்டுக்களைச் சொல்லுகிறார். உலகப்பிரகாரமான காரியங்களினால் நம்முடைய மனதிற்கு சஞ்சலமும், வேதனையும் உண்டாகும். அவற்றிலிருந்து விடுதலை பெற்று, நம்முடைய ஜீவியகாலத்தில் சந்தோஷமாயும், சமாதானமாயும், ஆறுதலாயும் ஜீவிப்பதற்கான வழிகளையும் சாலொமோன் இங்கு விரிவாகச் சொல்லுகிறார். நாம் தீமையான காரியங்களையும் நமக்கு நன்மையான காரியங்களாக மாற்றவேண்டும். காலத்தை நமக்குப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளவேண்டும்.

நம்முடைய நற்கீர்த்தியை நாம் காத்துக்கொள்ளவேண்டும் (பிர 7:1). எல்லா காரியங்களையும் ஏனோதானோவென்று செய்யாமல், எல்லா காரியங்களிலும் மிகுந்த கவனத்தோடும் எச்சரிப்போடும் இருக்கவேண்டும் (பிர 7:2-6). நம்முடைய ஆவி அமைதலாயிருக்கவேண்டும் (பிர 7:7-10). நம்முடைய காரியங்கள் எல்லாவற்றிலும் நாம் ஞானமாய் நிர்வாகம்பண்ணவேண்டும் (பிர 7:11,12).

நம்முடைய சித்தத்தைவிட தேவனுடைய சித்தமே மிகவும் முக்கியமானது. நம்முடைய எல்லா காரியங்களிலும் நாம் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படியவேண்டும் (பிர 7:13-15). எந்தக் காரியத்திலும் அளவுக்கு மிஞ்சிப் போய்விடக்கூடாது. அளவுக்கு மிஞ்சுவது ஆபத்தில் முடியும் (பிர 7:16-18). நமக்கு தீங்கு செய்கிற காரியங்களைக் குறித்தும், நம்மைச் சேதப்படுத்துகிற காரியங்களைக் குறித்தும் எச்சரிப்பாயிருக்கவேண்டும். எல்லாவற்றிலும் நமக்கு பொறுமையும் நிதானமும் தேவை (பிர 7:19-22).

சீக்கிரத்தில் கோபப்படக்கூடாது. நம்முடைய கோபத்தை அடக்குவது நமக்கு நல்லது. நம்முடைய உணர்வுகள் நம்முடைய கட்டுப்பாட்டிற்குள் இருக்கவேண்டும். சாலொமோனுக்கு அநேக மனைவிகள் இருந்தார்கள். அவர்கள் சாலொமோனை தேவனுடைய சமுகத்திலிருந்து பிரித்துச் சென்றுவிட்டார்கள். தன்னுடைய மனைவிகளினிமித்தமாய், சாலொமோனுக்கு அநேக துன்பங்கள் உண்டாயிற்று. அவை எல்லாவற்றையும் சாலொமோன் வருத்தத்தோடு சொல்லுகிறார் (பிர 7:23-29).

நற்கீர்த்தி
பிர 7:1

பிர 7:1. பரிமளதைலத்தைப்பார்க்கிலும் நற்கீர்த்தியும், ஒருவனுடைய ஜநநநாளைப் பார்க்கிலும் மரணநாளும் நல்லது.

நமக்கு இந்தப் பிரபஞ்சத்தில் திரளான ஐசுவரியங்களும், ஏராளமான சம்பத்துக்களும் இருக்கலாம். இவையெல்லாவற்றையும்விட நம்முடைய நற்கீர்த்தியே நமக்கு மிகவும் மேன்மையானது. சாலொமோன் இந்த அதிகாரத்தில் அநேகக் காரியங்களை ஒப்பிட்டுச் சொல்லுகிறார். நாம் உலகப்பிரகாரமான ஐசுவரியங்களை சம்பாதிப்பதற்குப் பதிலாக, நற்கீர்த்தியை சம்பாதிக்கவேண்டும். பரிமள தைலத்தைப் பார்க்கிலும் நற்கீர்த்தியே நல்லது என்று சாலொமோன் சொல்லுகிறார். இந்த வாக்கியத்திற்கு பரிமளதைலத்திற்கு முன்பாக இருக்கும் நற்கீர்த்தி நல்லது என்று வேதபண்டிதர்கள் வியாக்கியானம் சொல்லுகிறார்கள்.

இந்தப் பிரபஞ்சத்தில் ஏராளமான பொருட்களை உற்பத்தி பண்ணுகிறார்கள். அவையெல்லாவற்றிலும் பரிமள தைலமே மிகவும் நல்லது. அது வாசனை கொடுக்கக்கூடியது. பரிமள தைலத்தின் கிரயமும் அதிகம். பரிமள தைலத்தை நுகரும்போது, நம்முடைய ஐம்புலன்களுக்கும் சந்தோஷமுண்டாகும். மனம் ரம்மியமாகயிருக்கும். ஆகையினால்தான் இந்தத் தைலத்திற்கு "பரிமள தைலம்" என்னும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ராஜாக்களை அபிஷேகம்பண்ணும்போது பரிமள தைலத்தினால் அபிஷேகம்பண்ணுவது வழக்கம். ராஜா தன்னுடைய தேசத்திற்கே முதன்மையானவர். அவரை முதன்மையான தைலத்தினால் அபிஷேகம்பண்ணி, அவரைக் கனப்படுத்துகிறார்கள். பரிமள தைலம் மக்கள் மத்தியிலே அதிக மதிப்புள்ளது. அதிக விலையுள்ளது. அதிக கனமுள்ளது. ஆனாலும் பரிமள தைலத்தைப் பார்க்கிலும் நற்கீர்த்தி நல்லது. "திரளான ஐசுவரியத்தைப் பார்க்கிலும் நற்கீர்த்தியே தெரிந்துகொள்ளப்படத்தக்கது" (நீதி 22:1) என்று சாலொமோன் சொல்லுகிறார்.

மரியாள் பரிமள தைலத்தை இயேசுகிறிஸ்துவின் சிரசின்மேல் ஊற்றினாள். அதற்கு ஈடாக கிறிஸ்துவானவர் அவளுக்கு நற்கீர்த்தியைக் கட்டளையிட்டார். "இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மத் 26:13). மரியாள் இயேசுகிறிஸ்துவின் சிரசின்மேல் பரிமள தைலத்தை ஊற்றியதினால், சுவிசேஷத்தில் இவளுடைய பெயரும் இடம் பெற்றிருக்கிறது.

ஒருவனுடைய ஜநநநாளைப்பார்க்கிலும் மரணநாளே நல்லது. நாம் இந்தப் பிரபஞ்சத்தில் நற்கீர்த்தியோடு ஜீவனம் பண்ணவேண்டும். நம்முடைய நற்கீர்த்தி, நம்முடைய மரணநாள் வரையிலும் நிலைத்து நிற்கவேண்டும். மரணநாளில் நமக்கு அநேக வேதனைகளும், வருத்தங்களும், கஷ்டங்களும் இருக்கும். ஜநநநாளில் சந்தோஷமிருக்கும். சந்தோஷத்தைவிட துக்கமே நல்லது. நகைப்பைப் பார்க்கிலும் துக்கிப்பு நலம். ஒருவன் தன்னுடைய பிறந்த நாளைக் கொண்டாடும்போது, அங்குபோய் அவனோடுகூட சந்தோஷமாயிருப்பதற்குப் பதிலாக, ஒருவன் மரித்துப்போகும்போது, அவனுடைய வீட்டிற்குச் சென்று, அவனுடைய வீட்டாரின் துக்கத்தில் பங்குபெறுவதே நமக்கு நல்லது.

விருந்துவீடும் துக்கவீடும்
பிர 7:2-4

பிர 7:2. விருந்துவீட்டுக்குப் போவதிலும் துக்கவீட்டுக்குப் போவது நலம்; இதிலே எல்லா மனுஷரின் முடிவும் காணப்படும்; உயிரோடிருக்கிறவன் இதைத் தன் மனதிலே சிந்திப்பான்.

பிர 7:3. நகைப்பைப் பார்க்கிலும் துக்கிப்பு நலம்; முகதுக்கத்தினாலே இருதயம் சீர்ப்படும்;

பிர 7:4. ஞானிகளின் இருதயம் துக்கவீட்டிலே இருக்கும்; மூடரின் இருதயம் களிப்புவீட்டிலே இருக்கும்.

விருந்து வீட்டுக்குப் போவதைப் பார்க்கிலும், துக்க வீட்டிற்குப் போகும்போது நமக்கு நன்மை உண்டாகும். இதனால் நாம் தேவனைத் துதிப்போம். பிறருக்கு நன்மை செய்வோம். பிறர் மூலமாய் நமக்கும் நன்மை உண்டாகும். விருந்து வீட்டிற்குப் போகும்போது நமக்கு சந்தோஷமுண்டாகலாம். ஆனால் நாம் கலந்து கொள்கிற விருந்து ஒரு மாயை என்பதை மறந்துவிடக்கூடாது. ஒரு சிலர் தங்களுடைய பெருமையை வெளிப்படுத்திக் காண்பிப்பதற்காக ஆடம்பரமான விருந்துகளைச் செய்கிறார்கள். தங்கள் மாம்சத்தின் இச்சைகளை பூர்த்தி செய்வதற்காக அநேகர் விருந்து வீட்டிற்குப் போகிறார்கள்.

துக்க வீட்டிலே பெருமை எதுவும் இருக்காது. அங்கு வேதனையும், அழுகையும் இருக்கும். துக்க வீட்டிற்குப் போவது நமக்கு நன்மையாயிருக்கும் என்று சாலொமோன் சொல்லுகிறார். ஒரு சிலர் துக்க வீட்டில்கூட, அடக்க ஆராதனையை ஆடம்பரமாக நடத்துவார்கள். அந்த ஆடம்பரத்தைப் பார்ப்பதற்காகவோ, அந்த ஆடம்பரத்தில் பங்குபெறுவதற்காகவோ நாம் துக்க வீட்டிற்குப் போகக்கூடாது. துக்க வீட்டிலுள்ளவர்களுடைய துக்கத்தைப் பகிர்ந்துகொள்வதற்காகவே நாம் அங்கு போகவேண்டும்.

துக்க வீட்டிலே எல்லா மனுஷரின் முடிவும் காணப்படும். ஒரு தரம் பிறப்பதும், பின்பு மரிப்பதும் துக்க வீட்டிலுள்ளவர்களுக்கு நியமிக்கப்பட்டிருப்பதுபோலவே, நமக்கும் நியமிக்கப்பட்டிருக்கிறது என்னும் சத்தியத்தை நாம் உணரவேண்டும். உயிரோடிருக்கிறவன் இதைத் தன் மனதிலே சிந்திப்பான். மற்றவர்கள் மரித்துப்போவதைப் பார்க்கும்போது, நம்முடைய ஜீவனைப்பற்றி நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அவர்களுடைய முடிவைப் பார்த்து, நம்முடைய முடிவையும் ஆராய்ந்து பார்க்கவேண்டும். நாம் பல இடங்களில் பிரசங்கச் செய்திகளைக் கேட்கிறோம். ஆனாலும் துக்கவீட்டிலே, நமக்குப் பிரயோஜனமுள்ள, ஒரு நல்ல செய்தியை நாம் பெற்றுக்கொள்ள முடியும். எல்லா மனுஷரின் முடிவும் மரணத்தில் முடியும் என்பதை நாம் புரிந்துகொள்ளலாம்.

துக்க வீட்டிலே நாம் அநேக சத்தியங்களைக் கற்றுக்கொள்ளலாம். ஞானிகள் துக்கவீட்டைக்கூட ஒரு பாடசாலையைப்போல பயன்படுத்துவார்கள். அநேக பாடங்களைக் கற்றுக்கொள்வார்கள். தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு அதை பிரயோஜனப்படுத்திக்கொள்வார்கள். ஞானிகளின் இருதயம் துக்கவீட்டிலே இருக்கும். மூடரின் இருதயமோ களிப்பு வீட்டிலே இருக்கும்.

விருந்து வீட்டிலே நகைப்பும், களியாட்டுக்களும் அதிகமாயிருக்கும். ஆனால் நகைப்பைப் பார்க்கிலும் துக்கிப்பே நலம் என்று சாலொமோன் சொல்லுகிறார். முகதுக்கத்தினாலே இருதயம் சீர்படும். நம்முடைய துக்கம், நம்முடைய முகத்தில் வெளிப்படும். அகத்தின் அழகு முகத்தில் தெரியும். நமக்கு அதிகமான துக்கமுண்டாகும்போது, நம்முடைய இருதயம் சுத்திகரிக்கப்படும். இருதயத்திலுள்ள குழப்பங்கள் நீங்கி அது சீர்படும்.

மூடரின் பாட்டும் நகைப்பும் பிர 7:5,6

பிர 7:5. ஒருவன் மூடரின் பாட்டைக் கேட்பதிலும், ஞானியின் கடிந்துகொள்ளுதலைக் கேட்பது நலம்.

பிர 7:6. மூடனின் நகைப்பு பானையின்கீழ் எரிகிற முள்ளுகளின் படபடப்பைப் போலிருக்கும்; இதுவும் மாயையே.

நம்மிடத்திலுள்ள நற்குணங்களை அநேகர் பாராட்டுவார்கள். ஆனால் நம்மிடத்தில் காணப்படுகிற துர்க்குணங்களை ஒருவரும் கடிந்துகொள்ளமாட்டார்கள். நாம் மூடரின் பாட்டைக் கேட்பதிலும், ஞானியின் கடிந்துகொள்ளுதலைக் கேட்பதுதான் நமக்கு நலமானது. நம்மை மற்றவர்கள் நியாயமாய்க் கடிந்துகொள்ளும்போது, அவர்கள்மீது உடனே கோபப்படக்கூடாது. அவர்களுடைய வார்த்தையில் உண்மையிருக்கும்போது, அவர்களுடைய கடிந்துகொள்ளுதலுக்கு நாம் செவிகொடுக்கவேண்டும். நாம் திருந்தவேண்டும்.

மூடன் காரணமில்லாமல் சிரிப்பான். அளவுக்கு அதிகமாக சிரிப்பான். மூடன் சிரிப்பதினால் யாருக்கும் சந்தோஷம் உண்டாகப்போவதில்லை. அவன் திடீரென்று சிரிப்பான். அவனுடைய சிரிப்பு சீக்கிரத்தில் அணைந்துபோகும். மூடனின் நகைப்பு பானையின்கீழ் எரிகிற முள்ளுகளின் படபடப்பைப் போலிருக்கிறது என்று சாலொமோன் சொல்லுகிறார்.

முள் எரியும்போது அது கொழுந்துவிட்டு எரியும். அதிகமான சத்தமுண்டாகும். ஆனாலும் அது சீக்கிரத்தில் அணைந்துபோகும். முள் எரிந்து சிறிது நேரத்திற்குள், அது சாம்பலாக பல இடங்களுக்கும் பரவும். ஒரு பானையின்கீழ் முள்ளுகளை எரிக்கும்போது, பானையிலுள்ள பொருள் சீக்கிரத்தில் சூடாவதில்லை. முள்ளை எரித்து சமையல் பண்ண முடியாது. அது சீக்கிரத்தில் அணைந்துபோவதினால், முள்ளின் நெருப்பு நமக்கு பிரயோஜனப்படாது. பானையிலுள்ள பொருள் வேகவேண்டும் என்றால், பானையின் கீழ் நெருப்பு தொடர்ந்து எரிந்துகொண்டிருக்கவேண்டும். ஆனால் முள்ளோ சீக்கிரத்தில் எரிந்து, சீக்கிரத்தில் அணைந்துபோகக்கூடியது.

மூடரின் நகைப்பு பானையின்கீழ் எரிகிற முள்ளுகளின் படபடப்பைப்போல் எரிகிறது. அதிகமாய் சத்தம் போடுகிறது. சிறிது நேரம் மாத்திரம் கொழுந்துவிட்டு எரிகிறது. அதன் பின்பு அது அணைந்துபோகிறது. மூடரின் நகைப்பு சீக்கிரத்தில் ஒழிந்துபோகும். அதனால் யாருக்கும் மெய்யான சந்தோஷமுண்டாவதில்லை. சாலொமோன் மூடரின் நகைப்பைப் பார்த்து, இதுவும் மாயையே என்று சொல்லுகிறார்.

இடுக்கண்
பிர 7:7

பிர 7:7. இடுக்கணானது ஞானியையும் பைத்தியக்காரனாக்கும்; பரிதானம் இருதயத்தைக் கெடுக்கும்.

சாலொமோன் பல வசனங்களில் இடுக்கண்ணைப்பற்றி விரிவாகச் சொல்லியிருக்கிறார். நமக்கு இடுக்கண் வரும்போது நம்முடைய ஆவி சோர்ந்துபோகும். நம்முடைய சரீரத்திலும் சோர்வு உண்டாகும். நம்முடைய சந்தோஷம் குறையும். துக்கம் அதிகரிக்கும். நமக்கு இடுக்கண் வரும்போது, நம்முடைய சோதனையும் அதிகரிக்கும். இடுக்கணானது ஞானியையும் பையித்தியக்காரனாக்கும். ஒரு ஞானிக்கு இடுக்கண் தொடர்ந்து வரும்போது, அது தொடர்ந்து அவனுக்குள் அதிகரிக்கும்போது, ஞானியினுடைய சிந்தனை மாறிவிடுகிறது. அவனுடைய வார்த்தையும் செய்கையும் மாறிவிடுகிறது. இதுவரையிலும் ஞானியைப்போல சிந்தித்து, பேசி, செயல்பட்டவன், இப்போது ஒரு பைத்தியக்காரனைப்போல சிந்தித்து, உளறுவான். பைத்தியக்காரனைப்போல நடந்துகொள்வான். தேவனுக்கு விரோதமாக குற்றம் சொல்லுவான். மனுஷனுக்கு விரோதமாகப் பேசுவான்.

பரிதானம் இருதயத்தைக் கெடுக்கும் என்று சாலொமோன் சொல்லுகிறார். இந்த வாக்கியத்திற்கு, "இடுக்கண் ஈவாய்க் கொடுக்கப்பட்டிருக்கிற இருதயத்தைக் கெடுக்கும்" என்று வேதபண்டிதர்கள் பொருள் சொல்லுகிறார்கள். நம்முடைய இருதயம் உதாரத்துவமாயிருந்தாலும், இடுக்கணானது அதையும் கெடுத்துவிடும்.

நாம் ஒடுக்கப்படுகிறவர்களைப் பார்க்கும்போது, அவர்களுக்காக இரக்கப்படவேண்டும். அவர்களுக்கு நம்மால் செய்ய முடிகிற எல்லா உதவிகளையும் செய்யவேண்டும். அவர்கள் தொடர்ந்து ஒடுக்கப்பட்டால், அவர்களுக்கு இடுக்கண் அதிகரிக்கும். முடிவில் அவர்களும் பைத்தியக்காரனைப்போல இருப்பார்கள். தேவன்மீதும் மனுஷன்மீதும் குறைசொல்லுவார்கள். பிறருக்கு இடுக்கண் வரும்போது, நமக்கே இடுக்கண் வந்ததாகப் பாவித்து, அவர்களுக்கு உதவி செய்யவேண்டும்.

ஒடுக்குகிறவர்களின் சுபாவம் மிகவும் மோசமானது. ஒருவன் நற்குணமுள்ளவனாகயிருப்பான். அவனுக்கு தொடர்ந்து இடுக்கண் வரும்போது, அவன் மற்றவர்களைத் துன்பப்படுத்த ஆரம்பித்துவிடுவான். புத்தி தெளிவில்லாதவனைப்போல பேசுவான். பைத்தியக்காரனைப்போல நடந்துகொள்வான். பரிதானத்தை வாங்கிக்கொள்வான். இதனால் தன் இருதயத்தைக் கெடுத்துப் போடுவான். அவனுக்கு ஏழைகள்மீது இரக்கம் இருக்காது. ஏழைகளின் நியாயத்தை விசாரிக்கமாட்டான்.

இடுக்கண் வந்தவனைப் பார்த்து நாம் பொறாமைப்படக்கூடாது. அவனுக்காக பரிதாபப்படவேண்டும். அவனைத் தனிமையாக விட்டுவிடவேண்டும். அவனுடைய இடுக்கணைப்போக்க முயற்சி செய்யவேண்டும். ஒரு மனுஷனுக்கு, இடுக்கணுக்குமேல் இடுக்கண் தொடர்ந்து வந்துகொண்டேயிருந்தால், அவன் சீக்கிரத்தில் தன்னைத்தானே அழித்துப்போடுவான்.

துவக்கமும் முடிவும்
பிர 7:8

பிர 7:8. ஒரு காரியத்தின் துவக்கத்தைப் பார்க்கிலும் அதின் முடிவு நல்லது; பெருமையுள்ளவனைப் பார்க்கிலும் பொறுமையுள்ளவன் உத்தமன்.

எல்லா காரியத்திற்கும் ஒரு துவக்கமும், ஒரு முடிவும் இருக்கும். ஒரு காரியத்தின் துவக்கத்தைப் பார்க்கிலும் அதன் முடிவு நல்லது என்று சாலொமோன் சொல்லுகிறார். சில சமயங்களில் துவக்கப்பட்ட ஒரு காரியம் சீக்கிரத்தில் முடிவு பெறாமலிருக்கலாம். அது நீண்டகாலத்திற்கு நீடித்துக்கொண்டே போகலாம். ஆனாலும் அந்தக் காரியத்தின் முடிவே நல்லது.

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்திலே அடிமைகளாகயிருந்தார்கள். பார்வோன் அவர்களை அடக்கி ஒடுக்கி வேலை வாங்கினான். மோசே பார்வோனோடு பேசி, இஸ்ரவேல் ஜனங்களை விடுவிப்பதற்கு முயற்சி பண்ணினார். ஆனால் ஆரம்பத்தில் பார்வோன் அவர்களை விடுதலை செய்ய மறுத்துவிட்டான். இஸ்ரவேல் ஜனங்கள் ஒடுக்கப்பட்டவர்களாகயிருந்தாலும், முடிவிலே தேவனுடைய பலத்த கரத்தினால் விடுவிக்கப்பட்டார்கள். ஆனாலும் ஆரம்பத்தில் அவர்களுக்கு அநேக வேதனைகளும் உபத்திரவங்களும் உண்டாயிற்று.

மோசே இஸ்ரவேல் ஜனங்களை விடுவிக்குமாறு பார்வோனோடு பேசியபோது, பார்வோனின் இருதயம் கடினப்பட்டது. அவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு அதிக துன்பத்தைக் கொடுத்தான். அவர்கள் செய்து முடிக்க வேண்டிய செங்கல்களின் எண்ணிக்கையை இரண்டு மடங்காக அதிகரித்தான். ஆரம்பத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் சோர்ந்துபோனார்கள். ஆனாலும் தேவனுடைய ஏற்ற வேளை வந்தபோது, இஸ்ரவேல் ஜனங்களெல்லோரும் விடுவிக்கப்பட்டார்கள். அவர்களுடைய துவக்கத்தைப் பார்க்கிலும், அவர்களுடைய முடிவு நன்றாயிருந்தது.

நம்முடைய ஜீவியத்திலும், நமக்கு பல பாடுகளும், வேதனைகளும் இருக்கலாம். நாம் ஒடுக்கப்படலாம். ஆனாலும் எல்லா சூழ்நிலைகளிலும் நாம் தாழ்மையின் வஸ்திரத்தை அணிந்துகொள்ளவேண்டும். பெருமையுள்ளவனைப் பார்க்கிலும், பொறுமையுள்ளவன் உத்தமன் என்று சாலொமோன் சொல்லுகிறார். பாடுகளின் மத்தியிலும் நாம் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படியவேண்டும். ஒரு வேளை நம்மை ஒடுக்குகிறவர்கள் இன்னும் அதிகமாய் நம்மை ஒடுக்கலாம். அவர்களுடைய கரம் ஓங்கியதுபோல இருக்கலாம். நாமோ அவர்களுடைய கரத்தைப் பார்த்து பயந்துவிடாமல், கர்த்தருடைய பலத்த கரம் வெளிப்படும் நாளுக்காக பொறுமையோடு காத்திருக்கவேண்டும். தேவன் தமக்கு ஏற்றவேளையில், தம்முடைய சித்தத்தை நிறைவேற்றுவார். நம்மை ஒடுக்கத்திலிருந்தும், நெருக்கத்திலிருந்தும் விடுதலை செய்வார்.

கோபம்
பிர 7:9

பிர 7:9. உன் மனதில் சீக்கிரமாய்க் கோபங்கொள்ளாதே; மூடரின் நெஞ்சிலே கோபம் குடிகொள்ளும்.

நம்முடைய உணர்வுகளை ஞானத்தினாலும், கிருபையினாலும் ஆளுகை செய்யவேண்டும். நம்முடைய ஆவி நமக்கு அடங்கியிருக்கிறது. நம்முடைய மனதில் சீக்கிரமாய்க் கோபங்கொள்ளக்கூடாது. பொறுமையில்லாதவர்கள், சீக்கிரத்தில் கோபப்படுவார்கள். தாங்கள் எதிர்பார்க்கிற காரியம் உடனே நடக்கவில்லையென்றால், அவர்களால் பொறுமையாய்க் காத்திருக்க முடியாது. அவர்களுக்கு உடனே கோபம் வந்துவிடும்.

நம்முடைய மனதில் கோபம் வந்தாலும், அது சீக்கிரத்தில் நம்மை விட்டுப்போய்விடவேண்டும். நம்முடைய மனதில் வந்தகோபம், அங்கேயே தங்கிவிடக்கூடாது. கோபமானது ஒரு வழிப்போக்கனைப்போல வரும். ஆனாலும் அது உடனே போய்விடவேண்டும். அதுவே நமக்கு நல்லது. மூடரின் நெஞ்சிலே கோபம் குடிகொள்ளும். மூடனுக்கு கோபத்திலிருந்து எப்படி விடுதலை பெறுவது என்று தெரியாது. நாம் கோபத்திற்கு இடங்கொடுக்காமலிருந்தால், நம்முடைய இருதயத்தில் சந்தோஷமும், சமாதானமும், ஆறுதலும் நிரம்பியிருக்கும்.

இந்நாட்களும் முன்நாட்களும் பிர 7:10

பிர 7:10. இந்நாட்களைப்பார்க்கிலும் முன்நாட்கள் நலமாயிருந்தது என்று சொல்லாதே; நீ இதைக் குறித்து கேட்பது ஞானமல்ல.

நாம் கடந்துபோன நாட்களைக் குறித்து அதிகமாய் ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கக்கூடாது. அந்த நாட்கள் நன்றாயிருந்தது என்று சொல்லி, அது மறுபடியும் நமக்கு வரவேண்டுமென்று ஆசையோடு காத்துக்கொண்டிருக்கக்கூடாது. கடந்துபோன நாட்கள் ஒருபோதும் திரும்பி வரப்போவதில்லை. ஆகையினால் நம்முடைய மனதில் இந்நாட்களைப் பார்க்கிலும் முன்நாட்கள் நலமாயிருந்தது என்று சொல்லக்கூடாது.

கடந்தநாட்களில் என்னென்ன காரியங்கள் எல்லாம் நடைபெற்றது என்று விரிவாக ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கக்கூடாது. நாம் கடந்த நாட்களில் அந்நியரைப்போல இருந்தோம். ஒன்றும் அறியாதவர்களாயிருந்தோம். காலங்களை நிதானித்து அறிந்துகொள்ளத் தெரியாதவர்களாயிருந்தோம். இனிமேல் என்ன நடைபெறும் என்பதும் நமக்கு அந்நாட்களில் தெரியவில்லை. அந்நாட்களை நாம் கடந்து வந்துவிட்டோம். கடந்துபோன நாட்கள்மீது ஆசைப்படக்கூடாது. அது மறுபடியும் வருமா என்று ஏங்கிக்கொண்டிருக்கக்கூடாது. அந்தந்த நாளுக்கு தேவனுடைய கிருபை நமக்குப் போதும் என்று ஆறுதலாயிருக்கவேண்டும்.

கர்த்தரே நமக்கு இந்நாட்களைக் கொடுத்திருக்கிறார். கர்த்தருடைய கிருபை ஒவ்வொரு நாளிலும் புதிதாயிருக்கிறது. அவருடைய இரக்கமும் நமக்குப் புதிதாய்க் கிடைக்கிறது. இந்நாளில் தேவனுடைய கிருபையும் இரக்கமும் நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருப்பதற்காக நாம் கர்த்தரை நன்றியோடு துதிக்கவேண்டும். நாம் பழைய காலத்தையே நினைத்துக்கொண்டிருந்தால், கர்த்தர் நமக்கு புதிய கிருபைகளையும், புதிய இரக்கங்களையும் கொடுக்கமாட்டார் என்று நினைக்கிறவர்களாயிருப்போம்.

தேவனுடைய அன்பு இப்போது முன்புபோல இல்லையென்றும், அவருடைய அன்பும் இரக்கமும் குறைந்துபோய்விட்டது என்றும் நினைத்து ஏங்குகிறவர்களாயிருப்போம். தேவன் மாறாதவர். அவருடைய கிருபையான அன்பும், இரக்கமும் ஒருபோதும் மாறுவதில்லை. கடந்தகாலம் பொற்காலம் என்றும், தற்காலம் இரும்புக்காலம் என்றும், நாம் காலங்களை ஒப்பிடக்கூடாது. எல்லா காலமுமே நல்ல காலம்தான். நம்முடைய காலங்கள் கர்த்தருடைய கரத்திலிருக்கிறது. கர்த்தரை நம்புகிறவர்களுக்கு, எல்லா காலங்களிலும், சகலமும் நன்மைக்கேதுவாகவே நடைபெறும்.

இந்நாட்களைப் பார்க்கிலும் முன்நாட்கள் நலமாயிருந்தது என்று சொல்லி, கர்த்தரோடு விவாதம் பண்ணக்கூடாது. மனதில் திருப்தியில்லாதவர்கள்தான், கடந்த காலங்களையும், நிகழ்காலங்களையும் ஒப்பிட்டுப் பார்ப்பார்கள். இந்தப் பிரபஞ்சத்தில் நடைபெறுகிற எல்லா காரியங்களும், மாறாமல் அப்படியே நடைபெறுகிறது. கர்த்தருடைய கிருபை வரவர குறைந்துபோவதில்லை. காலங்களில்ஒரு சில மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம். சில காரியங்கள் கடந்த காலங்களில் நன்றாயிருந்திருக்கலாம். அதே வேளையில் வேறு சில காரியங்கள், கடந்த காலங்களைவிட, நிகழ்காலங்களில் நன்றாயிருப்பதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் நாம் இந்நாட்களையும் முன்நாட்களையும் ஒப்பிட்டுப் பேசவும் கூடாது. யாராவது இதுபற்றிப் பேசினால், நாம் அதைச் செவிகொடுத்து கேட்கவும் கூடாது. "நீ இதைக் குறித்துக் கேட்பது ஞானமல்ல" என்று சாலொமோன் சொல்லுகிறார்.

ஞானம் பிர 7:11,12

பிர 7:11. சுதந்தரத்தோடே ஞானம் நல்லது; சூரியனைக் காண்கிறவர்களுக்கு இதினாலே பிரயோஜனமுண்டு.

பிர 7:12. ஞானம் கேடகம், திரவியமும் கேடகம்; ஞானம் தன்னை உடையவர்களுக்கு ஜீவனைத் தரும்; இதுவே அறிவின் மேன்மை.

சாலொமோன் ஞானத்தைப் புகழ்ந்து பேசுகிறார். நமக்கு உலகப்பிரகாரமான ஆஸ்தி எவ்வளவு இருந்தாலும், அதை நல்லமுறையில் நிர்வாகம்பண்ணவேண்டும் என்றாலும், நம்முடைய ஆஸ்தியை அதிகரிக்கச் செய்யவேண்டும் என்றாலும் நமக்கு ஞானம் தேவைப்படுகிறது. சுதந்தரத்தோடே ஞானம் நல்லது. நமக்கு சுதந்தரம் எவ்வளவு கிடைத்தாலும், ஞானம் இல்லையென்றால், அந்த சுதந்தரத்தின் அளவும் குறைவாகயிருக்கும், அதன் பயன்பாடும் குறைவாகயிருக்கும்.

ஞானம் தரித்திரருக்கும் நல்லது. இது ஐசுவரியவானுக்கும் நல்லது. ஐசுவரியவான் ஞானமுள்ளவனாகயிருக்கும் போது, அவனுக்கு தன்னுடைய ஐசுவரியத்தினால் பாதிப்போ, சேதாரமோ உண்டாகாது. ஞானமுள்ள ஐசுவரியவான் தன் ஐசுவரியத்திற்கு அடிமையாகயிருக்க மாட்டான். தன்னிடத்திலுள்ள ஐசுவரியத்தை ஞானமாய்ச் செலவுபண்ணுவான். நல்ல காரியங்களுக்கு தன்னுடைய ஐசுவரியத்தைப் பயன்படுத்துவான்.

ஞானம் நல்லது. இது ஒரு மனுஷனை பிரயோஜனமுள்ளவனாக மாற்றுகிறது. ஞானமுள்ளவனுக்கு, திரளான சம்பத்து இருக்கும்போது, அந்த சம்பத்து அதிக பிரயோஜனமுள்ளதாயிருக்கும். ஞானமுள்ளவன் தன்னுடைய ஐசுவரியத்தினால், தனக்கும், தன்னுடைய குடும்பத்தாருக்கும், தன்னுடைய சந்ததியாருக்கும் அநேக நன்மைகளைச் செய்வான். ஒருவனிடத்தில் சம்பத்து இருந்தும், அவனிடத்தில் ஞானமில்லையென்றால், அவனுடைய சம்பத்தில் யாருக்கும் பிரயோஜனமாயிராது.

ஞானம் நமக்குப் பாதுகாப்பைத்தரும். நம்முடைய ஜீவியத்தில் துன்பங்களும், தொல்லைகளும், வேதனைகளும், வருத்தங்களும் வரும்போது, ஞானமே நமக்கு புகலிடமாயிருக்கும். சூரியனின் உஷ்ணம் நம்மைத் தாக்குவதுபோல, அநேகப் பிரச்சனைகள் நம்மைத் தாக்கலாம். சூரியனின் உஷ்ணத்திற்கு நிழல் பாதுகாப்பாகயிருக்கும். அதுபோலவே ஞானமுள்ளவர்களுக்கு, ஞானம் நிழலைப்போல ஆறுதலாயிருக்கும். சூரியனைக் காண்கிறவர்களுக்கு ஞானத்தினாலே பிரயோஜனமுண்டு.

"சூரியனைக் காண்கிறவர்களுக்கு இதனாலே பிரயோஜனமுண்டு" என்னும் வாக்கியத்திற்கு, "ஞானத்தினாலே நிழலுண்டு" என்று வேதபண்டிதர்கள் வியாக்கியானம் சொல்லுகிறார்கள். பெரிய கற்பாறையானது, வறண்ட நிலத்திலே ஒதுங்குவதற்கு தேவையான நிழலைக் கொடுக்கும். அதுபோலவே ஞானமானது, பாடுகள் நிறைந்த இந்தப் பிரபஞ்சத்தில், நமக்கு ஆறுதலடையும் இடத்தைக் கொடுக்கும்.

ஞானமானது நமக்குப் பாதுகாப்பைக் கொடுக்கிறது. நம்முடைய ஐசுவரியம் பாதுகாப்பாகவும் இருக்கவேண்டும். அது நம்மையும் பாதுகாக்கவேண்டும். ஐசுவரியவான் தன்னுடைய ஐசுவரியத்தைச் சேமித்து வைக்கிறான். ஞானவானோ தனக்கு ஞானத்தைச் சேமித்து வைக்கிறான். ஞானமுள்ளவன் வலுவான பட்டணத்தைப்போல இருப்பான். அரணான பட்டணத்தைப்போல பாதுகாப்பாயிருப்பான். ஞானமே மனுஷனுக்கு மெய்யான சந்தோஷத்தையும், மெய்யான சமாதானத்தையும், மெய்யான ஆறுதலையும் தரும்.

ஞானத்திலே இரண்டு வகை உண்டு. ஒன்று உலகப்பிரகாரமான ஞானம். மற்றொன்று ஆவிக்குரிய ஞானம். இது தெய்வீக ஞானம். ஆவிக்குரிய ஞானம் தேவனிடத்திலிருந்து மாத்திரமே வரும். இதுவே மெய்யான ஞானம். தெய்வீக ஞானத்தை பணத்தால் கிரயம் செலுத்தி வாங்கமுடியாது. தெய்வீக ஞானம் எல்லா ஞானத்தையும்விட மேன்மையானது. அதுவே உன்னதமானது. உலகப்பிரகாரமான ஞானத்தைவிட ஆவிக்குரிய ஞானமே மேன்மையானது. தெய்வீகஞானம் தன்னை உடையவர்களுக்கு ஜீவனைத்தரும். கர்த்தருக்குப் பயப்படுவதே தெய்வீகஞானம். கர்த்தருக்குப் பயப்படுவதே ஜீவன். தெய்வீகஞானம் நம்முடைய ஜீவியகாலத்தை அதிகரிக்கும்.

ஞானம் நமக்கு கேடகத்தைப்போல பாதுகாப்பாயிருக்கும். ஞானத்தைப்போலவே நம்முடைய திரவியமாகிய ஐசுவரியமும் நமக்கு பாதுகாப்பாயிருக்கும். சில சமயங்களில் நம்முடைய ஐசுவரியம் நமக்கு பாதுகாப்பாயிருப்பதற்குப் பதிலாக, ஆபத்தை வருவிக்கும். ஆகையினால் நம்முடைய ஐசுவரியத்தை, நமக்கு நன்மை உண்டாக, பாதுகாப்பாய் பயன்படுத்தவேண்டும். நம்முடைய ஞானம் நமக்கு பெலனைத் தரும். ஞானம் நம்மை ஆதரிக்கும். ஞானம் ஞானியை அதிக பலவானாக்கும். ஞானியின் ஆவிகளை பலப்படுத்தும்.

ஞானம் தன்னை உடையவர்களுக்கு ஜீவனைத் தரும். இதுவே அறிவின் மேன்மை. ஞானம் ஞானமுள்ளவனைத் தைரியமுள்ளவனாக்கும். ஞானமுள்ளவன் தெளிவாகச் சிந்திப்பான். குழப்பத்திலிருக்க மாட்டான். ஞானமான முடிவுகளை எடுப்பான். ஞானமுள்ளவனின் கால்கள் இடறுவதில்லை. அவனுடைய ஆவிக்குரிய ஜீவியம் வலுவான அஸ்திபாரத்தின்மீது கட்டப்பட்டிருக்கும். ஞானமுள்ளவன் சறுக்கலான பாதைகளில் நடக்கமாட்டான். அவனுடைய நடைகள் பிசகாமல் உறுதியாயிருக்கும்.

தேவனுடைய செயல்
பிர 7:13,14

பிர 7:13. தேவனுடைய செயலைக் கவனித்துப் பார்; அவர் கோணலாக்கினதை நேர்மையாக்கத் தக்கவன் யார்?

பிர 7:14. வாழ்வுகாலத்தில் நன்மையை அநுபவித்திரு, தாழ்வுகாலத்தில் சிந்தனைசெய்; மனுஷன் தனக்குப்பின் வருவதொன்றையும் கண்டுபிடியாதபடிக்கு தேவன் இவ்விரண்டையும் ஒன்றுக்கொன்று எதிரிடையாக வைத்திருக்கிறார்.

ஞானமுள்ளவன் தேவனுடைய செயலைக் கவனித்துப் பார்ப்பான். நம்முடைய ஜீவியத்தில் உயர்வும் வரும், தாழ்வும் வரும். சந்தோஷமும் வரும். துக்கமும் வரும். ஞானமுள்ளவன், தன்னுடைய ஜீவியத்தில் நடைபெறுகிற எல்லா சம்பவங்களையும் நிதானமாய் நிதானித்துப் பார்ப்பான். தனக்கு சோதனைகளும், சோர்வுகளும் வரும்போது முறுமுறுக்கமாட்டான். ஞானம் மனுஷனுடைய முறுமுறுப்பை அமைதிப்படுத்தும்.

கர்த்தருடைய பிள்ளைகளுக்கு தேவனுடைய சித்தத்தின் பிரகாரமாகவே எல்லா காரியங்களும் நடைபெறும். நம்முடைய வாழ்க்கையில் நடைபெறும் அனைத்து காரியங்களிலும், நாம் தேவனுடைய செயலை கவனித்துப் பார்க்கவேண்டும். தேவன் செய்கிற காரியங்களை நாம் குறை சொல்லக்கூடாது. தேவனுடைய கிரியைக்கு விரோதமாய் நம்முடைய வாயைத் திறக்கக்கூடாது. தேவனுடைய கிரியைகள் எல்லாமே ஞானமுள்ளதாகவும், நீதியுள்ளதாகவும், நன்மையுள்ளதாகவும் இருக்கிறது. தேவனுடைய கிரியைகளெல்லாவற்றிலும் ஒரு ஒற்றுமை காணப்படுகிறது. தேவனுடைய கிரியைகள் அழகானவை. தம்மை நம்புகிற பிள்ளைகளுக்கு, தேவன் நன்மையான காரியங்களைச் செய்கிறார். ஒரு சில காரியங்கள் ஆரம்பத்தில் நமக்கு கசப்பாகயிருந்தாலும், முடிவில் அதுவே நமக்கு நன்மையாயிருக்கும். ஒரு காரியத்தின் துவக்கத்தைப் பார்க்கிலும் அதன் முடிவே நல்லது.

தேவன் சில காரியங்களை கோணலாக்குகிறார். இது அவருடைய தெய்வீக சித்தம். தேவன் கோணலாக்கினதை யாராலும் நேர்மையாக்க முடியாது. தேவன் இயற்கையில் ஏராளமான காரியங்களை ஸ்தாபித்து வைத்திருக்கிறார். இவையெல்லாமே அவருடைய மாறாத பிரமாணங்கள். இயற்கையில் சம்பவிக்கிற காரியங்களை நம்மால் மாற்றவே முடியாது. தேவனுடைய கிரியைகள் எப்படியிருக்கிறதோ, அப்படியே அவற்றை ஏற்றுக்கொள்ளவேண்டும். தேவனுடைய கிரியையில் மகிழ்ச்சியாயிருக்கவேண்டும்.

தேவன் இயற்கையில் பல காலங்களையும், சீதோஷ்ண நிலைகளையும் ஏற்படுத்தியிருக்கிறார். தேவனுடைய பராமரிப்பு எல்லா காலங்களிலும் ஒன்றுபோலிருப்பதில்லை. அவருடைய பராமரிப்பு மாறலாம். ஆனால் அவருடைய அன்பு ஒருபோதும் மாறுவதில்லை. தேவனுடைய செயலை நாம் கவனித்துப் பார்த்து, தேவன் நமக்கு நியமித்திருக்கிற செயல்களை பயபக்தியோடு செய்யவேண்டும். ஒவ்வொரு நாளிலும் தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற கடமைகளை பொறுப்பாய் நிறைவேற்றவேண்டும்.

ஒவ்வொரு நாளிலும் இரவும் பகலும் மாறி மாறி வருகிறது. ஒவ்வொரு வருஷத்திலும் கோடைகாலமும், குளிர்காலமும் மாறி மாறி வருகிறது. இவை ஒன்றுக்கொன்று எதிரிடையாயிருக்கிறது. தேவனே இவ்விரண்டையும் ஒன்றுக்கொன்று எதிரிடையாய் வைத்திருக்கிறார். மனுஷன் ஞானமுள்ளவன். ஆனாலும் அவனுடைய ஞானம் குறைவுள்ளது. தனக்குப் பின் வருவது ஒன்றையும், எந்த மனுஷனாலும் கண்டுபிடிக்க முடியாது.

மனுஷனுக்கு வாழ்வு காலமும் வரும். தாழ்வு காலமும் வரும். "வாழ்வு காலத்தில் நன்மையை அனுபவித்திரு" என்றும், "தாழ்வு காலத்தில் சிந்தனை செய்" என்றும் சாலொமோன் சொல்லுகிறார். நமக்கு வாழ்வுகாலம் வரும்போது, நாம் நன்மைகளைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் போல இருக்கவேண்டும். நமக்கு தாழ்வு காலம் வரும்போது, நமக்கு தாழ்மை வராததுபோல இருக்கவேண்டும். தாழ்வுகாலத்தில் அழுவதற்குப் பதிலாக சிந்திக்கவேண்டும். வாழ்வு காலத்தில் பெருமைப்படுவதற்குப் பதிலாக கர்த்தரைத் துதிக்கவேண்டும். வாழ்வு காலமும், தாழ்வு காலமும் நிரந்தரமானதல்ல. அவை மாறி மாறி வரும். எல்லாவற்றிற்கும் ஒரு முடிவு உண்டு. ஆனால் மனுஷனால் தனக்குப் பின் வருவது ஒன்றையும் கண்டுபிடிக்க முடியாது. தனக்கு என்ன வருகிறதோ அதை அவன் அனுபவிக்கவேண்டும். எல்லாம் தேவனுடைய செயல் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

தேவன் தம்முடைய தெய்வீக பராமரிப்பின் பிரகாரம், நமக்கு வாழ்வுகாலத்தையும் தாழ்வுகாலத்தையும் நியமித்திருக்கிறார். இவையெல்லாவற்றையும் நாம் கர்த்தரை சார்ந்து அனுபவிக்கவேண்டும். நம்முடைய வாழ்க்கையில் எப்படிப்பட்ட காரியங்கள் சம்பவித்தாலும், அவையெல்லாமே கர்த்தருடைய செயல் என்று தீர்மானம் செய்து, அவற்றை அனுபவிக்க ஆயத்தமாயிருக்கவேண்டும்.

நம்முடைய ஜீவியத்தில் நடைபெறுகிற காரியங்கள் மாறலாம். காலங்கள் மாறலாம். சூழ்நிலைகள் மாறலாம். ஆனால் கர்த்தரோ மாறாதவர். அவருடைய வாக்குத்தத்தங்களும் மாறாதவை. அவருடைய வார்த்தைகளும் ஒருபோதும் மாறுவதில்லை. கர்த்தருடைய உபதேசங்கள் எல்லா சூழ்நிலைகளிலும் ஒன்றுபோலவே இருக்கும். தேவனுடைய சத்தியம் சூழ்நிலைகளின் மாற்றத்தினால் ஒருபோதும் மாறுவதில்லை. மாறுகிற இந்த உலகத்தில், மாறாத கர்த்தரை நாம் பற்றிக்கொள்ள பழகவேண்டும்.

வாழ்வுகாலத்தில் நாம் சந்தோஷமாயிருக்கவேண்டும். நன்மை செய்யவேண்டும். நன்மைகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும். நம்முடைய சந்தோஷம் உலகப்பிரகாரமான சந்தோஷமாயிருக்கக்கூடாது. அது ஆவிக்குரிய பரிசுத்தமான சந்தோஷமாயிருக்கவேண்டும். நம்முடைய இருதயத்தின் சந்தோஷத்தினால் நாம் கர்த்தரை சேவிக்கவேண்டும்.

தாழ்வுகாலத்தில் சிந்தனை செய்யவேண்டும் என்று சாலொமோன் சொல்லுகிறார். நமக்கு தாழ்வு வரும்போது, அது ஏன் நமக்கு வந்திருக்கிறது என்பது நமக்குத் தெரியாது. இந்தத் தாழ்வு காலத்தின் முடிவு எப்படியிருக்கும் என்பதும் நமக்குத் தெரியாது. நம்முடைய காலங்கள் கர்த்தருடைய கரத்திலிருக்கிறது. ஆகையினால் எல்லா காலங்களிலும், கர்த்தருக்குள் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். எல்லா காலங்களிலுமே, போதுமென்ற பக்தியோடு, கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கவேண்டும்.

நீதிமானும் பாவியும்
பிர 7:15

பிர 7:15. இவை எல்லாவற்றையும் என் மாயையின் நாட்களில் கண்டேன்; தன் நீதியிலே கெட்டுப்போகிற நீதிமானுமுண்டு, தன் பாவத்திலே நீடித்திருக்கிற பாவியுமுண்டு.

இந்தப் பிரபஞ்சத்தில் துன்மார்க்கரில் அநேகர் செழித்திருக்கிறார்கள். அவர்களிடத்தில் திரளான ஐசுவரியமும் சம்பத்தும் குவிந்து கிடக்கிறது. ஆனால் கர்த்தருடைய பிள்ளைகளில் அநேகர், வறுமையிலும், வேதனையிலும், தரித்திரத்திலும் இருக்கிறார்கள். இப்பிரபஞ்சத்தில் கர்த்தருடைய பரிசுத்தவான்கள் அநேகருக்கு ஏராளமான துன்பங்களும், தொல்லைகளும் வருகிறது. அனைத்து காரியங்களும் தேவனுடைய தெய்வீக பராமரிப்பின் பிரகாரமாகவே நடைபெறுகிறது. நம்முடைய மனுஷஞானத்தினால் தேவனுடைய பராமரிக்கும் தாற்பரியத்தை நம்மால் புரிந்துகொள்ள முடியாது. தேவனுடைய காரியங்களை தேவனுடைய ஞானத்தினால் மாத்திரமே புரிந்துகொள்ள முடியும்.

தெய்வீக ஞானம் தேவனுடைய பராமரிப்பை நமக்கு உபதேசம் பண்ணும். நம்முடைய ஜீவியத்தில் உயர்வு வந்தாலும், தாழ்வு வந்தாலும், நம்மிடத்தில் தேவனுடைய ஞானம் இருக்கும்போது, நாம் தேவனுடைய சமுகத்தில் பரிசுத்தமாயும், உண்மையாயும் இருப்பதற்கு உதவியாயிருக்கும். தேவனுடைய நன்மையே மெய்யான ஆசீர்வாதம். இந்த உலகத்தில் நடைபெறுகிற எல்லா காரியங்களையும் சாலொமோன் பார்க்கிறார். தன்னுடைய நாட்களை மாயையின் நாட்கள் என்று சொல்லுகிறார். சாலொமோனுக்கு எல்லாம் மாயையாயிருக்கிறது.

சாலொமோன் ஞானத்தில் சிறந்தவர். ஆனாலும் அவருக்குக்கூட அவருடைய நாட்கள் மாயையாயிருக்கிறது. நாம் இந்தப் பிரபஞ்சத்தில் ஜீவிக்கிற நாட்களும் நமக்கு மாயையானது. நம்முடைய வாழ்வுகாலமும் மாயை. நம்முடைய தாழ்வு காலமும் மாயை. நம்முடைய நித்தியகாலத்தோடு, இப்பிரபஞ்சத்தின் காலத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இங்குள்ள காலம் எல்லாமே நமக்கு மாயையாகவே இருக்கும்.

இந்தப் பிரபஞ்சத்தில் வேதனைகளையும், சஞ்சலங்களையும் அனுபவிக்கிற நீதிமான்கள், தங்களுடைய வருங்கால ஆசீர்வாதத்திற்காக தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்கிறார்கள். துன்மார்க்கரோ தங்களுடைய அழிவுக்கு நேராக ஆயத்தமாயிருக்கிறார்கள். எல்லோருக்கும் நியாயத்தீர்ப்பு நியமிக்கப்பட்டிருக்கிறது. ஒருதரம் பிறப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும் எல்லா மனுஷருக்கும் வரும். இந்தப் பிரபஞ்சத்தில் தன் நீதியிலே கெட்டுப்போகிற நீதிமான்களும் இருக்கிறார்கள். தன் பாவத்திலே நீடித்திருக்கிற பாவியும் இருக்கிறார்கள்.

நீதிமான் தன்னுடைய சுயநீதியை சார்ந்திருக்கக்கூடாது. தேவனுடைய கிருபையே பிரதானம். தேவனுடைய நியாயத்தீர்ப்பு நாளின்போது தேவநீதி வெளிப்படும். தேவனிடத்தில் பட்சபாதமுமில்லை. மாறுபாடுமில்லை. அந்நாளுக்காக நாம் பொறுமையோடு காத்திருக்கவேண்டும். அதன் பின்பு எதிலும் மாயையிராது. எல்லாம் சத்தியமாயிருக்கும்.

மிஞ்சின நீதிமானும் மிஞ்சின துஷ்டனும்
பிர 7:16-18

பிர 7:16. மிஞ்சின நீதிமானாயிராதே, உன்னை அதிக ஞானியுமாக்காதே; உன்னை நீ ஏன் கெடுத்துக்கொள்ள வேண்டும்?

பிர 7:17. மிஞ்சின துஷ்டனாயிராதே, அதிக பேதையுமாயிராதே; உன் காலத்துக்கு முன்னே நீ ஏன் சாகவேண்டும்?

பிர 7:18. நீ இதைப் பற்றிக்கொள்வதும் அதைக் கைவிடாதிருப்பதும் நலம்; தேவனுக்குப் பயப்படுகிறவன் இவைகள் எல்லாவற்றினின்றும் காக்கப்படுவான்.

பரிசுத்தவான்கள் தங்கள் பாதையில் மிகவும் கவனமாய் முன்செல்லவேண்டும். அதற்கு ஞானம் அதிக பிரயோஜனமுள்ளதாயிருக்கிறது. பாவிகள் தங்கள் வழிகளில் தடுமாறுவார்கள். இவர்களுக்கு ஞானம் இருந்தால், தங்கள் வழிகளில் இடறாமல் நடப்பார்கள். நம்முடைய ஞானம், நம்முடைய நடைகளைக் காத்துக்கொள்வதற்கு உதவியாயிருக்கும். தன் நீதியினால் கெட்டுப்போகிற நீதிமானும் உண்டு என்று சாலொமோன் சொல்லுகிறார். யாரும் தங்களுடைய நீதியினால் கெட்டுப்போவதில்லை. ஆனாலும், தங்களிடத்திலுள்ள நீதியை நினைத்து பெருமைப்படுவதினாலும், ஆணவமாயிருப்பதினாலும் அவர்கள் கெட்டுப்போவதற்கு வாய்ப்புள்ளது.

சாலொமோன் இந்தச் சத்தியத்தை மனதில் வைத்து, "மிஞ்சின நீதிமானாயிராதே, உன்னை அதிக ஞானியுமாக்காதே" என்று சொல்லுகிறார். ஒருவன் மிஞ்சின நீதிமானாயிருந்து, தன்னை அதிக ஞானியாக்கும்போது, அவன் தன்னைத்தானே கெடுத்துக்கொள்கிறான். தன்னுடைய தலையின்மேல் தீங்குகளை வரவழைத்துக்கொள்கிறான். இவனுடைய ஞானமும் நீதியும் இவனுக்கு நன்மை செய்வதற்குப் பதிலாக தீமை செய்யும்.

விசுவாசிகளெல்லோருமே தங்கள் சுயத்தை வெறுக்கவேண்டும். நம்முடைய மாம்சத்தை சிலுவையில் அறையவேண்டும். நாம் பாவத்திற்கு மரிக்கவேண்டும். நீதிக்குப் பிழைத்திருக்கவேண்டும். இதுவே நமக்கு நன்மையானது. நம்முடைய பரிசுத்தத்தினாலும், நம்முடைய நீதியினாலும் நமக்கு பெருமை உண்டாகுமானால், அது நமக்கு தீமையையே விளைவிக்கும். இருதயத்தில் பெருமையுள்ளவர்கள் தேவனுடைய ஊழியத்தை செய்வதற்கு தகுதியில்லாதவர்கள். ஆகையினால் நாம் மிஞ்சின நீதிமானாயிருக்கக்கூடாது.

நம்முடைய சுயபுத்தியின்மீதும், சுயஞானத்தின்மீதும், சுயநீதியின்மீதும் சார்ந்திருக்கக்கூடாது. நம்முடைய சுயபலத்தின்மீதும், சுயபராக்கிரமத்தின்மீதும் சார்ந்திருப்போமென்றால், நமக்கு நன்மை உண்டாகாமல், தீமையே உண்டாகும். மிஞ்சின நீதிமானாயிருக்கிறவர்கள் தங்கள் சுயநீதியை சார்ந்திருப்பார்கள். தங்களை அதிக ஞானியாக்குகிறவர்கள், தங்கள் சுயஞானத்தைச் சார்ந்திருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் கர்த்தருடைய நீதிக்கும், அவருடைய ஞானத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கமாட்டார்கள். கர்த்தரே நீதியுள்ளவர். அவர் மாத்திரமே சர்வஞானமுள்ளவர்.

நீதிமான் மிஞ்சின நீதிமானாயிருக்கக்கூடாது என்று சாலொமோன் சொல்லிவிட்டு, அவர் துஷ்டர்களைப்பற்றியும் சொல்லுகிறார். "மிஞ்சின துஷ்டனாயிராதே, அதிக பேதையுமாயிராதே" என்றும் சொல்லி பாவிகளை எச்சரிக்கிறார். தன் பாவத்திலே நீடித்திருக்கிற பாவிகளும் இருக்கிறார்கள். தன்னுடைய பாவத்தில் நிலைத்திருப்பதே தனக்கு நல்லது என்று நினைத்து, பாவிகள் மிஞ்சின துஷ்டராயிருக்கக்கூடாது.

தன்னிடத்தில் ஞானமில்லாமல் இருப்பதே தனக்கு நல்லது என்று நினைத்து, பாவிகள் தங்களை அதிக பேதையாக்கக்கூடாது. வேதபிரமாணத்தைப் புரிந்துகொள்வதற்கு நமக்கு ஞானம் தேவை. வேதத்தைப் படித்தால் நமக்கு புரியாது என்று நினைத்து, அதைப் படிக்காமலேயே இருந்துவிடக்கூடாது. சத்திய வசனத்தை நாம் புரிந்து கொள்ளவில்லையென்றால் நமக்கு ஆவிக்குரிய மரணமுண்டாகும். சரீரப் பிரகாரமான தீங்கு உண்டாகும். ஒருவன் தன்னை அதிக பேதையாக்கும்போது, அவன் தன் காலத்திற்கு முன்னே மரிக்கவேண்டியது வரும். இந்த ஆபத்தை எச்சரிக்கும் வண்ணமாக, சலொமோன் பாவிகளைப் பார்த்து, "அதிக பேதையுமாயிராதே, உன் காலத்திற்கு முன்னே நீ ஏன் சாகவேண்டும்" என்று கேட்கிறார்.

நாம் எல்லா காரியங்களிலும் நிதானமாயிருக்கவேண்டும். உச்சநிலையை அடையவேண்டுமென்று பேராசைப்படக் கூடாது. நம்மிடத்தில் நிதானமான ஞானம் இருக்கும்போது, நம்முடைய சிந்தனைகளும் செயல்களும் மட்டாயிருக்கும். தீவிரமான யோசனைகளுக்கும், கிரியைகளுக்கும் நம்மிடத்தில் இடமிருக்காது. நமக்கு ஞானம் தேவை. மிஞ்சின ஞானம் தேவையில்லை. மிஞ்சின ஞானம் நம்மை இறுமாப்பு அடையச்செய்யும். நிதானமான ஞானமோ, நம்முடைய கடமைகளைச் செய்ய நம்மை வழிநடத்தும். சரியான பாதையில் செல்ல நமக்கு உதவிசெய்யும்.

நாம் நீதியைப் பற்றிக்கொள்ளவேண்டும். ஞானத்தைக் கைவிடாதிருக்கவேண்டும். இது நமக்கு மிகவும் நல்லது. நாம் மிஞ்சின நீதிமானாயும் இருக்கக்கூடாது. மிஞ்சின துஷ்டனாயும் இருக்கக்கூடாது. நம்மிடத்தில் நிதானமான ஞானமிருக்கும்போது, நாம் கண்ணிகளில் சிக்கிக்கொள்ளாதவாறு பாதுகாப்பாயிருப்போம். தேவனுக்குப் பயப்படுகிறவன் மிஞ்சின காரியங்களிலிருந்து பாதுகாக்கப்படுவான். அவனுடைய சிந்தையும் செயலும் நிதானமாயிருக்கும். அவசரப்பட்டு ஆபத்திலே சிக்கிக்கொள்ளமாட்டான்.

குதிரைக்கு கடிவாளம் தேவை. குதிரை வேகமாக ஓடிக்கூடியது. அது தாறுமாறாக ஓடினால், அதன்மீது ஏறி நம்மால் பிரயாணம் செய்யமுடியாது. குதிரை ஓடாமல் சண்டித்தனம்பண்ணினாலும், அது நமக்குப் பிரயோஜனப்படாது. குதிரையின் கடிவாளம் நம்முடைய கையிலிருக்கவேண்டும். நம்முடைய விருப்பத்தின் பிரகாரம், குதிரையின் ஓட்டத்தை நாம் இயக்கவேண்டும். குதிரைக்குப் புத்தியில்லை. கர்த்தரோ நமக்கு ஞானத்தைக் கொடுத்திருக்கிறார். கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற ஞானத்தைப் பற்றிக்கொள்ளவேண்டும். கர்த்தர் கொடுத்ததை கைவிட்டுவிடக்கூடாது. இருதயத்தில் பெருமையுள்ளவர்கள், தங்கள் அகந்தையினால் கடிவாளத்தைப் பிடிக்கமாட்டார்கள். தங்களுக்கு எல்லாம் தெரியுமென்று ஆணவமாயிருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் வேகமாக ஓடும் குதிரையிலிருந்து கீழே விழுந்துவிடுவார்கள்.

நம்முடைய மனச்சாட்சி நம்மோடு பேசும்போது, நாம் அதற்கு செவிகொடுக்கவேண்டும். மிகுந்த எச்சரிப்போடிருக்க வேண்டும். கர்த்தரைப்பற்றிக்கொள்ள வேண்டும். கர்த்தருக்குப் பயப்படுவதே ஞானத்தின் ஆரம்பம். கர்த்தருக்குப் பயப்படுகிறவன், தீங்குகளுக்கு விலக்கிப் பாதுகாக்கப்படுவான்.

ஞானம்
பிர 7:19-22

பிர 7:19. நகரத்திலுள்ள பத்து அதிபதிகளைப் பார்க்கிலும், ஞானம் ஞானியை அதிக பெலவானாக்கும்.

பிர 7:20. ஒரு பாவமும் செய்யாமல், நன்மையே செய்யத்தக்க நீதிமான் பூமியிலில்லை.

பிர 7:21. சொல்லப்படும் எல்லா வார்த்தைகளையும் கவனியாதே; கவனித்தால் உன் வேலைக்காரன் உன்னை நிந்திப்பதைக் கேள்விப்படவேண்டியதாகும்.

பிர 7:22. அநேகந்தரம் நீயும் பிறரை நிந்தித்தாயென்று, உன் மனதுக்குத் தெரியுமே.

நாம் மற்றவர்களோடு எப்படி பேசவேண்டும், எப்படி பழகவேண்டும் என்று ஞானம் நமக்குக் கற்றுத்தரும். நம்மிடத்தில் ஞானம் இருக்கும்போது, நாம் பிறரை நிதானமாய் நியாயந்தீர்ப்போம். மற்றவர்களிடத்தில் ஒரு தப்பிதமும் இருக்கக்கூடாது என்று எதிர்பார்ப்போம். நம்மிடத்தில் தப்பிதம் இருப்பதுபோலவே, மற்றவர்களிடத்திலும் தப்பிதம் இருக்கும் என்பதைப் புரிந்துகொள்வோம். ஒரு பாவமும் செய்யாமல் நன்மையே செய்யத்தக்க நீதிமான் பூமியிலில்லை. எல்லோரும் பாவம் செய்து ஏகமாய்க் கெட்டுப்போயிருக்கிறார்கள்.

ஞானம் ஞானியை அதிக பெலவானாக்கும். நமக்கு விரோதமாக சத்துரு யுத்தம்பண்ணும்போது, நம்முடைய சுயபலத்தினால் நாம் அவனோடு யுத்தம்பண்ணக்கூடாது. கர்த்தர் நமக்குக் கொடுக்கும் ஞானத்தைப் பெற்றுக்கொண்டு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக்கொண்டு, சத்துருவோடு யுத்தம்பண்ணவேண்டும். நம்முடைய யுத்தம் உலகப்பிரகாரமான யுத்தமல்ல. இது ஆவிக்குரிய யுத்தம். நம்முடைய யுத்தத்தில் சகலமும் ஒழுங்கும் கிரமமுமாயிருக்க வேண்டும். நம்மிடத்தில் குழப்பம் இருந்தால், நம்முடைய செயலும் குழப்பமாயிருக்கும். ஞானம் நமக்கு தெளிந்த சிந்தனையையும், தெளிந்த புத்தியையும் தரும்.

நகரத்திலுள்ள பத்து அதிபதிகள் ஒன்றுசேர்ந்தால் அவர்களுக்கு அதிக பெலனிருக்கும். ஆனால் ஞானமோ, ஞானியை அவர்களைவிட அதிக பெலவானாக்கும் என்று சாலொமோன் சொல்லுகிறார். தேவனாகிய கர்த்தர் நம்மை மனுஷராகவே சிருஷ்டித்திருக்கிறார். நம்முடைய சுயஞானத்தையும், சுயநீதியையும் நோக்கிப் பார்த்து, இருதயத்தில் பெருமைப்பட்டு, நம்மை தேவதூதர்களாகப் பாவித்துக்கொள்ளக்கூடாது. நாம் தேவதூதர்களல்ல. மனுஷர்கள்தான். ஆதாமின் சந்ததியில் வந்திருக்கிற சந்ததியார்தான். ஆதாமின் பாவத்தினால், நமக்குள் ஜென்மபாவம் பிரவேசித்திருக்கிற சந்ததியார்.

இந்த உலகத்தில் நல்லவர்கள் அநேகர் இருக்கிறார்கள். அவர்களிடத்திலும் தப்பிதங்கள் இருப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. சாலொமோன் இதைப்பற்றிச் சொல்லும்போது, "ஒரு பாவமும் செய்யாமல் நன்மையே செய்யத்தக்க நீதிமான் பூமியிலில்லை" என்று சொல்லிவிடுகிறார். நம்மிடத்தில் ஞானம் இருக்கும்போது, நாம் மற்றவர்களை பார்க்கவேண்டிய விதமாகப் பார்ப்போம். யாரையும் அரைகுறையாகப் பார்த்து, அவசரப்பட்டு முடிவு பண்ணமாட்டோம்.

நமக்கு அநேகர் அநேக தீங்குகளைச் செய்திருக்கலாம். நம்முடைய மனதை வேதனைப்படுத்தி காயப்படுத்தியிருக்கலாம். நமக்கு தீங்கு செய்தவர்களை நோக்கிப் பார்க்கும்போது, நமக்கு ஆச்சரியமும், ஏமாற்றமும், கோபமும் வரலாம். ஆகையினால் சொல்லப்படும் எல்லா வார்த்தைகளையும் கவனியாதே என்று சாலொமோன் சொல்லுகிறார். நாம் அநேகந்தரம் பிறரை நிந்திப்பதுபோலவே, அவர்களும் நம்மை நிந்திப்பார்கள். ஒருவரையொருவர் நிந்திப்பது மனுஷருடைய இயல்பான சுபாவம். இது எல்லோருக்கும் பொதுவானது. எல்லா மனுஷரும் குறைவுள்ளவர்கள்.

நாம் இந்தப் பிரபஞ்சத்தில் சமாதானத்தோடு ஜீவிக்கவேண்டுமென்றால், சொல்லப்படும் எல்லா வார்த்தைகளையும் கவனிக்கக்கூடாது. மற்றவர்கள் நம்மைப்பற்றி என்ன பேசுகிறார்கள் என்பதை அறிந்துகொள்வதற்கு அதிகமாய்க் கவனம் செலுத்தக்கூடாது. நாம் கர்த்தருக்கு முன்பாக பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும். நம்முடைய மனச்சாட்சி தேவனுடைய சமுகத்தில் சுத்தமாயிருக்கவேண்டும். நம்மிடத்தில் சுத்தமிருக்கும்போது, மற்றவர்கள் நம்மைப்பற்றி பேசுகிற வார்த்தைகளை கவனித்துக் கேட்கவேண்டும் என்னும் அவசியம் ஏதுவுமில்லை. அதைக் கவனித்தால், நம்முடைய வேலைக்காரன், நம்மை நிந்திப்பதையும், நாம் கேள்விப்பட வேண்டியதாகும்.

நம்மை நிந்திக்கிறவர்களை நாம் பழிவாங்க வேண்டுமென்று நினைக்கக்கூடாது. அவர்களுக்கு தீங்கு செய்யவேண்டுமென்று தீர்மானித்து, நாமும் அவர்கள்மீது தூஷணவார்த்தைகளைப் பேசக்கூடாது. நாம் மற்றவர்களைப்பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்தால், நம்மைப்பற்றி சிந்திப்பதற்கு நமக்கு காலஅவகாசம் இல்லாமல் போய்விடும். நம்மிடத்தில் ஞானமிருக்கும்போது, அந்த ஞானம் நம்முடைய பாவத்தையும் நமக்கு சுட்டிக்காண்பிக்கும். நாமும் அநேகந்தரம் பிறரை நிந்தித்தோம் என்பது நம்முடைய மனதிற்குத் தெரியும். மற்றவர்கள் நம்மை நிந்திப்பதுபோலவே, நாமும் அவர்களை நிந்தித்திருக்கிறோம். நம்மிடத்தில் விசேஷித்த நற்குணம் ஏதுவுமில்லை. மற்றவர்களிடத்தில் காணப்படுகிற துர்க்குணமே நம்மிடத்திலும் காணப்படுகிறது.

நாம் விதைத்ததை நாம் அறுப்போம். நாம் தீவினையை விதைக்கும்போது, நாம் தீவினையை திரளாய் அறுவடை செய்வோம். நாம் நிந்திப்பதை விதைக்கும்போது, அதிகமான நிந்தனையை அறுவடை செய்வோம். நம்முடைய வேதனைகளுக்கு நாமே காரணமாகயிருக்கிறோம். நாமே கிரயம் செலுத்தி தொல்லைகளை கிரயத்திற்கு வாங்கிக்கொள்கிறோம். நமக்கு வரும் பிரச்சனைகளுக்கு நாமே காரணம். இவை நம்முடைய காசுகளினால் நமக்காக கிரயத்திற்கு வாங்கப்பட்டது.

நமக்கு கோபம் வருமென்றால், அது பிறர்மீது வரக்கூடாது. நம்மீதே நாம் கோபப்படவேண்டும். நாம் மற்றவர்களை நிந்தித்தற்காக நாம் நம்மீது கோபப்படவேண்டும். நாம் மற்றவர்களை அநியாயமாய் நியாயந்தீர்த்ததற்காகவும், நாம் பிறரைப்பற்றி புறங்கூறியதற்காகவும், நாம் நம்மீதே கோபப்பட்டுக்கொள்ளவேண்டும். மற்றவர்கள் நம்மை நிந்திப்பதைக் கேட்டு நாம் கோபப்படக்கூடாது. நாம் மற்றவர்களை நிந்திப்பதற்காக, நாம் நம்மீதே கோபப்படவேண்டும்.

தூரமும் மகா ஆழமுமாயிருக்கிற ஞானம்
பிர 7:23,24

பிர 7:23. இவை எல்லாவற்றையும் ஞானத்தினால் சோதித்துப்பார்த்தேன்; நான் ஞானவானாவேன் என்றேன், அது எனக்குத் தூரமாயிற்று.

பிர 7:24. தூரமும் மகா ஆழமுமாயிருக்கிறதைக் கண்டடைகிறவன் யார்?

சாலொமோன் இதுவரையிலும் உலகத்திலுள்ள மாயையான காரியங்களை விவரித்துச் சொல்லியிருக்கிறார். அவற்றால் மனுஷருக்கு மெய்யான சந்தோஷம் வரப்போவதில்லை. இப்போது பாவத்தின் தீங்கைப்பற்றி சாலொமோன் விரிவாகச் சொல்லுகிறார். பாவத்தினால் மனுஷனுக்கு தீங்கும் வேதனையும் வருகிறது. பாவத்தின் சம்பளம் மரணம். பாவத்தினால் வரும் தீங்குகளை விவரிப்பதற்கு, சாலொமோன் தன்னுடைய அனுபவத்தையே எடுத்துக்காட்டாகச் சொல்லுகிறார்.

“நான் ஞானவானாவேன் என்றேன், அவை எனக்குத் தூரமாயிற்று” என்று சாலொமோன் சொல்லுகிறார். சாலொமோன் தான் செய்த பாவங்களுக்காக மனம் வருந்துகிறார். தன்னுடைய சுயஞானத்தினாலே தனக்கு பாவமன்னிப்பு கிடைக்காது என்பது சாலொமோனுக்கு நன்றாய்த் தெரிந்திருக்கிறது. தன்னுடைய ஞானம் குறைவுள்ளது என்பதை சாலொமோன் அறிந்து வைத்திருக்கிறார்.

தேவன் சாலொமோனுக்கு ஞானத்தைக் கொடுத்திருக்கிறார். எல்லாவற்றையும் தன்னுடைய ஞானத்தினாலே சாலொமோன் சோதித்துப் பார்க்கிறார். சாலொமோனிடத்தில் தேவனுடைய விசேஷித்த ஞானம் தங்கியிருக்கிறது. மற்றவர்களுடைய ஞானத்தைவிட, சாலொமோனுடைய ஞானம் விசேஷமானது. தன்னுடைய ஞானத்தினால், தன்னுடைய ஞானத்தை இன்னும் அதிகமாய் வளர்த்துக்கொள்ள முடியும் என்று சாலொமோன் நம்பினார். ஆனால் அவருக்கு ஞானம் தூரமாயிற்று. சாலொமோனுக்குத் தோல்வியுண்டாயிற்று.

ஞானத்தையும் காரணகாரியத்தையும் விசாரித்து ஆராய்ந்து அறியவேண்டும் என்னும் ஆர்வம் சாலொமோனுடைய இருதயத்தில் உண்டாயிற்று. இதற்காக அவர் தன்னுடைய மனதை செலுத்தினார். தன்னுடைய கல்வியும், தன்னுடைய தத்துவமும், தன்னுடைய பக்தியும் பிரயோஜனமாயிருக்கும் என்று எதிர்பார்த்தார். ஆனால் எல்லாமே அவருக்கு மாயையாயிற்று.

சாலொமோனுக்கு அவருடைய ஞானத்தினால் திருப்தி உண்டாகவில்லை. தன்னால் ஞானவானாக முடியும் என்று சாலொமோன் தனக்குள் தீர்மானித்திருந்தார். ஆனால் அவர் விரும்பிய ஞானத்தை அவரால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. அவர் எதிர்பார்த்த ஞானம் அவருக்குத் தூரமாயிற்று. அவர் எவ்வளவு அதிகமாக தெரிந்து வைத்திருந்தாலும், இன்னும் தெரியவேண்டியது அதிகமாயிருக்கிறது. அறிந்த காரியங்களைவிட அறியாத காரியங்களே மிகவும் அதிகம். தனக்கு அதிகமாய் ஒன்றும் தெரியவில்லை என்பதை சாலொமோன் அறிந்துகொள்கிறார். தன்னுடைய அறியாமையையும், பேதமையையும் சாலொமோன் அங்கீகரிக்கிறார்.

சாலொமோன் ஞானத்தைத் தேடிக்கண்டுபிடிக்க முயற்சி பண்ணினார். ஆனால் ஞானமோ அவருக்கு சமீபத்தில் இல்லை. அது அவருக்குத் தூரமாயிற்று. முடிவில், தூரமும், மகா ஆழமுமாயிருக்கிற ஞானத்தை, தன்னால் கண்டுபிடிக்க முடியாது என்பதை சாலொமோன் புரிந்துகொள்கிறார். தன்னால் மாத்திரமல்ல, எந்த மனுஷனாலும், பூரண ஞானத்தைக் கண்டுபிடிக்க முடியாது என்று தீர்மானிக்கிறார்.

பூரணஞானம் கர்த்தரிடத்தில் மாத்திரமே உள்ளது. கர்த்தர் மாத்திரமே சர்வஞானமுள்ளவர். தேவன் மாத்திரமே ஆலோசனையில் பெரியவர். அவருடைய செய்கைகளில் வல்லவர். தேவனுடைய மகத்துவங்களையும், ஞானத்தையும், கிரியைகளையும் ஆராய்ந்து பார்க்கும்போது, நமக்கு எல்லாமே ஆச்சரியமாயிருக்கிறது. நாம் இதுவரையிலும் அறிந்துகொள்ளாத காரியங்கள் அநேகமாயிருக்கிறது. நம்முடைய வாயில் சத்தியம் இருக்கவேண்டும். நம்முடைய வாயின் வாக்குகளெல்லாம் நீதியுள்ளவையாயிருக்க வேண்டும். அவைகளெல்லாம் புத்தியுள்ளவனுக்குத் தெளிவும், ஞானத்தைப் பெற்றவர்களுக்கு யதார்த்தமுமாயிருக்கும் (நீதி 8:9).

நாம் அறியாத காரியங்கள் அநேகமாயிருந்தாலும், அவற்றை அறிந்துகொள்ளவேண்டும் என்னும் ஆவல் எல்லா மனுஷரிடத்திலும் இருக்கிறது. ஆனாலும் மகா ஆழமாயிருக்கிறதை நம்மால் கண்டடையமுடியாது. அதிக தூரத்திலிருப்பதையும் நம்மால் எட்டிப் பிடிக்க முடியாது. ஞானம் நம்மிடத்தில் இருந்தாலும், ஞானத்தின் பெரும்பகுதி இன்னும் நமக்குத் தூரமாகவே இருக்கிறது. அது இன்னும் நம்மால் கண்டடைய முடியாத மகா ஆழத்தில்தான் இருக்கிறது.

மதிகேட்டின் ஆகாமியம்
பிர 7:25-29

பிர 7:25. ஞானத்தையும், காரணகாரியத்தையும் விசாரித்து ஆராய்ந்து அறியவும், மதிகேட்டின் ஆகாமியத்தையும் புத்திமயக்கத்தின் பைத்தியத்தையும் அறியவும் என் மனதைச் செலுத்தினேன்.

பிர 7:26. கண்ணிகளும் வலைகளுமாகிய நெஞ்சமும், கயிறுகளுமாகிய கைகளுமுடைய ஸ்திரீயானவள், சாவிலும் அதிக கசப்புள்ளவளென்று கண்டேன்; தேவனுக்கு முன்பாகச் சற்குணனாயிருக்கிறவன் அவளுக்குத் தப்புவான்; பாவியோ அவளால் பிடிபடுவான்.

பிர 7:27. காரியத்தை அறியும்படிக்கு ஒவ்வொன்றாய் விசாரணைபண்ணி, இதோ, இதைக் கண்டுபிடித்தேன் என்று பிரசங்கி சொல்லுகிறான்.

பிர 7:28. என் மனம் இன்னும் ஒன்றைத் தேடுகிறது, அதை நான் கண்டுபிடிக்கவில்லை; ஆயிரம்பேருக்குள்ளே ஒரு புருஷனைக் கண்டேன்; இவர்களெல்லாருக்குள்ளும் ஒரு ஸ்திரீயை நான் காணவில்லை.

பிர 7:29. இதோ, தேவன் மனுஷனைச் செம்மையானவனாக உண்டாக்கினார்; அவர்களோ அநேக உபாயதந்திரங்களைத் தேடிக் கொண்டார்கள்; இதைமாத்திரம் கண்டேன்.

சாலொமோன் தன்னிடத்தில் மதியீனம் இருப்பதை அங்கீகரிக்கிறார். அவர் தன்னுடைய மதியீனத்தை நினைத்துப் புலம்புகிறார். மதிகேட்டின் ஆகாமியத்திலும், புத்திமயக்கத்தின் பைத்தியத்திலும் சாலொமோன் நிறைவாகக் காணப்படுகிறார். ஆனால் ஞானத்திலோ அவர் குறைவுள்ளவராகவே இருக்கிறார்.

ஞானத்தையும் மதிகேட்டையும் ஆராய்ந்து பார்ப்பதற்கு தன்னுடைய மனதை செலுத்துகிறார். ஞானத்தை ஆராயும்போது, அதோடு சேர்ந்து காரணகாரியத்தையும் விசாரித்து ஆராய்ந்து அறிந்துகொள்ளவேண்டும் என்னும் ஆவல் சாலொமோனுக்கு உண்டாயிற்று. ஞானத்தோடு சேர்ந்து மதிகேட்டையும், புத்திமயக்கத்தையும் அறியவேண்டும் என்னும் ஆவலும் அவருக்கு உண்டாயிற்று. மதிகேட்டில் ஆகாமியம் இருக்கும். புத்திமயக்கத்தில் பைத்தியம் இருக்கும். சாலொமோனால் ஞானத்தையும் அறிந்துகொள்ள முடியவில்லை. மதிகேட்டையும் அறிந்துகொள்ள முடியவில்லை.

பாவத்திற்கு பல உருவங்கள் உண்டு. அது பலவிதமான வேஷங்களைப்போடும். சில சமயங்களில் பாவமானது மதிகேட்டின் ஆகாமியமாகயிருக்கும். வேறு சில சமயங்களில் அது புத்திமயக்கத்தின் பைத்தியமாகயிருக்கும். இவை இரண்டையுமே பாவமே இயக்குகிறது. பாவமே இவற்றின் மையத்திலிருக்கிறது. இவை இரண்டையும் வேறுபிரிப்பது கடினம். பாவமிருக்கும் இடத்தில் மதிகேடும் இருக்கும். மதிகேடு இருக்கும் இடத்தில் புத்திமயக்கமும் இருக்கும். இவற்றை தனித்தனியாக வேறுபிரிக்க முடியாது. பாவத்தைத் தனியாகவும், மதிகேட்டை தனியாகவும், புத்திமயக்கத்தைத் தனியாகவும் ஆராய்ந்து அறியமுடியாது.

நம்முடைய பாவங்களுக்கு நாம் மனந்திரும்பவேண்டும். நாம் இதுவரையிலும் பாவத்திற்கு ஐக்கியமாயிருந்தாலும், அதைவிட்டு விலகிவரவேண்டும். பாவத்தின் சம்பளம் மரணம். இந்தத் தண்டனையை நாம் மறந்துவிடக்கூடாது. பாவத்தின் விளைவு எப்படியிருக்கும் என்பதைப் புரிந்துகொள்ளும்போது, நாம் பாவத்தைவிட்டு விலகி ஜீவிப்போம். நம்மை பாவம் செய்யத் தூண்டும் காரண காரியங்களோடு ஐக்கியமாயிருக்கமாட்டோம்.

ஒரு நோயைக் குணப்படுத்த வேண்டுமென்றால், அந்த நோய்க்கு காரணமாகயிருக்கிற காரியங்களை நம்மைவிட்டு விலக்கவேண்டும். நாம் தீங்குக்கு விலகி ஜீவிக்கும்போது பாவத்திற்கு விலகி ஜீவிப்போம். நாம் பாவத்திற்கு விலகும்போது மதிகேட்டுக்கு விலகி ஜீவிப்போம். நாம் மதிகேட்டுக்கு விலகும்போது புத்திமயக்கத்திற்கு விலகி ஜீவிப்போம்.

சாலொமோன் தன்னுடைய மதிகேட்டில் ஜீவித்தபோது, தன்னுடைய புத்திமயக்கத்தில், சந்தோஷத்தைத் தேட முயற்சிபண்ணினார். இதனால் அவருடைய சரீரத்திற்கும் ஆத்துமாவுக்கும் ஏராளமான சேதாரமுண்டாயிற்று. கர்த்தர் சாலொமோனுடைய புத்திமயக்கத்தின் பைத்தியத்தை தெளிவுபடுத்தினார். சாலொமோனுடைய மனக்கண்களைத் திறந்தார். அவர் தன்னுடைய பாவத்தின் தீங்குகளைப் புரிந்துகொண்டார். தன்னுடைய பாவத்தினால் தனக்கு வரப்போகும் தண்டனைகளையும் அறிந்துகொண்டார்.

இந்த சூழ்நிலையில் சாலொமோன் தன்னுடைய பாவங்களுக்காக மனம் வருந்தி, கர்த்தரிடத்தில் பாவமன்னிப்பு கேட்கிறார். சாலொமோன் துணிகரமாய்ப் பாவம் செய்திருந்தாலும், தன்னுடைய பாவங்களை மன்னிக்குமாறு கர்த்தரிடத்தில் பயபக்தியாய் வேண்டிக்கொள்கிறார். கர்த்தர் நம்முடைய இருதயத்தைப் பார்க்கிறார். நம்முடைய பாவங்களுக்கு நாம் உண்மையாய் மனம் வருந்தும்போது, அவர் நம்முடைய பாவங்களை தம்முடைய கிருபையினால் மன்னிக்கிறார்.

சாலொமோன் பாவத்தைப்பற்றி ஆராயும்போது மதிகேட்டின் ஆகாமியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். சாலொமோனிடத்தில் மதிகேட்டின் ஆகாமியம் காணப்பட்டது. பாவத்தின் அசுத்தம் அநேகமாயிருந்தது. சாலொமோனுடைய பாவம் "மதிகெட்ட காரியம்" என்று பொதுவாக அழைக்கப்படுகிறது.

"யாக்கோபின் குமாரர் இந்தச் செய்தியைக் கேட்டவுடனே, வெளியிலிருந்து வந்தார்கள். அவன் யாக்கோபின் குமாரத்தியோடே சயனித்து, செய்யத்தகாத மதிகெட்ட காரியத்தை இஸ்ரவேலில் செய்ததினாலே, அந்த மனிதர் மனங்கொதித்து மிகவும் கோபங்கொண்டார்கள்" *(ஆதி 34:7)*.

"உன் தேவனாகிய கர்த்தர் தமது நாமம்விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஸ்தானம் உனக்குத் தூரமானால், கர்த்தர் உனக்கு அளித்த உன் ஆடுமாடுகளில் எதையாகிலும் நான் உனக்கு விதித்தபடி நீ அடித்து, உன் இஷ்டப்படி உன் வாசல்களிலே புசிக்கலாம்" *(உபா 12:21)*.

"ஆகையால் இஸ்ரவேலிலே அவர்கள் இப்படிப்பட்ட முறைகேட்டையும் மதிகேட்டையும் செய்தபடியினால், நான் என் மறுமனையாட்டியைப் பிடித்துத் துண்டித்து, இஸ்ரவேலின் சுதந்தரமான சகல நாடுகளுக்கும் அனுப்பினேன்" *(நியா 20:6)*.

"அதற்கு அவள்: வேண்டாம், என் சகோதரனே, என்னை அவமானப்படுத்தாதே, இஸ்ரவேலிலே இப்படிச் செய்யத்தகாது; இப்படிப்பட்ட மதிகேடான காரியத்தைச் செய்யவேண்டாம்" *(2சாமு 13:12)*.

சாலொமோன் அந்நிய ஸ்திரீகளோடு பாவம் செய்தபோது, அவருக்கு பாவத்தின் மதிகேடு சரியாய்த் தெரியவில்லை. தான் புத்திமயக்கத்திலிருந்ததையும் அவர் புரிந்துகொள்ளவில்லை. பாவத்தில் மதிகேடும் புத்திமயக்கமும் இருக்கிறது. பாவத்தில் ஆகாமியமும் பைத்தியமும் இருக்கிறது. பாவத்தின் சாபங்களை அறிந்துகொள்ளாமல், சாலொமோன் பாவத்தில் விழுந்தார். பாவத்தினால் தனக்கு சந்தோஷம் கிடைக்கும் என்று எதிர்பார்த்தார். ஆனால் அவருடைய ஆத்துமாவுக்கு சந்தோஷம் கிடைக்கவில்லை. அவருடைய மனதிற்கு வேதனையும், வருத்தமும் உண்டாயிற்று.

சாலொமோன் பாவத்தை அறிய தன்னுடைய மனதை செலுத்துகிறார். தன்னுடைய ஜீவியகாலத்தில் சாலொமோன் அந்நிய ஜாதியாரான அநேகம் ஸ்திரீகள் மேலே ஆசைவைத்தார் (1இராஜா 11:1). சாலொமோன் தன்னுடைய பாவங்களை மறந்துவிடவில்லை. அவை அவருக்கு சாவிலும் அதிக கசப்பாயிருக்கிறது. பரஸ்திரீயின் இருதயம் கண்ணிகளாகவும் வலைகளாகவும் இருக்கிறது.

புத்திமயக்கத்திலிருக்கிற ஆத்துமாக்கள், பரஸ்திரீகள்மீது ஆசை வைத்து, அவர்களுடைய கண்ணிகளில் சிக்கிக் கொள்கிறார்கள். அவர்களிடத்தில் சந்தோஷத்தைத் தேடிப்போகிறார்கள். ஆனால் வேதனையைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

பரஸ்திரீகளின் கைகள் கயிறுகளைப்போல இருக்கிறது. அவள் தன் கைகளால், தன்னிடத்தில் வருகிறவர்களைத் தழுவினாலும், அவள் மெய்யாகவே, தன்னுடைய கயிறுகளால் அவர்களை இறுகக்கட்டிப்போடுகிறாள். மதிகேட்டின் ஆகாமியத்திலும், புத்திமயக்கத்தின் பைத்தியத்திலும் நிறைந்திருக்கிறவர்களால், பரஸ்திரீயின் கட்டுக்களிலிருந்து தப்பிக்க முடியாது.

தேவனுக்கு முன்பாக சற்குணனாயிருக்கிறவன், பரஸ்திரீயின் கட்டுகளுக்குத் தப்புவான். அவளுடைய கண்ணிகளுக்கும், வலைகளுக்கும் தப்பித்துக்கொள்வான். பாவியோ அவளால் பிடிபடுவான். சாலொமோன் பல சந்தர்ப்பங்களில், தேவனுடைய பிரமாணத்தைமீறி, மதிகேட்டின் ஆகாமியத்தில் விழுந்திருக்கிறார். தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்து புத்திமயக்கத்தின் பைத்தியத்தில் சிக்கியிருக்கிறார். சாலொமோன் அந்த சோகசம்பவங்களையெல்லாம் இப்போது வேதனையோடு நினைவு கூறுகிறார்.

தன்னுடைய பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான். அவற்றை தேவனிடத்தில் அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ, தேவனுடைய இரக்கத்தையும் தயவையும், மன்னிப்பையும் பெற்றுக்கொள்வான். சாலொமோன் தன்னுடைய பாவங்களை மறைக்காமல், அவற்றை தேவனிடத்தில் மனத்தாழ்மையோடு அறிக்கை பண்ணுகிறார். தன்னுடைய இருதயத்தில் மெய்யாகவே மனந்திரும்புகிறார். தன்னுடைய பாவங்களுக்காக மெய்யாகவே மனம் வருந்துகிறார். தன்னுடைய பாவங்கள் எல்லாவற்றையும், தேவனுடைய சமுகத்தில், மறைக்காமல், அங்கீகரித்து, அறிக்கை செய்கிறார்.

சாலொமோன் உலகப்பிரகாரமான சந்தோஷத்தைப் பெற்றுக்கொள்வதற்காக, அந்நிய ஸ்திரீகள்மீது ஆசை வைத்தார். அந்நிய ஸ்திரீகளின் எண்ணிக்கையும் அதிகமாயிற்று. ஆனால் சாலொமோனுக்கு மெய்யான சந்தோஷம் கிடைக்கவில்லை. பரஸ்திரீகள் சாவிலும் அதிக கசப்புள்ளவர்கள் என்பதை சாலொமோன் புரிந்துகொள்கிறார். காரியத்தை அறியும்படிக்கு சாலொமோன் தன்னுடைய பாவங்கள் ஒவ்வொன்றாய் விசாரணை பண்ணுகிறார். அவற்றையெல்லாம் தன்னுடைய இருதயத்தில் நினைவுகூருகிறார்.

சாலொமோன் எல்லாவற்றையும் விசாரணைபண்ணி அநேகக் காரியங்களை கண்டுபிடித்தாலும், தன்னுடைய மனம் இன்னும் ஒன்றைத் தேடுகிறது என்று சொல்லுகிறார். அதை அவர் இன்னும் கண்டுபிடிக்கவில்லை. பாவத்தினால் வரும் தீங்குகளை ஓரளவுதான் கண்டுபிடித்திருக்கிறார். பாவத்தினால் என்னென்ன தீங்குகள் வரும் என்பதை சாலொமோன் இன்னும் பூரணமாய்க் கண்டுபிடிக்கவில்லை. பாவத்தின் சம்பளம் மதிகேட்டின் ஆகாமியமும், புத்திமயக்கத்தின் பைத்தியமும் ஆகும். பாவத்தின் சம்பளம் இவற்றோடு நின்றுபோவதில்லை. பாவத்தின் சம்பளம் மரணம் வரையிலும் போகிறது.

"எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது. அதை அறியத்தக்கவன் யார்? கர்த்தராகிய நானே ஒவ்வொருவனுக்கும், அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்கும் தக்கதைக் கொடுக்கும்படிக்கும், இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதிக்கிறவருமாயிருக்கிறேன்" (எரே 17:9,10).

இந்த உலகத்தில் காணப்படுகிற தீங்குகளை ஆராய்ந்து பார்க்கும்போது, தன்னுடைய ஜீவியத்தில் தனக்கு ஏற்பட்ட தீங்குகளை சாலொமோன் ஆராய்ந்து பார்க்கிறார். தன்னுடைய இருதயத்திலும், தன்னுடைய ஜீவியத்திலும் உண்டாயிருக்கிற கேடுகளை, இந்த உலகத்தின் கேடுகளோடு ஒப்பிட்டுப்பார்க்கிறார். தன்னிடத்தில் மெய்யான நீதியும், மெய்யான பரிசுத்தமும் இல்லை என்பதை சாலொமோன் அங்கீகரிக்கிறார். தன்னிடத்தில் மாத்திரமல்ல, மற்றவர்களிடத்திலும் நீதியும் பரிசுத்தமும் இல்லை என்பதைப் புரிந்துகொள்கிறார். ஒரு பாவமும் செய்யாமல் நன்மையே செய்யத்தக்க நீதிமான் பூமியிலில்லை.

சாலொமோன் இந்தப் பிரபஞ்சத்திலுள்ள மனுஷர்களையெல்லாம் ஆராய்ந்து பார்க்கிறார். மனுஷர்களுக்குள்ளே, ஒரு நல்ல மனுஷனை காணவேண்டும் என்னும் ஆவல் சாலொமோனுக்கு உண்டாயிற்று. ஆயிரம் பேருக்குள்ளே ஒரு புருஷனைக்கண்டார். இவன் ஆயிரம் பேரிலும் சிறந்தவனாகயிருக்கிறான். மற்றவர்களைவிட நன்மை செய்கிறான். ஆனாலும், இவனிடத்திலும் பாவம் இருக்கிறது. மனுஷன் தேவனைவிட்டுப் பிரிந்துபோகும்போது, பாவம் அவனை ஆளுகை செய்கிறது. பாவம் அவனை ஆளுகை செய்யும்போது, மதிகேட்டின் ஆகாமியமும், புத்திமயக்கத்தின் பைத்தியமும் அவனுக்குள் பிரவேசிக்கிறது. தேவசாயலாக சிருஷ்டிக்கப்பட்ட மனுஷன், தன்னிடத்திலுள்ள தேவசாயலை இழந்துபோயிருக்கிறான்.

சாலொமோனால் ஆயிரம்பேருக்குள்ளே ஒரு புருஷனைக் காணமுடிகிறது. ஆனாலும் இவர்களுக்குள்ளே ஒரு ஸ்திரீயை சாலொமோனால் காணமுடியவில்லை. விபசார ஸ்திரீயின் கைகள், பேதைகளைக் கட்டிப்போடுகிற கயிறுகளாகயிருக்கிறது. அவளுடைய நெஞ்சம் கண்ணிகளும், வலைகளுமாயிருக்கிறது. அவள் சாவிலும் அதிக கசப்புள்ளவளாயிருக்கிறாள். சாலொமோன் ஆயிரம் பேருக்குள்ளே, ஒரு நல்ல ஸ்திரீயை காணவேண்டுமென்று தேடிப்பார்க்கிறார். ஆனால் இவர்கள் எல்லாருக்குள்ளும், ஒரு நல்ல ஸ்திரீயைக்கூட, அவரால் காணமுடியவில்லை.

தேவன் மனுஷனை செம்மையானவனாகவே உண்டாக்கினார். நாம் எல்லோருமே தேவனுடைய சிருஷ்டிகளாகயிருக்கிறோம். நாம் தேவனுடைய கரத்தின் கிரியைகளாயிருக்கிறோம். தேவனே நம்மை உண்டாக்கினவர். அவர் செம்மையானவர். அவர் நம்மையும் செம்மையானவனாகவே உண்டாக்கினார். ஆனால் மனுஷனோ, தன்னுடைய பாவத்தினால், தன்னுடைய செம்மையை இழந்துவிட்டான். தன்னுடைய மதிகேட்டினால், தன்னுடைய மேன்மையை இழந்துவிட்டான். தன்னுடைய புத்திமயக்கத்தின் பைத்தியத்தினால், தேவன் தனக்குக் கொடுத்த ஞானத்தையும் இழந்துவிட்டான். கர்த்தரையும், கர்த்தருடைய சித்தத்தையும் தேடாமல் போய்விட்டான். அதற்குப் பதிலாக அநேக உபாயதந்திரங்களை தேடிக்கொள்கிறான்.

ஏதேன் தோட்டத்திலே, நம்முடைய முற்பிதாக்களாகிய ஆதாமும் ஏவாளும், அநேக உபாயதந்திரங்களைத் தேடினார்கள். தேவனுடைய சித்தத்தின் பிரகாரமாக கிரியை நடப்பிக்காமல், தங்களுடைய விருப்பத்தின் பிரகாரமாக கிரியை நடப்பித்தார்கள். தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படியாமல், தாங்கள் தேடிக்கொண்ட உபாயதந்திரங்களுக்குக் கீழ்ப்படிந்தார்கள். முடிவில் அவர்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படியாமல், தங்களுடைய பாவங்களுக்கு அடிமைகளானார்கள்.

8 அதிகாரம்

சாலொமோன் இந்த அதிகாரத்தில் ஞானத்தை மேன்மைப்படுத்தி எழுதுகிறார். ஞானமுள்ளவனுக்கு ஒப்பானவன் ஒருவனுமில்லை (பிர 8:1). நம்முடைய பேச்சிலும் செய்கையிலும் ஞானமிருக்கவேண்டும். எந்தெந்த காரியங்களில், ஞானத்தோடு எப்படி நடந்துகொள்வது என்று சாலொமோன் சில ஆலோசனைகளைச் சொல்லுகிறார். அவற்றின் விவரம் வருமாறு :

1. ராஜாவின் கட்டளையைக் கைக்கொண்டு நடக்கவேண்டும் ((பிர 8:2-5). 2. நம்முடைய ஜீவியத்தில் திடீரென்று சஞ்சலமும், வேதனையும் வரும்போது, அதை சந்திப்பதற்கு நாம் ஆயத்தமாயிருக்கவேண்டும். திடீரென்று நமக்கு மரணமும் சம்பவிக்கலாம் (பிர 8:6-8). 3. ஆளுகை செய்கிறவர்களில் சிலர் ஜனங்களை அடக்கி ஒடுக்குவார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நாம் அவர்களையும் சந்திப்பதற்கு ஆயத்தமாயிருக்கவேண்டும் (பிர 8:9,10).

4. துன்மார்க்கமாய் ஜீவிக்கிறவர்களுக்கு உடனடியாய்த் தண்டனை வருவதில்லை. ஆகையினால் அவர்கள் துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள் (பிர 8:11). துன்மார்க்கன் நன்றாயிருக்கமாட்டான். கர்த்தருக்கு முன்பாக பயந்திருப்பவர்கள் மாத்திரமே நன்றாயிருப்பார்கள் (பிர 8:12-14). தேவன் நமக்குத் தந்திருக்கிற ஜீவகாலத்தில், நாம் சந்தோஷமாயிருக்கவேண்டும். கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற தாலந்துகளை நல்லமுறையில் பயன்படுத்தவேண்டும் (பிர 8:15). தேவனுடைய கிரியைகளில் நாம் திருப்தியாயிருக்கவேண்டும் (பிர 8:16,17).

ஞானமுள்ளவன்
பிர 8:1

பிர 8:1. ஞானமுள்ளவனுக்கு ஒப்பானவன் யார்? காரியத்தின் தாற்பரியத்தை அறிந்தவன் யார்? மனுஷனுடைய ஞானம் அவன் முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும், அவன் முகத்தின் மூர்க்கம் மாறும்.

சாலொமோன் ஞானத்தைப்பற்றி உயர்வாகப் பேசுகிறார். ஞானமுள்ளவர்கள் பக்தியுள்ளவர்களாக இருப்பார்கள். எல்லாவற்றையும் ஆராய்ந்து அறிவார்கள். ஒவ்வொரு காரியத்தையும் ஞானத்தோடு செய்வார்கள். ஞானவான் நல்லவனாகவும் இருப்பான். அவன் தேவனை அறிந்திருப்பான். தேவனை மகிமைப்படுத்துவான். ஆகையினால் ஞானமுள்ளவனுக்கு ஒப்பானவன் ஒருவனுமில்லை என்று சாலொமோன் தீர்மானம்பண்ணுகிறார்.

நம்முடைய ஞானம் உலகப்பிரகாரமான ஞானமாயிருக்கக்கூடாது. அது பரலோகத்தின் ஞானமாயிருக்கவேண்டும். ஆவிக்குரிய ஞானமாயிருக்கவேண்டும். நம்மிடத்தில் பரலோகத்தின் ஞானம் இருக்கும்போது, நாமே மேலானவர்களாகயிருப்போம். நமக்கு ஒப்பானவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். தேவனுடைய கிருபையில்லையென்றால் அவனிடத்தில் ஒன்றுமில்லை. ஒருவன் உயர்கல்வி கற்றவனாகயிருக்கலாம். செல்வசெழிப்புள்ள சீமானாகயிருக்கலாம். ஐசுவரியம் மிகுந்தவனாகயிருக்கலாம். ஆனாலும் இவன் தேவனுடைய கிருபையுள்ளவனுக்கு ஒப்பானவனல்ல. தேவன் உலகப்பிரகாரமான ஞானத்தை அங்கீகரியாமல், தம்முடைய தெய்வீக ஞானத்தையே அங்கீகரிக்கிறார். தேவனுடைய கிருபையுள்ளவனே தேவனால் அங்கீகரிக்கப்படுவான்.

ஞானமுள்ளவன் தனக்கும் உதவி செய்வான். பிறருக்கும் உதவிசெய்வான். அவன் எல்லோருக்கும் பிரயோஜனமுள்ளவனாக இருப்பான். ஞானமுள்ளவனால் மாத்திரமே காரியத்தின் தாற்பரியத்தை அறிந்துகொள்ள முடியும். அவனால் மாத்திரமே மறைபொருளை வியாக்கியானம்பண்ண முடியும். ஞானமுள்ளவன் காலங்களையும் சம்பவங்களையும் அறிந்துகொள்வான்.

மனுஷனுடைய ஞானம் அவனுடைய முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும். மோசே சீனாய் மலையில் தேவனை தரிசித்துவிட்டு, மலையிலிருந்து கீழே இறங்கி வரும்போது, அவருடைய முகம் பிரகாசமாயிருந்தது. ஞானமுள்ளவனுடைய முகம் மோசேயின் முகத்தைப்போல பிரகாசமாயிருக்கும். ஞானமுள்ளவனுக்கு மதிப்பும், மரியாதையும், கனமும் உண்டாகும். அவனுடைய வார்த்தைகளில் ஞானமும், தெளிவும் இருக்கும். அவனுடைய சிந்தையில் குழப்பம் இருக்காது.

ஞானமுள்ளவனுடைய முகத்தின் மூர்க்கம் மாறும். சில சமயங்களில் ஞானமுள்ளவனும் கோபப்படுவான். அவனுடைய முகத்தில் கோபம் தெரியும். ஆனாலும் அவனிடத்திலுள்ள ஞானம் அவனுடைய கோபத்தை மாற்றும். அவனுக்கு சாந்தத்தைக் கொடுக்கும். ஒரு சிலர் இயல்பாகவே முரட்டுக் குணமுள்ளவர்களாகயிருப்பார்கள். கடின இருதயமுள்ளவர்களாகயிருப்பார்கள். அப்படிப் பட்டவர்களுடைய முரட்டுத்தனத்தையும் ஞானம் மென்மையானதாக மாற்றும். கல்லான இருதயத்தை சதையான இருதயமாய் மாற்றும்.

எல்லா மனுஷருக்கும் சத்துருக்கள் இருப்பார்கள். ஒரு சிலர் தங்களுடைய மதியீனத்தால் தங்களுக்கு ஏராளமான சத்துருக்களை உண்டாக்குவார்கள். ஞானமுள்ளவனோ தன்னுடைய சத்துருக்களின் எண்ணிக்கையை குறைப்பான். அவனிடத்திலுள்ள ஞானம் அவனுடைய சத்துருக்களிடமிருந்து அவனைப் பாதுகாக்கும். ஞானமுள்ளவன் சத்துருக்களுக்குப் பயப்படமாட்டான். அவனுடைய முகத்தில் தெளிவும் தைரியமும், பிரகாசமும் இருக்கும். ஞானத்தினால் அவனுடைய முகத்தின் தைரியம் இரட்டிப்பான கிருபை பெறும்.

ஞானமுள்ளவன் நியாயமான காரியங்களுக்காக வழக்காடுவான். சத்தியம் நிலைக்கவேண்டுமென்று போராடுவான். அவனிடத்தில் பக்திவைராக்கியம் இருக்கும். நீதியைக் குறித்து பசிதாகமிருக்கும். ஞானமுள்ளவன் தன்னிடத்திலுள்ள மனதைரியத்தை ஞானமாய்ப் பயன்படுத்துவான். இவனுடைய மனதைரியம் அநேகருக்கு உதவியாயிருக்கும்.

ராஜாவின் கட்டளை
பிர 8:2-5

பிர 8:2. ராஜாவின் கட்டளையைக் கைக்கொண்டு நட என்று நான் உனக்கு எச்சரிக்கிறேன்; நீ தேவனுக்கு இட்ட ஆணையின்படியே இதைச் செய்.

பிர 8:3. நீ அவன் சமுகத்தை விட்டுவிலகத் துரிதப்படாதே; பொல்லாத காரியத்திலே பிடிவாதமாய் நில்லாதே; அவன் தனக்கு இஷ்டமானதெல்லாம் செய்வான்.

பிர 8:4. ராஜாவின் வார்த்தை எங்கேயோ அங்கே அதிகாரம் உண்டு; நீர் என்ன செய்கிறீர் என்று அவனுக்குச் சொல்லத் தக்கவன் யார்?

பிர 8:5. கற்பனையைக் கைக்கொள்ளுகிறவன் ஒரு தீங்கையும் அறியான்; ஞானியின் இருதயம் காலத்தையும் நியாயத்தையும் அறியும்.

ஞானமுள்ளவன் தனக்கு மேலான அதிகாரத்திற்குக் கீழ்ப்படிந்து நடப்பான். நாம் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். நாம் எந்த தேசத்திலிருந்தாலும், அந்த தேசத்தின் சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படிந்து நடப்பதுதான் நமக்கு நல்லது. தேசத்தின் சட்டதிட்டங்களோடு நாம் போராடக்கூடாது. கர்த்தருடைய பிரமாணங்களுக்கு நாம் கீழ்ப்படிவதுபோல, தேசத்தின் பிரமாணங்களுக்கும் கீழ்ப்படியவேண்டும்.

சாலொமோன் இந்தச் சத்தியத்தைச் சொல்லும்போது, "நான் உனக்கு எச்சரிக்கிறேன்" என்று சொல்லுகிறார். ராஜாவின் கட்டளையை கைக்கொண்டு நட என்று சாலொமோன் நமக்கு எச்சரிப்பாய்ச் சொல்லுகிறார். இந்த எச்சரிப்பை அவர் ஒரு ராஜாவாக சிங்காசனத்தில் அமர்ந்தும் சொல்லுகிறார். அவர் தன்னை ஒரு பிரசங்கியாக பாவித்தும் இந்தச் செய்தியை பிரசங்கம்பண்ணுகிறார்.

ராஜாவின் கட்டளைக்குக் கீழ்ப்படிவது ஞானத்தின் ஒரு பகுதி. "ராஜாவின் கட்டளையைக் கைக்கொண்டு நட" என்னும் வாக்கியத்திற்கு, "ராஜாவினுடைய வாயின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து நட" என்று வேதபண்டிதர்கள் வியாக்கியானம் சொல்லுகிறார்கள். ஆனாலும், விசுவாசிகளாகிய நமக்கு, ராஜாவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடப்பதைவிட, கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடப்பதே மிகவும் முக்கியம். ஆகையினால் சாலொமோன் இதைப்பற்றி விரிவாய்ச் சொல்லும்போது, "நீ தேவனுக்கு இட்ட ஆணையின்படி இதைச் செய்" என்று சொல்லுகிறார்.

நாம் ராஜாவின் கட்டளைக்குக் கீழ்ப்படியவேண்டும். அதே வேளையில், தேவனுடைய ஆணைக்கு, அதைவிட அதிகமாய்க் கீழ்ப்படியவேண்டும். நாம் ராஜாவின் கட்டளைக்குக் கீழ்ப்படியும்போது, நம்முடைய மனச்சாட்சி சுத்தமாயிருக்கவேண்டும். தேவனுடைய பிரமாணத்தை மீறி விடக்கூடாது. ராஜாவின் கட்டளைக்குக் கீழ்ப்படிவது, தேவனுடைய பிரமாணத்திற்கு மீறுகிற செயலாகயிருக்கும்போது, நாம் தேவனுடைய பிரமாணத்திற்கே கீழ்ப்படியவேண்டும். ராஜாவின் கட்டளைக்குக் கீழ்ப்படியாவிட்டால் இம்மையில் மாத்திரமே நமக்கு தண்டனை கிடைக்கும். கர்த்தருடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படியவில்லையென்றால், நம்முடைய மறுமையிலே, நமக்கு நித்திய தண்டனை கிடைக்கும்.

நாம் அரசாங்கத்தோடு சமாதானமாயிருக்கவேண்டும். அரசாங்க காரியங்களில் தேவையில்லாமல் தலையிடக்கூடாது. அவர்களிடத்தில் எப்போதும் குற்றம் கண்டுபிடித்து, அவர்களை குற்றப்படுத்திக்கொண்டேயிருக்கக்கூடாது. ராஜாவின் சமுகத்தைவிட்டு விலக துரித்தப்படாதே என்று சாலொமோன் சொல்லுகிறார். ராஜா நம்மீது கோபமாயிருக்கும்போது, அவருடைய சமுகத்தைவிட்டு சீக்கிரமாய் விலகிப்போய்விடக்கூடாது. அங்கிருந்து துரிதமாய் ஓடிவிட்டால், ராஜாவின் கோபம் அதிகரிக்கும்.

ராஜா தனக்கு இஷ்டமானதையெல்லாம் செய்வான். ராஜாவின் வார்த்தை எங்கேயோ அங்கே அதிகாரமுண்டு. "நீர் என்ன செய்கிறீர்" என்று அவனுக்குச் சொல்லத்தக்கவன் ஒருவனுமில்லை. ஆகையினால் நாம் பொல்லாத காரியத்தில் பிடிவாதமாய் நிற்கக்கூடாது. ராஜாவைவிட்டு விலகிப்போவது, அவருடைய ராஜ்யத்தின் ஆளுகையைவிட்டு விலகிப்போவதற்கு சமம். ராஜா நம்மீது கோபமாயிருக்கும்போது, நம்மை ராஜாவுக்கு முன்பாக தாழ்த்தவேண்டும். நம்மிடத்தில் ஒரு தப்புமில்லை என்று, நம்முடைய நியாயத்தைச் சொல்ல பிடிவாதமாயிருக்கக்கூடாது. ராஜாவுக்கு முன்பாக பிடிவாதமாய் எதிர்த்துப் பேசினால், ராஜாவின் கோபம் அதிகரிக்கும். ராஜா நமக்கு அதிக தண்டனையைக் கொடுப்பார்.

ராஜாவுக்கு முன்பாக நிற்கும்போது நாம் ஞானத்தோடு செயல்படவேண்டும். நமக்குக் கிடைக்கும் வாய்ப்புக்களை ஞானத்தோடு பயன்படுத்தவேண்டும். ராஜாவின் கோபத்திற்கு தப்பித்துக்கொள்ள வகைதேடவேண்டும். ஞானியின் இருதயம் காலத்தையும் நியாயத்தையும் அறியும். நம்மிடத்தில் ஞானமிருக்கும்போது, நம்முடைய செய்கைகள் நியாயமானதா, நியாயமற்றதா என்பதை நம்மால் அறிந்துகொள்ள முடியும். நம்முடைய மனச்சாட்சிக்கு நாம் கீழ்ப்படிந்து, ராஜாவின் கட்டளையைக் கைக்கொள்ளவேண்டும்.

பல தேசங்களில் ராஜாக்களும் தேவனுக்குப் பயப்படுகிறவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் சிங்காசனத்தில் அமரும்போது, தேவனுடைய பெயரில் ஆணையிடுகிறார்கள். தேவனுக்கு கீழ்ப்படிந்து ஆளுகை செய்வதாக வாக்குப்பண்ணுகிறார்கள். சாலொமோன் இதையே, "தேவனுக்கு இட்ட ஆணை" என்று சொல்லுகிறார். நாம் தேவனுடைய சமுகத்தில் இட்ட ஆணைக்கு ராஜாவே சாட்சியாகயிருக்கிறார். நாம் இட்ட ஆணையை நாம் மீறி நடக்கும்போது, ராஜா நம்மைத் தண்டிக்கிறார். நம்மை ஆளுகை செய்யும் பொறுப்பை கர்த்தர் ராஜாவிடம் ஒப்புக்கொடுத்திருக்கிறார்.

சஞ்சலம்
பிர 8:6-8

பிர 8:6. எல்லாக் காரியத்துக்கும் காலமும் நியாயமுமுண்டு; ஆதலால் மனுஷனுக்கு நேரிடும் சஞ்சலம் மிகுதி.

பிர 8:7. இன்னது சம்பவிக்கும் என்று அவன் அறியானே; அது இன்னவிதமாய்ச் சம்பவிக்கும் என்று அவனுக்குச் சொல்லத்தக்கவன் யார்?

பிர 8:8. ஆவியை விடாதிருக்கிறதற்கு ஆவியின்மேல் ஒரு மனுஷனுக்கும் அதிகாரமில்லை; மரணநாளின்மேலும் அவனுக்கு அதிகாரமில்லை; அந்தப் போருக்கு நீங்கிப் போவதுமில்லை; துன்மார்க்கரைத் துன்மார்க்கம் விடுவிக்கவுமாட்டாது.

எல்லா மனுஷருடைய ஜீவியத்திலும் இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும். சந்தோஷமும் துக்கமும் வரும். உயர்வும் தாழ்வும் வரும். ஆசீர்வாதமும் வேதனையும் வரும். பல சமயங்களில் நாம் எதிர்பாராத சந்தர்ப்பங்களில் நமக்கு தீங்கு வரும். அதனால் நம்முடைய மனது சஞ்சலமடையும். ஞானமுள்ளவர்கள்கூட தங்களுக்கு திடீரென்று வரும் சஞ்சலத்தைப் பார்த்து ஆச்சரியப்படுகிறார்கள்.

நம்முடைய ஜீவியத்தில் என்னென்ன துன்பங்கள் எப்போது வருமென்று, நம்மால் நிதானித்து அறியமுடியாது. அதை தீர்க்கதரிசனமாகக் காணவும் முடியாது. எந்த வேளையிலும் நமக்கு தீங்கு வரலாம். ஆகையினால் தீங்குகளைச் சந்திப்பதற்கு நாம் எப்போதுமே ஆயத்தமாயிருக்கவேண்டும். மனசஞ்சலம் வருவதற்கு முன்பாகவே அதைத் தாங்கிக்கொள்ள கற்றுக்கொள்ள வேண்டும். இன்னது சம்பவிக்குமென்று யாரும் இன்னும் அறியவில்லை. அது இன்னவிதமாய் சம்பவிக்கும் என்று நமக்கு சொல்லத்தக்கவன் ஒருவனுமில்லை.

எல்லா காரியத்திற்கும் காலமும் நியாயமும் உண்டு. இதனால் மனுஷனுக்கு நேரிடும் சஞ்சலம் மிகுதியாயிருக்கிறது. நமக்கு எப்போது என்ன நடைபெறும் என்பதை நட்சத்திரங்களால் முன்னறிவிக்க முடியாது. ஒரு மனுஷன் எப்படியிருப்பான் என்பதை ஜோசியம் பார்த்து உறுதிபண்ண முடியாது. வானசாஸ்திரங்களை ஆராய்ந்து பார்த்து மனுஷனுக்கு சம்பவிக்கப்போகிறதை உறுதியாய் சொல்லவும் முடியாது. எந்த நேரத்திலும் நமக்கு எதுவும் சம்பவிக்கலாம். அவற்றை சந்திப்பதற்கு ஆயத்தமாயிருப்பதுதான் நமக்கு நல்லது.

எல்லா காரியத்திற்கும் காலமும் நியாயமும் உண்டு. ஏதாவது ஒரு சம்பவம் ஏதாவது ஒரு வழியில் நமக்கு நேரிடுகிறது. இதனால் நமக்கு சஞ்சலம் மிகுதியாகிறது. நாம் ஆயத்தமாயில்லையென்றால் நம்முடைய சஞ்சலம் இன்னும் அதிகரிக்கும். நாம் எல்லா சூழ்நிலைகளிலும் மிகுந்த எச்சரிப்பாயிருக்கவேண்டும். சகலவற்றையும் உன்னிப்பாய் கவனித்துக்கொண்டிருக்க வேண்டும். கவனமுமில்லாமல், எச்சரிப்புமில்லாமல் ஜீவிப்போமென்றால், நமக்கு சஞ்சலமும் வேதனையும் மிகுதியாயிருக்கும்.

நாம் ஞானத்தோடிருக்கும்போது, நம்மால் ஒரு சில தீங்குகளுக்கு விலகி ஜீவிக்க முடியும். ஒரு சில சஞ்சலங்களை நமக்கு நேரிடாதவாறு தவிர்க்க முடியும். ஆனாலும் சில காரியங்களை நம்மால் தவிர்க்கவும் முடியாது. தடுக்கவும் முடியாது. அப்படிப்பட்ட ஒரு காரியத்தைப்பற்றி சாலொமோன் இங்கு சொல்லுகிறார். தன்னுடைய ஆவியை விடாதிருக்கிறதற்கு, தன் ஆவியின்மேல், எந்த ஒரு மனுஷனுக்கும் அதிகாரமில்லை. தன்னுடைய மரணநாளின்மேல் எந்த மனுஷனுக்கும் அதிகாரமில்லை. ஒரு தரம் பிறப்பதும், ஒரு தரம் மரிப்பதும் எல்லா மனுஷருக்கும் நியமிக்கப்பட்டிருக்கிறது. இந்த மரணத்திலிருந்து யாருக்கும் விடுதலை கிடையாது.

கர்த்தரே நம்முடைய நாசியிலே ஜீவசுவாசத்தை ஊதி நம்மை ஜீவாத்துமாவாக வைத்திருக்கிறார். நமக்கு ஜீவனைக் கொடுத்த கர்த்தர், தமக்கு சித்தமான வேளையில், தம்முடைய ஆவியை நம்மிடத்திலிருந்து எடுத்துக்கொள்கிறார். தேவன் நம்முடைய ஆவியை எடுக்கும்போது, அந்த ஆவியை விடாதிருக்கிறதற்கு, அந்த ஆவியின்மீது எந்த மனுஷனுக்கும் அதிகாரமில்லை. தேவன் நம்முடைய ஆவியை எடுக்கும்போது, அந்த ஆவியை நாம் கொடுக்காமல் வைத்துக்கொள்வோம் என்று பிடிவாதம்பண்ண முடியாது. தேவனோடு போரிட முடியாது. தேவன் தம்முடைய ஆவியை நம்மிடத்திலிருந்து எப்போது எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறாரோ, அப்போது அவர் எடுத்துக்கொள்வார். அந்தக் காலமும், அந்த வேளையும் தேவனுடைய சித்தத்தின் பிரகாரமாய் நடைபெறும். தேவனிடத்திலிருந்து வந்தது தேவனிடத்திற்கே திரும்பிப்போய்விடும்.

மரணம் நமக்கு ஒரு சத்துருவைப்போல இருக்கிறது. மனுஷர் எல்லோருமே அந்த சத்துருவை சந்திக்கவேண்டும். அந்த சத்துருவோடு போரிடவேண்டும். எந்த மனுஷனும் அந்த போருக்கு நீங்கிப்போவதில்லை.

மனுஷன் தன் துன்மார்க்கத்தினால் எதையும் சாதிக்கலாம் என்று நினைக்கிறான். ராஜாவின் கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் தப்பித்துக்கொள்கிறான். சட்டங்களில் சிக்கிக்கொள்ளாமல், விடுதலையாகிறான். துன்மார்க்கன் பொல்லாப்பை செய்ய துணிகரம் கொண்டிருக்கிறான். அவன் எவ்வளவுதான் துணிகரமாயிருந்தாலும், அவனாலும் அவனுடைய மரணத்திற்குத் தப்பிக்க முடியாது. துன்மார்க்கனை அவனுடைய துன்மார்க்கம், அவனுடைய மரணத்திலிருந்து விடுவிக்காது. அவனுடைய இருதயம் பொல்லாப்பை செய்ய எவ்வளவுதான் துணிகரம் கொண்டிருந்தாலும், அவனால் மரணத்தின் பயங்கரத்திற்குத் தப்பிக்க முடியாது. தன்னுடைய இருதயத்தை மரணத்திற்கு விரோதமாக துன்மார்க்கனால் கடினப்படுத்தவும் முடியாது.

துன்மார்க்கன்
பிர 8:9-13

பிர 8:9. இவையெல்லாவற்றையும் நான் பார்த்து, சூரியனுக்குக் கீழே செய்யப்படும் எல்லாக் கிரியைகளையும் சிந்தித்தேன்; ஒரு மனுஷன் தனக்கே கேடுண்டாக வேறொரு மனுஷனை ஆளுகிற காலமுமுண்டு.

பிர 8:10. பரிசுத்த ஸ்தலத்துக்குப் போக்குவரவு செய்த துன்மார்க்கர் அடக்கம்பண்ணப்பட்டதைக் கண்டேன்; அவர்கள் அப்படிச் செய்துவந்த பட்டணத்திலேயே மறக்கப்பட்டுப் போனார்கள்; இதுவும் மாயையே.

பிர 8:11. துர்க்கிரியைக்குத்தக்க தண்டனை சீக்கிரமாய் நடவாதபடியால், மனுபுத்திரரின் இருதயம் பொல்லாப்பைச் செய்ய அவர்களுக்குள்ளே துணிகரங்கொண்டிருக்கிறது.

பிர 8:12. பாவி நூறுதரம் பொல்லாப்பைச் செய்து நீடித்து வாழ்ந்தாலும் என்ன? தேவனுக்கு அஞ்சி, அவருக்கு முன்பாகப் பயந்திருப்பவர்களே நன்றாயிருப்பார்கள் என்று அறிந்திருக்கிறேன்.

பிர 8:13. துன்மார்க்கனோ நன்றாயிருப்பதில்லை; அவன் தேவனுக்கு முன்பாகப் பயப்படாதிருக்கிறபடியால், நிழலைப்போலிருக்கிற அவனுடைய வாழ்நாள் நீடித்திருப்பதுமில்லை.

ராஜாக்களில் சிலர் கொடுங்கோலாய் ஆட்சிசெய்கிறார்கள். ஜனங்களை அடக்கி ஒடுக்குகிறார்கள். அவர்கள் தீங்கு செய்தாலும், விசுவாசிகளாகிய நாம் கர்த்தரையே நம்பி ஜீவிக்கவேண்டும். துன்மார்க்கன் நன்றாயிருப்பதில்லை என்று சாலொமோன் தெளிவாகச் சொல்லுகிறார். துன்மார்க்கமான ராஜாவைப்பற்றிச் சொல்லும்போது, அவன் தனக்கே கேடுண்டாக வேறொரு மனுஷனை ஆளுகிறான் என்று சொல்லுகிறார்.

ராஜாக்கள் தங்கள் தேசத்தில் நீதி நிலவ பாடுபடவேண்டும். தேசத்தில் கண்ணியமும், நியாயமும், நேர்மையும் அதிகரிப்பதற்கு உதவிபுரியவேண்டும். ஜனங்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கவேண்டும். ஆனால் ஒரு சில ராஜாக்கள் ஜனங்களுடைய உரிமைகளை பாதுகாப்பதற்குப் பதிலாக அதை அழித்துப்போடுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் தங்களுக்கே கேடுண்டாக மற்றவர்களுக்குத் தீங்கு செய்கிறார்கள். தாங்கள் பிறருக்கு என்ன செய்கிறார்களோ அதுவே அவர்களுக்கும் செய்யப்படும். நாம் விதைத்ததையே அறுவடை செய்வோம். நாம் பிறருக்கு கேடு செய்தால், நமக்கும் கேடு வரும்.

அதிகாரத்திலிருக்கிறவர்கள், தங்களுடைய அதிகாரத்தை நல்லமுறையில் பயன்படுத்தவேண்டும். அதை தப்பிதமாகப் பயன்படுத்தக்கூடாது. பரிசுத்த ஸ்தலத்திற்கு போக்குவரவு செய்த துன்மார்க்கரை சாலொமோன் பார்க்கிறார். பரிசுத்த ஸ்தலத்திற்குப் போகும்போது, பயபக்தியோடும், பணிவோடும், பரிசுத்தத்தோடும் போகவேண்டும். அங்கு நம்முடைய ஆடம்பரத்தைக் காண்பிக்கக்கூடாது. அதுபோலவே நியாயஸ்தலத்தில் அமர்ந்திருக்கிறவர்கள், நீதியின் வஸ்திரத்தைத் தரித்து, நீதியாய்த் தீர்ப்பு சொல்லவேண்டும். வழக்குகளை பட்சபாதமில்லாமல் விசாரிக்கவேண்டும். நியாயத்தீர்ப்பு கர்த்தருடையது. நியாயம் விசாரிக்கப்படுகிற இடம் "பரிசுத்த ஸ்தலம்" என்று அழைக்கப்படுகிறது.

"அக்காலத்திலே உங்களுடைய நியாயாதிபதிகளை நான் நோக்கி: நீங்கள் உங்கள் சகோதரரின் வியாச்சியங்களைக் கேட்டு, இருபட்சத்தாராகிய உங்கள் சகோதரருக்கும், அவர்களிடத்தில் தங்கும் அந்நியனுக்கும், நீதியின்படி தீர்ப்புச்செய்யுங்கள். நியாயத்திலே முகதாட்சிணியம் பாராமல் பெரியவனுக்குச் செவிகொடுப்பதுபோலச் சிறியவனுக்கும் செவிகொடுக்கக்கடவீர்கள்; மனிதன் முகத்திற்குப் பயப்படீர்களாக; நியாயத்தீர்ப்பு தேவனுடையது; உங்களுக்குக் கடினமாயிருக்கும் காரியத்தை என்னிடத்தில் கொண்டுவாருங்கள்; நான் அதைக் கேட்பேன் என்று சொல்லி, நீங்கள் செய்யவேண்டிய காரியங்கள் யாவையும் அக்காலத்திலே கட்டளையிட்டேன்" (உபா 1:16-18).

நியாயஸ்தலத்தில் அமர்ந்து நியாயம் விசாரிக்கிறவர்கள் துன்மார்க்கராயிருப்பார்களென்றால், அவர்களுக்கு நிச்சயமாகவே தண்டனை கிடைக்கும். துன்மார்க்கரிடத்தில் நீதியையும், நியாயத்தையும் எதிர்பார்க்க முடியாது. நியாயாபதிகள் உயர்ந்த ஸ்தலத்தில் வீற்றிருக்கிறார்கள். அவர்கள் துன்மார்க்கராயிருந்தாலும், அவர்கள் மரிக்கும்போது, நியாயாதிபதிக்குரிய மதிப்பும் மரியாதையும் கொடுக்கப்படும். அவர்களுடைய அடக்க ஆராதனையும் ஆடம்பரமாய் நடைபெறும். ஆனாலும் ஜனங்கள் துன்மார்க்கமான நியாயாதிபதிகளை சீக்கிரத்தில் மறந்துவிடுவார்கள். தாங்கள் துன்மார்க்கம் செய்து வந்த பட்டணத்திலேயே அவர்கள் மறக்கப்பட்டுப்போவார்கள். அவர்களுடைய துன்மார்க்கமான கிரியைகளையும் மறந்துவிடுவார்கள். அவர்கள் மரித்துப்போகும்போது, அவர்களைப்பற்றிய நினைவுகளும், அவர்களோடுகூட அடக்கம்பண்ணப்படும்.

ஒரு மனுஷன் மற்றொரு மனுஷனை கொடுமையாய் ஆளும்போது, அவன் தனக்குக் கேடுண்டாகவே அப்படி செய்கிறான் என்று சாலொமோன் சொல்லுகிறார். சூரியனுக்குக் கீழே செய்யப்படும் எல்லா கிரியைகளையும் சாலொமோன் காண்கிறார். சாலொமோனுடைய பார்வைக்கு எல்லாமே மாயையாயிருக்கிறது. துன்மார்க்கமான ராஜாக்களின் ஆளுகையும், துன்மார்க்கமான நியாயாதிபதிகளின் நியாயவிசாரிப்பும் சாலொமோனுடைய பார்வைக்கு மாயையாய்த் தெரிகிறது.

துன்மார்க்கருக்கு அவர்களுடைய துர்க்கிரியைக்குத்தக்க தண்டனை சீக்கிரமாய் வருவதில்லை. ஆகையினால் அவர்களும் சிலகாலம் செழித்திருக்கிறார்கள். அவர்களுடைய செழிப்பினிமித்தமாய், அவர்களுடைய இருதயம் கடினப்படுகிறது. தங்களுக்கு ஒரு கேடும் வராது என்று ஆணவமாயிருக்கிறார்கள். துன்மார்க்கத்தை சந்தோஷமாய்ச் செய்கிறார்கள். துர்க்கிரியைக்குத்தக்க தண்டனை சீக்கிரமாய் நடவாதபடியால், மனுபுத்திரரின் இருதயம் பொல்லாப்பைச் செய்ய அவர்களுக்குள்ளே துணிகரம் கொண்டிருக்கிறது.

பாவிகளுக்கும் துன்மார்க்கமான நியாயாதிபதிகளுக்கும், அவர்களுடைய துர்க்கிரியைகளுக்குத்தக்க தண்டனை சீக்கிரமாய் வருவதில்லை என்பது மெய்தான். தண்டனை தாமதமாகும்போது, தங்களுக்கு தண்டனையே வராது என்று நினைத்துவிடுகிறார்கள். இதனால் அவர்களுடைய இருதயம் பொல்லாப்பைச் செய்ய அவர்களுக்குள்ளே துணிகரம் கொள்ளுகிறது. தாங்கள் இதுவரையிலும் செய்த பொல்லாப்பைவிட இன்னும் அதிகமான பொல்லாப்பு செய்யவேண்டும் என்று திட்டமிடுகிறார்கள். தாங்கள் அதிகார ஸ்தானத்தில் அமர்ந்திருப்பதினால், தங்களுடைய அதிகாரத்தை துஷ்பிரயோகம்பண்ணி, துணிகரமாய்ப் பொல்லாப்பு செய்கிறார்கள்.

பூமிக்குரிய நியாயசனத்தில் மனுஷர்கள் நியாயாதிபதிகளாக வீற்றிருந்தாலும், அவர்களையும் நியாயம் விசாரிப்பதற்கு கர்த்தர் இருக்கிறார். கர்த்தரே நீதியுள்ள நியாயாதிபதி. கர்த்தரே வானத்திற்கும் பூமிக்கும் நியாயாதிபதியாகயிருக்கிறார். இந்தப் பிரபஞ்சத்தில் பெரியோரையும் சிறியோரையும் கர்த்தர் நீதியாய் நியாயம் விசாரிப்பார். பிரபுக்களையும் ஐசுவரியவான்களையும் கர்த்தர் நியாயந்தீர்ப்பார். ஜனங்களை ஆளுகை செய்கிற ராஜாக்களையும், வழக்குகளை விசாரிக்கிற நியாயாதிபதிகளையும் கர்த்தர் நியாயந்தீர்ப்பார்.

கர்த்தர் நியாயம் தீர்க்கும்போது, துன்மார்க்கரை உடனயாக தண்டிப்பதில்லை. அவர்கள் மனந்திரும்புவதற்கு ஒரு வாய்ப்பைக் கொடுக்கிறார். ஆனால் துன்மார்க்கரோ தங்கள் துர்க்கிரியைக்குத்தக்க தண்டனை சீக்கிரமாய் நடவாதபடியால் துணிகரமாயிருக்கிறார்கள். அவர்களுடைய இருதயம் பொல்லாப்பைச் செய்ய அவர்களுக்குள் துணிகரம் கொள்ளுகிறது. இதனால் துன்மார்க்கர் சிறிது காலம் செழிப்பாயிருக்கிறார்கள். தண்டனைக்குத் தப்பித்துக் கொள்கிறார்கள். ஆடம்பரமாக ஜீவிக்கிறார்கள்.

துணிகரமாய்ப் பொல்லாப்பு செய்கிற பாவிகள் தங்களைத் தாங்களே வஞ்சித்துக் கொள்கிறார்கள். துர்க்கிரியைக்குத்தக்க தண்டனை சீக்கிரமாய் நடவாவிட்டாலும், அது நிச்சயமாய் ஒரு நாளில் நிறைவேறும். துன்மார்க்கன் நன்றாயிருப்பதில்லை. அவனுடைய வாழ்நாள் நிழலைப்போல இருக்கும். அவன் நீடித்த நாளுக்கு ஜீவனோடிருப்பதில்லை. துன்மார்க்கர் செழித்திருப்பதைப் பார்த்து நாம் சோர்ந்து போகக்கூடாது. பாவி நூறுதரம் பொல்லாப்பைச் செய்து நீடித்து வாழ்ந்தாலும், அவனுக்கு ஒரு பிரயோஜனமுமில்லை. கர்த்தருக்கு முன்பாக பயந்திருப்பவர்கள் மாத்திரமே நன்றாயிருப்பார்கள். கர்த்தரை நம்புகிறவர்கள் மாத்திரமே செழித்திருப்பார்கள்.

கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள், வேறுவழியில்லாமல் துன்மார்க்கமான நியாயாதிபதிகளுக்குப் பயந்தாலும், அவர்கள் மெய்யாகவே கர்த்தருக்குத்தான் அதிகமாய்ப் பயப்படுவார்கள். தேவனுடைய வாக்குத்தத்தம் அவருக்குப் பயப்படுகிறவர்களுக்கு சித்திக்கும். தேவனுடைய கரங்களிலிருந்து அவர்கள் நன்மைகளைப் பெற்றுக்கொள்வார்கள். கர்த்தருக்குப் பயப்படுவதே ஞானத்தின் ஆரம்பம். கர்த்தருக்கு முன்பாக பயந்திருப்பவர்கள் நன்றாயிருப்பார்கள் என்று சாலொமோன் சொல்லுகிறார். அவர்களுக்கு சகலமும் நன்மைக்குகேதுவாக நடைபெறும்.

நல்லவர்களுடைய வாழ்க்கை பரிசுத்தமானது. அவர்களுடைய இருதயத்தின் சிந்தை தெளிவாயிருக்கும். அவர்களுடைய உள்ளத்தில் நல்ல நோக்கங்கள் குடியிருக்கும். நல்லவர்களுடைய வாழ்நாள் நல்ல நோக்கத்திற்காக செலவிடப்படும். துன்மார்க்கனுடைய வாழ்நாளோ நிழலைப்போல இருக்கும். அது வெறுமையாய் பிரயோஜனமற்றிருக்கும். துன்மார்க்கன் தனக்கு செழிப்பான வாழ்வு கிடைக்கும் என்று நினைத்துக்கொண்டிருப்பான். தன்னுடைய துர்க்கிரியைக்குத்தக்க தண்டனை சீக்கிரமாய் நடவாதபடியால், தனக்கு தண்டனையே வராது என்று நினைத்துக்கொண்டிருப்பான். ஆனாலும் அவன் எங்கே ஓடி ஒழிந்தாலும், கர்த்தருடைய பார்வையிலிருந்து அவனால் தப்பிக்கவே முடியாது. அவன் நீடித்து வாழ்ந்தாலும், அவனுக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகாது. துன்மார்க்கன் நன்றாயிருப்பதில்லை. அவனுடைய வாழ்நாள் நீடித்திருப்பதில்லை. அவன் சீக்கிரத்தில் மரித்துப்போவான்.

துன்மார்க்கனுக்கு நித்திய ஜீவனில்லை. அவன் இந்தப் பிரபஞ்சத்தில் நீடித்து வாழ்ந்தாலும், தேவன் அவனுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கமாட்டார். அவன் இந்த உலகத்தில் நீடித்து வாழ்ந்து, அநேக பொல்லாப்புக்களைச் செய்தபடியினால், அவனுடைய ஜீவியம் அவனுக்குப் பிரயோஜனமில்லாமல் போய்விடும்.

நீதிமான்கள்
பிர 8:14

பிர 8:14. பூமியின்மேல் நடக்கிற வேறொரு மாயையான காரியமுமுண்டு; அதாவது, துன்மார்க்கரின் கிரியைக்கு வருவது போல், நீதிமான்களுக்கும் வரும்; நீதிமான்களின் கிரியைக்கு வருவதுபோல், துன்மார்க்கருக்கும் வரும்; இதுவும் மாயை என்றேன்.

இந்தப் பிரபஞ்சத்தில் நீதிமான்களும் இருக்கிறார்கள். துன்மார்க்கரும் இருக்கிறார்கள். இவர்களுடைய ஜீவியங்களில் நன்மையும் தீமையும் நடைபெறுகிறது. இருவருமே முதுமையடைகிறார்கள். முதுமையின் கஷ்டங்களை இருவரும் அனுபவிக்கிறார்கள். துன்மார்க்கரில் அநேகர் செழித்திருக்கிறார்கள். நீதிமான்களில் அநேகர் வேதனைகளையும் துன்பங்களையும் அனுபவிக்கிறார்கள். துன்மார்க்கரின் கிரியைக்கு வருவதுபோல நீதிமான்களுக்கும் வருகிறது. கர்த்தரே இந்த உலகத்தை ஆளுகை செய்கிறார். நீதிமான்களுக்கு துன்பங்கள் வந்தாலும், அவர்கள் தேவனுடைய பரிசுத்தத்தினாலும் நன்மையினாலும் நிறைந்திருப்பார்கள். இந்த உலகத்தில் துன்மார்க்கன் நன்றாயிருக்கமாட்டான். கர்த்தருக்குப் பயந்திருக்கிற நீதிமான்கள் நன்றாயிருப்பார்கள்.

சாலொமோன் இந்தப் பூமியின்மேல் நடக்கிற வேறொரு காரியத்தைப் பார்த்து மிகவும் ஆச்சரிப்படுகிறார். அது அவருடைய மனதிற்கு மாயையாயிருக்கிறது. நீதிமான்கள் நன்மை செய்கிறார்கள். துன்மார்க்கர் தீங்கு செய்கிறார்கள். நீதிமான்களுக்கு நன்மை வரவேண்டும். துன்மார்க்கருக்குத் தீங்கு வரவேண்டும். ஆனால் இந்தப் பிரபஞ்சத்தில், துன்மார்க்கருக்கு வரவேண்டிய தீங்கு, நீதிமான்களுக்கு வருகிறது. நீதிமான்களுக்கு வரவேண்டிய நன்மை துன்மார்க்கருக்கு வருகிறது.

துன்மார்க்கன் செழித்திருக்கிறான். அவன் ஏதோ நன்மை செய்து, அந்த நன்மைக்குத்தக்க பிரதிபலனைப் பெற்று அனுபவிப்பதுபோல, அவன் செழித்திருக்கிறான். ஆனால் துன்மார்க்கன் ஒரு நன்மையும் செய்வதில்லை. அவன் துர்க்கிரியை மாத்திரமே செய்கிறான். அவனுடைய துர்க்கிரியைக்குத்தக்க தீங்கு அவனுக்கு வராமல், நன்மையே வருகிறது.

இந்தப் பிரபஞ்சத்தில் துன்மார்க்கன் செழித்திருக்கும்போது, நீதிமான் வேதனைகளை அனுபவிக்கிறான். நீதிமான் ஏதோ துர்க்கிரியைகளைச் செய்து, அதற்கு தண்டனைகளை அனுபவிப்பது போல, தீங்குகளை அனுபவிக்கிறான். நீதிமான் பல பாடுகளையும், வேதனைகளையும் அனுபவிக்கிறான். துன்மார்க்கனோ தன்னுடைய துன்மார்க்கத்தில் துணிகரமாய் நிலைத்திருக்கிறான். பயமில்லாமலிருக்கிறான். பாதுகாப்பாயிருக்கிறான்.

இந்தப் பிரபஞ்சத்தில் துன்மார்க்கன் செழித்திருப்பதையும், நீதிமான் பாடுகளை அனுபவிப்பதையும் பார்த்து, தேவனிடத்தில் நீதியில்லை என்று சொல்லக்கூடாது. தேவன் அநியாயம் செய்கிறார் என்றும் சொல்லக்கூடாது. தேவனை குறைசொல்லுவதற்குப் பதிலாக, இந்த உலகத்தைத்தான் குறைசொல்லவேண்டும். இந்தப் பிரபஞ்சத்தில் எல்லாமே மாயையாயிருக்கிறது. தேவனிடத்தில் ஒரு மாயையுமில்லை. அவரிடத்தில் அநீதியில்லை. அநியாயமுமில்லை. அவர் எந்த தப்பிதமும் செய்வதில்லை. இந்தப் பிரபஞ்சத்தில் தான் எல்லாவிதமான அநியாயமும், அக்கிரமமும், அநீதியும் நிரம்பியிருக்கிறது. சாலொமோனுடைய பார்வைக்கு இது மாயையாய்த் தெரிகிறது. சாலொமோன் பூமியின்மேல் நடக்கிற இந்தக் காரியத்தை கண்டு, "இதுவும் மாயை" என்று சொல்லுகிறார்.

இந்தப் பிரபஞ்சத்தில் நாம் காண்கிற காரியங்கள் நமக்கு மெய்யான ஆசீர்வாதமல்ல. உலகப்பிரகாரமான காரியங்களுக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்கிறோம். அவற்றில் நாம் சந்தோஷமாயிருக்கலாம் என்று நினைக்கிறோம். நாம் நினைப்பதுபோல உலகப்பிரகாரமான காரியங்கள் முக்கியமானவையுமல்ல. அவை நமக்கு மெய்யான சந்தோஷத்தையும் கொடுக்காது. உலகப்பிரகாரமான காரியங்கள் நிலைத்து நிற்காது. அவை சீக்கிரத்தில் அழிந்துபோகும். உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகை.

துன்மார்க்கர் தேவனுக்கு சத்துருக்களாயிருக்கிறார்கள். உலகத்தின் ஐசுவரியம் மேன்மையானதாகயிருக்குமென்றால், கர்த்தர் அந்த மேன்மையான ஈவை துன்மார்க்கனுக்குக் கொடுக்கமாட்டார். நீதிமான்கள் தேவனுடைய சிநேகிதர்களாயிருக்கிறார்கள். மனுஷர் பார்க்கிற பிரகாரமாக கர்த்தர் பார்ப்பாரென்றால், கர்த்தர் இந்தப் பிரபஞ்சத்தின் தொல்லைகளை, தம்முடைய சிநேகிதர்களாகிய நீதிமான்களுக்குக் கொடுக்கமாட்டார். மனுஷன் இம்மையைப் பார்க்கிறான். கர்த்தரோ மறுமையைப் பார்க்கிறார். நமக்கு நல்ல ஈவு எது என்பது கர்த்தருக்குத்தான் தெரியும். அதை அவர் தம்முடைய பிள்ளைகளுக்கு நிச்சயமாய் கொடுப்பார்.

நாம் இந்தப் பிரபஞ்சத்தில் அனுபவிக்கிற பாடுகளும், வேதனைகளும் கொஞ்சகாலம் மாத்திரமே இருக்கும். நாம் நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்கும்போது, இந்தப் பாடுகளெல்லாம் நம்மைவிட்டு நீங்கிப்போகும். நமக்கு நித்திய சந்தோஷமும், நித்திய ஆறுதலும், நித்திய மகிமையும், நித்திய ஆசீர்வாதமும் கிடைக்கும். நித்திய சந்தோஷமே மெய்யான சந்தோஷம். இந்த உலகத்தில் நாம் அனுபவிக்கிற சந்தோஷங்களும், பாடுகளும் மாயை. அவற்றில் உண்மையில்லை.

ஜீவகாலம்
பிர 8:15

பிர 8:15. ஆகையால் நான் களிப்பைப் புகழ்ந்தேன்; புசிப்பதும் குடிப்பதும் மகிழ்வதுமேயல்லாமல் சூரியனுக்குக்கீழே மனுஷனுக்கு வேறொரு நன்மையும் இல்லை; சூரியனுக்குக்கீழே தேவன் அவனுக்குத் தந்த ஜீவகாலத்தில் அவன் பிரயாசத்தினால் அவனுக்கு நிலைக்கும் பலன் இதுவே.

இந்தப் பிரபஞ்சத்தில் தேவன் நமக்குக் கொடுக்கும் ஆசீர்வாதங்களை, பயபக்தியோடு அனுபவிக்கவேண்டும். எல்லாவற்றையும் விலக்கி ஒதுக்கி வைத்துவிட்டு, எதையும் அனுபவிக்காமல் இருக்கவேண்டும் என்று தேவன் நமக்கு கட்டளையிடவில்லை. தேவன் நமக்குக் கொடுப்பதில் நாம் சந்தோஷமாயிருக்கவேண்டும். அதை நல்லமுறையில் பயன்படுத்தவேண்டும். தேவன் நமக்குக் கொடுக்கும் நன்மைகளை நாம் மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளவேண்டும். தேவன் நமக்குத் தந்திருக்கிற ஜீவகாலத்தில், நம்முடைய பிரயாசத்தினால், நமக்கு நிலைக்கும் பலன் இதுவே.

சாலொமோன் களிப்பைப் புகழுகிறார். இந்தக் களிப்பு உலகப்பிரகாரமான சந்தோஷமல்ல. இது ஆவிக்குரிய சந்தோஷம். இது பரிசுத்தமான பாதுகாப்பு. இந்தக் களிப்பில் நம்முடைய மனது பரிசுத்தமாயிருக்கும். தேவனிடத்தில் நாம் நம்பிக்கை வைத்திருப்பதினால் நமக்கு இந்தக் களிப்பு உண்டாகும். தேவனுடைய வல்லமையிலும், அவருடைய வாக்குத்தத்தத்திலும் நாம் நம்பிக்கை வைக்கும்போது, நமக்கு மெய்யான ஆறுதலும், சந்தோஷமும், சமாதானமும் கிடைக்கும்.

புசிப்பதும் குடிப்பதும் மகிழ்வதும் சூரியனுக்குக் கீழே மனுஷனுக்கு நன்மையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. கர்த்தர் நமக்கு ஜீவகாலத்தைக் கொடுத்திருக்கிறார். இந்தக் காலத்தை நாம் பிரயோஜனப்படுத்திக்கொள்ள வேண்டும். தெளிந்த சிந்தையோடும், நன்றியுள்ள இருதயத்தோடும் நம்முடைய ஜீவகாலத்தை பயபக்தியோடும், பரிசுத்தத்தோடும் ஜீவிக்கவேண்டும். கர்த்தர் நமக்கு கொடுக்கும் பலனை நாம் சந்தோஷமாய் அனுபவிக்கவேண்டும். நம்முடைய பிரயாசத்திற்குத்தக்க பலனை கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிறார்.

நம்முடைய ஜீவகாலம் சூரியனுக்குக் கீழே இருக்கிறது. நாம் இந்தப் பிரபஞ்சத்தில், சூரியனுக்குக் கீழே ஜீவித்தாலும், நாம் வரப்போகிற உலகத்தையே நோக்கிப் பார்க்கவேண்டும். நம்முடைய ஜீவகாலம் இந்தப் பிரபஞ்சத்திலிருந்தாலும், நம்முடைய நித்திய ஜீவகாலத்தையே நாம் எதிர்நோக்கவேண்டும். இந்தப் பிரபஞ்சத்தில் வெளிச்சத்தைக் கொடுக்கிற சூரியன் ஒரு நாள் இருளடையும். ஆனால் நீதியின் சூரியனாகிய தேவனோ, நமக்கு நித்தியகாலமாக வெளிச்சத்தைக் கொடுப்பார். வானம் ஒழிந்துபோகும். பூமி ஒழிந்துபோகும். தேவன் நமக்குக் கொடுக்கப்போகும் ஜீவனோ நித்தியகாலத்திற்கும் நிலைத்து நிற்கும். இந்தப் பிரபஞ்சத்தில் புசிப்பதும் குடிப்பதும் மகிழ்வதுமே நமக்குக் கிடைக்கும் நன்மை. வரப்போகிற நித்திய ஜீவனில், கர்த்தருடைய சமுகத்தில் நமக்குக் கிடைக்கும் ஆனந்த சந்தோஷமே மிகப்பெரிய பாக்கியம்.

தேவன் செய்யும் சகல கிரியைகள்
பிர 8:16,17

பிர 8:16. நான் ஞானத்தை அறியவும், மனுஷன் இரவும் பகலும் கண்ணுறக்கமில்லாமல் பூமியிலே செய்யும் வேலைகளைப் பார்க்கவும் என் மனதைச் செலுத்தினபோது,

பிர 8:17. தேவன் செய்யும் சகல கிரியைகளையும் நான் கவனித்துப்பார்த்து, சூரியனுக்குக்கீழே செய்யப்படும் கிரியையை மனுஷன் கண்டுபிடிக்கக்கூடாதென்று கண்டேன். அதை அறியும்படி மனுஷன் பிரயாசப்பட்டாலும் அறியமாட்டான்; அதை அறியலாம் என்று ஞானி எண்ணினாலும் அவனும் அதை அறிந்துகொள்ளமாட்டான்.

தேவனுடைய கிரியைகளெல்லாம் மகத்துவமானவை. அவை அற்புதமானவை. தேவனுடைய கிரியைகளை நம்மால் கண்டுபிடிக்க முடியாது. தேவனுடைய ஞானத்தை அறிந்துகொள்ளும் திறமையை கர்த்தர் மனுஷனுக்குக் கொடுக்கவில்லை. மனுஷன் தன்னை ஞானியென்று எண்ணினாலும், சர்வஞானமுள்ள தேவனுக்கு முன்பாக, மனுஷனுடைய ஞானம் குறைவுள்ளது.

சாலெமோன் ஞானத்தை அறிய தன்னுடைய மனதை செலுத்துகிறார். மனுஷன் இரவும் பகலும் கண்ணுறக்கமில்லாமல் பூமியில் அநேக வேலைகளைச் செய்கிறான். சாலொமோன் அவைகளைப் பார்க்க தன் மனதை செலுத்துகிறார். தேவன் செய்யும் சகல கிரியைகளையும் கவனித்துப் பார்க்கிறார். சாலொமோனைப்போலவே அநேக மனுஷர்கள் சூரியனுக்குக் கீழே செய்யப்படும் கிரியைகளைக் கண்டுபிடிக்க தங்கள் மனதை செலுத்துகிறார்கள். ஆனால் அவர்களால் ஞானத்தை அறியமுடியாது என்றும், மனுஷர் செய்யும் கிரியைகளை கண்டுபிடிக்கக் கூடாது என்றும் சாலொமோன் தீர்மானம்பண்ணுகிறார்.

துன்மார்க்கன் செழித்திருப்பதையும், நீதிமான்கள் துன்பப்படுவதையும் சாலொமோன் பார்க்கிறார். இதற்கான காரணங்களை அறிந்துகொள்ள வேண்டுமென்று அவர் தன்னுடைய மனதை செலுத்துகிறார். ஆனால் அவரால் இதன் இரகசியத்தை கண்டுபிடிக்க முடியவில்லை. சாலொமோனால் மாத்திரமல்ல, வேறு எந்த மனுஷனாலும் இந்த இரகசியத்தை கண்டுபிடிக்க முடியாது. இதை எப்படியும் அறிந்துகொள்ளலாமென்று ஞானி எண்ணுகிறான். ஆனால் அவன் அதை அறிந்துகொள்ளமாட்டான் என்று சாலொமோன் தெளிவாகச் சொல்லுகிறார். பூமியிலே மனுஷன் செய்யும் வேலைகளைப் பார்ப்பதற்காக நம்முடைய மனதை செலுத்துவதினால் நமக்கு ஒரு பிரயோஜனமுண்டாகாது. நம்முடைய முயற்சிகளெல்லாம் வீணாய்ப் போகும்.

சாலொமோன் தேவன் செய்யும் சகல கிரியைகளையும் கவனித்துப் பார்க்கிறார். தேவனுடைய தெய்வீக பராமரிப்பை ஆராய்ந்து பார்க்கிறார். தேவனுடைய ஒவ்வொரு கிரியையையும் ஒப்பிட்டுப் பார்க்கிறார். தேவனுடைய ஒரு பராமரிப்பை, மற்றொரு பராமரிப்போடு அளந்து பார்க்கிறார். தேவன் சூரியனுக்குக் கீழே அநேகக் கிரியைகளைச் செய்கிறார். அவர் செய்கிற கிரியைகளை எந்த மனுஷனாலும் கண்டுபிடிக்க முடியாது. தேவன் எந்தத் திட்டத்தின் பிரகாரமாக, எப்படி செயல்படுகிறார் என்பதை மனுஷனால் அறிந்துகொள்ள முடியாது. தேவனுடைய வழிகள் நமக்கு மேலேயிருக்கிறது. தேவன் எப்போதுமே ஒன்றுபோல் கிரியை நடப்பிப்பதில்லை. அவருடைய நியாயங்களெல்லாம் மிகவும் ஆழமானது. அவருடைய கிரியைகளெல்லாம் அற்புதமானவை. நம்மால் ஆராய்ந்து அறியமுடியாதவை.

9 அதிகாரம்

சாலொமோனுடைய பார்வையில் இந்த உலகம் அவருக்கு மாயையாயிருக்கிறது. சாலொமோன் பூமியிலுள்ள எல்லாவற்றையும் பற்றி தன்னுடைய மனதிலே சிந்தித்துக்கொண்டிருக்கிறார். அவர் நான்கு காரியங்களைக் காண்கிறார். அவையாவன : 1. எல்லோருக்கும் எல்லாம் ஒரேவிதமாய் சம்பவிக்கிறது. சன்மார்க்கனுக்கும் துன்மார்க்கனுக்கும் ஒன்றுபோலவே சம்பவிக்கிறது (பிர 9:1-3). மனுஷனுக்கு மரணம் வரும்போது அவனுடைய உலகப்பிரகாரமான எல்லா காரியங்களும் முடிவுக்கு வந்துவிடுகிறது (பிர 9:4-6). நம்மிடத்திலுள்ள ஞானமே, நம்முடைய ஜீவியத்தை சந்தோஷமாய் அனுபவிப்பதற்கு உதவியாயிருக்கும் (பிர 9:7-10). மனுஷனுக்கு சடுதியில் துன்பங்கள் வருகிறது. மனுஷன் அதைப் பார்த்து அதிர்ச்சியடைகிறான் (பிர 9:11-12). ஞானம் மனுஷருக்கு அதிகப்பிரயோஜனமுள்ளது (பிர 9:13-18).

எல்லாருக்கும் எல்லாம் ஒரேவிதமாய்ச் சம்பவிக்கும் பிர 9:1-3

பிர 9:1. இவை எல்லாவற்றையும் நான் என் மனதிலே வகையறுக்கும்படிக்குச் சிந்தித்தேன்; நீதிமான்களும் ஞானிகளும், தங்கள் கிரியைகளுடன், தேவனுடைய கை வசமாயிருக்கிறார்கள்; தனக்குமுன் இருக்கிறவர்களைக்கொண்டு ஒருவனும் விருப்பையாவது வெறுப்பையாவது அறியான்.

பிர 9:2. எல்லாருக்கும் எல்லாம் ஒரேவிதமாய்ச் சம்பவிக்கும்; சன்மார்க்கனுக்கும் துன்மார்க்கனுக்கும், நற்குணமும் சுத்தமுமுள்ளவனுக்கும் சுத்தமில்லாதவனுக்கும், பலியிடுகிறவனுக்கும் பலியிடாதவனுக்கும், ஒரேவிதமாய்ச் சம்பவிக்கும்; நல்லவனுக்கு எப்படியோ பொல்லாதவனுக்கும் அப்படியே; ஆணையிடுகிறவனுக்கும் ஆணையிடப் பயப்படுகிறவனுக்கும் சமமாய்ச் சம்பவிக்கும்.

பிர 9:3. எல்லாருக்கும் ஒரேவிதமாய்ச் சம்பவிக்கிறது சூரியனுக்குக் கீழே நடக்கிறதெல்லாவற்றிலும் விசேஷித்த தீங்காம்; ஆதலால் மனுபுத்திரரின் இருதயம் தீமையினால் நிறைந்திருக்கிறது; அவர்கள் உயிரோடிருக்கும் நாளளவும் அவர்கள் இருதயம் பைத்தியங்கொண்டிருந்து, பின்பு அவர்கள் செத்தவர்களிடத்திற்குப் போகிறார்கள்.

இந்தப் பிரபஞ்சத்தில் அநேகர் தத்துவ மேதைகளைப்போல வேஷம்போடுகிறார்கள். எதையாவது தேடிப்பார்ப்பதுபோல ஆராய்ச்சி செய்கிறார்கள். ஆனால் அவர்கள் எதையும் கண்டுபிடிப்பதில்லை. ஆனாலும் சில சமயங்களில், அறிஞர்கள் ஒரு காரியத்தைத் தேடும்போது, எதிர்பாராத விதமாக வேறொன்றைக் கண்டுபிடிப்பார்கள். அவர்களுடைய கண்டுபிடிப்புக்களும் அநேகருக்கு உதவியாயிருக்கும். சாலொமோன் இதுபோலவே, ஒவ்வொரு காரியத்தையும் தேடிகண்டுபிடித்துக் கொண்டிருக்கிறார்.

தேவன் செய்யும் சகல கிரியைகளையும் சாலொமோன் கவனித்துப் பார்த்தார். ஆனால் தேவனுடைய கிரியைகளை மனுஷனால் கண்டுபிடிக்க முடியாது என்று தீர்மானித்துவிட்டார். மனுஷன் எவ்வளவுதான் பிரயாசப்பட்டாலும், தேவனுடைய இரகசியங்களை அறியமுடியாது. உலகப்பிரகாரமான ஞானிகள் தங்களை ஞானிகளென்று எண்ணி, தேவனுடைய கிரியைகளை கண்டுபிடிப்பதற்கு முயற்சிபண்ணுகிறார்கள். ஆனாலும் அவர்களாலும் தேவனுடைய இரகசியங்களை அறிந்துகொள்ள முடியாது.

தேவனுடைய கிரியைகளை கண்டுபிடிக்க முடியாமல் போனாலும், சாலொமோன் தன்னுடைய முயற்சிகளைக் கைவிட்டுவிடவில்லை. எல்லாவற்றையும் தன்னுடைய மனதிலே வகையறுக்கும்படிக்கு சிந்திக்கிறார். ஒவ்வொரு காரியத்தையும் ஆராய்ந்து பார்க்கிறார். சாலொமோனின் கண்டுபிடிப்புக்கள் எல்லா ஜனங்களுக்கும் பிரயோஜனமுள்ளதாயிருக்கும். தன்னுடைய மனதில் வகையறுத்ததை சாலொமோன் இந்த அதிகாரத்தில் நமக்கு விரிவாகச் சொல்லுகிறார். இவற்றை வாசிக்கிற நமக்கு, இவை மிகுந்த பயனுள்ளதாயிருக்கும்.

சாலொமோன் தேவனுடைய தெய்வீக பராமரிப்பை ஆராய்ந்து பார்க்கிறார். மனுஷஞானத்தினால் தெய்வீக காரியங்களை புரிந்துகொள்ள முடியாது. எல்லா மனுஷருக்கும் தேவனுடைய பராமரிப்பு ஒன்றுபோலவே இருக்கிறது. எல்லாருக்கும் எல்லாம் ஒரேவிதமாய் சம்பவிக்கிறது. இந்தப் பிரபஞ்சத்தில் நீதிமான்களும் இருக்கிறார்கள். ஞானிகளும் இருக்கிறார்கள். இவர்கள் தேவனுடைய கைவசமாயிருக்கிறார்கள். இவர்களுடைய கிரியைகளும் தேவனுடைய ஆளுகையின் கீழிருக்கிறது. மனுஷன் நீதிமானாகவும், ஞானவானாகவும் இருந்தாலும், தன்னுடைய சுயமுயற்சியினால், அவனால் தேவனுடைய விருப்பத்தையும், வெறுப்பையும் அறிந்துகொள்ள முடியாது.

தேவன் அநேகருக்கு ஆறுதல்களைக் கொடுக்கிறார். வேறு சிலருக்கோ துன்பங்களையும் வேதனைகளையும் கொடுக்கிறார். சன்மார்க்கனுக்கு நன்மையான காரியங்கள் வருவதுபோல துன்மார்க்கனுக்கும் நன்மையான காரியங்கள் வருகிறது. சுத்தமில்லாதவனுக்கு தொல்லைகள் வருவதுபோல நற்குணமும் சுத்தமும் உள்ளவனுக்கும் தொல்லைகள் வருகிறது. பலியிடுகிறவனுக்கும் பலியிடாதவனுக்கும் ஒரேவிதமாய் சம்பவிக்கிறது. நல்லவனுக்கு எப்படியோ பொல்லாதவனுக்கும் அப்படியே நடைபெறுகிறது. ஆணையிடுகிறவனுக்கும் ஆணையிடப்படுகிறவனுக்கும் சமமாய் சம்பவிக்கிறது. ஞானிகள் இதை ஆராய்ந்து பார்க்கிறார்கள். மனுஷருக்கு சம்பவிக்கிற காரியங்களை அவர்களால் ஆராய்ந்து அறியமுடியவில்லை.

எல்லோருக்கும் ஒரேவிதமாய் சம்பவிப்பதை சாலொமோன் காண்கிறார். இவை மனுஷனுடைய ஞானத்தினால் அறிந்துகொள்ள முடியாத இரகசியமாயிருக்கிறது. எல்லோருக்கும் ஒரேவிதமாய் சம்பவிப்பது மனுஷருக்கு ஒரு தடைக்கல்லைப்போல இருக்கிறது. சாலொமோன் இதைப்பற்றிச் சொல்லும்போது இது சூரியனுக்குக் கீழே நடக்கிற எல்லாவற்றிலும் விசேஷித்த தீங்காகயிருக்கிறது என்று சொல்லுகிறார். இதனால் மனுபுத்திரரின் இருதயம் தீமையினால் நிறைந்திருக்கிறது.

எல்லோருக்கும் ஒரேவிதமாய் சம்பவிப்பதினால், மனுஷர்கள் உயிரோடிருக்கும் நாளளவும், அவர்களுடைய இருதயம் பைத்தியங்கொண்டிருக்கிறது. பின்பு அவர்கள் செத்தவர்களிடத்திற்குப் போய்விடுகிறார்கள். சாலொமோன் சூரியனுக்குக் கீழே சம்பவிக்கும் எல்லா காரியங்களையும் பார்க்கிறார். அவர் மனுஷரைப் பார்க்கும்போது தேவனையும் பார்க்கிறார். தேவனுடைய பராமரிப்பையும் பார்க்கிறார்.

யோபு கர்த்தருடைய சர்வஞானத்தை விவரித்துச் சொல்லும்போது சர்வவல்லவருக்குக் காலங்கள் மறைக்கப்படாதிருக்க, அவரை அறிந்தவர்கள் அவர் நியமித்த நாட்களை அறியாதிருக்கிறதென்ன? (யோபு 24:1) என்று சொல்லுகிறார்.

எரேமியா தேவனுடைய நீதியை வெளிப்படுத்துகிறார். கர்த்தவே, உம்மோடே நான் வழக்காடப்போனால், தேவரீர் நீதியுள்ளவராமே; ஆகிலும் உம்முடைய நியாயங்களைக் குறித்து உம்மோடே நான் பேசும்படி வேண்டுகிறேன்; ஆகாதவர்களின் வழி வாய்க்கிறதென்ன? துரோகஞ்செய்துவருகிற அனைவரும் சுகித்திருக்கிறதென்ன?" (எரே 12:1).

ஆபகூக் தீர்க்கதரிசி தேவனுடைய பரிசுத்தத்தைப்பற்றிச் சொல்லுகிறார். தீமையைப் பார்க்கமாட்டாத சுத்தக்கண்ணனே, அநியாயத்தை நோக்கிக்கொண்டிருக்கமாட்டீரே; பின்னை துரோகிகளை நீர் நோக்கிக் கொண்டிருக்கிறதென்ன? துன்மார்க்கன் தன்னைப் பார்க்கிலும் நீதிமானை விழுங்கும்போது நீர் மௌனமாயிருக்கிறதென்ன?" (ஆப 1:13).

சங்கீதக்காரர் தேவனுடைய நன்மையையும், அவர் தம்முடைய பிள்ளைகளுக்கு காண்பிக்கிற விசேஷித்த சிலாக்கியங்களையும் எடுத்துச்சொல்லுகிறார். "சுத்த இருதயமுள்ளவர்களாகிய இஸ்ரவேலருக்கு தேவன் நல்லவராகவே இருக்கிறார்" (சங் 73:1).

இந்தப் பிரபஞ்சத்தில் நன்மையும் தீமையும் கலந்திருக்கிறது. மனுஷருக்குள்ளே துன்மார்க்கரும், நற்குணமுள்ளவரும் இருக்கிறார்கள். சுத்தமுள்ளவரும், சுத்தமில்லாதவரும் இருக்கிறார்கள். தேவனுடைய பார்வையில் எதுவும் மறைவாயிருக்காது. மனுஷன் மாயையாகச் சுற்றித்திரிந்தாலும், விருதாவாக வேஷம் போட்டாலும், அவனுடைய உண்மையான சுபாவத்தை கர்த்தர் அறிந்து வைத்திருக்கிறார். மனுஷன் முகத்தைப் பார்க்கும்போது கர்த்தர் நம்முடைய இருதயத்தை ஆராய்ந்து பார்க்கிறார். தேவன் சர்வசிருஷ்டிகர். தம்முடைய தெய்வீக பராமரிப்பினால் அவர் எல்லா சிருஷ்டிகளையும் போஷித்துப் பராமரிக்கிறார். ஆகையினால் எல்லோருக்கும் ஒரேவிதமாய் சம்பவிக்கிறது.

சன்மார்க்கனுக்கும் துன்மார்க்கனுக்கும், நற்குணமும் சுத்தமுமுள்ளவனுக்கும், சுத்தமில்லாதவனுக்கும் ஒன்றுபோலவே சம்பவித்தாலும், தேவனுடைய விசேஷித்த பாதுகாப்பும், பராமரிப்பும், அவருடைய உடன்படிக்கையின் பிள்ளைகளுக்கு உண்டு. நீதிமான்களும் ஞானிகளும் தங்கள் கிரியைகளுடன் தேவனுடைய கைவசமாயிருக்கிறார்கள். அவர்கள் தேவனுடைய விசேஷித்த பாதுகாப்பிலிருக்கிறார்கள். அவர்களுக்கு தேவனுடைய விசேஷித்த வழிநடத்துதல் கிடைக்கும். அவர்களுடைய எல்லா கிரியைகளையும் கர்த்தரே ஆளுகை செய்கிறார். கர்த்தரை நம்புகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாகவே நடைபெறும்.

இந்தப் பிரபஞ்சத்தில் துன்மார்க்கருக்கு தீங்குகளும் கேடுகளும் வருவதுபோல, சன்மார்க்கனுக்கும் வரலாம். இந்தப் பிரபஞ்சத்தில் கர்த்தருடைய பரிசுத்தவான்கள் நன்மைகளை அனுபவிக்க முடியாமல் போகலாம். அவர்களுக்கு இந்தப் பூமியில் பாடுகளும், வேதனைகளும், சோதனைகளும் அதிகமாய் வரலாம். கர்த்தருடைய பரிசுத்தவான்கள் இந்தப் பிரபஞ்சத்தில் தீங்குகளை அனுபவித்தாலும், அவர்களுடைய நித்திய ஜீவனில் அவர்கள் தேவனுடைய நன்மைகளை பரிபூரணமாய்ப் பெற்றுக்கொள்வார்கள். இந்த சிலாக்கியம் பாவிகளுக்கும் துன்மார்க்கருக்கும் கிடைக்காது.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு இந்தப் பிரபஞ்சத்தில் எது சம்பவித்தாலும், அது தேவனுடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாகவே சம்பவிக்கிறது. நம்முடைய காலங்கள் தேவனுடைய கரத்திலிருக்கிறது.

"மெய்யாகவே அவர் ஜனங்களைச் சிநேகிக்கிறார்; அவருடைய பரிசுத்தவான்கள் எல்லாரும் உம்முடைய கையில் இருக்கிறார்கள்; அவர்கள் உம்முடைய பாதத்தில் விழுந்து, உம்முடைய வார்த்தைகளினால் போதனையடைவார்கள்" (உபா 33:3).

"அவைகளை எனக்குத் தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார்; அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலும் கூடாது" (யோவா 10:29).

"என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது; என் சத்ருக்களின் கைக்கும் என்னைத் துன்பப்படுத்துகிறவர்களின் கைக்கும் என்னைத் தப்புவியும்" (சங் 31:15).

மனுஷருடைய ஜீவியத்தின் வெளிப்பிரகாரமான தோற்றத்தை வைத்து தேவனுடைய அன்பையும் கோபத்தையும் நாம் அளந்து பார்க்க முடியாது. மனுஷனுக்கு வரும் இன்பங்களுக்கும், துன்பங்களுக்கும் வெவ்வேறு காரணங்கள் உள்ளன. மனுஷன் நன்றாயிருக்கும்போது தேவன் அவனை ஆசீர்வதிக்கிறார் என்றும், மனுஷன் தீங்குகளை அனுபவிக்கும்போது தேவன் அவன்மீது கோபப்பட்டு அவனைத் தண்டிக்கிறார் என்றும் முடிவு பண்ணிவிடக்கூடாது. தனக்கு முன்னிருக்கிறவர்களைக்கொண்டு ஒருவனும் விருப்பையாவது வெறுப்பையாவது அறியான் என்று சாலொமோன் சொல்லுகிறார். நம்முடைய பார்வை நம்மை வஞ்சித்துவிடும். நம்முடைய உணர்வுகளும் நம்மை ஏமாற்றிவிடும்.

நம்முடைய முழுஇருதயத்தோடும் நாம் தேவனை சேவிக்கவேண்டும். தேவனிடத்தில் நம்முடைய முழுஆத்துமாவோடும், முழுபலத்தோடும், முழுஇருதயத்தோடும் அன்புகூரவேண்டும். அப்போது நம்மால் தேவனுடைய விருப்பையும் வெறுப்பையும் அறிந்துகொள்ள முடியும். நாம் இந்தப் பிரபஞ்சத்தில் ஜீவிப்பது தற்காலிகமானது. நம்முடைய நித்திய ஜீவன் பரலோகத்திலுள்ளது. இனிமேல் வரப்போகிற உலகத்தில் நாம் நித்தியகாலமாக ஜீவிக்கும்போது, தேவனுடைய விருப்பையும் வெறுப்பையும் நம்மால் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும்.

தேவனுடைய கிரியைகளை அறிந்துகொள்வதற்காக, சாலொமோன் சூரியனுக்குக் கீழே நடைபெறுகிற எல்லா சம்பவங்களையும் ஆராய்ந்து பார்க்கிறார். எல்லோருக்கும் எல்லாம் ஒரேவிதமாய் சம்பவிப்பதைக் காண்கிறார். ஒரு சிலர் ஏற்கெனவே இந்த அனுபவங்களை கடந்து வந்திருக்கிறார்கள். வேறு சிலரோ இந்த அனுபவங்கள் வழியாக கடந்து போகப்போகிறார்கள்.

எல்லாருக்கும் எல்லாம் ஒரேவிதமாய் சம்பவிக்கும் என்று தேவனை நம்பாத நாஸ்திகர்களும் சொல்லுகிறார்கள். இவர்கள் தேவனுடைய பராமரிப்புக்கு எதிராகப் பேசுகிறவர்கள். தேவன்மீது பக்தியாகயிருக்கிறவர்களுக்கு ஏன் துன்பங்களும் வேதனைகளும் வருகிறது என்று இவர்கள் கேள்விகளைக் கேட்கிறார்கள். உலகப்பிரகாரமாகப் பார்த்தால் இவர்களுடைய கேள்வியில் நியாயமிருப்பதுபோல தெரியும். ஆனால் தேவனுடைய தெய்வீக காரியங்களை உலகப்பிரகாரமாகப் பார்க்கக்கூடாது. அதை தேவனுடைய சித்தத்தின் பிரகாரம், ஆவிக்குரிய ரீதியாகப் பார்க்கவேண்டும்.

துன்மார்க்கருக்கு தீங்குகள் வருவதுபோல சன்மார்க்கனுக்கும் வருகிறது. சுத்தமில்லாதவனுக்கு வேதனைகள் வருவதுபோல சுத்தமுள்ளவனுக்கும் வருகிறது. இதனால் கர்த்தரிடத்தில் பயபக்தியாயிருந்து, சன்மார்க்கமாய் ஜீவிக்கிற பரிசுத்தவான்களுக்கு சோர்வு உண்டாகிவிடுகிறது. இவர்களை உற்சாகப்படுத்தும் வண்ணமாக சாலொமோன் ஆவிக்குரிய சத்தியங்களை விவரித்துச் சொல்லுகிறார். கர்த்தர்மீது நாம் வைத்திருக்கும் விசுவாசத்தை நாம் எல்லா காவலோடும் காத்துக்கொள்ளவேண்டும்.

நாஸ்திகர்கள் மனுஷர் மத்தியிலே விஷவித்துக்களைத் தூவுகிறார்கள். அதன் பாதிப்பு நமக்கு வரக்கூடாது. நாம் கர்த்தர்மீது வைத்திருக்கிற விசுவாசம் அசைக்கப்படக்கூடாது. கர்த்தருடைய வார்த்தையில் நாம் உறுதியாய் நிலைத்திருக்கவேண்டும். தேவனைப்பற்றிய சத்தியங்களை நாம் தெளிவாகப் புரிந்துகொண்டால், நம்முடைய விசுவாச ஜீவியம் பலவீனமாயிருக்காது. சத்துருவின் தாக்குதல்களை சமாளிப்பதற்கும், அவனை எதிர்த்து நிற்பதற்கும், அவனிடத்திலிருந்து நம்மைப் பாதுகாப்பதற்கும், கர்த்தருடைய வார்த்தையை கேடகமாகப் பயன்படுத்தவேண்டும்.

நீதிமானுக்கும் துன்மார்க்கனுக்கும் எல்லாம் ஒரேவிதமாய் சம்பவிக்கிறது. ஆனாலும், நீதிமானுக்கும் துன்மார்க்கனுக்கும் வித்தியாசமிருக்கிறது. நீதிமான் சுத்தமுள்ளவனாகயிருக்கிறான். அவனுடைய கைகளும் இருதயமும் சுத்தமுள்ளதாகயிருக்கிறது. துன்மார்க்கனோ சுத்தமில்லாதவனாக இருக்கிறான். அவனிடத்தில் அசுத்தமான ஆசைகள் இருக்கிறது. துன்மார்க்கமான இச்சைகள் அவனை ஆளுகை செய்கிறது.

இந்தப் பிரபஞ்சத்தில் சுத்தமுள்ளவனுக்கும், சுத்தமில்லாதவனுக்கும் வித்தியாசமில்லாமலிருக்கலாம். ஆனால், வரப்போகிற மறுமையிலே, தேவன் இவர்கள் இருவருக்கும் மிகப்பெரிய வித்தியாசத்தைக் காண்பார். இந்தப் பிரபஞ்சத்தில் எல்லோருக்கும் எல்லாம் ஒரேவிதமாய் சம்பவிக்கலாம். ஆனால் மறுமையிலே, எல்லோருக்கும் எல்லாம் ஒரேவிதமாய் சம்பவிக்காது. சன்மார்க்கனுக்கும் துன்மார்க்கனுக்கும் மறுமையிலே வெவ்வேறு விதமாய் சம்பவிக்கும். அதுபோலவே நற்குணமும் சுத்தமுமுள்ளவனுக்கும், சுத்தமில்லாதவனுக்கும் மறுமையிலே வெவ்வேறு விதமாய் சம்பவிக்கும். இந்த வித்தியாசத்தை நம்மால் இம்மையிலே, இந்தப் பிரபஞ்சத்தில் காணமுடியவில்லை.

நீதியுள்ளவன் கர்த்தருக்குப் பலியிடுகிறான். அவனுடைய இருதயமும் தேவனை ஆராதிக்கிறது. அவன் தன்னுடைய பலிகளையும் காணிக்கைகளையும் செலுத்தி கர்த்தரை ஆராதிக்கிறான். துன்மார்க்கனோ தேவனுக்கு பலிகளைச் செலுத்தமாட்டான். இவன் தேவனுடைய ஆராதனையை அசட்டைசெய்து புறக்கணித்துவிடுகிறான். தன்னிடத்திலுள்ளதை தேவனுக்குக் கொடுக்காமல், தானே வைத்துக்கொள்கிறான். துன்மார்க்கன் தேவனுடைய மகிமையைத் தேடாமல் தன்னுடைய மகிமையைத் தேடுகிறான்.

நீதிமான் இந்தப் பிரபஞ்சத்தில் நன்மை செய்கிறான். நீதிமான் நல்லவனாகயிருக்கிறான். துன்மார்க்கனோ பொல்லாதவனாகயிருக்கிறான். நீதிமான் தேவனுடைய பெயரில் ஆணையிடுகிறான். துன்மார்க்கனோ தேவனுடைய நாமத்தைத் தூஷிக்கிறான். நீதிமான் தேவனுடைய நாமத்தில் ஆணையிடும்போது, அவனுடைய இருதயத்தில் பயமும் பக்தியும் இருக்கும். நீதிமான் தான் பொருத்தனை பண்ணியதை சீக்கிரத்தில் செலுத்துவான். துன்மார்க்கனோ தேவனுடைய சமுகத்திற்கு முன்பாக ஆணையிடவும் மாட்டான், பொருத்தனை பண்ணவும் மாட்டான். பொருத்தனை பண்ணினாலும் அதை உண்மையாய்ச் செலுத்தமாட்டான்.

இந்த உலகத்தில் துன்மார்க்கனுக்கும் சன்மார்க்கனுக்கும் சம்பவிக்கும் காரியங்களில் சிறிது வித்தியாசம் இருக்கிறது. வெளிப்பார்வைக்கு எல்லாருக்கும், எல்லாம் ஒரேவிதமாய் சம்பவிப்பதுபோல தெரிந்தாலும், அதை நன்றாய் ஆராய்ந்து பார்க்கும்போது, அவர்களுக்கு எல்லாம் ஒரேவிதமாய் சம்பவியாதது தெரியவரும்.

ஒரே சம்பவமே துன்மார்க்கனுக்கும் சன்மார்க்கனுக்கும் நேரிடுகிறது. தாவீது ஒரு சன்மார்க்கன். அவர் தேவனிடத்தில் பக்தியுள்ளவர். அவர் ஒரு ஐசுவரியவான். நாபால் ஒரு துன்மார்க்கன். அவனும் ஒரு ஐசுவரியவான். இவர்கள் இருவருடைய குணாதிசயத்திற்கும் வித்தியாசம் இருப்பதுபோல, இவர்கள் இருவருடைய ஐசுவரியத்திற்கும் வித்தியாசமுள்ளது. இவர்கள் இருவரும் ஐசுவரியவான்கள்தான். ஆனால் தாவீதோ சன்மார்க்கமான ஐசுவரியவான். நாபாலோ துன்மார்க்கமான ஐசுவரியவான். ஐசுவரியம் ஒன்றுதான். ஆனால் அந்த ஐசுவரியத்தின் தன்மையும் தாக்கமும் இவ்விருவரிடத்திலும் வெவ்வேறாயிருக்கிறது.

இயற்கையிலே ஒரே சம்பவம் நடைபெற்றாலும், அவை ஒருவருக்கு ஒரு விதமாகவும், மற்றொருவருக்கு வேறுவிதமாகவும் நடைபெறுகிறது. அவற்றின் விளைவுகளும் வித்தியாசமாயிருக்கிறது. தேவனுடைய பராமரிப்பு ஒன்றுதான். ஆனால் அவருடைய பராமரிப்பின் விளைவுகள் ஒவ்வொருவருக்கும் வித்தியாசமாயிருக்கிறது. அது நீதிமான்களுக்கு ஜீவனுக்கேற்ற நற்கந்தமாகவும், துன்மார்க்கருக்கு மரணத்திற்கேற்ற தூர்க்கந்தமாகவும் இருக்கிறது. வெளிப்பார்வைக்கு கந்தகம் ஒன்றுபோலிருக்கிறது. இரண்டிலிருந்தும் புகை வருகிறது. ஒன்றோ நற்கந்தமான நறுமணம். மற்றொன்றோ தூர்க்கந்தகமான தூர்நாற்றம்.

துன்மார்க்கனுக்கும் சுத்தமில்லாதவனுக்கும் தீங்குகளும், பாடுகளும் வருவதுபோல, நீதிமான்களுக்கும் சுத்தமுள்ளவர்களுக்கும் தீங்குகளும் பாடுகளும் வரும்போது, அவர்கள் வேதனைப்படுகிறார்கள். நீதிமான்கள் மிகுந்த துக்கமடைகிறார்கள். தங்களுக்கு ஏன் துன்பம் வந்தது என்று நல்லவர்கள் புரிந்துகொள்ள முடியாமல் தவிக்கிறார்கள். சாலொமோன் இதைப் பார்த்துவிட்டு "இது ஒரு விசேஷித்த தீங்கு" என்று சொல்லுகிறார். எல்லாருக்கும் ஒரே விதமாய் சம்பவிக்கிறது சூரியனுக்குக் கீழே நடக்கிற எல்லாவற்றிலும் விசேஷித்த தீங்காம் என்று சாலொமோன் தீர்மானிக்கிறார்.

எல்லாருக்கும் ஒரேவிதமாய் சம்பவிப்பதினால் மனுபுத்திரரின் இருதயம் தீமையினால் நிறைந்திருக்கிறது. நாஸ்திகரின் இருதயம் கடினமடைகிறது. துன்மார்க்கரின் கரங்கள் ஓங்கியிருக்கிறது. எல்லாருக்கும் ஒரேவிதமாய் சம்பவிக்கிறதை, துன்மார்க்கர் பார்க்கும்போது, அவர்களுடைய மனது துணிகரம் கொள்கிறது. தேவனுடைய பார்வையில் துன்மார்க்கனும் சன்மார்க்கனும் ஒன்றுதான் என்று பாவிகள் நினைக்கிறார்கள். தேவன் எல்லோருக்கும் ஒரேவிதமான பராமரிப்பையே கொடுக்கிறார் என்று துன்மார்க்கர் தீர்மானிக்கிறார்கள். இதனால் அவர்கள் துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள். தேவனுடைய தண்டனையைப்பற்றிய பயம் துன்மார்க்கரிடத்தில் இல்லாமல் போகிறது.

துன்மார்க்கனுக்கும் சன்மார்க்கனுக்கும் ஒன்றுபோல் சம்பவித்தாலும், துன்மார்க்கனுக்கு வரும் தீங்குகளை சாலொமோன் விவரித்துச் சொல்லுகிறார். துன்மார்க்கர் இந்தப் பிரபஞ்சத்தில் சிறிதுகாலம் செழித்திருப்பதுபோல இருக்கலாம். அவர்களுடைய ஜீவியத்தில் நன்மையான காரியங்கள் சம்பவிப்பதுபோன்று தோன்றலாம். ஆனாலும் துன்மார்க்கர் உயிரோடிருக்கும் நாளளவும், அவர்களுடைய இருதயத்தில் தெளிவு இருக்காது. அமைதியும், ஆறுதலும், சந்தோஷமும், சமாதானமும் இருக்காது. அவர்கள் இருதயம் அவர்கள் உயிரோடிருக்கும் நாளளவும் பைத்தியங்கொண்டிருக்கும். அதன் பின்பு அவர்கள் செத்தவர்களிடத்திற்குப் போய்விடுவார்கள். ஜீவனுள்ளோருடைய தேசத்திலே துன்மார்க்கருக்கு இடமில்லை. துன்மார்க்கனுக்கு நித்திய ஜீவன் கிடைக்காது. அவனுக்கு நித்திய மரணமே உண்டாகும்.

மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்
பிர 9:4-6

பிர 9:4. இதற்கு நீங்கலாயிருக்கிறவன் யார்? உயிரோடிருக்கிற அனைவரிடத்திலும் நம்பிக்கையுண்டு; செத்த சிங்கத்தைப் பார்க்கிலும் உயிருள்ள நாய் வாசி.

பிர 9:5. உயிரோடிருக்கிறவர்கள் தாங்கள் மரிப்பதை அறிவார்களே, மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்; இனி அவர்களுக்கு ஒரு பலனுமில்லை, அவர்கள் பேர்முதலாய் மறக்கப்பட்டிருக்கிறது.

பிர 9:6. அவர்கள் சிநேகமும், அவர்கள் பகையும், அவர்கள் பொறாமையும் எல்லாம் ஒழிந்து போயிற்று; சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிறதொன்றிலும் அவர்களுக்கு இனி என்றைக்கும் பங்கில்லை.

சாலொமோன் உலகத்தையும், உலகத்தில் நடைபெறுகிற எல்லா காரியங்களையும் பார்த்துவிட்டு, எல்லாம் மாயை என்று சொல்லிவிடுகிறார். அவருடைய மனதில் வியாகுலம் நிரம்பியிருக்கிறது. சூரியனுக்குக் கீழே செய்யப்படும் கொடுமைகளையெல்லாம் சிந்தித்துப் பார்க்கிறார். முடிவில், "இன்னும் உயிரோடிருந்து பிழைக்கிறவர்களைப் பார்க்கிலும் முன்னமே காலஞ்சென்று மரித்தவர்களையே பாக்கியவான்கள்" (பிர 4:2) என்று சொல்லுகிறார்.

இப்போது சாலொமோனுடைய சிந்தையில் மாற்றமுண்டாகிறது. மரித்தவர்களைவிட உயிரோடிருக்கிறவர்கள் மேன்மையானவர்கள் என்று தீர்மானிக்கிறார். செத்த சிங்கத்தைப் பார்க்கிலும் உயிருள்ள நாய் வாசி என்று சொல்லுகிறார். நாம் இந்தப் பிரபஞ்சத்தில் உயிரோடிருக்கும்போது நமக்கு அநேக ஆதாயங்களும், அனுகூலங்களும் உண்டு. நாம் இப்பிரபஞ்சத்தில் ஜீவிக்கிற காலத்தில்தான், மறுமையில் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கு ஆயத்தமாகிறோம். சாலொமோன் இதைச் சிந்திக்கும்போது, அவருடைய சிந்தையில் மிகப்பெரிய மாற்றமுண்டாயிருக்கிறது. முன்பு மரித்துப்போவதே மேன்மையானது என்று சொன்னவர், இப்போது ஜீவனோடிருப்பதே மேன்மையானது என்று சொல்லுகிறார்.

மனுஷன் இப்பிரபஞ்சத்தில் ஜீவிக்கும்போது எப்படிப்பட்ட நிலமையில் வேண்டுமானாலும் இருக்கலாம். அவன் மோசமானவனாகவும், துன்மார்க்கனாகவும் இருக்கலாம். அவன் உயிரோடிருக்கும் காலம் வரையிலும், அவனுடைய தீயசுபாவத்தை மாற்றிக்கொள்வதற்கு அவனுக்கு வாய்ப்புள்ளது. உயிரோடிருக்கிற அனைவரிடத்திலும் நம்பிக்கை உண்டு. அவனுடைய இருதயம் தீமையினால் நிறைந்திருந்தாலும், அவனுடைய இருதயம் பைத்தியங்கொண்டிருந்தாலும், அவன் இந்தப் பிரபஞ்சத்தில் உயிரோடிருக்கிற நாள் வரையிலும், அவனுடைய துர்க்குணத்தை மாற்றிக்கொள்வதற்கு வாய்ப்புள்ளது. தேவனுடைய கிருபையினால், அவன் உயிரோடிருக்கும் காலத்தில், அவனுக்கு ஆசீர்வாதமான மாற்றமுண்டாகலாம்.

உயிரோடிருக்கிறவர்கள் தாங்கள் மரிப்பதை அறிவார்கள். மரணம் இனிமேல் வரப்போகிற சம்பவம். உயிரோடிருக்கிறவர்களுக்கு இப்போது நடைபெறுகிற சம்பவமும் தெரியும். இனிமேல் நடைபெறப்போகிற சம்பவமும் தெரியும். ஆனால் மரித்தவர்களோ ஒன்றும் அறியார்கள். மரித்துப்போனவர்கள், இந்தப் பூமியில் உயிரோடிருந்த காலத்தில், கடினமாய் உழைத்திருப்பார்கள். அதிகமாய்ப் பிரயாசப்பட்டிருப்பார்கள். ஆனால் அவர்களுடைய உழைப்புக்கேற்ற ஊதியமும், பிரயாசத்திற்கேற்ற பலனும், அவர்கள் மரித்த பின்பு அவர்களுக்குக் கொடுக்கப்பட மாட்டாது. மரித்த பின்பு அவர்களுக்கு ஒரு பலனும் இல்லை. அவர்கள் பேர் முதலாய் மறக்கப்பட்டுப்போய்விடும்.

மரித்துப்போகிறவர்கள் தங்களுடைய பிரயாசத்தின் பலனை மற்றவர்களுக்கு விட்டு விட்டுப்போகவேண்டும். துன்மார்க்கர்கள் தங்களுடைய பாவமான கிரியைகளினால் ஐசுவரியத்தை அதிகமாய்க் குவித்து வைத்தாலும், அவர்கள் செத்துப்போனபின்பு, அந்த ஐசுவரியம் அவர்களோடு கூடவராது. நீதிமான்களுக்கு நன்மை உண்டாகும். துன்மார்க்கரின் பேர் முதலாய் மறக்கப்பட்டுப்போய்விடும். ஆனாலும் நீதிமான்களின் நற்கிரியைகள் நினைவுகூரப்படும்.

உலகப்பிரகாரமான காரியங்களினால் நம்முடைய ஆத்துமாவுக்கு ஒரு நன்மையும் உண்டாகப்போவதில்லை. நம்முடைய சரீரம் மரித்துப்போகும்போது, நம்முடைய ஐசுவரியமும், பேரும் புகழும், உலகஆஸ்தியும் சம்பத்தும், நம்முடைய ஆத்துமாவோடு கூடவரப்போவதில்லை. உலகப்பிரகாரமான காரியங்களுக்கு நம்முடைய ஆத்துமாவில் பங்குமில்லை. பாத்தியமுமில்லை. நாம் மரிக்கும்போது நம்முடைய ஆத்துமா, நம்முடைய சரீரத்தைவிட்டு, இந்த உலகத்தைவிட்டு, தனியாகப் பிரிந்துவிடும்.

மரித்துப்போகிறவர்களின் சிநேகமும், அவர்கள் பகையும், அவர்கள் பொறாமையும் எல்லாம் ஒழிந்துபோகும். மனுஷர் மரித்துப்போனாலும், அதன்பின்பும் சூரியனுக்குக்கீழே அநேகக் காரியங்கள் செய்யப்படும். அந்தக் காரியங்களில் மரித்துப்போனவர்களுக்கு இனி என்றைக்கும் பங்கில்லை. மரித்த பின்பு அவர்களுக்கு இந்தப் பிரபஞ்சத்தில் பங்குமில்லை. பாத்தியமுமில்லை.

இந்த ஜீவவாழ்வை அநுபவி
பிர 9:7-10

பிர 9:7. நீ போய், உன் ஆகாரத்தைச் சந்தோஷத்துடன் புசித்து, உன் திராட்சரசத்தை மனமகிழ்ச்சியுடன் குடி; தேவன் உன் கிரியைகளை அங்கீகாரம்பண்ணியிருக்கிறார்.

பிர 9:8. உன் வஸ்திரங்கள் எப்பொழுதும் வெள்ளையாயும், உன் தலைக்கு எண்ணெய் குறையாததாயும் இருப்பதாக.

பிர 9:9. சூரியனுக்குக்கீழே தேவன் உனக்கு நியமித்திருக்கிற மாயையான நாட்களிலெல்லாம் நீ நேசிக்கிற மனைவியோடே நிலையில்லாத இந்த ஜீவவாழ்வை அநுபவி; இந்த ஜீவனுக்குரிய வாழ்விலும், நீ சூரியனுக்குக்கீழே படுகிற பிரயாசத்திலும் பங்கு இதுவே.

பிர 9:10. செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய்; நீ போகிற பாதாளத்திலே செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே.

நாம் இந்தப் பிரபஞ்சத்தில் ஜீவிக்கும் காலத்தில், நம்முடைய ஜீவியத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ள வேண்டும். இதுவே நமக்கு ஞானமானது என்று சாலொமோன் சொல்லுகிறார். சாலொமோன் தன்னுடைய ஜீவியத்தில் பல துன்பங்களை அனுபவித்தார். பல காரியங்களை இச்சித்து கண்ணிகளில் சிக்கிக்கொண்டார். அந்நிய ஸ்திரீகள் மூலமாய் அவருக்கு அநேக ஆபத்துக்கள் உண்டாயிற்று. பல துன்பங்களை அவர் அனுபவித்தபடியினால், அவற்றை நமக்கு எச்சரிப்பாகச் சொல்லுகிறார். சந்தோஷமாயிருக்கக்கூடாது என்பதோ, சந்தோஷத்தைவிட்டு முழுவதுமாய் விலகி வந்துவிடவேண்டும் என்பதோ சாலொமோனுடைய உபதேசமல்ல. அவற்றை மட்டாய், நிதானமாய், கட்டுப்பாடோடு அனுபவிக்கவேண்டும் என்பதே சாலொமோனுடைய உபதேசம்.

நம்முடைய ஆவி சந்தோஷமாயிருக்கவேண்டும். அது பாரமில்லாமல் அமைதலாயிருக்கவேண்டும். நம்முடைய ஆவிக்குள் சந்தோஷமும் சமாதானமும் இருக்கவேண்டும். நம்முடைய இருதயத்திற்குள் அமைதி நிரம்பியிருக்கவேண்டும். நம்மை நாமே அனுபவிக்கவேண்டும் என்பது சாலொமோனின் உபதேசம். நம்மை அனுபவிப்பது போலவே, நம்முடைய சிநேகிதர்கள் மூலமாயும் நாம் சந்தோஷமாயிருக்கவேண்டும். நம்முடைய தேவனிடத்திலும் நாம் சந்தோஷமாயிருக்கவேண்டும். நம்முடைய மனச்சாட்சியை சுத்தமாய்க் காத்துக்கொள்வதில் மிகுந்த கவனம் செலுத்தவேண்டும்.

நாம் சந்தோஷமாய்க் கர்த்தரை சேவிக்கவேண்டும். தேவன் தம்முடைய கிருபையினால் நமக்குக் கொடுத்திருக்கிற ஆசீர்வாதங்களை, நன்றியுள்ள இருதயத்தோடு, பயபக்தியோடு, சந்தோஷமாய் அனுபவிக்கவேண்டும். தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் நன்மைகளை பிறருக்கும் உதாரத்துவமாய்ப் பகிர்ந்துகொடுக்கவேண்டும். எல்லாம் நமக்கு வேண்டும் என்றும், அவை நம்மிடத்தில் மாத்திரமே திரளாயிருக்கவேண்டும் என்றும் பேராசைப்படக்கூடாது. மற்றவர்களை ஒடுக்கக்கூடாது. உலகத்தை சிநேகித்து கர்த்தரை சேவிக்க மறந்துவிடக்கூடாது.

தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் ஆறுதல்களில் சந்தோஷமடையவேண்டும். நம்முடைய சந்தோஷத்திற்கு அடையாளமாக நம்முடைய வஸ்திரங்கள் எப்பொழுதும் வெள்ளையாயிருக்கவேண்டும். நம்முடைய தலைக்கு எண்ணெய் குறையாததாயும் இருக்கவேண்டும். வெள்ளையான வஸ்திரங்கள் என்பது அழுக்கில்லாத தூய்மையான வஸ்திரங்களைக் குறிக்கும். நம்மிடத்தில் ஆடம்பரமான வஸ்திரம் இல்லாவிட்டாலும், அழுக்கில்லாத தூய்மையான வஸ்திரம் இருக்கவேண்டும்.

நம்முடைய குடும்ப உறவில் சந்தோஷம் நிரம்பியிருக்கவேண்டும். நம்முடைய குடும்பத்தோடு நம்மை இணைத்துக்கொள்ளவேண்டும். குடும்ப உறவை விட்டு எப்போதும் விலகியே இருக்கவேண்டுமென்று நினைக்கக்கூடாது. நம்முடைய மனைவியோடே நம்முடைய ஜீவவாழ்வை அனுபவிக்கவேண்டுமென்று சாலொமோன் சொல்லுகிறார். குடும்ப வாழ்வில் நம்முடைய சந்தோஷம் குறையக்கூடாது. குடும்பத்தில் சந்தோஷம் குறைவதற்கு நாம் காரணமாயும் இருக்கக்கூடாது. நம்முடைய கவலைகளை குடும்பத்தாரிடம் பகிர்ந்துகொடுத்து, அவர்களுடைய சந்தோஷத்தை வருத்தமாக மாற்றிவிடக்கூடாது. அதே வேளையில் குடும்பத்தாருடைய துக்கங்களையும் கவலைகளையும் நாம் பகிர்ந்துகொண்டு, அவர்களுடைய பாரத்தை எளிமையாக்கவேண்டும்.

சாலொமோன் மனைவியைப்பற்றிச் சொல்லும்போது, "நீ நேசிக்கிற மனைவி" என்று சொல்லுகிறார். ஒருவனுக்கு ஒருத்திதான் மனைவியாகயிருக்கவேண்டும். மனைவிகளின் எண்ணிக்கையை யாரும் அதிகரித்துவிடக்கூடாது. சாலொமோனுக்கு அநேக மனைவிகள் இருந்தார்கள். இதனால் அவருக்கு பாடுகளும் வேதனைகளும் உண்டாயிற்று. சந்தோஷமுண்டாகவில்லை. நாம் நேசிக்கிற மனையோடே, நாம் நம்முடைய ஜீவவாழ்வை அனுபவிக்கவேண்டும். நம்முடைய ஜீவவாழ்வு நிலையில்லாதது. இது சீக்கிரத்தில் முடிந்துபோகக்கூடியது. சூரியனுக்குக்கீழே நம்முடைய நாட்களை தேவன் நமக்கு மாயையாக நியமித்திருக்கிறார். நாம் உயிரோடிருக்கும் நாளளவும், நாம் நேசிக்கிற நம்முடைய மனைவியோடே இந்த ஜீவவாழ்வை சந்தோஷமாய் அனுபவிக்கவேண்டும். நம்முடைய குடும்பத்தார் நமக்கு திராட்சத் தோட்டமாகவும் ஒலிவமரக்கன்றுகளாகவும் இருக்கிறார்கள். இது நமக்கு இளைப்பாறுதலைத் தரும் ஸ்தலம். இந்த இளைப்பாறுதலில் நாம் சந்தோஷப்படவேண்டும்.

தேவன் நம்முடைய கிரியைகளை அங்கீகாரம்பண்ணவேண்டும். இதுவே நமக்கு மெய்யான ஆசீர்வாதம். தேவன் நம்முடைய கிரியைகளை அங்கீகாரம் பண்ணும்போது நம்முடைய இருதயத்தில் மிகுந்த சந்தோஷமுண்டாகும். நம்முடைய மனதிற்கு மகிழ்ச்சி உண்டாகும். இதை வெளிப்படுத்தும் வண்ணமாய், "நீ போய் உன் ஆகாரத்தை சந்தோஷத்துடன் புசித்து, உன் திராட்சரசத்தை மகிழ்ச்சியுடன் குடி" என்று சாலொமோன் சொல்லுகிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள், கர்த்தருக்காக சந்தோஷமாய் ஊழியம் செய்யவேண்டும். தங்களுடைய ஊழியத்தை வருத்தத்தோடும் வேதனையோடும் செய்யக்கூடாது. அதை மனமகிழ்ச்சியோடு செய்யவேண்டும். உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்திலும், உற்சாகமாய் ஊழியம் செய்கிறவனிடத்திலும் கர்த்தர் பிரியமாயிருக்கிறார். கர்த்தருடைய ஊழியத்தை நாம் சந்தோஷமாய் பாடல்களைப் பாடி செய்யவேண்டும்.

நம்முடைய ஜீவவாழ்வை சந்தோஷமாய் அனுபவிக்கவேண்டும். இந்த உலகத்தில் எல்லாம் மாயையாயிருக்கிறது. தேவன் நமக்கு நியமித்திருக்கும் நாட்களும் மாயையாயிருக்கிறது. ஒவ்வொரு சூழ்நிலையிலும் நாம் தேவனுடைய அன்பையும், கிருபையையும் நினைவுகூரும்போது, நம்முடைய இருதயத்திற்கு மெய்யான ஆறுதலும், சந்தோஷமும், சமாதானமும் கிடைக்கும். மாயையான இந்த உலகத்தில், கர்த்தருடைய கிருபையே, நம்மை காலூன்றி நிற்கச்செய்யும். நம்முடைய ஜீவவாழ்வை நாம் சந்தோஷமாய் அனுபவிப்பதுதான், இந்த ஜீவியத்தில் நமக்குக் கிடைத்திருக்கிற பங்கு.

நாம் சூரியனுக்குக்கீழே அநேகப் பிரயாசங்களைப் படுகிறோம். நம்முடைய பிரயாசங்களினால் நமக்கு மெய்யான பிரயோஜனம் எதுவும் கிடைக்கப்போவதில்லை. நாம் அதிகமாய்ப் பிரயாசப்பட்டும், நம்முடைய ஜீவவாழ்வு சந்தோஷமாயில்லாவிட்டால், நமக்கு ஒரு நன்மையுமில்லை. நாம் நேசிக்கிற மனைவியோடே, தேவன் நமக்கு நியமித்திருக்கிற மாயையான நாட்களிலெல்லாம், இந்த ஜீவவாழ்வை அனுபவிப்பதே, நமக்கு மெய்யான ஆசீர்வாதம். இதுவே நம்முடைய ஜீவனுக்குரிய வாழ்விலும், நாம் சூரியனுக்குக்கீழே படுகிற பிரயாசத்திலும், நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற பங்கு.

நம்முடைய நித்திய ஜீவனில் நமக்கு வேறொரு பங்கு கொடுக்கப்படும். இம்மைக்குரிய ஜீவனுடைய பங்கைவிட, நித்திய ஜீவனுடைய பங்கு மேன்மையானது. நித்திய ஜீவனின் பங்கை நாம் தேவனிடத்தில் பெற்றுக்கொள்கிறோம். நாம் அந்தப் பங்கை எதிர்பார்த்து, இம்மைக்குரிய ஜீவனை சந்தோஷமாய் ஜீவிக்கவேண்டும். நாம் மறுமையை நினைத்து இம்மையில் ஜீவிக்கவேண்டும். மறுமையில் நமக்கு மெய்யான ஆசீர்வாதம் கொடுக்கப்படும் என்பதை நினைவுகூர்ந்து, இம்மையில் நம்முடைய ஆகாரத்தை சந்தோஷத்துடன் புசிக்கவேண்டும். நம்முடைய இருதயம் களிகூரவேண்டும். கர்த்தருடைய சந்தோஷமே நமக்குப் பெலன். அதுவே நம்முடைய ஆயுள் சக்கரத்திற்கு தைலமாயிருக்கிறது.

நம்முடைய ஜீவவாழ்வில், கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற வேலைகளை உண்மையாய்ச் செய்யவேண்டும். இம்மைக்குரிய உலகம் பிரயாசப்படுகிற உலகம். வரப்போகிற உலகமோ நம்முடைய பிரயாசத்திற்கு பலன் கிடைக்கிற உலகம். இந்த உலகத்தில், நாம் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்காகப் பிரயாசப்படுகிறோம். இம்மையில் நமக்கு பயிற்சியும், பரீட்சையும் உண்டு. மறுமையில் நமக்கு வெகுமதி உண்டு.

அறுவடை நாட்கள் மிகவும் சுறுசுறுப்பான நாட்கள். நாம் பகல்பொழுது இருக்கும்போதே அறுவடை செய்யவேண்டும். இருள் காலம் வரப்போகிறது. அப்போது நம்மால் ஒரு வேலையும் செய்யமுடியாது. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்கிறவன் ஞானமுள்ளவன். நாம் இந்தப் பிரபஞ்சத்தில் ஜீவனோடிருக்கும்போதே, மறுமையிலே நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பதற்கு ஆயத்தப்படவேண்டும். கர்த்தருடைய கிருபைகளைப் பெற்றுக்கொண்டு தகுதியடையவேண்டும்.

நாம் இரட்சிக்கப்படுவது, தேவனுக்கு ஊழியம் செய்வது எல்லாம் இந்தப் பிரபஞ்சத்தில் நடைபெறுகிற காரியம். இவையெல்லாவற்றையும் தேவனுடைய கிருபையினால், இம்மையில் நேர்த்தியாய்ச் செய்து முடிக்கவேண்டும். தேவன் நமக்குக் கொடுக்கும் ஊழியத்தை முழுபலத்தோடே செய்யவேண்டும். இம்மையில் ஊழியம் செய்யாமல் மறுமையில் ஊழியம் செய்யலாமென்று இம்மையைக் குறித்து அசட்டையாயிருக்கக்கூடாது. சில காரியங்களை இம்மையில் மாத்திரமே செய்ய முடியும். சாலொமோன் இதைப்பற்றிச் சொல்லும்போது, "நீ போகிற பாதாளத்திலே செய்கையும், வித்தையும், அறிவும் ஞானமும் இல்லையே" என்று சொல்லுகிறார்.

சமயமும் தேவச் செயலும் பிர 9:11

பிர 9:11. நான் திரும்பிக்கொண்டு சூரியனுக்குக் கீழே கண்டதாவது: ஓடுகிறதற்கு வேகமுள்ளவர்களின் வேகமும், யுத்தத்துக்குச் சவுரியவான்களின் சவுரியமும் போதாது; பிழைப்புக்கு ஞானமுள்ளவர்களின் ஞானமும் போதாது; ஐசுவரியம் அடைகிறதற்குப் புத்திமான்களின் புத்தியும் போதாது; தயவு அடைகிறதற்கு வித்துவான்களின் அறிவும் போதாது; அவர்களெல்லாருக்கும் சமயமும் தேவச் செயலும் நேரிடவேண்டும்.

செய்யும்படி நம்முடைய கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை நம்முடைய பலத்தோடே செய்யவேண்டும் என்று சாலொமோன் நமக்கு ஆலோசனை சொல்லுகிறார். நம்முடைய பலத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துப் பேசுகிறார். நம்முடைய சுயபலம் மாத்திரம் போதாது. தேவனுடைய பெலமும் நமக்கு வேண்டும். நம்முடைய சுயபுத்தியினாலோ, சுயசக்தியினாலோ, சுயபிரயாசத்தினாலோ நம்மால் ஒன்றும் செய்யமுடியாது. சாலொமோன் இந்தச் சத்தியத்தை உணர்ந்தவராக நமக்கு சமயமும் தேவச்செயலும் நேரிடவேண்டும் என்று சொல்லுகிறார்.

நமக்கு நன்மை வருமென்று நாம் எதிர்பார்க்கிறோம். பல சமயங்களில் நாம் எதிர்பார்க்கிற நன்மை நமக்கு வராமல் போகிறது. இதனால் நமக்கு ஏமாற்றமுண்டாகிறது. நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும், நம்முடைய சமுதாயத்திலும், நம்முடைய தேசத்திலும், பல சமயங்களில் நாம் எதிர்பார்க்கிற காரியங்கள் நடைபெறுவதில்லை. சில சமயங்களில் ஒரு காரியம் நடைபெறுவதுபோல இருக்கும். ஆனால் அது நடைபெறாமல் போய்விடும். மேகம் இருக்கும் மழை பெய்யாது.

ஓடுகிறதற்கு மனுஷரிடத்தில் பெலமிருக்கும். கால்கள் ஆரோக்கியமாயிருக்கும். அவர்களிடத்தில் வேகமாய் ஓடக்கூடிய ஆற்றல் இருக்கும். ஆனாலும் ஓடுகிறதற்கு வேகமுள்ளவர்களின் வேகம் போதாது. நம்முடைய சுயஓட்டத்தினால் நம்மால் வெகுமதியைப் பெறமுடியாது. ஒருவர் வேகமாக ஓடக்கூடியவராகயிருப்பார். ஆனாலும் அவரால் ஓடி பரிசை வெல்லமுடியாதவாறு அவருக்கு ஏதாவது தடை வந்துவிடும். அவருக்கு ஏதாவது ஒரு விபத்து நேரிடலாம். கால் சுளுக்கிவிடலாம். அவர் ஆரம்பத்தில் வேகமாக ஓடியதுபோல தொடர்ந்து ஓடமுடியாமல் போய்விடலாம்.

யுத்தம் நடைபெறும்போது, பெலமுள்ளவர்கள் யுத்தத்தில் ஜெயிப்பார்கள். இதுதான் இயற்கையின் பொதுவான நீதி. சேனையில் போர்வீரர்களின் எண்ணிக்கை அதிகமாகயிருக்கவேண்டும். அவர்களிடத்தில் அநேக ஆயுதங்கள் இருக்கவேண்டும். அவர்களே பொதுவாக ஜெயிப்பார்கள். ஆனால் யுத்தத்திற்கு சவுரியவான்களின் சவுரியம் போதாது என்று சாலொமோன் சொல்லுகிறார். யோனத்தானுடைய நாட்களில் பெலிஸ்தியர்கள் திரளான எண்ணிக்கையுள்ளவர்களாகவும், சவுரியமுள்ளவர்களாகவும் இருந்தார்கள். ஆனால் அவர்கள் யோனத்தானுக்கும், அவனுடைய மனுஷருக்கும் முன்பாக நிற்கமுடியாமல் தோற்று ஓடிப்போனார்கள்.

நம்முடைய பிழைப்புக்கு ஞானம் மாத்திரம் இருந்தால் போதும் என்று சிலர் நினைக்கிறார்கள். அதுபோலவே ஐசுவரியம் அடைகிறதற்கு புத்திமான்களின் புத்தி போதுமென்று சொல்லுகிறார்கள். தயவு அடைகிறதற்கு வித்துவான்களின் அறிவு போதும் என்றும் சொல்லுகிறார்கள். ஆனால் சாலொமோனோ இவை போதாது என்று சொல்லுகிறார். மனுஷனுக்கு சமயமும், தேவச்செயலும் நேரிடவேண்டும். அப்போதுதான் நமக்கு பிழைப்பு கிடைக்கும். ஐசுவரியம் கிடைக்கும். தயவு கிடைக்கும். கர்த்தருடைய தயவு இல்லாமல் நமக்கு ஒன்றும் கிடைக்காது.

மனுஷனிடத்தில் ஏராளமான திறமைகள் இருக்கலாம். அவன் ஞானமாகச் சிந்திக்கலாம். புத்தியாய்ச் செயல்படலாம். தன்னுடைய அறிவை யோசித்துப் பயன்படுத்தலாம். இவையெல்லாம் இருந்தாலும், தேவனுடைய தயவும், சமயமும், தேவச்செயலும் இல்லையென்றால், அவனுக்கு ஒன்றுமில்லை. இந்தப் பிரபஞ்சத்தில் ஞானமுள்ளவர்களில் அநேகர், புத்தியுள்ளவர்களில் அநேகர், அறிவு பெருத்தவர்களில் அநேகர் ஏழ்மையிலும், தரித்திரத்திலும் இருக்கிறார்கள். அவர்களால் ஐசுவரியத்தை அடையமுடியவில்லை. அவர்களிடத்தில் ஞானம் இருக்கும். ஆனால் சம்பத்து இருக்காது.

ஒரு மனுஷனிடத்தில் புத்தி அதிகமாயிருந்து, அவனிடத்தில் ஐசுவரியம் சிறிதும் இல்லையென்றால், அவனுக்குள் மனவேதனையிருக்கும். அவனுக்கு மிகுந்த ஏமாற்றமுண்டாகும். தனக்கு ஏன் தரித்திரம் வந்திருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியாமல் தவிப்பான். தன்னிடத்தில் நிர்வாகத் திறமையிருந்தும், தனக்கு நிர்வாகம்பண்ண ஒன்றுமில்லையே என்று ஏமாற்றத்தோடிருப்பான். ஐசுவரியம் புத்தியுள்ளவனுக்கு மாத்திரமே கிடைக்கும் என்னும் நியதியில்லை. வாழ்க்கையில் ஏமாற்றங்களும் தவிப்பும் எல்லோருக்கும் பொதுவானது. சமயமும் தேவச்செயலும் நேரிட்டால்தான், நம்முடைய ஜீவியத்தில் செழிப்பு கிடைக்கும். சமயம் என்பது தேவனுடைய சமயம். தேவனுடைய வேளையில், தேவனுக்குச் சித்தமான காரியம் நடைபெறும்.

"ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு; வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு சமயமுண்டு" (பிர 3:1). "என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது; என் சத்ருக்களின் கைக்கும் என்னைத் துன்பப்படுத்துகிறவர்களின் கைக்கும் என்னைத் தப்புவியும்" (சங் 31:15).

பொல்லாத காலம்
பிர 9:12

பிர 9:12. தன் காலத்தை மனுஷன் அறியான்; மச்சங்கள் கொடிய வலையில் அகப்படுவது போலவும், குருவிகள் கண்ணியில் பிடிபடுவதுபோலவும், மனுபுத்திரர் பொல்லாத காலத்திலே சடிதியில் தங்களுக்கு நேரிடும் ஆபத்தில் அகப்படுவார்கள்.

நமக்கு பொல்லாத காரியங்கள் நேரிடும்போது நாம் அதிர்ச்சியடைகிறோம். மனுஷன் தன் காலத்தை அறியான். தனக்கு என்னென்ன பொல்லாப்புக்கள் எப்போது வரும் என்று எந்த மனுஷனுக்கும் தெரியாது. நாம் எப்போது மரிப்போம் என்பதும், நாம் எப்படி மரிப்போம் என்பதும் நமக்குத் தெரியாது. நம்முடைய காலங்கள் கர்த்தருடைய கரத்திலிருக்கிறது. தேவன் தம்முடைய ஞானத்தினால், நம்முடைய காலங்களை, நமக்கு மறைவாக வைத்திருக்கிறார். ஆகையினால் எல்லா காலத்திற்கும் நாம் ஆயத்தமாயிருக்கவேண்டும்.

சில சந்தர்ப்பங்களில் நமக்கு நன்மை வரும் என்று எதிர்பார்ப்போம். ஆனால் எதிர்பாராத விதமாக நமக்குத் தீங்கு வரும். மச்சங்கள் கொடிய வலையில் அகப்படுவது போலவும், குருவிகள் கண்ணியில் பிடிபடுவதுபோலவும், நமக்கு ஆபத்து வரும். நாம் ஆசீர்வாதத்தை எதிர்பார்ப்போம். ஆனால் நமக்கோ ஆசீர்வாதத்திற்குப் பதிலாக, தொல்லைகளும், வேதனைகளும் வரும். எல்லாவற்றையும் சந்திக்க நாம் ஆயத்தமாயிருக்கவேண்டும்.

நம்முடைய வாழ்க்கையில் மாற்றங்கள் வரும்போது, அந்த மாற்றங்களை நாம் எதிர்கொள்ளவேண்டும். மாற்றங்கள் திடீரென்று வரலாம். மெதுவாகவும் வரலாம். மாற்றங்கள் நமக்கு நன்மையைக் கொடுக்கலாம். பயங்கரமான தீங்கையும் கொடுக்கலாம். மனுபுத்திரர் பொல்லாத காலங்களிலே சடுதியில், தங்களுக்கு நேரிடும் ஆபத்திலே அகப்படுவார்கள்.

ஞானமுள்ள காரியம்
பிர 9:13-15

பிர 9:13. சூரியனுக்குக் கீழே ஞானமுள்ள காரியத்தையும் கண்டேன்; அது என் பார்வைக்குப் பெரியதாய்த் தோன்றிற்று.

பிர 9:14. ஒரு சிறு பட்டணம் இருந்தது, அதிலே இருந்த குடிகள் கொஞ்ச மனிதர்; அதற்கு விரோதமாய் ஒரு பெரிய ராஜா வந்து, அதை வளைந்துகொண்டு, அதற்கு எதிராகப் பெரிய கொத்தளங்களைக் கட்டினான்.

பிர 9:15. அதிலே ஞானமுள்ள ஒரு ஏழை மனிதன் இருந்தான்; அவன் தன் ஞானத்தினாலே அந்தப் பட்டணத்தை விடுவித்தான்; ஆனாலும் அந்த ஏழை மனிதனை ஒருவரும் நினைக்கவில்லை.

நம்முடைய சமாதானத்தைக் காத்துக்கொள்வதற்கு ஞானம் மிகுந்த பிரயோஜனமுள்ளது என்று சாலொமோன் சொல்லுகிறார். ஞானமுள்ளவன் சுத்த இருதயத்தோடும், சுத்தமனதோடும் தன்னுடைய தேசத்திற்காக உழைப்பான். தன்னுடைய தேசத்தைப் பாதுகாப்பான். தன்னுடைய உழைப்பினால் தனக்கு ஆதாயம் கிடைக்காவிட்டாலும், அவன் தன் தேசத்திற்கு உண்மையுள்ளவனாகயிருப்பான். சாலொமோன் இந்த ஞானத்தைப் பார்க்கிறார். இந்த ஞானம் அவருடைய பார்வைக்கு பெரிதாய்த் தோன்றுகிறது.

தன்னுடைய பார்வைக்கு பெரிதாய்த் தோன்றுகிற ஞானமுள்ள ஒரு காரியத்தை சாலொமோன் இங்கு விவரிக்கிறார். ஒரு ஏழை மனிதனைப்பற்றிச் சொல்லுகிறார். அவரிடத்தில் ஐசுவரியமில்லை. ஆனால் ஞானமிருக்கிறது. தன்னுடைய பட்டணத்தின் ஜனங்களுக்கு ஆபத்து வந்தபோது, ஞானமுள்ள இந்த ஏழை மனிதன், தன் ஞானத்தினாலே, அந்த பட்டணத்தை விடுவிக்கிறான். இந்தப் பட்டணமும் பெரிய பட்டணமல்ல. இது சிறிய பட்டணம்தான். இந்தப் பட்டணத்தில் அநேகக் குடிகளும் இல்லை. அதிலிருந்த குடிகள் கொஞ்சம் மனிதர் தான்.

பட்டணம் சிறியதாயிருந்தாலும், அதிலே இருந்த குடிகள் கொஞ்ச மனிதராயிருந்தாலும், அந்தப் பட்டணத்திற்கும் ஒரு ஆபத்து வருகிறது. இந்தச் சிறிய பட்டணத்திற்கு விரோதமாக பெரிய ராஜா வருகிறான். இந்தப் பட்டணத்திலுள்ள குடிகளால், இந்தப் பெரிய ராஜாவுக்கு எதிர்த்து நிற்கமுடியாது. ராஜாவோ அந்தப் பட்டணத்தை வளைந்துகொண்டு, அதற்கு எதிராக பெரிய கொத்தளங்களைக் கட்டுகிறான். பலமுள்ளவனுக்கு ஜெயம்கிடைக்கும். பெரிய ராஜாவுக்கு ஜெயம் உறுதியாயிற்று. சிறிய பட்டணத்திலுள்ள மனிதர்கள் தங்கள் ஜீவனைக் காப்பாற்ற தோற்று ஓடிப்போகும் நிலமையிலிருக்கிறார்கள்.

யுத்தத்தில் வெற்றி பலத்தினாலோ, பராமக்கிரமத்தினாலோ உண்டாவதில்லை. ஞானத்தினால் உண்டாகிறது. ஞானமே யுத்தத்தின் வெற்றியைத் தீர்மானம்பண்ணுகிறது. இந்தச் சிறிய பட்டணத்தில் கொஞ்சம் மனிதர்கள் இருந்தாலும், அந்த மனிதர்களுக்குள்ளும் ஞானமுள்ள ஒரு மனிதன் இருக்கிறான். இவனிடத்தில் யுத்தம் பண்ணுகிற வல்லமையில்லை. சரீர பராமக்கிரமம் இல்லை. ஆனால் இவனிடத்தில் ஞானமுள்ளது. இவன் ஒரு ஏழை. இந்தப் பட்டணத்தில் இவனால் நன்மை உண்டாகும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. இவனுக்கு அதிகாரமுமில்லை.

ஞானமுள்ள இந்த மனிதன், ஏழையாகயிருந்தாலும், தன்னுடைய ஞானத்தினால், இந்தப் பட்டணத்தை பெரிய ராஜாவின் கையிலிருந்து விடுவிக்கிறான். இந்தப் பட்டணத்தைச் சுற்றிலும் பெரிய ராஜா வளைந்துகொண்டு, அதற்கு எதிராக பெரிய கொத்தளங்களைக் கட்டியபோது, இந்தப் பட்டணத்திலுள்ள ஜனங்கள் என்ன செய்யவேண்டுமென்று புத்தியுள்ள ஆலோசனைகளைச் சொல்லுகிறான். இவன் ஏழையாகயிருந்தாலும் இவனுடைய ஆலோசனை ஐசுவரியமுள்ளதாயிருக்கிறது.

கீலேயாத்தின் மூப்பர்கள் தங்களுக்கு ஆபத்து வந்தபோது யெப்தாவைத் தேடிப்போனார்கள் (நியா 11:7). அதுபோலவே இந்தப் பட்டணத்தின் ஜனங்கள் ஞானமுள்ள இந்த ஏழையைத் தேடிப்போகிறார்கள். அவனுடைய ஆலோசனையைக் கேட்கிறார்கள். அவனுடைய உதவியை நாடுகிறார்கள். அவன் தன் ஞானத்தினாலே அந்தப் பட்டணத்தை விடுவிக்கிறான். அவர்களுக்கு ஞானமுள்ள ஆலோசனைகளைக் கொடுக்கிறான். தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கு, அவர்கள் என்ன செய்யவேண்டுமென்று புத்தியுள்ள யோசனைகளைச் சொல்லுகிறான். ஒருவேளை தங்களை வளைந்துகொண்டு, தங்களுடைய பட்டணத்திற்கு எதிராக பெரிய கொத்தளங்களைக் கட்டியிருக்கும் பெரிய ராஜாவோடு சமாதான உடன்படிக்கை செய்யுமாறு இவன் ஆலோசனை சொல்லியிருக்கலாம். ஆபேல் பட்டணத்தில் புத்தியுள்ள ஸ்திரீ, தன்னுடைய பட்டணத்தை சமாதான உடன்படிக்கையினால் காப்பாற்றியதுபோல, (2சாமு 20:16) ஞானமுள்ள இந்த ஏழை மனிதனும் தன்னுடைய பட்டணத்தைக் காப்பாற்றியிருக்கலாம்.

பட்டணம் பெரிய ராஜாவின் முற்றுகையிலிருந்து விடுவிக்கப்படுகிறது. இந்த விடுதலைக்கு ஏழை மனிதனுடைய ஞானமே முக்கியமான காரணம். ஆனாலும் அந்த ஏழை மனிதனை ஒருவனும் நினைக்கவில்லை. அவனை யாரும் கனப்படுத்தவில்லை. அவனுக்கு யாரும் மகிமையையும் மேன்மையையும் கொடுக்கவில்லை. அவன் இதற்கு முன்பு இருந்ததுபோலவே, இப்போதும் ஏழையாகவே இருக்கிறான். இதற்கு முன்பு தான் செய்த தொழிலையே, இப்போதும் செய்கிறான். அவனுக்கு விசேஷித்த மேன்மை எதுவும் உண்டாகவில்லை. அவனுடைய ஞானத்தினால் ஜனங்கள் பிரயோஜனமடைந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களால் அந்த மனிதனுக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகவில்லை. அவன் செய்த உதவியைக்கூட ஒருவரும் நினைக்கவில்லை.

பெலத்தைப்பார்க்கிலும் ஞானமே உத்தமம்
பிர 9:16-18

பிர 9:16. ஆகையால் ஏழையின் ஞானம் அசட்டைபண்ணப்பட்டு, அவன் வார்த்தைகள் கேட்கப்படாமற் போனாலும், பெலத்தைப்பார்க்கிலும் ஞானமே உத்தமம் என்றேன்.

பிர 9:17. மூடரை ஆளும் அதிபதியின் கூக்குரலைப் பார்க்கிலும் ஞானிகளுடைய அமரிக்கையான வார்த்தைகளே கேட்கப்படத் தக்கவைகள்.

பிர 9:18. யுத்த ஆயுதங்களைப்பார்க்கிலும் ஞானமே நலம்; பாவியான ஒருவன் மிகுந்த நன்மையைக் கெடுப்பான்.

சாலொமோன் இந்தச் சம்பவத்தைச் சொல்லிவிட்டு, இதன் மூலமாக நமக்கு புத்தியுள்ள ஆலோசனைகளைச் சொல்லுகிறார். பெலத்தைப் பார்க்கிலும் ஞானமே உத்தமம் என்பது சாலொமோனுடைய உபதேசம். யுத்த ஆயுதங்களைப் பார்க்கிலும் ஞானமே நலம். நம்மைப் பாதுகாக்கவேண்டிய சூழ்நிலைகள் வந்தாலும், நாம் சத்துருவை அழித்து யுத்தம்பண்ணவேண்டிய சூழ்நிலைகள் வந்தாலும், ஞானமே நமக்கு நலமாயிருக்கும். ஞானிகளுடைய அமரிக்கையான வார்த்தைகள் கேட்கப்படத்தக்கவைகள். ஞானிகள் என்ன பேசுகிறார்கள் என்பதை நாம் மிகவும் கவனமாய்க் கேட்கவேண்டும். ஞானிகளும் அவசரப்பட்டு எதையாவது பேசக்கூடாது. கூக்குரலிடக்கூடாது. ஞானிகளின் வார்த்தைகள் அமைதியானவைகளாயிருக்க வேண்டும். எந்த நோக்கத்தோடு பேசுகிறார்களோ அந்த நோக்கத்தை அவர்களுடைய வார்த்தைகள் தெளிவுபடுத்தவேண்டும். ஞானிகள் அமரிக்கையாகவும் பேசவேண்டும், தீர்மானமாகவும் பேசவேண்டும். தெளிவோடும் பேசவேண்டும். அப்படிப்பட்ட வார்த்தைகளைத்தான் நாம் செவிகொடுத்துக் கேட்கவேண்டும்.

அதிபதிகள் கூக்குரலிடுவார்கள். அவர்களுடைய ஆளுகையின்கீழ் ஞானிகளும் இருப்பார்கள். மூடரும் இருப்பார்கள். மூடருக்கு உபதேசம்பண்ணினால் அவர்கள் அதற்கு செவிகொடுக்கமாட்டார்கள். இதனால் அதிபதிகளுக்கு கோபம் வரும். மூடரை ஆளும் அதிபதிகள் கூக்குரலிடுவார்கள். அவர்களுடைய கூக்குரலைவிட, ஞானிகளின் அமரிக்கையான வார்த்தைகளே உத்தமம்.

நாம் விவாதம்பண்ணினாலும், நம்முடைய வார்த்தைகள் அமரிக்கையாயிருக்கவேண்டும். சுருக்கமாய்ப் பேசவேண்டும். கூக்குரலிட்டு அதிகமான வார்த்தைகளைப் பேசக்கூடாது. கூக்குரலான அநேக வார்த்தைகளைப் பார்க்கிலும், ஞானமுள்ள, அமரிக்கையான, கொஞ்சம் வார்த்தைகளே மிகவும் நல்லது. ஞானிகளுடைய வார்த்தைகளினால் அநேகருக்கு பிரயோஜனமுண்டாகும். மனுஷர்கள் ஞானிகள் மூலமாய் நன்மைகளைப் பெற்றுக்கொள்வார்கள். அதே வேளையில் அவர்கள் தங்களுக்கு நல்வார்த்தை சொன்ன ஞானிகளை சீக்கிரத்தில் மறந்துவிடுவார்கள். ஞானிகளைப் புகழ்ந்து பேசமாட்டார்கள். நமக்கு மனுஷர் மூலமாய் புகழ்ச்சி வந்தாலும் வராவிட்டாலும், நாம் செய்த நன்மைகளை மனுஷர்கள் நினைவுகூர்ந்தாலும், மறந்துவிட்டாலும், நம்முடைய வார்த்தைகள் ஞானமுள்ளதாயிருக்கவேண்டும். அவை கூக்குரலாயில்லாமல், அமரிக்கையான வார்த்தைகளாயிருக்க வேண்டும். சாலொமோன் இது பற்றிச் சொல்லும்போது, "ஆகையால் ஏழையின் ஞானம் அசட்டைபண்ணப்பட்டு, அவன் வார்த்தைகள் கேட்கப்படாமற் போனாலும், பெலத்தைப்பார்க்கிலும் ஞானமே உத்தமம்" என்று சொல்லுகிறார்.

ஞானமுள்ளவன் அநேகருக்கு நன்மை செய்வான். அவன் தன்னுடைய அயலாருக்கு பிரயோஜனமுள்ளவனாயிருப்பான். ஞானிகளில் அநேகர் ஏழைகளாகவே இருக்கிறார்கள். தங்கள் ஏழ்மையிலேயே மரித்துப்போகிறார்கள். ஏழையின் ஞானம் பொதுவாக அசட்டைபண்ணப்படும். அவர்களால் உலகத்திற்கு மிகப்பெரிய ஆசீர்வாதமுண்டு. ஆனால் இந்த உலகமோ, அவர்களுடைய ஞானத்தைப் பார்க்காமல், அவர்களுடைய ஐசுவரியத்தைப் பார்க்கிறது.

ஞானிகள் ஏழைகளாகயிருந்தாலும் நாம் அவர்களை உற்சாகப்படுத்தவேண்டும். அவர்களைத் தேடிக்கண்டுபிடித்து பயன்படுத்தவேண்டும். சிப்பிக்குள் இருக்கும் முத்தை வெளியே எடுத்தால்தான், நமக்கு நன்மை உண்டு. நாம் அதை வெளியே எடுக்கவில்லையென்றால், அந்த முத்து சிப்பிக்குள்ளேயே இருந்துவிடும். இக்காலத்தில் ஏராளமான முத்துக்கள், சிப்பிக்குள்ளேயே இருந்து அழிந்துபோகிறது. அதுபோலவே ஞானமுள்ள ஏழைகளில் அநேகர், தங்களுடைய ஞானத்தை வெளிப்படுத்த முடியாமல், அழிந்து போகிறார்கள். ஏழை மனிதரை ஒருவரும் நினைப்பதில்லை.

இப்பிரபஞ்சத்தில் ஏழையின் ஞானம் அசட்டைபண்ணப்பட்டாலும், கர்த்தருடைய நாளில் ஞானம் கனப்படுத்தப்படும். ஞானம் ஐசுவரியவானிடத்தில் இருந்தாலும், ஏழையினிடத்தில் இருந்தாலும், அதற்குரிய மேன்மை கொடுக்கப்படும். நீதிமான்கள் பிரகாசமாயிருப்பார்கள். ஞானமுள்ள ஒரு மனிதனால், ஒரு பட்டணத்திற்கு நன்மை உண்டாகிறது. இதுபோலவே, துன்மார்க்கமான ஒரு மனிதனால், ஒரு முழுப்பட்டணத்திற்கும் தீங்கு உண்டாகும். பாவியான ஒருவன் மிகுந்த நன்மையைக் கெடுப்பான். பாவமான காரியங்கள் பிரயோஜனமற்றவை.

தேவன் இயற்கையில் அநேக நன்மைகளைக் கொடுத்திருக்கிறார். தேவனுடைய தெய்வீக பராமரிப்பில் சர்வசிருஷ்டிகளுக்கும் நன்மை உண்டாயிருக்கிறது. ஆனால் இந்த நன்மைகளையெல்லாம் ஒரு பாவி தன்னுடைய துன்மார்க்கத்தினாலும், பாவமான கிரியையினாலும் கெடுத்துப்போடுகிறான். தேசத்தின் சட்டதிட்டங்களுக்கு, ஒரு மனுஷன் கீழ்ப்படியாமல், அதை மீறி நடந்தாலும், அதனால் அநேகருக்குத் தீங்கு உண்டாகும். சாலொமோன் இதை ஆராய்ந்து பார்த்து பெலத்தைப் பார்க்கிலும் ஞானமே உத்தமம் என்று சொல்லுகிறார்.

10 அதிகாரம்

சாலொமோனுடைய நீதிமொழிகள் புஸ்தகத்தைப்போல இந்த அதிகாரம் எழுதப்பட்டிருக்கிறது. அவருடைய ஞானமுள்ள வார்த்தைகள் இந்த அதிகாரத்தில் தொகுக்கப்பட்டிருக்கிறது. சாலொமோன் தன்னுடைய பிரசங்கத்தில் நீதிமொழிகளின் வாக்கியத்தைப் பயன்படுத்துகிறார். நம்மிடத்தில் ஞானம் இருக்கவேண்டும். மதியீனம் சிறிதும் இருக்கக்கூடாது. சொற்ப மதியீனம் கூட நம்முடைய பெயரைக் கெடுத்துவிடும் (பிர 10:1-3). நமக்கு மேலான அதிகாரிகளுக்கு நாம் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். நம்முடைய அதிபதிக்கு நம்மீது கோபம் வருமாறு நடந்து கொள்ளக்கூடாது (பிர 10:4).

நாம் எல்லோரோடும் சமாதானமாய் ஜீவிக்கவேண்டும். பிறருடைய காரியங்களில் தேவையில்லாமல் தலையிடக்கூடாது (பிர 10:8-11). நம்முடைய நாவை அடக்கி ஆளுகை செய்யவேண்டும் (பிர 10:12-15). நம்முடைய வீட்டுக்காரியங்களைக் கவனிப்பதற்கும், நம்முடைய வீட்டாரைப் போஷிப்பதற்கும் உற்சாகமாய் வேலை செய்யவேண்டும் (பிர 10:18,19). ராஜாவை நம்முடைய மனதிலும் நிந்திக்கக்கூடாது (பிர 10:20).

தேசத்திலுள்ள சாதாரண ஜனங்களுக்கு சாலொமோன் ஆலோசனை சொல்லுவதுபோல அதிபதிகளுக்கும் ஆலோசனை சொல்லுகிறார். அதிபதிகள் ஜனங்களை ஒடுக்கக்கூடாது. நற்குணமுள்ளவர்களாயிருக்க வேண்டும். மனுஷருக்கு நன்மை செய்யவேண்டும். மகாஉயர்ந்த நிலையில் யாரை வைக்கவேண்டும் என்று அதிபதிக்குத் தெரிந்திருக்கவேண்டும் (பிர 10:5-7). ராஜா சிறுபிள்ளைத்தனமாயிருக்கக்கூடாது. பெருந்தீனி உண்ணக்கூடாது. ஆடம்பரத்தை நேசிக்கக்கூடாது (பிர 10:16,17).

சொற்ப மதியீனம்
பிர 10:1-3

பிர 10:1. செத்த ஈக்கள் தைலக்காரனுடைய பரிமளதைலத்தை நாறிக் கெட்டுப்போகப்பண்ணும்; ஞானத்திலும் கனத்திலும் பேர்பெற்றவனைச் சொற்ப மதியீனமும் அப்படியே செய்யும்.

பிர 10:2. ஞானியின் இருதயம் வலதுகையிலும், மூடனின் இருதயமோ இடதுகையிலும் இருக்கும்.

பிர 10:3. மூடன் வழியிலே நடக்கிறபோதும் மதிகெட்டவனாயிருக்கிறான்; தான் மூடனென்று அவன் எல்லாருக்கும் சொல்லுகிறான்.

ஒரு சிலர் ஞானத்திலும் கனத்திலும் பேர் பெற்றவர்களாயிருப்பார்கள். அவர்களிடத்தில் சொற்பமதியீனம் இருந்தாலும், அது அவர்களுடைய நற்பெயரைக் கெடுத்துவிடும். செத்த ஈக்கள் தைலக்காரனுடைய பரிமள தைலத்தை நாறிக்கெட்டுப் போகப்பண்ணும். பரிமளத்தைலத்தின் மணமும், மேன்மையும் செத்த ஈக்களால் கெட்டுவிடும். அதுபோலவே ஒரு மனுஷனுடைய மெய்யான ஞானமும், கனமும் சொற்ப மதியீனத்தால் கெட்டுப்போகும்.

ஞானத்தை சம்பாதிப்பது எளிதான காரியமல்ல. ஆனால் அதை எளிதாக இழந்துவிடலாம். அதுபோலவே கனத்தையும் கஷ்டப்பட்டுத்தான் சம்பாதிக்கவேண்டும். பரிமளதைலத்தை கஷ்டப்பட்டுத்தான் சேர்க்கவேண்டும். நம்முடைய கஷ்டத்தையெல்லாம் ஒரு செத்த ஈ பாழாக்கிப்போடும். அதுபோலவே ஞானத்திலும் கனத்திலும் பேர் பெற்ற நம்முடைய நற்பெயரை, சொற்பமதியீனம் கெடுத்துப்போடும். ஜனங்கள் நம்மிடத்திலுள்ள ஞானத்தைப் பார்ப்பதற்குப் பதிலாக, நம்மிடத்திலுள்ள சொற்பமதியீனத்தையே பார்ப்பார்கள். அதுவே அவர்களுடைய கண்களுக்கு பிரத்தியட்சமாய்த் தெரியும். பொதுவாக நன்மையான காரியங்களைவிட தீமையான காரியங்களே ஜனங்களுடைய கண்களுக்குத் தெளிவாகவும், பெரிதாகவும் தெரியும்.

ஞானியின் இருதயம் வலதுகையிலிருக்கிறது. ஞானமுள்ளவன் தன்னுடைய வேலைகளை வலதுகையினால் செய்வதுபோல, மிகுந்த கவனத்தோடும், உற்சாகத்தோடும் செய்வான். மூடரின் இருதயமோ இடதுகையிலிருக்கிறது. வலதுகையைவிட இடதுகை பலவீனமானது. வலதுகையினால் கடினமாய் வேலை செய்வதுபோல இடதுகையினால் கடினமாய் வேலை செய்ய முடியாது. மூடன் உற்சாகமாய் வேலைசெய்யாமல் சோம்பல்தனமாயிருப்பான். அவனிடத்தில் சுறுசுறுப்பு இருக்காது. மூடன் நித்திரைப் பிரியனாயிருப்பான்.

மூடன் எப்போதுமே மூடனாகத்தான் இருக்கிறான். மூடனிடத்தில் மதிகேடு இருக்கும். அவன் வழியில் நடக்கிறபோதும் மதிகெட்டவனாயிருக்கிறான். தன்னை மூடனென்று எல்லோருக்கும் சொல்லுகிறான். தன்னுடைய மதிகேட்டை வெளிப்படுத்துகிறான். தன்னைப் பார்க்கிறவர்கள் எல்லோரிடத்திலும், தான் சந்திக்கிறவர்கள் எல்லோரிடத்திலும், மூடன் தன்னை "நான் மூடன்" என்று சொல்லுகிறான். சுயவிளம்பரம் பண்ணுகிறான். மூடனுடைய மூடத்தனம் அவனுக்கே தெரிகிறது. அவனுடைய மதிகேட்டை அவனால்கூட மறைக்க முடியவில்லை.

அதிபதி
பிர 10:4-7

பிர 10:4. அதிபதியின் கோபம் உன்மேல் எழும்பினால் உன் ஸ்தானத்தை விட்டு விலகாதே; இணங்குதல் பெரிய குற்றங்களையும் அமர்த்திப்போடும்.

பிர 10:5. நான் சூரியனுக்குக்கீழே கண்ட ஒரு தீங்குண்டு, அது அதிபதியினிடத்தில் தோன்றும் தப்பிதமே.

பிர 10:6. மூடர் மகா உயர்ந்த நிலையில் வைக்கப்படுகிறார்கள்; சீமான்களோ தாழ்ந்த நிலையில் உட்கார்ந்திருக்கிறார்கள்.

பிர 10:7. வேலைக்காரர் குதிரைகள்மேல் ஏறிப்போகிறதையும், பிரபுக்கள் வேலைக்காரர் போல் தரையிலே நடக்கிறதையும் கண்டேன்.

ஒரு தேசத்தின் ஜனங்கள், தங்களுடைய தேசத்தில் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். அந்த தேசத்திற்கு தாங்கள் செய்ய வேண்டிய கடமைகளை உண்மையாய் நிறைவேற்றவேண்டும். ஜனங்கள் அதிபதியின்மேல் கோபப்படக்கூடாது. அதிபதிகளோடு விவாதமோ, வாக்குவாதமோ பண்ணக்கூடாது. ஆளுகை செய்கிற அதிபதியிடம் தாறுமாறாகப் பேசினால், அவருக்கு நம்மீது கோபம் வரும்.

அதிபதியின் கோபம் நம்மீது எழும்பினால் நம்முடைய ஸ்தானத்தை விட்டு நாம் விலகக்கூடாது. நமக்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஸ்தானத்தில் நாம் நிலைத்திருக்கவேண்டும். நம்முடைய தேசத்திற்கு நல்ல குடிமகனாகயிருந்து, நம்முடைய கடமைகளை உண்மையாய்ச் செய்யவேண்டும். நம்முடைய கோபத்தையும் வெறுப்பையும் காண்பிப்பதற்கு, அதிபதிக்கு விரோதமாகக் கலகம் பண்ணக்கூடாது. நாம் மிகுந்த பொறுமையோடிருக்க வேண்டும். அதிகாரத்திலும், ஆளுகையிலும் அமர்ந்திருக்கிறவர்களுக்கு, நாம் மதிப்பும் மரியாதையும் கொடுக்கவேண்டும். அதிபதியின் கட்டளைகளுக்கு இணங்கவேண்டும். இணங்குதல் பெரிய குற்றங்களையும் அமர்த்திப்போடும்.ஜனங்கள் தங்கள் அதிபதிகளோடு வாக்குவாதம் பண்ணக்கூடாது.

சாலொமோன் சூரியனுக்குக்கீழே ஒரு தீங்கைக் காண்கிறார். இந்தத் தீங்கை அதிபதிகளால் மாத்திரமே குணப்படுத்த முடியும். இந்தத் தீங்கு அதிபதியிடமிருந்தே வருகிறது. சாலொமோன் சூரியனுக்குக்கீழே அதிபதியினிடத்தில் தோன்றுகிற தப்பிதத்தை ஒரு தீங்காகக் காண்கிறார்.

அதிபதிகளும் தவறு செய்கிறார்கள். அவர்கள் ஜனங்களுடைய வழக்குகளை நீதியாய் நியாயம் விசாரிக்கவேண்டியவர்கள். அவர்கள் நீதியான தீர்ப்புகளைச் சொல்லவேண்டும். நியாயாசனத்தில் அமர்ந்திருக்கிற அதிபதிகளே நியாயத்திற்கு விரோதமாகச் செயல்படுகிறார்கள். அதிபதிகளிடத்தில் மனுஷநேயம் இருக்கவேண்டும். பட்சபாதம் இருக்கக்கூடாது. தங்களுடைய சுயவிருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ற பிரகாரம் தீர்ப்பு சொல்லக்கூடாது.

அதிபதிகள் தங்களுக்குக் கீழே அதிகாரிகளை நியமிக்கிறார்கள். இதில் அதிபதிகளின் ஞானமும் நீதியும் வெளிப்படவேண்டும். மகாஉயர்ந்த நிலைகளில் ஞானமுள்ளவர்களையும், நிர்வாகத் திறமையுள்ளவர்களையும் வைக்கவேண்டும். ஆனால் ஒரு சில அதிபதிகள் தப்பிதங்களைச் செய்கிறார்கள். மகாஉயர்ந்த நிலையில் மூடரை வைத்துவிடுகிறார்கள். சீமான்களோ தாழ்ந்த நிலையில் உட்கார்ந்திருக்கிறார்கள். அதிபதிகள் ஒரு சிலருக்கு சலுகை காண்பிக்க விரும்பி, திறமையற்றவர்களையும் நிர்வாகப் பொறுப்பில் வைக்கிறார்கள். இதனால் ஜனங்களுக்குத் தீங்கு உண்டாகிறது.

சாலொமோன் அதிபதியினிடத்தில் தோன்றும் தப்பிதத்தை விவரிப்பதற்காக ஒரு எடுத்துக்காட்டைச் சொல்லுகிறார். வேலைக்காரர் குதிரைகள்மேல் ஏறிப்போகிறதைக் காண்கிறார். அதே வேளையில் பிரபுக்கள் வேலைக்காரர்போல் தரையிலே நடக்கிறதையும் காண்கிறார்.

துன்மார்க்கர் ஆட்சியிலிருக்கும்போது சர்வமும் குழப்பமாகவே இருக்கும். உண்மையாய் ஆளுகை செய்கிற பிரபுக்களுக்கு முக்கியத்துவம் இருக்காது. பிரபுக்களின் அதிகாரங்கள் அவர்களிடமிருந்து பறிக்கப்படும். அதற்குப் பதிலாக ஆளுகை செய்கிற அதிகாரம் திறமையில்லாதவர்களுக்குக் கொடுக்கப்படும். பிரபுக்களின் கைகளில் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்படுவதற்குப் பதிலாக, வேலைக்காரருடைய கைகளில் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்படும். திறமையுள்ளவர்கள் சும்மாயிருப்பார்கள். திறமையில்லாதவர்கள் சிங்காசனத்தில் வீற்றிருப்பார்கள்.

படுகுழியை வெட்டுகிறவன்
பிர 10:8-10

பிர 10:8. படுகுழியை வெட்டுகிறவன் அதிலே விழுவான்; அடைப்பைப் பிடுங்குகிறவனைப் பாம்பு கடிக்கும்.

பிர 10:9. கல்லுகளைப் பேர்க்கிறவன் அவைகளால் காயப்படுவான்; மரத்தைப் பிளக்கிறவன் அதினால் மோசப்படுவான்.

பிர 10:10. இருப்பு ஆயுதம் மழுங்கலாயிருக்க, அதை ஒருவன் தீட்டாமற்போனால், அதிக பலத்தைப் பிரயோகம் பண்ணவேண்டியதாகும்; ஆகையால் ஒரு காரியத்தைச் செவ்வையாய்ச் செய்வதற்கு ஞானமே பிரதானம்.

பிரபுவாகயிருந்தாலும், சாதாரண ஜனங்களாகயிருந்தாலும் அவர்களிடத்தில் சாந்தகுணம் இருக்கவேண்டும். ஒருபோதும் பலவந்தம்பண்ணக்கூடாது. மாற்றத்தை உண்டுபண்ணுவதற்காக மற்றவர்களுடைய உரிமையில், பலவந்தமாய்த் தலையிடக்கூடாது. ஜனங்கள் பிரபுக்குக் கீழ்ப்படிந்திருப்பார்கள். இந்தக் கீழ்ப்படிதலை பிரபுக்கள் தங்களுடைய சுயஆதாயத்திற்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளக்கூடாது. ஜனங்களுடைய உரிமைகளையும், விடுதலையையும் பிரபுக்கள் அடக்கி ஒடுக்கக்கூடாது. அதே வேளையில், ஜனங்களும் பிரபுக்களுக்குக் கீழ்ப்படிந்திருக்கவேண்டும். பிரபுக்களின் ஆளுகையை அங்கீகரிக்கவேண்டும். அவர்களுடைய ஆளுகைக்கு விரோதமாக கலகம்பண்ணக்கூடாது.

மற்றவர்கள் விழவேண்டுமென்று படுகுழியை வெட்டுகிறவன் அதிலே விழுந்துவிடுவான். மற்றவர்களுக்காக குழியை வெட்டும்போது, மற்றவர்கள் எல்லோருமே அந்தக் குழியில் விழப்போவதில்லை. அவர்களில் அநேகர் வெட்டப்பட்ட குழியைப் பார்த்து விலகிப்போய் விடுவார்கள். அந்தக் குழியில் யாராவது ஒருவர் விழலாம். ஆனாலும், அந்தக் குழியை வெட்டுகிறவன் அதிலே நிச்சயமாய் விழுவான். ஆகையினால் ஒருவன் குழியை வெட்டும்போது, அதை பிறருக்காக அல்ல, தனக்காகவே வெட்டுகிறோம் என்னும் பயத்தோடு வெட்டவேண்டும்.

பிரபுக்கள் துன்மார்க்கராகவும், சர்வாதிகாரிகளாகவும், ஜனங்களை அடக்கி ஒடுக்கிறவர்களாகவும் இருக்கக்கூடாது. பிரபுக்கள் ஜனங்களை அடக்கி ஒடுக்கினால், ஜனங்கள் பிரபுக்களுக்கு விரோதமாகக் கலகம்பண்ணுவார்கள். வரலாற்றில் நடைபெற்றிருக்கிற அநேக சம்பவங்கள் இதை உறுதிபண்ணுகிறது. அநேக ராஜாக்கள் தங்களுக்கு கேடுண்டாகவே, தங்கள் ஜனங்களை அடக்கி ஒடுக்கி, சர்வாதிகாரமாய் ஆட்சி செய்திருக்கிறார்கள்.

அடைப்பைப் பிடுங்குகிறவனை பாம்பு கடிக்கும். அடைப்பு என்பது பூர்வகாலத்து எல்லைக்குறி. ஒவ்வொருவருடைய காணியாட்சியையும் தீர்மானம் பண்ணுவதற்காக, அவர்களுடைய நிலங்களை அளந்து, எல்லைக்குறியை நாட்டியிருக்கிறார்கள். இந்த அடைப்பை பிடுங்கக்கூடாது. தனக்கு ஏதாவது ஆதாயம் கிடைக்கும் என்று நினைத்து ஒரு சிலர் அடைப்பைப் பிடுங்குகிறார்கள். பிறருக்கு இதனால் தீங்கு செய்ய முயற்சி பண்ணுகிறார்கள். அவர்கள் மற்றவர்களுக்குத் தீங்கு செய்வதற்கு முன்பாகவே, அவர்களுக்குத் தீங்கு வரும்.

அந்த அடைப்புக்குள் பாம்பு இருக்கும். அடைப்பைப் பிடுங்கியவுடன், அதற்குள்ளே இருக்கிற பாம்பு வெளியே வந்து, அடைப்பைப் பிடுங்குகிறவனைக் கடிக்கும். ஆகையினால் ஒருவன் துணிகரமாக அடைப்பைப் பிடுங்கப்படும்போது, தன்னைப் பாம்பு கடிப்பதற்கு வாய்ப்புள்ளது என்னும் பயம் அவனுடைய இருதயத்தில் இருக்கவேண்டும்.

கல்லுகளைப் பேர்க்கிறவன் அவைகளால் காயப்படுவான். பிறருடைய சுவற்றையோ, அவர்களுடைய கட்டிடங்களையோ நாம் இடித்து தள்ளிவிடக்கூடாது. அந்த சுவர் பிறருடைய சம்பத்து. நியாயத்திற்கு விரோதமாக, பிறருடைய சுவற்றையோ, கட்டிடத்தையோ நாம் இடிக்கும்போது, அந்த சுவர் நம்மீதே விழும். மற்றவர்களுடைய கல்லுகளை, அவர்களுடைய அனுமதியில்லாமல் பேர்க்கும்போது, அவைகளால் நமக்கு காயமுண்டாகும்.

அரசாங்கம் நிலைபெற்றிருக்கும். அதின் ஆளுகை சீராக நடைபெறும். ஆயினும், ஒரு சிலர் நல்ல அரசாங்கத்திற்கு எதிராக கலகம்பண்ணுவார்கள். நீதியான ஆளுகைக்கு எதிர்த்து நிற்பார்கள். ராஜாக்களிடம் தப்பிதம் காண்பார்கள். பிறரிடம் தவறு காண்பது எளிது. பிறருடைய கண்களிலுள்ள துரும்பைப் பார்ப்பதற்கு முன்பாக, நம்முடைய கண்களிலுள்ள உத்திரத்தை நோக்கிப் பார்க்கவேண்டும். நிலைபெற்றிருக்கிற அரசாங்கத்தை நாம் அசைத்துப் பார்ப்போமென்றால், அது அசையாது. அது நம்மை அசைக்கும்.

மரத்தைப் பிளக்கிறவன் அதினால் மோசப்படுவான். மரத்தைப் பிளப்பதற்கு, அதற்குரிய நேர்த்தியான ஆயுதத்தைப் பயன்படுத்தவேண்டும். மரத்தை மரஆயுதத்தால் பிளக்க முடியாது. அதற்கு இருப்பு ஆயுதம் வேண்டும். இருப்பு ஆயுதமும் மழுங்கலாயிருக்கக்கூடாது. அது கூர்மையாயிருக்கவேண்டும். மரத்தைப் பிளப்பதற்கு பயன்படுத்தும் இருப்பு ஆயுதத்தை, தீட்டி கூர்மைப்படுத்தவில்லையென்றால், நாம் அதிக பலத்தை பிரயோகம்பண்ண வேண்டியிருக்கும். மழுங்கலான ஆயுதத்தால் மரத்தைப் பிளக்க முயற்சி பண்ணுகிறவர்கள் மோசம்போவார்கள்.

மரத்தைப் பிளக்கும்போது இருப்பு ஆயுதத்தை சரியாகக் கையாளவேண்டும். ஆயுதத்தின் கைப்பிடியை நாம் உறுதியாய்ப் பற்றிக்கொள்ளவேண்டும். அதை உறுதியில்லாமல் பிடித்தால், கைப்பிடி விலகி, இருப்பு ஆயுதம் நம்மீது வந்து விழுந்து, நம்மைக் காயப்படுத்திவிடும். மரத்தை வெட்டும்போது மரத்தூள்கள் நம்மீது சிதறி விழுவதற்கும் வாய்ப்புள்ளது. ஆகையினால் மரத்தை வெட்டுகிறவர்கள் பாதுகாப்பான இடத்திலிருந்து, மரத்தை வெட்டவேண்டும். நமக்கு எல்லாம் தெரியுமென்று நினைத்து, நம்முடைய முழுபலத்தையும் பிரயோகம் பண்ணிக்கொண்டிருக்கக்கூடாது. ஒரு காரியத்தை செவ்வையாய்ச் செய்வதற்கு பலத்தைவிட ஞானமே பிரதானம்.

நம்முடைய ஆவி நமக்கு அடங்கியிருக்கிறது. நம்முடைய ஆவியை நாம் ஆளுகை செய்யவேண்டும். மனுஷருடைய ஆவி தாறுமாறாகவும், முரட்டுத்தனமாகவும் இருந்தால், அவர்களுக்கு நன்மை உண்டாகாது. தீமையே உண்டாகும். கட்டுப்படுத்தப்படாத தாறுமாறான ஆவியினால் பிறரை அழித்துவிடலாம் என்று ஒரு சிலர் நினைக்கிறார்கள். ஆனால் பிறரை அழிப்பதற்கு முன்பாக, தாறுமாறான ஆவியை உடையவர்களே அழிந்துபோவார்கள்.

அலப்புவாயன்
பிர 10:11

பிர 10:11. தடைகட்டப்படாத பாம்பு கடிக்குமே, அலப்புவாயனும் அதற்கு ஒப்பானவன்.

பிரபுக்களும் ஜனங்களும் ஒருவரையொருவர் நேசிக்க வேண்டும். அவர்களெல்லோருமே ஞானமுள்ளவர்களாயிருக்க வேண்டும். அவர்களிடத்தில் சாந்தமும், தயவும் நற்குணமும் இருக்கவேண்டும். ஞானியினுடைய வாய்மொழிகள் தயவுள்ளவைகள். பிரபுக்களுக்கு ஞானம் தேவை. ஜனங்களை நல்ல முறையில் ஆளுகை செய்வதற்கு ஞானம் அவர்களுக்கு பேருதவியாயிருக்கும். ஞானமுள்ளவன் பிரச்சனைகளைக் கண்டு பயந்து விலகி ஒதுங்கமாட்டான். அதை சந்திப்பான். அதை ஞானமாய்த் தீர்த்து வைப்பான்.

சில சமயங்களில் ஜனங்கள் பிரபுக்களுக்கு விரோதமாய்க் கலகம்பண்ணலாம். பிரபுக்கள் ஞானமுள்ளவர்களாயிருப்பார்களென்றால், அவர்கள் ஜனங்களின் பிரச்சனைகளைப் புரிந்துகொள்வார்கள். அவர்களுக்கு நல்ல ஆட்சியைக் கொடுப்பார்கள். தனக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறவர்கள், அடக்கி ஒடுக்கி துன்புறுத்தாமல், அவர்களுடைய பிரச்சனைகளைப் புரிந்துகொள்ள முயற்சிபண்ணுவார்கள். அவர்கள்மீது கோபத்தைக் காண்பிப்பதற்குப் பதிலாக அன்பைக் காண்பிப்பார்கள்.

ஜனங்கள் பிரபுக்களை நேசிக்கவேண்டும். தங்கள் தேசத்திற்கு உண்மையுள்ளவர்களாகயிருக்க வேண்டும். தேசத்தின் ஒவ்வொரு குடிமகனும், தன்னுடைய பொறுப்பை உணர்ந்து, தன்னுடைய கடமையை நிறைவேற்றவேண்டும். பல சமயங்களில் ஜனங்களுக்கு தங்களுடைய பொறுப்பும் தெரியாது, தங்களுடைய கடமைகளும் தெரியாது. அவர்கள் தேசத்திற்கு நன்மையான காரியங்களைச் செய்வதற்குப் பதிலாக, தங்களுடைய சுயநன்மைகளைத் தேடிக்கொண்டிருப்பார்கள்.

இப்படிப்பட்ட ஜனங்களுக்கு பிரபுக்கள் நற்புத்திமதிகளைச் சொல்லவேண்டும். அவர்களுடைய கடமைகளை அவர்களுக்கு உணர்த்திக் காண்பிக்கவேண்டும். பிரபுக்கள் ஜனங்களிடத்தில் சமாதானமாகவும், அன்பாகவும் பழகி அவர்களுக்கு ஆலோசனை சொல்லவேண்டும். ஜனங்களுடைய ஒத்துழைப்போடுதான் பிரபுக்களால் நல்லாட்சி செய்ய முடியும். ஞானமுள்ள பிரபு தன்னுடைய கடமைகளைப் புரிந்துகொண்டு, ஞானமாய் ஆட்சிபுரிவான்.

பிரபுவிடத்தில் ஞானமிருக்கும்போது, அவனிடத்தில் முரட்டுத்தனமும், பொல்லாப்பும், ஜனங்களை அடக்கி ஒடுக்கும் சுபாவமும் இருக்காது. ஞானமுள்ள பிரபு ஜனங்கள்மீது அன்பாகயிருந்து, அவர்களை மென்மையாய் ஆட்சி புரிவார். தன்னிடத்திலுள்ள முரட்டுக்குணத்தை நீக்கிப்போடுவார். ஞானமுள்ளவன் தன்னுடைய ஆயுதத்தை தீட்டி கூர்மையாக்குவதுபோல, ஞானமுள்ள பிரபு தன்னுடைய ஞானத்தை விவேகமாகவும், கூர்மையாகவும் பயன்படுத்துவார். நம்முடைய ஆயுதம் மழுங்கலாயிருந்தால், நாம் அதிக பலத்த பிரயோகம்பண்ண வேண்டியது வரும். அதிக பலத்தைப் பிரயோகம்பண்ணுவதற்குப் பதிலாக, கொஞ்சம் முயற்சி செய்து, மழுங்கலாயிருக்கும் ஆயதத்தை தீட்டி கூர்மைப்படுத்துவது பிரதானம்.

பட்டமரத்தை வெட்டுவதைவிட ஈரப்பதமுள்ள மரத்தை வெட்டுவது எளிது. ஆகையினால் மரம் வெட்டுகிறவர்கள், மரத்தை வெட்டுவதற்கு முன்பு, மரத்தின்மீது தண்ணீர் ஊற்றி, அதைப் பதப்படுத்துவார்கள். தங்களுடைய வேலையை எளிதாகச் செய்வதற்கு ஆயத்தம்பண்ணுவார்கள். அதுபோலவே நம்முடைய வாழ்க்கையிலும் சில கடினமான சூழ்நிலைகள் வரலாம். அவற்றை சந்திப்பதற்கு முன்பாக, நம்மை ஆயத்தப்படுத்திக்கொள்ளவேண்டும். இந்த சூழ்நிலையில் நாம் என்ன பேசவேண்டுமென்றும், என்ன செய்யவேண்டுமென்றும், சற்று நேரம் நிதானமாய் அமர்ந்து சிந்தனை செய்யவேண்டும்.

பட்டமரத்தை தண்ணீர் ஊற்றி பதப்படுத்துவதற்கும் நாம் சிறிதும் முயற்சி எடுக்கவேண்டும். நம்முடைய முயற்சி ஒருபோதும் வீணாய்ப்போவதில்லை. அதிகபலத்தை பிரயோகம்பண்ணுவதற்குப் பதிலாக, இப்படிப்பட்ட முயற்சிகளை ஞானத்தோடு செய்யவேண்டும்.

ஞானமுள்ளவன் பாம்புக்கு நன்றாய் மகுடி ஊதுவான். தன்னுடைய மகுடியினால் பாம்பை மயக்குவான். மகுடியை எப்படி ஊதவேண்டுமென்று அவனுக்குத் தெரியும். பாம்பு சீறும். பாம்பாட்டி மகுடி ஊதாமல், பாம்பு சீறுவதுபோல, அவனும் சீறிக்கொண்டிருந்தால் பாம்பு அடங்காது. அது அதிகமாய்ச் சீறும். பாம்பை அடக்கவேண்டுமென்றால் மகுடியை ஊதவேண்டும். அதை நன்றாய் ஊதத் தெரிந்திருக்கவேண்டும். பாம்பாட்டி மகுடியை சரியாய் ஊதவில்லையென்றால், பாம்பு அவனைக் கடிக்கும். தடைகட்டப்படாத பாம்பு கடிக்கும் என்று சாலொமோன் சொல்லுகிறார்.

அலப்புவாயன் தடைகட்டப்படாத பாம்புக்கு ஒப்பானவன். இவன் தனக்கு விருப்பமானதைப் பேசுவான். தடைகட்டப்படாத பாம்பு கடிப்பதுபோல, இவனும் தன்னுடைய வார்த்தைகளால் மற்றவர்களைக் கடிப்பான். நம்முடைய நாவை நாம் அடக்கி ஆளுகை செய்யவேண்டும். இல்லையென்றால் நம்முடைய நாவின் வார்த்தைகள் தாறுமாறாகயிருக்கும். பிறருடைய மனதை புண்படுத்தும் வண்ணமாகப் பேசுவோம். நம்முடைய வாயின் வார்த்தைகளினால் மற்றவர்களுக்குக் கோபம் உண்டாக்குவோம். கடிக்கிற பாம்பை ஜனங்கள் சும்மா விட்டுவைக்கமாட்டார்கள். அதை அடித்துப்போடுவார்கள். அதுபோலவே அலப்புவாயனையும் ஜனங்கள் சும்மாவிடமாட்டார்கள். அவனைத் தண்டிப்பார்கள். நாம் பிறருக்குத் தீங்கு உண்டாக்க நினைத்தால், அது நமக்கே தீங்காக முடியும். படுகுழியை வெட்டுகிறவன் அதிலே விழுவான்.

மூடன்
பிர 10:12-15

பிர 10:12. ஞானியினுடைய வாய்மொழிகள் தயையுள்ளவைகள்; மூடனுடைய உதடுகளோ அவனையே விழுங்கும்.

பிர 10:13. அவன் வாய்மொழிகளின் துவக்கம் மதியீனமும், அவன் வாக்கின் முடிவு கொடிய பைத்தியமுமாம்.

பிர 10:14. மூடன் மிகுதியாய்ப் பேசுகிறான், நடக்கப்போகிறது இன்னதென்று மனுஷன் அறியான்; தனக்குப்பிற்பாடு சம்பவிக்கப்போகிறதை அவனுக்கு அறிவிப்பவன் யார்?

பிர 10:15. ஊருக்குப் போகும் வழியை மூடன் அறியாததினால், அவன் தொல்லை ஒவ்வொருவரையும் இளைக்கப்பண்ணும்.

மூடனுடைய மதியீனத்தைப்பற்றி சாலொமோன் இங்கு விரிவாகச் சொல்லுகிறார். மூடன் மிகுதியாகப் பேசுகிறான். அவனுடைய வார்த்தையில் தெளிவும் இருக்காது. குறிக்கோளும் இருக்காது. மூடனுடைய வார்த்தையில் அவனுடைய மதியீனம் வெளிப்படும். ஞானியினுடைய வாய்மொழிகள் தயவுள்ளவைகள். மூடனுடைய வாய்மொழிகளோ தயவில்லாதவைகள். ஞானி தனக்கும் நன்மை உண்டாகப் பேசுவான். பிறருக்கும் நன்மை உண்டாகப் பேசுவான். ஞானியின் வார்த்தைகளினால் அநேகருக்கு நன்மை கிடைக்கும்.

மூடனுடைய உதடுகள் அவனையே விழுங்கும். மூடன் பிறருக்கு கேடுண்டாகப் பேசுவான். மூடன் பிறரை நிந்திப்பான். அவன் பிறருக்கு தீங்கு செய்வதற்காக தன் வாயைத் திறப்பான். முடிவில் மூடனுக்குத் தீங்கு வரும். மூடன் தன் வாயின் வார்த்தைகளினால் அழிந்துபோவான்.

மூடனுடைய வாய்மொழிகளின் துவக்கம் மதியீனமாயிருக்கிறது. அவனுடைய வாக்கின் முடிவும் கொடிய பைத்தியமாயிருக்கிறது. மூடனுடைய வார்த்தைகள் அவனுடைய பலவீனத்தையும், துன்மார்க்கத்தையும், மதியீனத்தையும் வெளிப்படுத்தும். அவனுடைய இருதயத்தில் மதியீனம் நிரம்பியிருக்கும். கெட்ட ஊற்றிலிருந்து கெட்ட தண்ணீர் சுரப்பதுபோல, மூடனுடைய மதியீனமான இருதயத்திலிருந்து மதியீனமான வார்த்தைகள் வெளிப்படும்.

மூடனுடைய வாக்கின் முடிவில் கொடிய பைத்தியமாயிருக்கும். மூடன் எப்படியிருக்கிறானோ அவனுடைய வார்த்தைகளும் அப்படியே இருக்கிறது. மூடன் மிகுதியாகப் பேசுவான். அவனுடைய பேச்சை அவனால் நிறுத்தவே முடியாது. சுருக்கமாக எப்படி பேசுவதும் என்பதும் அவனுக்குத் தெரியாது. கடைசியில் சொல்ல வேண்டியதை முதலில் சொல்லுவான். முதலில் சொல்லவேண்டியதை கடைசியில் சொல்லுவான். அவனுடைய வார்த்தைகள் முதலிலும் கடைசியிலும் ஒன்றுபோலவே இருக்கும். முதலில் அவனுடைய மதியீனம் வெளிப்படும். முடிவில் அவனுடைய பைத்தியம் வெளிப்படும்.

மூடனுடைய மனதில் தெளிந்த சிந்தனையிருக்காது. தெளிந்த சிந்தனையில்லாதவர்கள் அதிகமாய் உளறுவார்கள். அவர்களுடைய இருதயம் உலர்ந்துபோயிருக்கும். உலர்ந்த பொருட்கள் எப்போதுமே அதிகமான ஓசையைக் கொடுக்கும். மூடனும் இருதயத்தில் ஒன்றுமில்லாமல் உலர்ந்துபோயிருக்கிறான். ஆகையினால் அவன் அதிகமாகவும் பேசுகிறான், அதிக சத்தமாகவும் பேசுகிறான். மூடன் மிகுதியாகப் பேசினாலும், தான் என்ன பேசுகிறோம் என்பது அவனுக்குத் தெளிவாகத் தெரியாது. அவன் பொதுவான காரியங்களைத்தான் பேசுவான். ஆனாலும் அவன் என்ன சொல்லப்போகிறான் என்பதை யாராலும் நிதானித்து அறியமுடியாது.

தான் மாத்திரமே பேசவேண்டுமென்று மூடன் விரும்புவான். அவன் மற்றவர்கள் பேசுவதைக் கேட்க விரும்பமாட்டான். மூடன் சொன்னதையே திரும்ப திரும்பச் சொல்லுவான். மூடன் எவ்வளவுதான் பேசினாலும் அவன் சோர்வடையமாட்டான். அவனுக்கு இனிமேல் என்ன நடக்கப்போகிறது என்பதையும், அவன் இனிமேல் என்ன சொல்லப்போகிறான் என்பதையும் எந்த மனுஷனாலும் அறிந்துகொள்ள முடியாது. அவனுக்கு இதற்கு பின்பு என்ன சம்பவிக்கப்போகிறது என்பதையும் அவனுக்கு யாராலும் அறிவிக்க முடியாது.

மூடன் எந்தவிதமான குறிக்கோளுமில்லாமல் கடினமாய் உழைப்பான். அவனுடைய உழைப்பினால் அவனுக்கும் பிரயோஜனமிருக்காது. மற்றவர்களுக்கும் பிரயோஜமிருக்காது. மூடன் தான் விரும்பியதையெல்லாம் செய்வான். தன் மனதிற்கு சரியென்று தோன்றுவதையெல்லாம் செய்ய ஆரம்பித்துவிடுவான். மூடன் வேலை செய்யும்போது மற்றவர்களையும் தொந்தரவு பண்ணுவான். மூடனுடைய தொந்தரவினால் மற்றவர்கள் களைத்துப்போவார்கள். மூடனுடைய தொல்லை ஒவ்வொருவரையும் இளைக்கப்பண்ணும்.

ஊருக்குப்போகும் வழி மூடனுக்குத் தெரியாது. வழிதெரியாமல் நம்மால் ஊருக்குப் போகமுடியாது. ஆனால் மூடனோ, ஊருக்குப் போகும் வழி தெரியாவிட்டாலும், புறப்பட்டுப்போய்விடுவான். வழியில் தான் பார்க்கிற எல்லோரையும் நிறுத்தி, அவர்களிடத்தில் வழிகேட்பான். அவர்கள் சரியான வழியைச் சொன்னாலும் அதை செவிகொடுத்துக் கேட்கமாட்டான். தான் போக நினைத்த வழியில்தான் போய்க்கொண்டிருப்பான். போவதற்கு ஒரு வழி மாத்திரமே இருந்தாலும், அந்த வழியும் சரியான வழிதான் என்பதும் அவனுக்குத் தெரியாது. அது பற்றியும் மற்றவர்களிடம் விசாரிப்பான். அவனுடைய வாயின் வார்த்தைகள் பிறருக்குத் தொல்லையாகயிருக்கும். மூடனுடைய தொல்லையினால் எல்லோரும் சோர்ந்துபோவார்கள்.

ராஜா
பிர 10:16-17

பிர 10:16. ராஜா சிறுபிள்ளையுமாய், பிரபுக்கள் அதிகாலமே உண்கிறவர்களுமாயிருக்கப் பட்ட தேசமே, உனக்கு ஐயோ!

பிர 10:17. ராஜா குலமகனுமாய், பிரபுக்கள் வெறிக்க உண்ணாமல் பெலன்கொள்ள ஏற்றவேளையில் உண்கிறவர்களுமாயிருக்கப் பட்ட தேசமே, நீ பாக்கியமுள்ளது.

ராஜா நற்குணமுள்ளவனாக இருக்கும்போது, அவனுடைய தேசத்தில் சந்தோஷமும், சமாதானமும் நிரம்பியிருக்கும். ஆளுகை செய்கிறவர்களின் சுபாவத்தைப் பொறுத்துதான் தேசத்தில் சந்தோஷமிருக்கும். ராஜா சிறுபிள்ளையாக இருப்பானென்றால், அந்த தேசத்திற்கு சந்தோஷமிருக்காது. சிறுபிள்ளைக்கு ஜனங்களை ஆளுகை செய்கிற அனுபவம் இருக்காது. சிறுபிள்ளைகளால் நீதி நியாயத்தை நிதானத்து அறியமுடியாது. சிறுபிள்ளைகள், சிறுபிள்ளைகளுக்குகேற்ற பிரகாரம் சிந்திப்பார்கள். தங்கள் வயதிற்கேற்ற பிரகாரமாகவே கிரியை செய்வார்கள். சிறுபிள்ளைகள் சிங்காசனத்தில் அமர்ந்து ஜனங்களை ஆளுகை செய்ய நிர்வாகத்திறமையில்லாதவர்கள்.

ராஜா பெலமுள்ளவனாகயிருக்க வேண்டும். பலவீனமாயிருக்கக்கூடாது. ஞானமுள்ளவனாயிருக்க வேண்டும். ஞானத்தில் முதிர்ச்சி பெற்றிருக்கவேண்டும். சிறுபிள்ளைத்தனமாகயிருக்கக் கூடாது. விளையாட்டுத்தனமாகயிருக்கக் கூடாது. சிங்காசனத்தில் வீற்றிருக்கிற ராஜா, மிகுந்த கவனத்தோடு, பொறுப்போடு, ஜனங்களை ஆளுகை செய்யவேண்டும். ராஜா சிறுபிள்ளையாயிருக்கப்பட்ட தேசத்திற்கு ஐயோ என்று சாலொமோன் சொல்லுகிறார். ராஜா குலமகனாயிருக்கவேண்டும். அப்படிப்பட்ட தேசமே பாக்கியமுள்ளது.

தேசத்தின் பிரபுக்கள் அதிகாலமே உண்கிறவர்களாயிருக்கக்கூடாது. வெறிக்க உண்கிற பிரபுக்களும், பெருந்தீனி உண்கிற பிரபுக்களும் தேசத்திற்கு ஆகாதவர்கள். இவர்களுக்கு வயிறுதான் தேவன். தங்களுடைய போஜனத்திற்காக இவர்கள் எதை வேண்டுமானாலும் செய்வார்கள். பிரபுக்கள் வெறிக்க உண்ணாமல், பெலன்கொள்வதற்காக ஏற்ற வேளையிலே உண்கிறவர்களாயிருக்க வேண்டும். இவர்களே ஞானமுள்ள பிரபுக்கள். இவர்களுடைய தேசமே பாக்கியமுள்ளது.

பிரபுக்கள் தங்களுடைய சுயஇச்சைகளுக்கு அடிமைகளாகயிருந்தால், அவர்களால் தேசத்தின் நன்மைகளைக் கவனிக்க முடியாது. ஜனங்களுடைய வழக்குகளை விசாரிப்பதில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக, இவர்கள் தங்கள் போஜனத்தில்தான் கவனம் செலுத்துவார்கள். குடிப்பதும், புசிப்பதுமே இவர்களுக்குப் பிரதானமாயிருக்கும். அதிகாலையிலேயே வெறித்து உண்டுவிட்டு, சோம்பலாயிருப்பார்கள்.

வெறித்து உண்கிறவர்கள், புசிப்பதற்காகவே ஜீவிக்கிறார்கள். ஆனால் கர்த்தருடைய பிள்ளைகள் ஜீவிப்பதற்காகப் புசிக்கவேண்டும். உயிரோடிருப்பதற்கு பெலன்கொள்வதற்காகப் புசிக்கவேண்டும். போஜனம் நம்மை ஆளுகை செய்யக்கூடாது. நாமே போஜனத்தை ஆளுகை செய்யவேண்டும். ராஜாக்களும் பிரபுக்களும், அதிகாலமே, வெறிக்க உண்கிறவர்களாகயிருந்தால், ஜனங்கள் அவர்களிடத்தில் எந்த நன்மையும் எதிர்பார்க்க முடியாது.

ராஜா குலமகனாகயிருக்கவேண்டும். ராஜாவினுடைய வார்த்தைகளும், பார்வையும், கிரியைகளும் கிருபை நிரம்பியதாகயிருக்கவேண்டும். ராஜா தெளிந்த சிந்தனையுள்ளவராகவும், சீக்கிரத்தில் கோபப்படாதவராகவும், நீடிய பொறுமையுள்ளவராகவும், காரிய சித்தியுடையவராகவும் இருக்கவேண்டும். இவையெல்லாவற்றிற்கும் மேலாக ராஜாவிடம் ஞானம் காணப்படவேண்டும். கர்த்தருக்குப் பயப்படுவதே ஞானத்தின் ஆரம்பம். ராஜா கர்த்தருக்குப் பயந்து ஜனங்களை ஆளுகை செய்யவேண்டும். அவர் தன் தேசத்திலுள்ள எல்லா ஜனங்களுக்கும் நன்மை செய்ய, எப்போதுமே ஆயத்தமாயிருக்கவேண்டும்.

ராஜாவுக்குக் கீழே, அவருக்கு உதவியாக, பிரபுக்கள் ஜனங்களை ஆளுகை செய்கிறார்கள். பிரபுக்களும் ஒழுக்கமுள்ளவர்களாயும், தங்களுடைய சுயஆசைகளை கட்டுப்படுத்துகிறவர்களாகவும் இருக்க வேண்டும். தங்களுடைய சரீர நன்மைகளைவிட, குடும்ப நன்மைகளைவிட, தேசத்தின் நன்மையே மிகவும் முக்கியமானது என்று தீர்மானித்து, தங்கள் தேசத்திற்காக நன்மை செய்யவேண்டும். நல்லொழுக்கமுள்ள பிரபுக்கள் ஏற்ற வேளையில் உணவு உண்பார்கள். தங்கள் கடமைகளை சரியாகச் செய்வார்கள். அவர்களுடைய தேசம் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும். தேசத்திலுள்ள எல்லா ஜனங்களுக்கும் போஜனம் கிடைக்கும். பிரபுக்கள் ஜனங்களுடைய நன்மையைப் பார்த்துவிட்டு, அதன்பின்பு, ஏற்ற வேளையில் புசிப்பார்கள்.

பிரபுக்கள் வெறிக்க உண்ணாமல் பெலன்கொள்ள உண்ண வேண்டும். பிரபுக்களின ஆத்துமாக்கள் தேவனுடைய ஊழியத்தைச் செய்வதற்கு தகுதிபெற்றிருக்கவேண்டும். அவர்களால் தங்கள் தேசத்திற்கு நன்மை செய்ய முடியவேண்டும். இதற்காக அவர்கள் புசிக்கவேண்டும். அவர்களிடத்தில் சரீர பெலனிருந்தால்தான், தேசத்து ஜனங்களுக்கு அவர்களால் நன்மை செய்ய முடியும். அவர்களிடத்தில் ஆத்தும பெலன் இருந்தால்தான், அவர்களால் தேவனுக்கு ஊழியம் செய்ய முடியும்.

ராஜாக்களும் பிரபுக்களும், தங்கள் தேசத்தின் குடிமக்களுக்கு முன்மாதிரிகளாயிருக்க வேண்டும். ஒழுக்கத்திலும், இச்சையடக்கத்திலும் இவர்கள் முன்மாதிரிகளாயிருப்பதை ஜனங்கள் பார்த்து அவர்களும் ஒழுக்கமுள்ளவர்களாகவும், இச்சையடக்கமுள்ளவர்களாகவும் இருந்து, தங்கள் நற்குணத்தில் வளர்ச்சி பெறவேண்டும். மற்றவர்களுக்கு அதிகமாய் உழைக்க விரும்புகிறவர்கள், தங்களைத் தாங்களே அதிகமாக வெறுக்க கற்றுக்கொள்ளவேண்டும். தன்னைத்தான் வெறுக்கிறவன் மாத்திரமே பிறருக்கு ஊழியம் செய்ய தகுதியுள்ளவன்.

சோம்பல்
பிர 10:18

பிர 10:18. மிகுந்த சோம்பலினால் மேல்மச்சுப் பழுதாகும்; கைகளின் நெகிழ்வினாலே வீடு ஒழுக்காகும்.

ஒரு மனுஷனுடைய சோம்பல்தனத்தினால், அவனுக்கும், அவனுடைய குடும்பத்தாருக்கும், அவனுடைய சமுதாயத்திற்கும் கேடுண்டாகும். சோம்பல்தனமும் கைளின் நெகிழ்வும் நம்மிடத்தில் இருக்கக்கூடாது. இந்த சுபாவங்களை உடையவர்கள் தங்கள் கடமைகளைப் புறக்கணித்துவிடுவார்கள். தங்களுடைய பொறுப்புக்களை உதாசீனம்பண்ணுவார்கள். ஒரு வேலையும் செய்யாமல் சும்மாயிருக்கவேண்டுமென்று விரும்புவார்கள். அதே வேளையில் ஆடம்பரமாயும், உலகப்பிரகாரமாக சந்தோஷமாயும் இருக்கவேண்டும் என்றும் ஆசைப்படுவார்கள்.

ஒருவன் சோம்பல்காரனாயிருக்கும் போது முதலாவதாக அவனுடைய மேல்மச்சு பழுதாகும். அதன் பின்பு அவனுடைய வீடு ஒழுகும். நாம் ஆரம்பத்திலேயே நம்முடைய பழுதுகளை கவனிக்கவில்லையென்றால், அதன் பின் விளைவுகள் மிகவும் மோசமாயிருக்கும்.

ராஜா சிறுபிள்ளையாகவும் பிரபுக்கள் அதிகாலமே உண்கிறவர்களுமாயிருக்கும் போது, அவர்கள் தங்களுடைய கடமைகளை சரியாக நிறைவேற்றமாட்டார்கள். எந்த ஒரு வேலையையும் பிரயாசப்பட்டு, பொறுப்போடு செய்யமாட்டார்கள். இவர்களுடைய பொறுப்பிலுள்ள தேசம், இவர்களுடைய சோம்பல்தனத்தினால் பாதிப்படையும்.

வீடு ஒழுகும்போது அதனுடைய அஸ்திபாரமே கெட்டுப்போகும். இவர்களுக்கு சோம்பல்தனமும், நெகிழ்ந்த கைகளுமே அஸ்திபாரம். இவை இரண்டுமே பிரயோஜனமற்றவை. பழுதாய்ப்போன மேல்மச்சை சரிசெய்யவேண்டுமென்றால் நம்முடைய கைகளைத் திடப்படுத்தவேண்டும். கைகள் நெகிழ்ந்திருக்குமென்றால், நம்மால் மேல்மச்சைப் பழுதுபார்க்கவும் முடியாது. மழைகாலத்தில் பழுதடைந்த மேல்மச்சிலிருந்து தண்ணீர் ஒழுகுவதை தடைபண்ணவும் முடியாது. மழை எப்போது வரும் என்று நமக்குத் தெரியாது.

மழை வரும் முன்பு, பழுதடைந்துள்ள மேல்மச்சை செப்பனிடவேண்டும். அதுபோலவே நமக்கு ஆபத்துக்காலம் எப்போது வரும் என்று தெரியாது. அதற்குள்ளாக, நம்முடைய கைகளைத் திடப்படுத்தி, ஆபத்தை சந்திப்பதற்கு அல்லது ஆபத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு நாம் ஆயத்தமாயிருக்க வேண்டும்.

பணம்
பிர 10:19

பிர 10:19. விருந்து சந்தோஷத்துக்கென்று செய்யப்படும்; திராட்சரசம் ஜீவனுள்ளோரைக் களிப்பாக்கும்; பணமோ எல்லாவற்றிற்கும் உதவும்.

நாம் பணத்தைச் சம்பாதிப்பதற்காகவே கடினமாய் உழைக்கிறோம். ஒரு தேசத்தில் சாதாரண ஜனங்களாகயிருந்தாலும், ஆளுகை செய்கிற பிரபுக்களாகயிருந்தாலும், பணத்திற்காகவே எல்லாரும் உழைக்கிறார்கள். ஏனென்றால் பணம் எல்லாவற்றிற்கும் உதவியாயிருக்கிறது. விருந்து சந்தோஷத்திற்கென்று செய்யப்படுகிறது. மதியீனனுடைய நகைப்பு பைத்தியமாயிருக்கும். ஞானமுள்ளவனுடைய சந்தோஷமோ எல்லோருக்கும் நன்மை தரும். ஞானமுள்ளவர்கள் பணத்தை சம்பாதித்து விருந்து செய்கிறார்கள். தாங்களும் சந்தோஷமாகயிருக்கிறார்கள். மற்றவர்களையும் சந்தோஷப்படுத்துகிறார்கள்.

பணம் சந்தோஷத்தைத் தராது. பணத்தை யாராலும் சாப்பிட முடியாது. பணத்தை வஸ்திரமாக உடுத்தவும் முடியாது. ஆனாலும் பணத்தினால்தான் நாம் போஜனத்தையும், வஸ்திரத்தையும் கிரயத்திற்கு வாங்குகிறோம். இவையெல்லாவற்றிற்கும் பணம் ஒரு கருவியாகப் பயன்படுகிறது. சாலொமோன் இதை உணர்ந்தவராக, "பணமோ எல்லாவற்றிற்கும் உதவும்" என்று சொல்லுகிறார். இந்தப் பிரபஞ்சத்தில் நாம் ஜீவிக்கிற காலம் வரையிலும், நமக்கு பணம் தேவைப்படுகிறது. பணத்தினால் நம்முடைய சரீரத்திற்குத்தான் பயனுண்டாகும். நம்முடைய ஆத்துமாவுக்கு பணம் பயன்படாது. ஆத்துமாவின் தேவையை பணத்தால் பூர்த்தி செய்ய முடியாது.

பாவத்தின் சம்பளம் மரணம். நம்முடைய பணத்தை வைத்து பாவமன்னிப்பைப் பெறமுடியாது. தேவனுடைய கிருபையைப் பணத்தினால் கிரயத்திற்கு வாங்கமுடியாது. அதுபோலவே சுத்தமனச்சாட்சியையும் பணத்தால் விலைக்கு வாங்கமுடியாது. ஆத்துமா சம்பந்தப்பட்ட காரியங்களுக்கு பணம் பிரயோஜனமற்றது. இம்மைக்குரிய வாழ்வுக்கு மாத்திரமே பணம் பிரயோஜனமாயிருக்கும். மறுமைக்குரிய வாழ்க்கைக்கு பணத்தால் ஒரு பிரயோஜனமுமில்லை.

ராஜாவை நிந்தியாதே
பிர 10:20

பிர 10:20. ராஜாவை உன் மனதிலும் நிந்தியாதே, ஐசுவரியவானை உன் படுக்கையிலும் நிந்தியாதே; ஆகாயத்துப் பறவை அந்தச் சத்தத்தைக் கொண்டுபோகும், செட்டைகளுள்ளது அந்தச் செய்தியை அறிவிக்கும்.

நம்முடைய வார்த்தைகளைக் குறித்து நாம் மிகவும் கவனமாயும் எச்சரிப்பாயும் இருக்கவேண்டும். நாம் கடினமாக உழைக்கிறவர்களாகயிருக்கலாம். நாம் அநேகருக்கு அநேக நன்மைகளைச் செய்யலாம். சமுதாயத்தில் நமக்கு மதிப்பும் மரியாதையும் இருக்கலாம். நம்மிடத்தில் எத்தனை நற்குணங்கள் இருந்தாலும், நம்முடைய மனதில் ராஜாவை நிந்தித்து விடக்கூடாது. நம்முடைய அரசாங்கத்திற்கு விரோதமாக கலகம் பண்ணக்கூடாது. தேசத்துரோகத்திற்கு உடந்தையாயிருக்கக் கூடாது. சாலொமோன் இதுபற்றிச் சொல்லும்போது, "ராஜாவை உன் மனதிலும் நிந்தியாதே" என்று சொல்லுகிறார்.

நாம் ராஜாவை நிந்திக்கக்கூடாது. அதுபோலவே ஐசுவரியவானை நம்முடைய படுக்கையிலும் நிந்திக்கக்கூடாது. பிரபுக்களையும், நம்மை ஆளுகை செய்கிறவர்களையும், நம்முடைய படுக்கையிலும் நிந்திக்கக்கூடாது. ராஜாக்களுக்குத் தெரியாத ரகசியம் எதுவுமில்லை. நம்முடைய யோசனைகளையும், நிந்தனைகளையும் ராஜாவுக்குத் தெரியாமல் மறைக்க முடியாது. ஒரு சிலர் ராஜாவுக்கு விரோதமாகத் தீங்கு நினைக்கிறார்கள். நாம் அப்படிப்பட்டவர்களோடு ஐக்கியமாயும் இருக்கக்கூடாது.

ராஜாவுக்கு விரோதமான ஆலோசனைகள், எவ்வளவு இரகசியமாக நடைபெற்றாலும், ஆகாயத்துப் பறவைகள்கூட அந்தச் சத்தத்தை ராஜாவிடம் கொண்டுபோய்விடும். ராஜாவுக்கு அநேக ஒற்றர்கள் இருப்பார்கள். நாம் நினையாத நேரத்தில் ஒற்றர்கள் நம்முடைய இரகசியங்களையெல்லாம் சேகரித்து ராஜாவிடம் அறிவிப்பார்கள். செட்டைகளுள்ள ஆகாயத்துப்பறவைகள், நம்முடைய இரகசியமான வார்த்தைகளை, ராஜாவுக்கு அறிவிக்கும். நம்முடைய மனதில் ராஜாவை நிந்தித்தது ராஜாவுக்குத் தெரியவரும். அது நம்முடைய மனதிற்கு குழப்பமாயிருக்கும். முடிவில் நமக்கு அழிவு வரும்.

11 அதிகாரம்

தரித்திரருக்கு உதவிசெய்ய வேண்டுமென்று சாலெமோன் சொல்லுகிறார். நம்மிடத்திலுள்ளதை நாம் பிறருக்கு பகிர்ந்து கொடுக்கவேண்டும் (பிர 11:1-6). நம்முடைய மரணத்தையும் நியாயத்தீர்ப்பையும் சந்திப்பதற்கு நாம் ஆயத்தமாயிருக்கவேண்டும்.

உன் ஆகாரத்தைத் தண்ணீர்கள்மேல் போடு பிர 11:1,2

பிர 11:1. உன் ஆகாரத்தைத் தண்ணீர்கள்மேல் போடு; அநேக நாட்களுக்குப் பின்பு அதின் பலனைக் காண்பாய்.

பிர 11:2. ஏழுபேருக்கும் எட்டுபேருக்கும் பங்கிட்டுக்கொடு; பூமியின்மேல் என்ன ஆபத்து நேரிடுமோ உனக்குத் தெரியாது.

ஐசுவரியவான்கள் தங்களிடத்திலுள்ள ஐசுவரியத்தை தரித்திரருக்கு தாராளமாய்ப் பகிர்ந்து கொடுக்கவேண்டும். இது ஒவ்வொருவர்மீதும் நியமிக்கப்பட்டிருக்கிற கடமை. சாலொமோன் இதைப்பற்றிச் சொல்லும்போது, "உன் ஆகாரத்தை தண்ணீர்கள்மேல் போடு" என்று சொல்லுகிறார். இந்த வாக்கியத்திற்கு, "உன்னிடத்திலுள்ள அப்பத்தின் தானியத்தை தரித்திரருக்குக் கொடு" என்று வேதபண்டிதர்களில் சிலர் வியாக்கியானம் சொல்லுகிறார்கள். வேறு சிலரோ, "உன்னிடத்திலுள்ள விதை தானியத்தை உன் நிலத்தில் விதை" என்றும் பண்ணுகிறார்கள்.

நம்முடைய குடும்பத்தில், நம்மிடத்திலிருக்கும் அப்பத்தின் தானியம் மிகவும் முக்கியமானது. அப்பம் சுடுவதற்கு இது தேவை. இது குடும்பத்தினருடைய பசியைப் போக்கும். ஆனாலும் நாம் அப்பத்தின் தானியத்தை, சிறிது எடுத்து, அதை விதைப்பற்கும் பயன்படுத்தவேண்டும். விதைக்கவில்லையென்றால் நமக்கு அறுவடையில்லை. நம்மிடத்திலுள்ள தானியத்தை நாம் புசித்து தீர்த்துவிட்டால், நமக்கு விதைப்பதற்கு ஒன்றும் இருக்காது. அடுத்த வருஷம் அறுவடை பண்ணவும் ஒன்றும் இருக்காது. அடுத்த வருஷத்தில் நம்முடைய களஞ்சியம் நிரம்பியிருக்கவேண்டுமென்றால், இந்த வருஷத்தில், நம்முடைய ஆகாரத்திற்காக வைத்திருக்கும் தானியத்தில் கொஞ்சம் எடுத்து, அதை விதைக்கவேண்டும்.

ஏழைகளுக்கு உதவி செய்கிறவர்கள், தங்களுடைய ஆகாரத்தை, தரித்திரருக்குப் பகிர்ந்துகொடுக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் தங்கள் ஆகாரத்தின் தானியத்தை, விதை தானியமாக மாற்றுகிறார்கள். தங்களுடைய ஆகாரத்தை ஏழைகளுக்கு ஆகாரமாகக் கொடுக்கிறார்கள். சாலொமோன் இதையே, "உன் ஆகாரத்தை தண்ணீர்கள்மேல் போடு" என்று சொல்லுகிறார். "உன்னிடத்திலுள்ள ஆகாரத்தை ஏழைகளுக்குப் பகிர்ந்துகொடு" என்பது இந்த வாக்கியத்தின் அர்த்தமாம்.

"மாடுகளையும், கழுதைகளையும் நடத்திக்கொண்டுபோய், நீர்வளம் பொருந்திய இடங்களிலெல்லாம் விதை விதைக்கிற நீங்கள் பாக்கியவான்கள்" (ஏசா 32:20). "மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்" (கலா 6:7). விதைத்தால் மாத்திரமே அறுக்கமுடியும். நம்மிடத்திலுள்ளதை தரித்திரருக்கு இலவசமாயும், உதாரத்துவமாயும் கொடுக்கவேண்டும். ஏழைகளுக்கு பகிர்ந்துகொடுப்பது, வெளியே எறிவதுபோல இருக்கும். அவையெல்லாம் நமக்கு நஷ்டமாயிற்று என்று நினைக்கத்தோன்றும். ஆனாலும், இது தண்ணீர்கள்மேல் நம்முடைய ஆகாரத்தைப்போடுவதற்கு சமம்.

தண்ணீரில் ஆகாரத்தைப் போடுவது, தண்ணீரின்மீது பிரயாணம் பண்ணுவதற்கு சமமானது. வியாபாரிகள் கடலில் பிரயாணம் செய்து வியாபாரம் பண்ணுவதுபோல, நாம் தண்ணீரின்மீது ஆகாரத்தைப்போட்டு பலனை எதிர்பார்க்கிறோம். தண்ணீரின்மீது போடப்படும் ஆகாரம், அதில் மூழ்கிப்போகாது. அநேக நாட்களுக்குப் பின்பு நாம் அதன் பலனைக் காணலாம். நம்முடைய ஆகாரத்தை ஏழுபேருக்கும், எட்டுபேருக்கும் பங்கிட்டுக் கொடுக்கவேண்டுமென்று சாலொமோன் சொல்லுகிறார். இந்த வாக்கியத்திற்கு அநேகருக்கு தாராளமாயும், உதாரத்துவமாயும் கொடுக்கவேண்டும் என்பது பொருளாகும்.

நாம் கிள்ளிக்கொடுக்காமல் அள்ளிக்கொடுக்கவேண்டும். நம்முடைய போஜனத்தின் ஒரு பகுதியை ஏழைகளுக்கு தானதருமமாகக் கொடுக்கவேண்டும். ஒரு ஏழைக்கு மாத்திரம் உதவிசெய்தால் போதாது. ஏராளமானோர் ஏழைகளாகயிருக்கிறார்கள். ஆகையினால் ஏழுபேருக்கும், எட்டுபேருக்கும் பங்கிட்டுகொடு என்று சாலொமோன் சொல்லுகிறார். நாம் அநேகருக்கு உதவிசெய்யவேண்டும்.

யாருக்கெல்லாம் உதவி தேவைப்படுகிறதோ, அவர்களெல்லோருக்கும் உதவிசெய்யவேண்டும். ஏழுபேருக்கு மாத்திரமல்ல, நாம் எட்டாவது நபரை கண்டுபிடித்தாலும், அவருக்கும் பங்கிட்டுக்கொடுக்கவேண்டும். தேவன் தம்முடைய கிருபையிலும், இரக்கத்திலும் ஐசுவரியமுள்ளவர். அவர் தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் தம்முடைய சர்வசிருஷ்டிகளுக்கும் வெளிப்படுத்துகிறார். நாம் தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொள்ள அபாத்திரராயிருந்தாலும், நமக்கும் தமது கிருபையை வெளிப்படுத்துகிறார். தாராளமாய்க் கொடுக்கிறார். நமக்கு ஏற்கெனவே கொடுத்த கிருபைகளைக் கணக்குப் பார்க்காமல், இன்னும் புதிய கிருபைகளைக் கொடுக்கிறார்.

நாம் தண்ணீரின்மேல் நம்முடைய ஆகாரத்தைப் போடும்போது அது காணாமல் போய்விடாது. அநேக நாட்களுக்குப் பின்பு அதின் பலனை நம்மால் காணமுடியும். விதை விதைக்கிறவர் உடனே அறுவடை செய்வதில்லை. விதைத்த நாளிலேயே விதையின் பலனை அவரால் காணமுடியாது. அவர் அறுவடை காலத்திற்காக பொறுமையோடு காத்திருப்பார். அறுவடை காலம் ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது. அன்று அவர் திரளாய் அறுவடை செய்வார். கண்ணீரோடு விதைத்தவர்கள் கெம்பீரத்தோடு அறுவடை செய்வார்கள்.

நாம் விதைத்ததற்கான பலன், நமக்கு உடனே கிடைக்காமல் போகலாம். ஆனாலும் பலன் உண்டு. அது மெதுவாக வரும். நாம் தண்ணீர்களின்மேல் ஆகாரத்தைப்போட்டால், அநேக நாட்களுக்குப் பின்புதான் அதன் பலனைக் காணமுடியும். கோதுமையானது மிகவும் முக்கியமான தானியம். அதை நிலத்தில் விதைத்தால் அநேக நாட்களுக்குப் பின்புதான் முளைக்கும். நிலத்திலேயே அநேக நாட்கள் வளரும். அதன் பின்புதான், அறுவடை நாளின்போது தன் பலனைத் தரும்.

நமக்கு வாய்ப்பு இருக்கும்போதே நாம் பிறருக்கு உதவி செய்யவேண்டும். ஏனெனில் பூமியின்மேல் என்ன ஆபத்து நேரிடும் என்பது நமக்குத் தெரியாது. உதவிசெய்கிற நமக்கும் ஆபத்து வரலாம். அல்லது உதவியைப் பெற்றுக்கொள்கிற மற்றவர்களுக்கும் வரலாம். ஆபத்து வந்த பின்பு யாராலும் உதவிசெய்யமுடியாது. நாளைக்கு நம்மால் நன்மை செய்ய முடியுமா என்னும் நிச்சயம் நமக்கு இல்லை. ஆகையினால் இன்றைக்கு, நமக்கு நன்மை செய்ய திராணியிருக்கும்போதே, நாம் நன்மை செய்து விடவேண்டும். நாளைக்கு ஒரு வேளை நம்மால் நன்மை செய்யமுடியாமல் போய்விடலாம்.

"பூமியின்மேல் என்ன ஆபத்து நேரிடுமோ உனக்குத் தெரியாது" என்னும் வாக்கியத்திற்கு வேதபண்டிதர்கள் பலவிதமாக வியாக்கியானம் சொல்லுகிறார்கள். தரித்திரருக்கு உதவிபுரிவதற்கு எதிராகவும் இந்த வாக்கியத்தைப் பயன்படுத்துகிறார்கள். நமக்கு நாளைக்குத் தேவைகள் வரலாம். ஆகையினால் நம்மிடத்திலுள்ளதை பிறருக்குக் கொடுக்காமல், நமக்கு வைத்திருந்தால், அது நமக்கு நாளைக்குப் பிரயோஜனமாயிருக்கும். ஏனெனில் நாளைக்கு நமக்கு என்ன நேரிடும் என்பது தெரியாது என்றும் இந்த வாக்கியத்திற்கு வியாக்கியானம் சொல்லுகிறார்கள்.

நாளைக்கு நமக்கு என்ன ஆபத்து நேரிட்டாலும், இன்று நமக்கு உதவி செய்ய திராணியிருக்குமென்றால், இன்றே உதவி செய்வதுதான் நல்லது. நாளைக்கு நமக்கு ஆபத்து நேரிட்டாலும், நாம் உதவி செய்த நாட்களை சந்தோஷமாய் நினைத்துப் பார்க்கலாம். அந்த நாளைக் குறித்த சந்தோஷமும் ஆறுதலும் நம்முடைய இருதயத்தில் நிரம்பியிருக்கும். இன்றைய தினத்தில் நம்மால் முடிந்ததை நாம் செய்யவேண்டும். நாளைய தினத்திற்காக நாம் கர்த்தரையே எதிர்பார்த்து அவரையே சார்ந்திருக்கவேண்டும்.

மழையும் மரமும்
பிர 11:3

பிர 11:3. மேகங்கள் நிறைந்திருந்தால் மழையைப் பூமியின்மேல் பொழியும்; மரமானது தெற்கே விழுந்தாலும் வடக்கே விழுந்தாலும், விழுந்த இடத்திலேயே மரம் கிடக்கும்.

ஒரு சிலர் பிறருக்கு பகிர்ந்து கொடுப்பதை விரும்புவதில்லை. தண்ணீரின்மேல் நம்முடைய ஆகாரத்தை ஏன் போடவேண்டும் என்று சிலர் கேள்வி கேட்கிறார்கள். நம்மிடத்திலுள்ளது நமக்கே உரியது. இதை நாமே அனுபவிக்கவேண்டும் என்பது இவர்களுடைய விவாதம். ஆனால் நம்மிடத்தில் கஞ்சத்தனம் இருக்கக்கூடாது என்று சாலொமோன் சொல்லுகிறார். இதற்கு மேகத்தையும் மழையையும் ஓர் நல்ல எடுத்துக்காட்டாகச் சொல்லுகிறார்.

மேகம் பட்சபாதம் பார்ப்பதில்லை. அது எல்லோருக்கும் மழையைப் பெய்கிறது. மேகங்கள் நிறைந்திருந்தால், பூமியின்மேல் மழை பெய்யும். மழையைத்தானே வைத்துக்கொள்வேனென்று மேகம் பிடிவாதமாயிராது. நிலம் காய்ந்திருக்கும்போது, மேகம் மழையைத் தருகிறது. வானத்திலிருந்து மழை பெய்கிறது. வறண்ட பூமியின்மீது மழை பெய்து, நிலத்தை செழிப்பாக்குகிறது. நாமும் மேகத்தைப்போல, நம்மிடத்திலுள்ளதை தரித்திரருக்குப் பகிர்ந்து கொடுக்கவேண்டும்.

மேகம் வானத்திலிருந்தாலும், தனக்குக் கீழே உள்ள பூமியின் தேவையை நோக்கிப் பார்க்கிறது. நாமும் மேகத்தைப்போல சமுதாயத்திலே உயர்ந்த நிலையிலிருந்தாலும், நம்மைவிட தாழ்ந்த நிலையிலுள்ள தரித்திரரை கண்ணோக்கிப் பார்க்கவேண்டும். பூமியிலுள்ள மனுஷர்களெல்லாமே நம்முடைய எலும்பில் எலும்பாகயிருக்கிறவர்கள். அவர்களெல்லோருமே நம்மைப்போல தேவசாயலாக சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு உதவி தேவைப்படும்போது, நாம் உதவிசெய்யாமலிருப்பது நல்லதல்ல. கஞ்சத்தனம் கர்த்தருக்கு விரோதமான சுபாவம். நம்முடைய கர்த்தர் தயாளகுணமுள்ளவர். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும் தயாளகுணமுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

ஒரு சிலர் தங்களைப் பார்க்கும்போது, தங்களுடைய இயலாமையை மாத்திரமே நோக்கிப் பார்ப்பார்கள். தங்களிடத்தில் ஒன்றுமில்லை என்றும், தங்களால் யாருக்கும் உதவிசெய்யமுடியாது என்றும் நினைப்பார்கள். பெரிய ஐசுவரியவான்களால் மாத்திரமே பிறருக்கு உதவிசெய்ய முடியுமென்றும், தங்களால் அவர்களைப்போல பிறருக்கு உதவிசெய்ய முடியாது என்றும் நினைத்து, யாருக்கும் ஒரு உதவியும் செய்யாமல் சும்மாயிருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் மற்றவர்களைப் பார்த்து சோர்ந்துபோகிறார்கள்.

சாலொமோன் ஒரு உதவியும் செய்யாமல் சும்மாயிருக்கிறவர்களுக்கும் புத்திசொல்லுகிறார். மரமானது விழுந்த இடத்திலேயே கிடக்கும். அது தெற்கே விழுந்தாலும், வடக்கே விழுந்தாலும், அது எந்த இடத்தில் விழுந்ததோ, அந்த இடத்தில்தான் கிடக்கும். அந்த மரம் யாருக்குரியதோ அவருக்கு பிரயோஜனமாய் அங்கேயிருக்கும். மரம் கீழே விழுந்தவுடன் எழுந்து எங்கும் ஓடிப்போவதில்லை. அது தன்னை வெட்டியவனுக்கு பிரயோஜனமாக அங்கேயே விழுந்து கிடக்கும்.

நாமும் விழுந்த இடத்திலேயே கிடக்கிற மரத்தைப்போல, எந்த ஸ்தலத்திலிருக்கிறோமோ, அந்த ஸ்தலத்திலுள்ளவர்களுக்கு ஆசீர்வாதமாயும், உதவியாயும் இருக்கவேண்டும். நாம் இருக்கிற சமுதாயத்தில், ஊரில் நாம் பிறருக்கு உதவி செய்யவேண்டும். நம்மால் பல ஊர்களுக்கும் சென்று, அநேகருக்கு உதவி செய்ய முடியாமல் போனாலும், நாம் இருக்கிற ஊரில், நாம் இருக்கிற இடத்தில், நாம் பிறருக்கு உதவியாயிருக்கவேண்டும்.

தேவன் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு விதமாய் ஆசீர்வதிக்கிறார். ஒவ்வொரு ஸ்தலத்தில் ஸ்தாபிக்கிறார். தேவனுடைய சித்தத்தின் பிரகாரம், நாம் நம்முடைய ஊரில், நம்முடைய குடும்பத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறோம். நாம் எங்கு இருக்கிறோம் என்பது முக்கியமல்ல. நாம் இருக்கிற இடத்தில் பிறருக்கு பிரயோஜனமாயிருக்கிறோமா என்பதே முக்கியம். பிறருக்கு நன்மை செய்ய வேண்டும் என்னும் சிந்தனை நம்முடைய இருதயத்திலிருக்க வேண்டும். அப்போதுதான் நம்மால் பிறருக்கு மனப்பூர்வமாயும், சந்தோஷமாயும் உதவிபுரியமுடியும்.

நாம் எங்கிருந்தாலும் அங்கு நன்மை செய்யக் கற்றுக்கொள்ளவேண்டும். நன்மை செய்யவேண்டும் என்னும் மனது நமக்கு இருந்தால், நம்மால் நிச்சயமாகவே நன்மை செய்ய முடியும். நாம் எந்த ஸ்தலத்திலிருந்தாலும், அந்த ஸ்தலத்தில் நம்மால் செய்யக்கூடிய நன்மை ஏதாவது உண்டா என்று தேடிப்பார்க்கவேண்டும். அந்த நன்மையைச் செய்ய பிரயாசப்படவேண்டும்.

காற்று
பிர 11:4

பிர 11:4. காற்றைக் கவனிக்கிறவன் விதைக்க மாட்டான்; மேகங்களை நோக்குகிறவன் அறுக்கமாட்டான்.

ஒரு சிலர் யாருக்கும் எந்த உதவியும் செய்யமாட்டார்கள். பிறருக்கு உதவிசெய்யாமலிருப்பதற்கு அநேகக் காரணங்களைச் சொல்லுவார்கள். பிறருக்கு உதவி செய்வதினால் தங்களுக்கு பெருமையும், ஆணவமும் வந்துவிடும் என்று பயப்படுவார்கள். பரிசேயர்கள் தங்கள் சுயவிளம்பரத்திற்காக உதவிசெய்வார்கள். தங்களுக்கும் பரிசேயருடைய குணம் வந்துவிடும் என்று பயப்படுவார்கள்.

தங்களுக்கு ஏராளமான செலவுகள் உண்டு என்றும், தங்களிடத்திலுள்ள பணம் அதற்கே போதாது என்றும் சொல்லி, யாருக்கும் உதவி செய்யமாட்டார்கள். தாங்கள் தேசத்திற்கு வரி செலுத்துவதாகவும், தங்கள் அரசாங்கமே ஏராளமான ஜனங்களுக்கு நன்மை செய்கிறது என்றும், இதற்குமேல் தாங்கள் ஏன் உதவி செய்யவேண்டும் என்று இவர்கள் கேள்வி கேட்பார்கள். இப்படிப்பட்ட சாக்குபோக்குகளை இவர்கள் யோசித்துப் பார்ப்பார்கள். பிறருக்கு உதவிசெய்யாமலிருப்பதற்கு என்னென்ன காரணங்களையெல்லாம் சொல்ல முடியுமோ அதையெல்லாம் சொல்லுவார்கள்.

சாலொமோன் இப்படிப்பட்ட ஜனங்களைப்பற்றிச் சொல்லும்போது, இவர்கள் காற்றைக் கவனிக்கிறவர்கள் என்றும், மேகங்களை நோக்குகிறவர்கள் என்றும் சொல்லுகிறார். காற்றை கவனிக்கிறவன் விதைக்கமாட்டான். மேகங்களை நோக்குகிறவன் அறுக்கமாட்டான். விதைப்பது என்பது நன்மை செய்வதற்கு சமம். அறுப்பது என்பது நன்மையைப் பெற்றுக்கொள்வதற்கு சமம். இவர்கள் பிறருக்கு நன்மையும் செய்யமாட்டார்கள். இவர்கள் தங்களுக்கு பெற்றுக்கொள்ளமாட்டார்கள்.

நமக்கு பல பிரச்சனைகள் இருக்கலாம். பிறருக்கு உதவி செய்யக்கூடிய சாதகமான சூழ்நிலைகள் நம்மிடத்தில் இல்லாமல் போகலாம். நாம் பிரச்சனைகளை பெரிதுபடுத்தக்கூடாது. சிறிய பிரச்சனைகளைக் கூட பெரிதாக்கிவிடக்கூடாது. இல்லாத பிரச்சனைகளையும் இருப்பதாக நினைத்துக்கொள்ளக்கூடாது. நாம் விதைக்கவேண்டுமென்றால் நிலத்தைத்தான் பார்க்கவேண்டும். காற்றைப் பார்க்கக்கூடாது. காற்றையே கவனித்துக்கொண்டிருந்தால் நாம் ஒருபோதும் விதைக்கமாட்டோம்.

நாம் பிரச்சனைகளை மாத்திரமே கவனித்துக்கொண்டிருந்தால், ஒரு வேலையும் செய்யமாட்டோம். பிறருக்கு உதவி செய்ய முயற்சி பண்ணமாட்டோம். ஒவ்வொரு முறையும் காற்று அடிக்கும்போதும், விதைக்காமல் இருப்போமென்றால், நம்மால் விதைக்கவே முடியாது. அதுபோல மேகங்களையே பார்த்துக் கொண்டிருப்போமென்றால், நம்மால் அறுவடை பண்ணவே முடியாது. விதைக்காமல் அறுவடை செய்யவே முடியாது. விதைத்த பின்பு அறுவடை செய்யவில்லையென்றால் நமக்கு ஒரு பயனும் இராது. நாம் அறுக்கிறவர்களாய் விதைக்கவேண்டும். கண்ணீரோடு விதைக்கிறவர்கள் மாத்திரமே கெம்பீரத்தோடு அறுவடை செய்வார்கள்.

தேவனுடைய செயல்கள்
பிர 11:5

பிர 11:5. ஆவியின் வழி இன்னதென்றும், கர்ப்பவதியின் வயிற்றில் எலும்புகள் உருவாகும் விதம் இன்னதென்றும் நீ அறியாதிருக்கிறது போலவே, எல்லாவற்றையும் செய்கிற தேவனுடைய செயல்களையும் நீ அறியாய்.

பிறருக்கு உதவி செய்ய தங்களுக்கு விருப்பம் இருப்பதாகவும், ஆனால் அதை எந்த வழியில் செய்வதென்று தங்களுக்குத் தெரியவில்லை என்றும் சிலர் சொல்லுகிறார்கள். சாலொமோன் இவர்களுக்கும் பதில் சொல்லுகிறார். "எல்லாவற்றையும் செய்கிற தேவனுடைய செயல்களையும் நீ அறியாய்" என்பதே சாலொமோன் இவர்களுக்குச் சொல்லும் பிரதியுத்தரம். மனுஷனுக்கு அநேக காரியங்கள் தெரியாது. மனுஷனால் அநேக காரியங்களைத் தெரிந்துகொள்ளவும் முடியாது. மனுஷன் ஞானத்தில் குறைவுள்ளவன். மனுஷனுக்கு தேவனுடைய வாக்குத்தத்தமும் தெரியாது, அதை அவர் எப்படி நிறைவேற்றுகிறார் என்பதும் தெரியாது. தேவனே எல்லாவற்றையும் செய்கிறார். ஆனாலும் தேவனுடைய செயல்களை மனுஷனால் அறியமுடியாது.

மனுஷனுடைய அறியாமையை சாலொமோன் இரண்டு எடுத்துக்காட்டுக்களால் விவரிக்கிறார். அவையாவன :

1. நமக்கு ஆவியின் வழி இன்னதென்று தெரியாது. ஆவி என்பதற்கு காற்று என்று பொதுவாக பொருள் சொல்லலாம். காற்று எந்த திசையில் அடிக்கிறது என்பதும், எந்த திசையிலிருந்து வருகிறது என்பதும், எந்த திசையை நோக்கிப் போகிறது என்பதும் நமக்குத் தெரியாது. ஆனாலும் நாம் காற்றை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். கடலில் பிரயாணம் பண்ணுகிறவர்கள் காற்று அடிக்கிற திசைக்கேற்ப பாய்மரத்தை விரித்துக் கட்டுகிறார்கள். தங்களுக்கு சாதகமான காற்று அடிப்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள். அதுபோலவே நாமும் நம்முடைய கடமைகளைச் செய்ய ஆயத்தமாயிருக்கவேண்டும். பிறருக்கு உதவி செய்ய ஆயத்தமாயிருக்கவேண்டும். நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிற ஆசீர்வாத வேளை வரும் என்று எதிர்பார்த்து, பிறருக்கு உதவிபுரியவேண்டும்.

2. கர்ப்பவதியின் வயிற்றில் எலும்புகள் உருவாகும் விதம் இன்னதென்று நாம் அறியாதிருக்கிறோம். மனுஷருடைய ஆத்துமாவைப்பற்றி நம்மால் இன்னும் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. தேவன் நம்மை சிருஷ்டித்திருக்கிறார் என்பதும், நம்முடைய நாசியிலே ஜீவசுவாசத்தை ஊதி நம்மை ஜீவாத்துமாவாக வைத்திருக்கிறார் என்பதும் நமக்குத் தெரியும். அவர் நமக்கு ஆத்துமாவைக் கொடுத்திருக்கிறார் என்பதும் தெரியும். ஆனால் நம்முடைய சரீரத்திற்குள், நம்முடைய ஆத்துமா எவ்வாறு பிரவேசித்தது என்பது நமக்குத் தெரியவில்லை. நாம் எப்படி இயங்குகிறோம் என்பதும், நம்முடைய உயிர் எப்படி இயங்குகிறது என்பதும், நம்முடைய ஆத்துமா நமக்குள் எப்படி கிரியை நடப்பிக்கிறது என்பதும் நமக்குத் தெரியவில்லை. இவை நம்மால் அறிந்துகொள்ள முடியாத இரகசியமாயிருக்கிறது.

நமக்குள்ளிருக்கும் நம்முடைய ஆத்துமாவே நாம் அறிந்துகொள்ள முடியாத இரகசியமாயிருக்கிறது. நம்முடைய ஆத்துமாவையே நம்மால் புரிந்துகொள்ள முடியாமலிருக்கும்போது எல்லாவற்றையும் செய்கிற தேவனுடைய செயல்களை நம்மால் அறிந்துகொள்ளவே முடியாது.

கர்ப்பவதியின் வயிற்றில் எலும்புகள் உருவாகிறது. அது உருவாகும் விதம் இன்னதென்று நாம் அறியாதிருக்கிறோம். ஆனால் கர்ப்பத்தில் கரு உற்பத்தியாகிறது. தேவனுடைய அற்புதமான கிருபையினால், கர்ப்பவதியின் வயிற்றில் கரு உருவேற்கப்படுகிறது. அதை விவரிக்க நம்மால் முடியவில்லை. கர்ப்பவதியின் வயிற்றுக்குள் சிசுவின் சரீரமும் ஆத்துமாவும் எவ்வாறு ஒன்றுசேருகிறது என்பதையும் நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. அந்த இரகசியத்தை நாம் புரிந்து கொள்ளாவிட்டாலும், கர்ப்பவதியின் வயிற்றிலிருந்து பிறக்கும் குழந்தையை அங்கீகரிக்கிறோம். குழந்தையின் மூலமாய் வருகிற சந்தோஷத்தையும், ஆசீர்வாதத்தையும் அனுபவிக்கிறோம்.

தேவன் பெரியவர். அவர் நமக்காக பெரிய காரியங்களைச் செய்கிறார். கர்த்தரை விசுவாசிக்கிற நாம், கர்த்தருக்காக கிரியை செய்யவேண்டும். ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான். கர்த்தர் நமக்கு மிகப்பெரிய உதவிகளைச் செய்திருக்கும்போது, நாம் ஏழைகளுக்கு சிறிய உதவிகளையாவது செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கிறார். நாம் பிறருக்கு உதவிபுரியும்போது அதை சந்தோஷமாய்ச் செய்யவேண்டும். உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.

அதுவோ, இதுவோ
பிர 11:6

பிர 11:6. காலையிலே உன் விதையை விதை; மாலையிலே உன் கையை நெகிழவிடாதே; அதுவோ, இதுவோ, எது வாய்க்குமோ என்றும், இரண்டும் சரியாய்ப் பயன்படுமோ என்றும் நீ அறியாயே.

நாங்கள் ஏழைக்கு உதவி செய்கிறோம் என்றும், அதினால் தங்களுக்கு ஒரு நன்மையும் உண்டாகவில்லை என்றும் ஒரு சிலர் வருத்தத்தோடு சொல்லுகிறார்கள். நாங்கள் நீண்டகாலமாக தரித்திரருக்கு தொடர்ந்து உதவிசெய்து கொண்டேயிருக்கிறோம். ஆனாலும் எங்களால் அதற்குரிய பிரதிபலனை இதுவரையிலும் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்று ஒரு சிலர் வேதனையோடு சொல்லுகிறார்கள். சாலொமோன் இப்படி சொல்லுகிறவர்களுக்கும் பிரதியுத்தரம் சொல்லுகிறார்.

உதவி செய்ததற்கான பலனை இன்னும் பெற்றுக்கொள்ளாவிட்டாலும், நாம் உதவி செய்வதை நிறுத்திவிடக்கூடாது. தொடர்ந்து உதவிசெய்து கொண்டேயிருக்கவேண்டும். "காலையிலே உன் விதையை விதை, மாலையிலே உன் கையை நெகிழவிடாதே" என்று சாலொமோன் ஆலோசனை சொல்லுகிறார். காலையிலே என்பது நம்முடைய இளவயதையும், வாலிபவயதையும் குறிக்கிற வார்த்தை. மாலையிலே என்பது நம்முடைய முதிர்வயதைக் குறிக்கிற வார்த்தை.

நம்முடைய வாலிப நாட்களிலும் நாம் நன்மை செய்யவேண்டும். வாலிபர்களிடம் செல்வம் அதிகமாயிராது. ஆனால் சரீர பெலன் மிகுதியாயிருக்கும். வாலிபர்களிடம் செல்வம் குறைவாகயிருந்தாலும், அவர்களும் உதவி செய்யவேண்டும். முதிர்வயதுள்ளவர்களிடத்தில் சரீர பெலனிருக்காது. ஒரு வேளை அவர்களிடத்தில் ஐசுவரியத்தின் பெலனிருக்கும். முதிர்வயதுள்ளவர்களும் தங்களுடைய கைகளை நெகிழவிடாமல், தங்களால் முடிந்த உதவிகளைச் செய்யவேண்டும்.

மனுஷருக்கு ஒன்றும் தெரியாது என்று சாலொமோன் சொல்லுகிறார். பிறருக்கு உதவிசெய்வதினால் நமக்கு நன்மை உண்டாகும் என்பதை சாலொமோன் அறிந்திருக்கிறார். ஆனால் எந்த உதவியை செய்யவேண்டும் என்று நமக்குத் தெளிவாகத் தெரியவில்லை. ஒரு வேளை ஒரு உதவியினால் நமக்கு நன்மை வராவிட்டாலும், வேறொரு உதவியினால் சீக்கிரத்தில் நன்மை வரலாம். ஒரு வேளை நாம் செய்கிற இரண்டு உதவிகளினாலும் நமக்கு நன்மை வரலாம். சாலொமோன் இது பற்றிச் சொல்லும்போது, "அதுவோ இதுவோ எது வாய்க்குமோ என்றும், இரண்டும் சரியாய்ப் பயன்படுமோ என்றும் நீ அறியாயே" என்று சொல்லுகிறார்.

வெளிச்சம் இன்பமும்
பிர 11:7,8

பிர 11:7. வெளிச்சம் இன்பமும், சூரியனைக் காண்பது கண்களுக்குப் பிரியமுமாமே.

பிர 11:8. மனுஷன் அநேக வருஷம் ஜீவித்து, அவைகளிலெல்லாம் மகிழ்ச்சியாயிருந்தாலும், அவன் இருளின் நாட்களையும் நினைக்க வேண்டும்; அவைகள் அநேகமாயிருக்கும்; வந்து சம்பவிப்பதெல்லாம் மாயையே.

நம்முடைய ஜீவியத்தை நாம் எவ்வாறு சந்தோஷமாய் ஜீவிப்பது என்று சாலொமோன் இதுவரையிலும் நல்ல ஆலோசனைகளைச் சொன்னார். இப்போதோ நாம் சந்தோஷமாய் எவ்வாறு மரிப்பது என்பதற்கும் சில ஆலோசனைகளைச் சொல்லுகிறார். இந்தச் சத்தியத்தை உபதேசம்பண்ணும்போது சாலொமோன் தன்னையே ஒரு எடுத்துக்காட்டாக பாவிக்கிறார். சாலொமோனுக்கு இப்போது வயதாயிற்று. அவர் முதிர்வயதிலிருக்கிறார். மரிப்பதற்கு ஆயத்தமாகயிருக்கிறார்.

வெளிச்சம் இன்பமாயிருக்கிறது. சூரியனுடைய வெளிச்சமும் நம்முடைய மனதிற்கு இன்பமாயிருக்கிறது. அதே வேளையில் சூரியனைக் காண்பது கண்களுக்குப் பிரியமாகவும் இருக்கிறது. வெளிச்சத்தைக் காண்பது எப்போதுமே நல்லதுதான். சூரிய வெளிச்சத்தினால் நாம் பல காரியங்களை பிரத்தியட்சமாய்த் தரிசிக்கிறோம். இதனால் நம்முடைய மனதிற்கு அதிக சந்தோஷமுண்டாகிறது. நம்முடைய ஜீவியம் இன்பமாயும், பிரியமாயும் இருக்கவேண்டும். நம்முடைய ஜீவியத்தைப்போலவே எல்லோரும் இன்பமாயும் பிரியமாயும் ஜீவிக்கவேண்டும். மனுஷன் இன்பமாய் ஜீவிப்பதையும், தன்னுடைய ஜீவனில் பிரியமாயிருப்பதையும் யாரும் தடைபண்ணக்கூடாது.

மனுஷன் தன்னுடைய ஜீவனை விரும்புவதுபோல, தன்னுடைய மரணத்தையும் விரும்பவேண்டும். மனுஷன் அநேக வருஷம் ஜீவித்து அவைகளிலெல்லாம் மகிழ்ச்சியாயிருக்கிறான். அந்த மகிழ்ச்சியில் அவன் தன்னுடைய மரணநாளையும் நினைத்துப் பார்க்கவேண்டும். மனுஷனுடைய ஜீவியகாலம் வெளிச்சத்தின் காலம். மரணநாட்களோ இருளின் நாட்கள்.

தேவன் தம்முடைய கிருபையினால் மனுஷனுக்கு நீண்ட ஆயுசைக் கொடுக்கிறார். நல்ல ஆரோக்கியத்தைக் கொடுக்கிறார். அதை மனுஷன் நன்றாய் அனுபவிக்கிறான். அவன் அநேக வருஷம் ஜீவித்து, தன்னுடைய ஜீவநாட்களில் மகிழ்ச்சியாயிருக்கிறான். ஒரு சிலர் ஜீவனை மாத்திரமே நினைப்பார்கள். மரணத்தைப்பற்றி நினைத்துப் பார்க்கமாட்டார்கள். மரணத்தை நினைத்தாலே பயம் வந்துவிடும். கர்த்தருடைய பிள்ளைகள் மரணத்தை நினைத்துப் பயப்படக்கூடாது. நாம் இந்தப் பிரபஞ்சத்தில் பரதேசிகளைப்போல சிறிது காலம் தங்கியிருக்கிறோம். நம்முடைய நித்திய வாசஸ்தலம் பரலோகத்திலிருக்கிறது. மரித்த பின்புதான் பரலோகத்திற்குப் போகமுடியும். பரலோகமே நம்முடைய பாக்கியம். ஆகையினால், மரணத்தைப்பற்றி நினைக்கும்போது, அது பரலோகத்திற்குப் போவதற்கு இடையிலுள்ள ஒரு காலம் என்றுதான் நினைக்கவேண்டும்.

கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்குத்தான் பரலோக ஜீவியம் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. பாவிகளுக்கு பரலோகத்தில் பங்கில்லை. நாம் இந்தப் பிரபஞ்சத்தில் ஜீவிக்கிற நாட்களில், கர்த்தருக்குப் பிரியமாக ஜீவித்து, பரலோகத்திற்குள் பிரவேசிக்க பாத்திரவான்களாகவேண்டும். இந்தப் பிரபஞ்சத்தில் நாம் அநேக வருஷம் ஜீவிப்பதுபோல, நாம் மரித்த பின்பும் அநேக வருஷம் ஜீவிப்போம். நித்திய காலமாய் ஜீவிப்போம். பாவத்தில் மரிக்கிறவர்களுக்கு நித்திய ஜீவனில்லை. அவர்களுக்கு நித்திய மரணமே உண்டாகும். அவர்களுடைய மரணநாட்கள் அநேகமாயிருக்கும். ஆகையினால் இந்தப் பிரபஞ்சத்தில் நாம் சந்தோஷமாய் ஜீவித்தாலும், நம்முடைய மரணநாட்களையும் நினைத்துப் பார்த்து, கர்த்தருக்குப் பயந்து, கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும்.

வாலிபனே
பிர 11:9,10

பிர 11:9. வாலிபனே! உன் இளமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்; உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட; ஆனாலும் இவையெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார் என்று அறி.

பிர 11:10. நீ உன் இருதயத்திலிருந்து சஞ்சலத்தையும், உன் மாம்சத்திலிருந்து தீங்கையும் நீக்கிப்போடு; இளவயதும் வாலிபமும் மாயையே.

எல்லாம் மாயை என்பதுதான் சாலொமோனின் உபதேசம். ஆகையினால்தான் நாம் இந்தப் பிரபஞ்சத்தில் எத்தனை வருஷம் ஜீவித்தாலும், நம்முடைய இருளின் நாட்களாகிய மரணத்தையும் நினைக்கவேண்டும் என்று சாலொமோன் சொல்லுகிறார். எல்லாம் மாயை என்று சொன்னவர், இப்போது, "வாலிபனே, உன் இளமையிலே சந்தோஷப்படு" என்று சொல்லுகிறார். இந்த வாக்கியம் அவருடைய உபதேசத்திற்கு முரண்பட்டதுபோலத் தோன்றுகிறது.

வாலிபனுடைய இளமையைப்பற்றிச் சொல்லிவிட்டு, "உன் வாலிபநாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்" என்றும், "உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட" என்றும் சொல்லுகிறார். எல்லாம் மாயை என்று சொன்னவர், இப்போது எல்லாவற்றையும் அனுபவி என்று சொல்லுகிறார். சாலொமோனுடைய வாக்கியம் வெளிப்பார்வைக்கு முரண்பட்டிருப்பதுபோல தோன்றினாலும், அவருடைய உபதேசத்தில் மாற்றம் எதுவுமில்லை. வாழ்க்கையை சந்தோஷமாய் அனுபவி என்று சொன்னவர், உடனே, "ஆனாலும் இவையெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார் என்று அறி" என்றும் சொல்லுகிறார்.

நமக்கு எச்சரிப்பின் வார்த்தையையும், புத்திமதியையும் கொடுக்கிறார். வாலிப வயதிலுள்ளவர்கள் தங்கள் சரீரத்தின் நன்மையை மாத்திரம் பார்க்கக்கூடாது. அவர்களுடைய ஆத்துமாவையும் நோக்கிப் பார்க்கவேண்டும். வாலிபரின் மனதிலே பெருமையிருக்கக்கூடாது. மாம்சத்தின் இச்சைகளை நிறைவேற்றவேண்டும் என்று ஆசைப்படக்கூடாது. எளிதில் கோபப்படக்கூடாது. "நீ உன் இருதயத்திலிருந்து சஞ்சலத்தையும், உன் மாம்சத்திலிருந்து தீங்கையும் நீக்கிப்போடு" என்று சாலொமோன் வாலிபரை எச்சரிக்கிறார்.

சஞ்சலம் மனதில் உண்டாகும். நம்முடைய மனது தெளிவாகயில்லையென்றால் அது சஞ்சலத்தோடிருக்கும். வாலிபர்கள் பொறுமையில்லாமலிருப்பார்கள். அவர்களால் தங்களுடைய உணர்ச்சிகளை அடக்கி ஆளுகை செய்ய முடியாது. வாலிபருக்கும் மனத்தாழ்மைக்கும் இடைவெளி வெகுதூரமாயிருக்கும். அவர்களின் இருதயம் பெருமையோடிருக்கும். எல்லாவற்றிற்கும் எதிர்த்து நிற்பார்கள். விவாதம் பண்ணுவார்கள். முடிவில் வேதனைப்படுவார்கள். சாலொமோன் வாலிபருக்கு ஆலோசனை சொல்லும்போது, அவர்கள் தங்கள் இருதயத்திலிருந்து சஞ்சலத்தை நீக்கிப்போடவேண்டுமென்று சொல்லுகிறார். சஞ்சலமில்லாத இருதயமே ஆரோக்கியமான இருதயம்.

வாலிபர்கள் தங்கள் சரீரத்தையும் சுத்தமாய்க் காத்துக்கொள்ளவேண்டும். வாலிபர்கள் மாம்சத்தின் இச்சைகளுக்குக் கீழ்ப்படிந்து தங்கள் சரீரத்தை கெடுத்துப் போடக்கூடாது. நம்முடைய சரீரத்தின் அவயவங்கள் அநீதியின் ஆயுதங்களாகயிருக்கக் கூடாது. நம்முடைய மாம்சத்திலிருந்து தீங்கை நீக்கிப்போடவேண்டும்.

சாலொமோன் தன்னுடைய பிரசங்கத்தின் முடிவில் "இளவயதும் வாலிபமும் மாயையே" என்று சொல்லி முடிக்கிறார். சாலொமோனுடைய பார்வையில் எல்லாம் மாயையாயிருக்கிறது. உலகப்பிரகாரமான காரியங்கள் நமக்கு மெய்யான சந்தோஷத்தையோ, சமாதானத்தையோ தராது.

இப்பிரபஞ்சத்தின் காரியங்கள் எதுவுமே நித்தியமானதல்ல. எல்லாம் அநித்தியம். எல்லாம் குறைவுள்ளது. ஒரு மனுஷன் அநேக வருஷம் ஜீவித்து, அவைகளில் எல்லாம் மகிழ்ச்சியாயிருந்தாலும், அவனுடைய ஆயுசுகாலம் மாயையாகவே இருக்கிறது. வாலிபர்கள் தங்கள் இளமையிலே சந்தோஷப்பட்டு, தங்கள் நெஞ்சின் வழிகளிலும், தங்கள் கண்களின் காட்சிகளிலும் நடந்தாலும், அவர்களுடைய இளவயதும் வாலிபமும் மாயையாகவே இருக்கிறது.

இளவயதின் சந்தோஷங்களும், வாலிபவயதின் வேகமும் சீக்கிரத்தில் கடந்துபோகும். புல் உலருவதுபோலவும், பூ உதிர்வது போலவும் வாலிபம் உதிர்ந்து போகும். பூ பார்ப்பதற்கு அழகாகயிருக்கும். விருட்சத்தில் எவ்வளவுதான் பூ இருந்தாலும், அதன் கனிதான் நமக்கு பிரயோஜனமாயிருக்கும். அதுவும் நற்கனியாயிருக்கவேண்டும். கனிகொடுக்கிற மரமே நல்ல மரம். அதிகமாக, பூக்கிற மரம் அழகான மரமாகயிருக்கலாம். ஆனால் அது ஒரு மாயையான மரம். அழகு மாயை. கனி கொடுத்தால்தான் அது பிரயோஜனமுள்ள மரம். நம்முடைய ஜீவியம் அழகான ஜீவியமாகயிருந்தால் மாத்திரம் போதாது. அது பிரயோஜனமுள்ள ஜீவியமாகவும் இருக்கவேண்டும். நாம் கர்த்தருக்குப் பிரியமானவர்களாகவும் இருக்க வேண்டும். பிரயோஜனமானவர்களாகவும் இருக்கவேண்டும்.

12 அதிகாரம்

சாலொமோன் ஞானமும், தெய்வபக்தியுமுள்ள பிரசங்கியார். தன்னுடைய பிரசங்கச் செய்தியின் முடிவுரையாக, பிரசங்கத்தைக் கேட்போரின் மனதில் பதியும் வண்ணமாக, தெளிவாகவும், உறுதியாகவும், இறுதியாகவும், பேசுகிறார். முதலாவதாக வாலிபருக்கு பிரயோஜனமுள்ள ஆலோசனைகளைச் சொல்லுகிறார். வாலிபர்கள் தங்கள் வாலிபபிராயத்திலேயே கர்த்தரை நினைத்து, பயபக்தியாய் ஜீவிக்கவேண்டும். வயது முதிர்ந்த பின்பு கர்த்தரை ஆராதிக்கலாம் என்று காலத்தைக் கடத்தக்கூடாது (பிர 12:1-7).

மாயை, மாயை, எல்லாம் மாயை என்பது சாலொமோனுடைய பொதுவான உபதேசம். இந்தச் சத்தியத்தை சாலொமோன் தன்னுடைய பிரசங்கச் செய்தியின் முடிவிலும் சொல்லுகிறார் (பிர 12:8). இந்தப் புஸ்தகத்திலும், மற்ற புஸ்தகங்களிலும், சாலொமோன் எழுதியுள்ள உபதேசங்களை, இங்கு சுருக்கமாகச் சொல்லுகிறார். சாலொமோனுடைய உபதேசங்கள் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு மிகவும் பிரயோஜனமுள்ளவை (பிர 12:9-12). சாலொமோன் தன்னுடைய பிரசங்கச் செய்தியின் முடிவுரையாக, காரியத்தின் கடைத்தொகையைப்பற்றிச் சொல்லுகிறார். தேவனுக்குப் பயந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளவேண்டும். இதுவே எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை. தேவன் ஒவ்வொரு காரியத்தையும் தம்முடைய நியாயத்திலே கொண்டு வருவார் (பிர 12:13,14).

வாலிபப்பிராயம்
பிர 12:1

பிர 12:1. நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை; தீங்கு நாட்கள் வராததற்கு முன்னும், எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராததற்கு முன்னும்,

வாலிபர்கள் தேவனைப்பற்றி நினைக்கவேண்டும். தேவனிடத்தில் பயபக்தியாய் ஜீவிக்கவேண்டும். அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளவேண்டும். தேவன் தங்களுக்கு நியமித்திருக்கிற ஆன்மீக கடமைகள் எல்லாவற்றையும் நேர்த்தியாய்ச் செய்யவேண்டும். அவர்கள் தங்கள் வாலிபபிராயத்திலிருக்கும்போது, வாலிபத்தின் மாயையில் சிக்கிக்கொள்ளக்கூடாது. ஆகையினால் சாலொமோன் வாலிபருக்கு ஆலோசனை சொல்லும்போது, "நீ உன் வாலிபபிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை" என்று சொல்லுகிறார்.

இந்த உலகத்தில் நம்மைச் சுற்றிலும் ஏராளமான காரியங்கள் நடைபெறுகிறது. அவை நம்முடைய மனதை மயக்குகிறது. நம்முடைய பாதைகளை சறுக்கலான பாதைகளாக மாற்றுகிறது. உலகத்தின் ஆசாபாசங்களினால் நம்முடைய ஆத்துமாவுக்கு, சந்தோஷமோ, சமாதானமோ, திருப்தியோ உண்டாகப் போவதில்லை. நம்முடைய ஆசீர்வாதங்களுக்காக, நாம் இந்த உலகத்தை நினைத்துப் பார்ப்பதற்குப் பதிலாக, நம்முடைய சிருஷ்டிகரை நினைத்துப் பார்க்கவேண்டும். இந்த உலகத்தின் மாயைகளுக்கு நம்மை விலக்கிக் காத்துக்கொள்ளவேண்டும்.

நம்முடைய தேவனாகிய கர்த்தர் பரமவைத்தியராகயிருக்கிறார். அவருக்கு நம்முடைய வியாதிகளைப்பற்றியும் தெரியும். வியாதிகளுக்கு எப்படிப்பட்ட மருந்தைக் கொடுக்கவேண்டும் என்பதும் தெரியும். வாலிபத்தின் வியாதிகளில் சிக்கிக் கொண்டிருக்கிறவர்களுக்கு, நம்முடைய பரமவைத்தியர் மாற்று மருந்தைக் கொடுக்கிறார். இந்த மருந்து அவர்களுடைய மாயையான பார்வையை குணப்படுத்தும். வாலிபத்தின் மாயையை நீக்கிப்போடும். வாலிபத்தின் நோய் மறுபடியும் வந்து தாக்காதவாறு பாதுகாக்கும். இவையெல்லாவற்றிற்கும் ஒரே மருந்து, "சிருஷ்டிகரை நினைப்பது" தான்.

தேவனே நம்முடைய சிருஷ்டிகர். அவரே நம்மை உண்டாக்கினவர். நம்மை நாமே உண்டாக்கிக்கொள்ளவில்லை. தேவன் நம்மை உண்டாக்கியிருப்பதினால், நம்மை ஆளுகை செய்கிற உரிமை அவருக்கு இருக்கிறது. தேவன் நம்மீது அதிகாரமுள்ளவர். தேவன் நம்முடைய சிருஷ்டிகராகயிருப்பதினால், நாம் அவருக்கு கனத்தையும், மகிமையையும், மேன்மையையும் செலுத்தவேண்டும்.

சாலொமோன், "உன் சிருஷ்டிகரை நினை" என்று சொல்லும்போது, "சிருஷ்டிகர்" என்னும் வார்த்தையை பன்மையில் பயன்படுத்துகிறார். யோபுவின் புஸ்தகத்தில் எலிகூ தேவனைப்பற்றிச் சொல்லும்போது, அவரை "சிருஷ்டி கர்த்தாவாகிய தேவன்" என்று பன்மைப்பொருளிலேயே சொல்லுகிறார்.

"பூமியின் மிருகங்களைப்பார்க்கிலும் எங்களைப் புத்திமான்களும், ஆகாசத்துப் பறவைகளைப்பார்க்கிலும் எங்களை ஞானவான்களுமாக்கி, என்னை உண்டாக்கினவரும், இரவிலும் கீதம்பாட அருள்செய்கிறவருமாகிய என் சிருஷ்டிகர்த்தாவாகிய தேவன் எங்கே என்று கேட்பவன் ஒருவனுமில்லை" (யோபு 35:10,11).

தேவன் மனுஷனை உண்டாக்கியபோது "நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக" (ஆதி 1:26) என்று தம்மை பன்மைப்பொருளிலேயே குறிப்பிட்டிருக்கிறார். தேவன் ஒருவரே. அவர் திரித்துவப் பண்பிலிருக்கிறவர். ஒரே தேவன் பிதாவாகவும், குமாரனாகவும், பரிசுத்த ஆவியானவராகவும் இருக்கிறார். தம்முடைய திரித்துவ பண்பை வெளிப்படுத்துவதற்காக, தேவன் தம்மை பன்மைப்பொருளில் அழைக்கிறார்.

வாலிபர்கள் தங்கள் வாலிப பிரயாசத்திலேயே தங்கள் சிருஷ்டிகரை நினைக்கவேண்டும். சிருஷ்டிகரை மறந்துவிடக்கூடாது. வாலிபத்தின் சோதனைகளுக்கு தங்களை விலக்கிக் காத்துக்கொள்ளவேண்டும். சிருஷ்டிகரை நினைப்பதினால் தங்களுக்கு வரக்கூடிய ஆசீர்வாதங்களை, தங்களுக்குப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளவேண்டும்.

முதிர்வயதுப் பிராயம்
பிர 12:2-7

பிர 12:2. சூரியனும், வெளிச்சமும், சந்திரனும், நட்சத்திரங்களும், அந்தகாரப்படாததற்குமுன்னும்,

பிர 12:3. மழைக்குப்பின் மேகங்கள் திரும்பத் திரும்ப வராததற்குமுன்னும், வீட்டுக் காவலாளிகள் தள்ளாடி, பெலசாலிகள் கூனிப்போய், ஏந்திரம் அரைக்கிறவர்கள் கொஞ்சமானதினால் ஓய்ந்து, பலகணிவழியாய்ப் பார்க்கிறவர்கள் இருண்டு போகிறதற்குமுன்னும்,

பிர 12:4. ஏந்திர சத்தம் தாழ்ந்ததினால் தெருவாசலின் கதவுகள் அடைபட்டு, குருவியின் சத்தத்துக்கும் எழுந்திருக்கவேண்டியதாகி, கீதவாத்தியக் கன்னிகைகளெல்லாம் அடங்கிப்போகாததற்குமுன்னும்,

பிர 12:5. மேட்டுக்காக அச்சமுண்டாகி, வழியிலே பயங்கள் தோன்றி, வாதுமைமரம் பூப்பூத்து, வெட்டுக்கிளியும் பாரமாகி, பசித்தீபனமும் அற்றுப்போகாததற்கு முன்னும், மனுஷன் தன் நித்திய வீட்டுக்குப் போகிறதினாலே, துக்கங் கொண்டாடுகிறவர்கள் வீதியிலே திரியாததற்குமுன்னும்,

பிர 12:6. வெள்ளிக்கயிறு கட்டுவிட்டு, பொற்கிண்ணி நசுங்கி, ஊற்றின் அருகே சால் உடைந்து, துரவண்டையில் உருளை நொறுங்கி,

பிர 12:7. இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததற்குமுன்னும், அவரை உன் வாலிபப்பிராயத்திலே நினை.

வாலிபர்கள் தங்கள் வாலிபப்பிராயத்தில் சிருஷ்டிகரை நினையாமல், தங்களுக்கு வயதான பின்பு அவரை நினைத்துக்கொள்ளலாம் என்று நினைக்கக்கூடாது. மனுஷனுக்குத் தீங்கு நாட்கள் வரும். அதற்கு முன்பாகவே வாலிபர்கள் கர்த்தரை நினைக்கவேண்டும். நம்முடைய ஆயுசுகாலம் எல்லாமே நமக்குப் பிரியமாயிராது. நம்முடைய வாலிபநாட்களில் நம்முடைய சரீரம் ஆரோக்கியமாயிருக்கும். சரீரத்தில் தெம்பும் பெலமும் இருக்கும். மாம்சத்தின் இச்சைகளை நிறைவேற்றக்கூடிய ஆசையும் இருக்கும். வயதான பின்பு சரீரத்தின் பெலன் நம்மைவிட்டு நீங்கிப்போகும். சரீரத்தில் வியாதியும் வேதனையும் வரும். அப்போது நம்முடைய ஆயுசுநாட்களே நமக்கு கசப்பாயிருக்கும். அது நமக்குப் பிரியமாயிருக்காது. அந்த வருஷங்கள் நமக்கு வருவதற்கு முன்பாக, நாம் நம்முடைய சிருஷ்டிகரை நினைக்கவேண்டும்.

வயதான காலத்தில் சரீர வியாதியும், வேதனையும் மரணமும் வரும். வியாதி நிரம்பிய வருஷங்கள் நமக்குப் பிரியமாயிருக்காது. நம்முடைய ஆயுசுநாளை நம்மால் சந்தோஷமாய் அனுபவிக்க முடியாது. நம்முடைய பெலமெல்லாம் நம்மைவிட்டு நீங்கிப்போகும். வருத்தமும் பிரயாசமும் நம்முடைய சரீரத்தில் தங்கியிருக்கும். நமக்கு இந்தப் பிரபஞ்சத்தில் பிரியமான ஜீவியம் இல்லாதபோது, பரலோகத்தை நோக்கிப் பார்ப்போம். பரலோக ஜீவனே நமக்கு மேன்மையானது என்று நினைத்து, அதற்காக காத்திருப்போம்.

நமக்கு முதிர்வயது வரும் முன்பாகவே, நம்முடைய வாலிபப்பிராயத்திலேயே, நம்முடைய சிருஷ்டிகரை நினைக்கவேண்டும் என்பதற்கு சாலொமோன் ஒரு சில காரணங்களைச் சொல்லுகிறார். நம்முடைய வாலிபத்தின் நாட்களை பிசாசுக்கு ஒப்புக்கொடுத்துவிட்டு, பிசாசுக்கு ஊழியம் செய்துவிட்டு, வயதான காலத்தில் கர்த்தரிடத்தில் திரும்பி வந்தால், நமக்கு ஒரு ஆசீர்வாதமும் கிடைக்காது. இது கரும்பு சாற்றை சாத்தானுக்குக் கொடுத்துவிட்டு, கரும்பு சக்கையை கர்த்தருக்குக் கொடுப்பதற்குச் சமமாயிருக்கும். நம்முடைய ஜீவியத்தில் முதன்மையானதைக் கர்த்தருக்குக் கொடுக்கவேண்டும். நமக்குப் பிரியமானதையும், நமக்குப் பிரயோஜனமானதையும் கர்த்தருக்குக் கொடுக்கவேண்டும். வாலிபநாட்களில் சாத்தானை ஆராதனை செய்துவிட்டு, வயதான நாட்களில் கர்த்தரிடத்தில் உதவி கேட்டு வருவது நல்லதல்ல.

நம்முடைய சிருஷ்டிகரை நாம் நினைக்கும்போது, நம்முடைய மனச்சாட்சி சுத்தமுள்ளதாயிருக்க வேண்டும். வாலிபநாட்களில் உலகப்பிரகாரமான காரியங்களைத் தேடாமல், கர்த்தரைத் தேடும்போது, கர்த்தர் நம்மை அதிகமாய் ஆசீர்வதிப்பார். வாலிபப்பிராயத்தில் சரீர ஆரோக்கியம் நன்றாயிருக்கும். அப்போது நமக்கு மற்ற மனுஷருடைய உதவி அதிகமாய்த் தேவைப்படாது. ஆகையினால் வாலிபர்கள் மற்றவர்களுடைய ஆலோசனைகளைக் கேட்கவும் மாட்டார்கள். அவர்கள் எப்படியாவது சந்தோஷத்தைத் தேடிக்கொள்ளலாம் என்று நினைத்து பாவமான வழிகளில் போய்விடுவார்கள். அப்படிப்பட்டவர்கள் தங்கள் சிருஷ்டிகரை நினைக்கும்போது, அவர் அவர்களை ஆளுகை செய்வார். அவர்களுடைய மனச்சாட்சியை சுத்திகரிப்பார். அவர்களுடைய நடைகளை ஸ்திரப்படுத்துவார். அவர்களைத் தீங்குக்கு விலக்கி பாதுகாத்துக்கொள்வார்.

நமக்கு முதிர்வயதாகும்போது நம்முடைய சரீர ஆரோக்கியம் கெட்டுப்போகும். நமக்கு அநேகருடைய உதவி தேவைப்படும். மனுஷருடைய உதவியும் நமக்கு தேவையாயிருக்கும். தேவனுடைய உதவியும் நமக்குத் தேவையாயிருக்கும். நம்முடைய வாலிபநாட்களில் நாம் கர்த்தருக்காக ஊழியம் செய்தால், நம்முடைய முதுமையின் நாட்களில், கர்த்தர் நமக்கு உதவிபுரிவார் என்னும் நிச்சயம் நமக்கு இருக்கும். நாமும் கர்த்தருடைய உதவிகளை விசுவாசத்தோடு எதிர்பார்க்கலாம்.

முதிர்வயதின் குறைபாடுகளை சாலொமோன் இங்கு தெளிவாக விவரிக்கிறார். முதிர்வயதிற்கு ஒப்புமையாக சூரியனையும், வெளிச்சத்தையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும் விரிவாகச் சொல்லுகிறார். வெளிச்சம் தானாய் உண்டாவதில்லை. சூரியனிடத்திலிருந்து வெளிச்சம் வருகிறது. சூரியன் இல்லையென்றால் வெளிச்சம் இருக்காது. அது இருளாகிப்போகும். வயதான பெரியவர்கள் வெளிச்சம் மங்கினவர்களாகயிருக்கிறார்கள். அவர்களுடைய பார்வையும் மங்கிப்போயிருக்கிறது. அவர்களுடைய சிந்திக்கும் திறமையும், சரீரத்தின் பெலனும் குறைந்துபோயிருக்கிறது. அவர்களுடைய ஆத்துமாவின் வெளிச்சம் தன் பெலத்தை இழந்து பலவீனமாயிருக்கிறது. அவர்களுடைய ஞாபசக்தியும், புரிந்துகொள்ளும் சக்தியும் குறைந்துபோயிருக்கிறது.

மழைக்குப்பின் மேகங்கள் திரும்பத் திரும்ப வரும். ஒரு மேகம் கடந்துபோனால், அந்த இடத்திற்கு வேறொரு மேகம் வரும். முதிர்வயதிலுள்ளவர்களுக்கு, பாடுகளும் வேதனைகளும் இதுபோலவே தொடர்ந்து வந்துகொண்டிருக்கும். ஒரு வேதனை அவர்களை விட்டுக் கடந்துபோகும். வேறொரு வேதனை வரும். ஒரு வியாதி அவர்களை விட்டு கடந்துபோகும். வேறொரு வியாதி வரும். வேதனைக்கும் வியாதிக்கும் முடிவு இருக்காது. முதிர்வயதுள்ளவர்கள் வேதனையோடும் வியாதியோடும் வாழக்கற்றுக் கொள்ளவேண்டும்.

வீட்டுக்கு காவலாளிகள் இருப்பார்கள். காவலாளிகள் தூக்கத்தில் தள்ளாடாமல் எப்போதும் விழித்திருக்கவேண்டும். காவலாளிகள் காவல் கோபுரத்தைப் போன்றவர்கள். காவல் கோபுரமே தள்ளாடினால், அதின் கீழுள்ள எல்லாமே தள்ளாடும். நம்முடைய தலை காவல் கோபுரத்தைப் போல உயர்ந்திருக்கிறது. தலை தள்ளாடும்போது கைகள் தள்ளாடும். கால்கள் தள்ளாடும். சரீரமே தள்ளாடும். அதிகமாய்த் தள்ளாடும்போது, சரீரம் கீழே விழுந்துவிடும். வீட்டுக்காவலாளிகள் தள்ளாடுவது என்பது, மனுஷனுடைய முதிர்வயதைக் குறிக்கிற வார்த்தை. அப்படிப்பட்ட முதிர்வயது வரும் முன்பாகவே, நம்முடைய சிருஷ்டிகரை, நம்முடைய வாலிபப்பிராயத்தில் நினைக்கவேண்டும்.

பெலசாலிகள் நேராக நிமிர்ந்திருப்பார்கள். அவர்களுக்கு அதிக வயதாகும்போது அவர்களுடைய பெலன் குறைந்துபோகும். அவர்களால் நிமிர்ந்து நிற்கமுடியாமல் கூனிப்போய்விடுவார்கள். பெலசாலிகள் கூனிப்போவது வயதான காலத்தைக் குறிக்கிற வார்த்தை. நம்முடைய சரீரம் கூனிப்போகும்போது, நம்முடைய கால்கள் பெலமிழந்துபோகும். இதற்கு முன்பு நம்முடைய கால்களால் நடந்து பிரயாணம்பண்ணியதுபோல, இனிமேல் பிரயாணம் பண்ணமுடியாது. சீக்கிரத்தில் களைப்பு உண்டாகிவிடும். அப்படிப்பட்ட முதிர்வயது வருவதற்கு முன்பாகவே, நாம் வாலிபப்பிராயத்திலிருக்கும்போதே, நாம் நம்முடைய சிருஷ்டிகரை நினைக்கவேண்டும்.

அநேகர் ஏந்திரம் அரைத்தால்தான், வேலை சீக்கிரத்தில் முடிவுபெறும். ஏந்திரம் அரைக்கிறவர்கள் கொஞ்சம் பேர் மாத்திரமானால், வேலை ஓய்ந்துபோகும். அதிகமான அளவு அரைக்க முடியாது. ஏந்திரம் அரைப்பது என்பது மனுஷருடைய பற்களைக் குறிக்கிற வார்த்தை. வாலிபநாட்களில் நமக்கு எல்லா பற்களும் ஆரோக்கியமாக, வலுவாக இருக்கும். வயதான காலத்தில் பற்கள் விழுந்துவிடும். ஒரு சில பற்கள் மாத்திரம் இருக்கும். அதற்கும் அதிக பலனிருக்காது. ஏந்திரம் அரைக்கிறவர்கள் கொஞ்சம்பேராவது என்பது, வாயிலுள்ள பற்களெல்லாம் விழுந்து, வாயில் கொஞ்சம் பற்கள் மாத்திரம் இருக்கும் முதிர்வயதைக் குறிக்கிற வார்த்தை. நம்முடைய வாயின் பற்கள் விழுந்து கொஞ்சமாவதற்கு முன்பாகவே, நம்முடைய வாலிபநாட்களில், நாம் நம்முடைய சிருஷ்டிகரை நினைக்கவேண்டும்.

"பலகணி வழியாய்ப் பார்க்கிறவர்கள் இருண்டு போகிறதற்கு முன்னே" என்னும் வார்த்தைக்கு, நம்முடைய கண்பார்வை மங்குவதற்கு முன்னே என்று பொருள். பொதுவாக மனுஷருக்கு வயதாகும்போது, அவர்களுடைய கண் பார்வை மங்கிப்போகும். மோசேயை இயற்கையின் இந்தப் பிரமாணம் பாதிக்கவில்லை. அவருக்கு 120 வயதானபோதுகூட, அவருடைய பார்வை தெளிவாகயிருந்தது. நம்முடைய ஆயுசுகாலத்திலும் நம்முடைய கண்பார்வை மங்கும். நம்முடைய கண்பார்வை தெளிவாகயிருக்கிற, வாலிபநாட்களிலேயே, நம்முடைய சிருஷ்டிகரை நாம் நினைக்கவேண்டும்.

ஏந்திர சத்தம் தாழ்ந்ததினால் தெருவாசலின் கதவுகள் அடைக்கப்படுகிறது என்பது, முதியோர்கள் வீட்டுக்குள்ளேயே, முடங்கிக் கிடப்பதை குறிக்கிற வாக்கியம். முதியோர் வெளியில் எங்கும் அதிகமாக போகமாட்டார்கள். புதிய இடங்களுக்குப் போகவோ, பொழுதுபோக்கு இடங்களுக்குப் போகவோ அவர்களுடைய சரீரத்தில் பெலன் இருக்காது. அப்படிப்பட்ட முதுமையான காலம் வருவதற்கு முன்பாகவே, நம்முடைய வாலிபநாட்களில், நாம் கர்த்தரை நினைக்கவேண்டும்.

வயது முதிர்ந்தவர்களுக்கு நித்திரை சரியாக வராது. அவர்கள் தூக்கத்தைவிட்டு அடிக்கடி எழுந்திருப்பார்கள். குருவியின் சத்தத்திற்கும் அவர்கள் எழுந்திருக்க வேண்டியதாயிருக்கும். சிறிய சத்தம்கூட அவர்களுடைய நித்திரையைக் கலைத்துவிடும்.

வயதான முதியவர்களுக்கு செவிகளின் கேட்கும் ஆற்றலும் குறைந்துபோகும். சத்தங்களை சரியாக வேறுபிரித்து புரிந்துகொள்ள முடியாது. கீதவாத்திய கன்னிகைகள் கீதங்களை நேர்த்தியாக வாசிப்பார்கள். ஆனால் முதியோர்களுக்கோ, அவர்களுடைய கீதத்தின் சத்தம்கூட கேட்காது.

வயதான முதியவர்களால் உயரமான பகுதிக்கு ஏறிச்செல்ல முடியாது. அவர்களுக்கு மேட்டுக்காக அச்சமுண்டாகும். ஒருவேளை உயரமான பகுதியில் பிராண வாயு அவர்களுக்கு அதிகமாய்த் தேவைப்படலாம். மேட்டுப்பகுதியை அவர்களுடைய சரீர பலவீனத்தினால் ஏற முடியாமல் போகலாம். உயர ஏறிப்போக போகும்போது அவர்களுக்கு தலைச்சுற்றல் வரலாம். இவையெல்லாவற்றையும் சமாளித்து அவர்களால் உயர ஏறிப்போகமுடியாது. இதனால் முதியோரிடத்தில் மேட்டுக்காக அச்சமுண்டாகும். வழியிலே பயங்கள் தோன்றும்.

வாதுமை மரம் பூ பூக்கும். மரத்தைப் பார்ப்பதற்கு எல்லாமே வெண்மையாயிருக்கும். முதியோரின் தலை நரை முடியினால் வெண்மையாகயிருக்கும். முதியோரின் தலையானது பார்ப்பதற்கு வாதுமை மரம் பூ பூத்ததுபோல சுத்த வெள்ளையாகயிருக்கும்.

வயது முதிர்ந்தவர்களால் எதையும் தாங்கிக்கொள்ள முடியாது. பாரமான எந்த சுமையையும் அவர்களால் சுமக்க முடியாது. முதியோருக்கு வெட்டுக்கிளிகள்கூட பாரமாகயிருக்கும். அவர்களுடைய சரீரமும் மனதும் பெலமிழந்து பலவீனமாயிருக்கும். சிறிய கவலைகள்கூட முதியோரின் இருதயத்தை உடைத்துவிடும்.

சாலொமோன் இந்த வசனங்களை எழுதினபோது அவருக்கும் முதிர் வயதாயிற்று. தன்னுடைய முதுமையின் கஷ்டங்களையெல்லாம் அனுபவித்து, சாலொமோன் இந்த வார்த்தைகளை தன்னுடைய இருதயத்தின் ஆழத்திலிருந்து சொல்லுகிறார். முதுமையின் வேதனைகளை அனுபவித்து அனுபவ சாட்சியாகச் சொல்லுகிறார்.

சாலொமோன் தன்னுடைய வாலிபநாட்களில் தன்னுடைய மாம்ச இச்சைகளை நிறைவேற்றுவதற்குப் பிரயாசப்பட்டார். ஆனால் அவருக்கு மெய்யான சந்தோஷம் கிடைக்கவில்லை. இப்போது அவர் முதிர் வயதிலிருக்கிறார். தன்னுடைய வாலிபவயதில், தன்னுடைய சிருஷ்டிகரை நினைத்திருந்தால், அது தனக்கு ஆசீர்வாதமாகயிருந்திருக்குமே, என்று இப்போது நினைத்து வேதனைப்படுகிறார்.

நம்முடைய வாலிபிராயத்திலே, நம்முடைய சிருஷ்டிகரை நாம் நினைத்து, அவருக்காக ஊழியம் செய்யவேண்டும். அவரை சேவிக்கவேண்டும். அப்போதுதான் நமக்கு தீங்கு நாட்கள் வரும்போது, நம்முடைய சிருஷ்டிகர் நம்மை நினைப்பார். நம்முடைய ஆத்துமாவுக்கு ஆறுதலைக் கொடுப்பார். நாம் சோர்ந்துபோயிருக்கிற வேளைகளில் நம்மை உற்சாகப்படுத்துவார்.

எல்லா மனுஷருக்கும் மரணம் நியமிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பூமியில் ஜீவனோடு சஞ்சரிக்கிற ஒவ்வொரு மனுஷனும் ஒரு நாளில் தன்னுடைய நித்திய வீட்டிற்குப்போகவேண்டும். மரித்தவனுடைய வீட்டாருக்கு, அவனுடைய மரணம் துக்கமாயிருக்கும். மரித்தவனுக்கு ஒன்றும் தெரியாது. அவன் தன்னுடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கிறான். அதில் அவன் நித்தியமாகத் தங்கிவிடுவான். அந்த இடத்தை சாலொமோன் அவனுடைய "நித்திய வீடு" என்று சொல்லுகிறார்.

விசுவாசிகளாகிய நாம் மரிப்பதற்குப் பயப்படக்கூடாது. நம்மிடத்தில் மரணபயம் இருக்கக்கூடாது. நாம் மரிக்கும்போது நம்முடைய நித்திய வீட்டிற்குப் போகிறோம். நம்முடைய பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு. அதில் ஒரு வாசஸ்தலம் நமக்காக நியமிக்கப்பட்டிருக்கிறது. நாம் அங்கு நம்முடைய பரலோகப் பிதாவோடு நித்திய காலமாய் சஞ்சரிப்போம். நம்முடைய நித்திய வீட்டிற்குப்போவது நமக்கு கிடைத்திருக்கும் மிகப்பெரிய சிலாக்கியம். ஆனாலும் நம்மீது பிரியமாகவும், நேசமாகவும் இருக்கிற, நம்முடைய வீட்டாருக்கு, நம்முடைய மரணம் துக்கமாயிருக்கும்.

மனுஷன் மரித்து தன்னுடைய துக்கவீட்டிற்குப்போகும்போது, அவனுக்காக துக்கம் கொண்டாடுகிறவர்கள் வீதியில் வந்து கூடுவார்கள். இவர்கள் ஒப்பாரி பாடுகிறவர்கள். யூதருடைய பாரம்பரியத்தில், ஒருவர் மரித்துப்போகும்போது, அவருக்காக அழ துக்கம் கொண்டாடுகிறவர்களை அழைத்து வருவார்கள். அவர்களோடு சேர்ந்து, மரித்தோரின் குடும்பத்தாரும் அழுவார்கள். நம்முடைய நித்திய வாசஸ்தலம் இங்கு இல்லை. பரலோகமே நம்முடைய நித்திய வாசஸ்தலம். நமக்கு மரணம் வருவதற்கு முன்பாக, நாம் ஜீவனோடிருக்கும்போதே, அதிலும் விசேஷமாய் நம்முடைய வாலிபபிராயத்திலிருக்கும்போதே, நம்முடைய சிருஷ்கரை நாம் நினைக்கவேண்டும்.

சாலொமோன் மரணத்தைப்பற்றி விரிவாகச் சொல்லுகிறார். நாம் ஜீவனோடிருக்கும்போது நம்முடைய ஆத்துமாவும் சரீரமும் அற்புதமாக கட்டி இணைக்கப்பட்டிருக்கிறது. அது வெள்ளிக்கயிற்றால் கட்டப்பட்டிருக்கிறது. நமக்கு சரீர மரணம் நேரிடும்போது, நம்முடைய ஆத்துமாவும் சரீரமும் கட்டவிழ்த்துப் பிரிக்கப்படுகிறது. இதை "வெள்ளிக்கயிறு கட்டுவிட்டு" என்று சாலொமோன் சொல்லுகிறார். வெள்ளிக்கயிற்றால் கட்டப்பட்டிருப்பது, சரீர மரணத்தின்போது, கட்டவிழ்க்கப்படுகிறது.

கிண்ணத்தில் தண்ணீர் நிரப்பி வைத்திருப்பார்கள். சாலொமோன் நம்முடைய ஜீவியத்தை "பொற்கிண்ணி" என்று சொல்லுகிறார். இந்தக் கிண்ணத்தில் நமக்காக ஜீவத்தண்ணீர் சேமித்து வைக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய சரீர மரணத்தின்போது, நம்முடைய ஜீவன் நம்மை விட்டு எடுக்கப்படுகிறது. பொற்கிண்ணத்திலுள்ள ஜீவத்தண்ணீர் கீழே கொட்டி விடுகிறது. பொற்கிண்ணி நசுங்கி உடைந்துபோகிறது. நாம் மரிக்கும்போது நம்முடைய சரீரம் மரித்துப்போகிறது. நாம் மரித்த பின்பு நமக்குத் தேவையான ஜீவத்தண்ணீர் நமக்குக் கிடைப்பதில்லை.

மனுஷருடைய மரணத்தைப்பற்றி சாலொமோன் விவரிக்கும்போது, மரணமானது ஊற்றினருகே சால் உடைந்துபோவதற்கு சமமானது என்று சொல்லுகிறார். சால் உடைந்துபோனால் ஊற்றிலிருந்து தண்ணீர் எடுக்க முடியாது.

துரவிலே தண்ணீர் இறைப்பதற்கு உருளையும் தேவை. துரவிலே உருளையைக் கட்டி வைத்திருப்பார்கள். அந்த உருளையைப் பயன்படுத்தி, துரவிலிருந்து தண்ணீர் இறைப்பார்கள். உருளை உடைந்துபோனால், அதன்பின்பு துரவிலிருந்து தண்ணீர் இறைக்க முடியாது. மனுஷனுடைய மரணம் உடைந்துபோன சாலுக்கும் நொறுங்கிப்போன உருளைக்கும் ஒப்பாயிருக்கிறது. அதன் பின்பு அவனுக்கு ஜீவத்தண்ணீர் கிடைக்காது. எல்லாம் நின்றுபோகும். ஒரு மனுஷன் ஜீவனோடிருக்கும்போது மாத்திரமே கிரியை நடப்பிக்க முடியும். மரித்த பின்பு அவனால் ஒன்றும் செய்யமுடியாது.

நம்முடைய சரீரம் மண்ணிலிருந்து உண்டாக்கப்பட்டிருக்கிறது. நாம் மரிக்கும்போது நம்முடைய சரீரமாகிய மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்கே திரும்பிப் போய்விடுகிறது. தேவன் மனுஷனை சிருஷ்டித்தபோது அவனுடைய நாசியிலே ஜீவசுவாசத்தை ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான். நாம் மரிக்கும்போது நம்மிடத்திலுள்ள ஆவி, தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போய்விடுகிறது.

மனுஷன் ஒரு விசேஷித்த சிருஷ்டியாயிருக்கிறான். பரலோகத்தின் பாக்கியம் மண்ணில் சேர்க்கப்பட்டிருக்கிறது. மண்ணான மனுஷனுடைய சரீரமும், தேவனுடைய ஜீவசுவாசமும் மனுஷனுக்குள் இணைக்கப்பட்டிருக்கிறது. மனுஷனுக்கு மரணம் நேரிடும்போது, சரீரமாகிய மண்ணும், தேவன் கொடுத்த ஆவியும் பிரிக்கப்படுகிறது. இது எங்கிருந்து வந்ததோ அங்கு மறுபடியும் திரும்பிப்போய்விடுகிறது. நம்முடைய சரீரம் சாதாரண மண்பாண்டம். நாம் மரித்த பின்பு நமது மண்பாண்டம் பூமிக்கே திரும்பிவிடுகிறது.

நம்முடைய ஆத்துமா தேவன் தந்த வெளிச்சம். நாம் மரிக்கும்போது நம்முடைய ஆத்துமா தேவனிடத்திற்குத் திரும்புகிறது. கர்த்தர் மனுஷனை சிருஷ்டித்த விதம் ஆதியாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. "தேவனாகிய கர்த்தர் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்" (ஆதி 2:7).

நாம் மரிக்கும்போது நம்முடைய ஆத்துமா, நம்முடைய சரீரத்தோடு மரித்துப்போவதில்லை. அது பாதாளத்தின் வல்லமைக்கு தப்புவித்து மீட்கப்படும். "ஆனாலும் தேவன் என் ஆத்துமாவைப் பாதாளத்தின் வல்லமைக்குத் தப்புவித்து மீட்பார், அவர் என்னை ஏற்றுக்கொள்வார்" (சங் 49:15).

நம்முடைய ஆத்துமா எரிகிற விளக்குக்கு சமம். நம்முடைய சரீரம் விளக்குத்தண்டுக்கு சமம். விளக்கானது விளக்குத்தண்டின்மீது வைக்கப்பட்டிருக்கும் காலம், நாம் ஜீவனோடிருக்கும் காலம். இந்தக் காலத்தில் நம்முடைய சரீரமும் ஆத்துமாவும் இணைந்திருக்கிறது. நாம் மரிக்கும்போது நம்முடைய சரீரத்திலிருந்து ஆத்துமா வேறு பிரிக்கப்படுகிறது. இது விளக்கு தண்டிலிருந்து விளக்கை எடுப்பதற்கு சமம்.

விளக்கு எங்கிருந்தாலும் எரியும். அது விளக்குத்தண்டின்மீது வைக்கப்பட்டிருந்தாலும் எரியும். அதை விளக்குத்தண்டிலிருந்து எடுத்துவிட்டாலும் அது எரிந்துகொண்டுதான் இருக்கும். இதுவே நம்முடைய ஆத்துமாவின் நிலை. நம்முடைய ஆத்துமா நம்முடைய சரீரத்திலிருந்தாலும் அது ஜீவனோடிருக்கும். அது நம்முடைய சரீரத்தைவிட்டு வெளியே எடுக்கப்பட்டாலும், அது ஜீவனோடுதான் இருக்கும். ஆத்துமாவுக்கு மரணமில்லை.

பிரசங்கியின் வாக்கியங்கள்
பிர 12:8-12

பிர 12:8. மாயை மாயை, எல்லாம் மாயை என்று பிரசங்கி சொல்லுகிறான்.

பிர 12:9. மேலும், பிரசங்கி ஞானவானாயிருந்தபடியால், அவன் ஜனத்துக்கு அறிவைப் போதித்து, கவனமாய்க் கேட்டாராய்ந்து, அநேகம் நீதிமொழிகளைச் சேர்த்து எழுதினான்.

பிர 12:10. இதமான வார்த்தைகளைக் கண்டுபிடிக்க பிரசங்கி வகைதேடினான்; எழுதின வாக்கியங்கள் செவ்வையும் சத்தியமுமானவைகள்.

பிர 12:11. ஞானிகளின் வாக்கியங்கள் தாற்றுக்கோல்கள் போலவும் சங்கத்தலைவர்களால் அறையப்பட்ட ஆணிகள்போலவும் இருக்கிறது; அவைகள் ஒரே மேய்ப்பனால் அளிக்கப்பட்டது.

பிர 12:12. என் மகனே! இவைகளினாலே புத்தியடைவாயாக; அநேகம் புஸ்தகங்களை உண்டுபண்ணுகிறதற்கு முடிவில்லை; அதிக படிப்பு உடலுக்கு இளைப்பு.

சாலொமோன் தன்னுடைய புஸ்தகத்திற்கு முடிவுரையாக இந்த வாக்கியங்களை எழுதுகிறார். தான் ஏற்கெனவே சொன்னதை இங்கு மறுபடியும் சொல்லுகிறார். மாயை, மாயை, எல்லாம் மாயை என்பதுதான் சாலொமோனுடைய பிரசங்கச் செய்தியின் சாரம். தேவனுடைய வழிநடத்துதலின் பிரகாரமாகவே, தான் இந்தச் செய்தியை எழுதியிருப்பதாக சாலொமோன் உறுதிபண்ணுகிறார். சாலொமோனுடைய வார்த்தை ஜனத்திற்கு அறிவைப் போதிக்கிறது. அவை நம்முடைய ஆத்துமாவுக்கு பிரயோஜனமாயிருக்கிறது.

சாலொமோன் தன்னுடைய வாலிப நாட்களில் கர்த்தருடைய சமுகத்தைவிட்டுத் தூரமாய் விலகிப்போயிருந்தாலும், தன்னுடைய முதிர்வயதில் கர்த்தரிடமாக கிட்டிச் சேர்ந்திருந்திருக்கிறார். தன்னுடைய பாவங்களுக்காக மனம் வருந்தி, மனம் திருந்தி, தேவனுடைய கிருபையினால் பாவமன்னிப்பைப் பெற்றிருக்கிறார். ஒரு காலத்தில் இந்தப் பிரபஞ்சமும், இதன் காரியங்களும் அவருக்கு சந்தோஷமாயிருந்தது. ஆனால் இப்போதோ அவருக்கு எல்லாமே மாயையாயிருக்கிறது. இந்த உலகமே தனக்கு சந்தோஷத்தைத் தரும் என்று எதிர்பார்த்தார். ஆனால் இந்த உலகத்திலிருந்து அவருக்கு மெய்யான சந்தோஷம் கிடைக்கவில்லை.

சாலொமோன் சத்தியத்தைத் தேடி அலைந்தார். அவர் ஞானவானாயிருந்தார். ஜனத்திற்கு அறிவைப் போதித்து, கவனமாய்க் கேட்டு ஆராய்ந்தார். அநேகம் நீதிமொழிகளை சேர்த்து எழுதினார். இதனால் சாலொமோன் "சேகரித்து எழுதுகிறவர்" என்று பொருள்படும் "கோகேலேத்" என்னும் எபிரெயப் பெயரால் அழைக்கப்படுகிறார். சாலொமோன் பல சத்தியங்களை சேகரித்து, அவற்றைத் தொகுத்து எழுதியிருக்கிறார். மாயை, மாயை, எல்லாம் மாயை என்பதுதான் சாலொமோனுடைய பிரசங்கச் செய்தியின் சுருக்கம்.

தன்னுடைய ஞானமுள்ள வார்த்தைகளை, மற்றவர்கள் கவனமாய்க் கேட்டு ஆராயவேண்டும் என்று சாலொமோன் எதிர்பார்க்கிறார். தன்னிடத்திலுள்ள ஞானத்தினால் சாலொமோன் மற்றவர்களுக்கு அறிவைப் போதிக்கிறார். எது மெய்யானது, எது மாயையானது என்பது சாலொமோனுக்குத் தெரிந்திருக்கிறது. சாலொமோனால் எல்லா காரியங்களையும் ஆராய்ந்து நிதானித்து அறியமுடிகிறது.

சாலொமோன் எல்லோருக்கும் நன்மை செய்கிறவர். தன்னிடத்திலுள்ள ஞானத்தை, மற்றவர்களுக்கும் பிரயோஜனமுண்டாக, நல்லமுறையில் பயன்படுத்துகிறார். சாலொமோனுடைய வார்த்தைகள், அவற்றைக் கேட்போருக்கு மிகவும் உதவியாகயிருக்கிறது. அவருடைய அனுபவம் எல்லா ஜனங்களுக்கும் எச்சரிப்பாகவும், ஆலோசனையாகவும் இருக்கிறது.

சாலொமோன் நன்மை செய்வதற்காக அதிகமாய்ப் பிரயாசப்படுகிறார். இதற்காக ஜனத்திற்கு அறிவைப் போதிக்கிறார். அவர்களுக்கு அதை எவ்வாறு போதிக்கவேண்டுமென்று ஆராய்ந்து பார்க்கிறார். மற்றவர்களிடத்தில் அறிவைக் கவனமாய்க் கேட்டு, அதை ஆராய்ந்து பார்க்கிறார். இதமான வார்த்தைகளைக் கண்டுபிடிக்க சாலொமோன் வகைதேடினார். தன்னுடைய செய்திகளை நீதிமொழிகளாக சேர்த்து எழுதினார். நீதிமொழிகளின் வாக்கியங்கள் சுருக்கமாகயிருக்கும். சாலொமோன் தன்னுடைய புஸ்தகத்தில் அதிகமான வார்த்தைகளைப் பயன்படுத்தாமல், குறைவான வார்த்தைகளையே பயன்படுத்துகிறார்.

சாலொமோன் தன்னுடைய புஸ்தகத்தில் எழுதின வாக்கியங்கள் செவ்வையும், சத்தியமுமானவைகள். சாலொமோனுடைய வாக்கியங்கள், எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணமாயிருக்கிறது. அவையெல்லாம் எல்லோருடைய மனதிற்கும் பிடித்த இதமான வார்த்தைகள். இந்த வார்த்தைகளைக் கண்டுபிடிக்க சாலொமோன் வகைதேடினார். நல்ல செய்தியை நல்லமுறையில் சொல்லவேண்டும். அப்போதுதான் ஜனங்கள் அதை ஏற்றுக்கொள்வார்கள். செய்தி நல்ல செய்தியாகயிருந்தாலும், அதை முறைப்படி சொல்லவில்லையென்றால், ஜனங்கள் அதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். சாலொமோன் தான் சொல்ல விரும்புகிற நீதிமொழிகளையும், பிரசங்க வாக்கியங்களையும், இதமான வார்த்தைகளினால் வெளிப்படுத்துகிறார்.

ஒரு சிலர் இதமான சொற்களைப் பேசாமல், மாயமான சொற்களைப் பேசுகிறார்கள். இவர்களைப்பற்றி ஏசாயா தீர்க்கதரிசி இவ்வாறு சொல்லியிருக்கிறார். "இவர்கள் கலகமுள்ள ஜனங்களும், பொய்பேசுகிற பிள்ளைகளும், கர்த்தருடைய வேதத்தைக் கேட்க மனதில்லாத புத்திரருமாயிருக்கிறார்கள். இவர்கள் தரிசனக்காரரை நோக்கி: தரிசனங் காணவேண்டாம் என்றும், ஞானதிருஷ்டிக்காரரை நோக்கி: யதார்த்தமாய் எங்களுக்குத் தரிசனஞ்சொல்லாமல், எங்களுக்கு இதமான சொற்களை உரைத்து, மாயமானவைகளைத் திருஷ்டியுங்கள் என்றும், நீங்கள் வழியை விட்டு, பாதையினின்று விலகி, இஸ்ரவேலின் பரிசுத்தரை எங்கள் முன்பாக இராமல் ஓயப்பண்ணுங்கள் என்றும் சொல்லுகிறார்கள்" (ஏசா 30:9-11).

இந்தப் பிரபஞ்சத்தில் கர்த்தருக்குப் பயந்து ஜீவிக்கிற பரிசுத்தவான்கள் அநேகர் இருக்கிறார்கள். அவர்கள் நமக்குப் பிரயோஜனமுண்டாக அநேக வார்த்தைகளைப் பேசியிருக்கிறார்கள். அநேக வாக்கியங்களை எழுதியிருக்கிறார்கள். அவர்களெல்லாரும் மெய்ஞானிகள். ஞானிகளுடைய வாக்கியங்கள் தாற்றுக்கோல்கள்போல இருக்கிறது. அவைகள் சங்கத்தலைவர்களால் அறையப்பட்ட ஆணிகளைப்போலவும் இருக்கிறது.

நம்முடைய மனது நிலையில்லாமல் அலைபாயும்போது, ஞானியினுடைய வாக்கியங்கள் அலைபாய்கிற மனதை ஆணியடித்து, அலைபாயவிடாமல் ஒரு நிலைப்படுத்தும். நம்முடைய மனது நன்மையான காரியங்களில் பதிந்திருக்கும். மாடுகள் சோம்பேறியாகவும், மெதுவாகவும் நடக்கும்போது, தாற்றுக்கோல்களைப் பயன்படுத்தி, மாடுகளைத் துரிதப்படுத்துவார்கள். நம்முடைய மனதும் சரியாக சிந்திக்காமல், சோம்பலாகயிருக்கும்போது, ஞானிகளின் வாக்கியங்கள், தாற்றுக்கோல்களைப்போல, நம்மைத் தட்டியெழுப்பும். நம்முடைய சிந்தனையைத் துரிதப்படுத்தும்.

"இப்பொழுதும் எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களிலே தப்பின சிலரை மீதியாக வைக்கவும், தம்முடைய பரிசுத்த ஸ்தலத்தில் எங்களுக்கு ஒரு குச்சைக் கொடுக்கவும், இப்படியே எங்கள் தேவன் எங்கள் கண்களைப் பிரகாசிப்பித்து, எங்கள் அடிமைத்தனத்திலே எங்களுக்குக் கொஞ்சம் உயிர் கொடுக்கவும், அவராலே கொஞ்சநேரமாவது கிருபைகிடைத்தது" *(எஸ்றா 9:8)*. ஞானிகளுடைய வாக்கியங்களை ஆணிகளைப்போல பயன்படுத்தி, தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில், நமக்கு ஒரு குச்சை உண்டுபண்ணவேண்டும்.

பரிசுத்தவான்கள் கர்த்தரை ஆராதிப்பதற்காக ஒன்றுகூடி வருகிறார்கள். சபையாராக சேர்ந்து கர்த்தரைத் துதிக்கிறார்கள். தேவனை மகிமைப்படுத்துகிறார்கள். சபையாருக்கு ஆவிக்குரிய போஜனம் தேவைப்படுகிறது. பரிசுத்த ஸ்தலத்தில் விசுவாசிகளும் இருப்பார்கள். தேவனுக்கு ஊழியம் செய்கிற ஊழியக்காரர்களும் இருப்பார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் ஞானிகளின் வாக்கியங்களை விசுவாசிகளுக்குப் பகிர்ந்து சொல்லவேண்டும். பச்சை மரத்தில் ஆணிகளை அடித்து பதியவைப்பதுபோல, தேவனுடைய சத்திய வசனங்களை விசுவாசிகளின் இருதயத்தில் பதிய வைக்கவேண்டும்.

தேவனுடைய வார்த்தை ஒரு சம்மட்டியைப்போல இருக்கிறது. ஆணியை அடிப்பதற்கு சம்மட்டி தேவை. "என் வார்த்தை அக்கினியைப்போலும், கன்மலையை நொறுக்கும் சம்மட்டியைப்போலும் இருக்கிறதல்லவோ? என்று கர்த்தர் சொல்லுகிறார்" *(எரே 23:29)*.

ஞானியின் வாக்கியங்கள் பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது. வேதவாக்கியங்களெல்லாம் தேவனுடைய ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவவசனங்களெல்லாமே பரிசுத்த ஆவியானவரிடத்தில் வந்திருக்கிறது. வேதாகமத்தின் ஆசிரியர்கள் அநேகராகயிருந்தாலும், எல்லா வசனங்களுக்கும் மெய்யான ஆசிரியர் ஒருவரே. அவரே பரிசுத்த ஆவியானவர்.

ஞானிகள் அநேகராகயிருந்தாலும், ஞானிகளின் வார்த்தைகள் ஒரே மேய்ப்பனால் நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இஸ்ரவேலின் மேய்ப்பரே அந்த மேய்ப்பர். அவரே நம்முடைய பிரதான மேய்ப்பர். "இஸ்ரவேலின் மேய்ப்பரே, யோசேப்பை ஆட்டுமந்தையைப்போல் நடத்துகிறவரே, செவிகொடும்; கேருபீன்கள் மத்தியில் வாசம்பண்ணுகிறவரே, பிரகாசியும்" *(சங் 80:1)*.

பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிற வசனங்களே நமக்குப் போதுமானவை. அவற்றை நாம் தியானித்து, அவற்றிற்குக் கீழ்ப்படிந்தாலே, நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் ஆசீர்வாதமாகயிருக்கும். பரிசுத்த வேதாமகத்திலுள்ள வசனங்களே நமக்கு மெய்யான சந்தோஷத்தையும், மெய்யான சமாதானத்தையும் கொடுக்கும். இந்த வசனங்களைத் தவிர, கூடுதலான வசனங்கள் வேறு எதுவும் நமக்குத் தேவையில்லை.

அநேக புஸ்தகங்களை உண்டுபண்ணுகிறதற்கு முடிவே இல்லை. அதிகப்படிப்பு உடலுக்கு இளைப்பு. நாம் எத்தனை புஸ்தகங்களைப் படித்தாலும், எல்லா புஸ்தகங்களுக்கும் ஆதாரமாயும், பிரதானமாயும் இருப்பது பரிசுத்த வேதாகமம் மாத்திரமே. பரிசுத்த வேதாகமத்திலுள்ள வார்த்தைகளினால் நாம் புத்தியையடையலாம். ஞானத்தைப் பெற்றுக்கொள்ளலாம். தேவனுடைய வார்த்தையே நமக்கு மெய்யான உபதேசம். இதுவே நம்மை நித்திய ஜீவனுக்கு வழிநடத்தும்.

காரியத்தின் கடைத்தொகை பிர 12:13,14

பிர 12:13. காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவே.

பிர 12:14. ஒவ்வொரு கிரியையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்.

சாலொமோன் இந்தப் புஸ்தகத்தின் ஆரம்பத்தில் "வானத்தின்கீழ் மனுபுத்திரர் உயிரோடிருக்கும் நாளளவும் பெற்று அநுபவிக்கத்தக்கது இன்னதென்று அறியும் பொருட்டு, என் இருதயத்தை ஞானத்தால் தேற்றிக்கொண்டிருக்கும்போதே, நான் என் தேகத்தை மதுபானத்தால் சீராட்டிக்கொண்டிருக்கவும், மதியீனத்தைப் பற்றிக்கொண்டிருக்கவும் என் உள்ளத்தில் வகைதேடினேன்" *(பிர 2:3)* என்று எழுதியிருக்கிறார். மனுபுத்திரர் செய்யத்தக்க நன்மையான காரியம் எது என்பதை நாம் அறிந்துகொண்டு, அதையே நாம் செய்யவேண்டும். அதுவே காரியத்தின் கடைத்தொகை. அது மாத்திரமே முடிவு வரையிலும் நிலைக்கும்.

மெய்யான சந்தோஷத்தைப் பெற்றுக்கொள்வதற்கு, மெய்யான வழி எது என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும். அதைத் தேடிப் பார்க்கவேண்டும். சாலொமோன் அந்த வழியைத் தேடிப்பார்த்து கண்டுபிடித்திருக்கிறார்.

யோபு "மனுஷனை நோக்கி: இதோ, ஆண்டவருக்குப் பயப்படுவதே ஞானம்; பொல்லாப்பை விட்டு விலகுவதே புத்தி என்றார் என்று சொன்னான்" *(யோபு 28:28)*. தெய்வபக்தியே நமக்கு மெய்யான சந்தோஷத்தைக்கொடுக்கும். ஒரு காரியத்தின் ஆரம்பத்தைக் கேட்பதைவிட, காரியத்தின் கடைத்தொகையைக் கேட்பது நமக்கு நல்லது.

நாம் தேவனுக்குப் பயந்திருக்க வேண்டும். அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளவேண்டும். இதுவே காரியத்தின் கடைத்தொகை. நம்முடைய இருதயத்தில் தேவனுக்குப் பயப்படும் பயம் இருக்கவேண்டும். தேவனுடைய பயம் நம்முடைய இருதயத்தை ஆளுகை செய்யவேண்டும். தேவனுடைய பரிசுத்தத்தையும், அவருடைய மகத்துவத்தையும் பயபக்தியோடு அங்கீகரிக்கவேண்டும். தேவனுடைய அதிகாரத்திற்குக் கீழ்ப்படிந்து, அவருடைய கோபத்திற்கு விலகி ஜீவிக்கவேண்டும்.

தேவனுடைய பிரமாணங்கள் பரிசுத்த வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. நாம் தேவனுக்கு எப்படி பயப்படவேண்டும் என்பதும், அவருடைய கற்பனைகளுக்கு எப்படி கீழ்ப்படியவேண்டும் என்பதும் பரிசுத்த வேதாகமத்தில் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. தேவனுக்குக் கீழ்ப்படிய விரும்புகிறவர்கள், முதலாவதாக, அவருடைய கற்பனைகளை அறிந்துகொள்ளவேண்டும்.

"இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது; அவர்கள் எனக்குப் பயப்படுகிற பயம் மனுஷராலே போதிக்கப்பட்ட கற்பனையாயிருக்கிறது" *(ஏசா 29:13)*.

தேவனுக்குப் பயந்து, அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே, எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை. இதற்குக் கீழ்ப்படியும்போது நமக்கு ஆசீர்வாதம் கிடைக்கும். நாம் தேவனுக்கு முன்பாக எப்படி ஜீவிக்கவேண்டும் என்பதை சாலொமோன் சுருக்கமாகவும் தெளிவாகவும் சொல்லுகிறார். நாம் தேவனுக்குப் பயந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும். நாம் இதைச்செய்யும்போது, நமக்கு தேவனுடைய மெய்யான ஆசீர்வாதம் கிடைக்கும்.

நாம் இந்தப் பிரபஞ்சத்தில் ஜீவிக்கிற நாட்களில், எப்படி வேண்டுமானாலும் ஜீவிக்கலாம் என்று இறுமாப்பாயிருக்கக் கூடாது. நம்முடைய பாவங்களும் துன்மார்க்கங்களும் இரகசியமானவை என்றும், அவை யாருக்கும் தெரியாது என்றும் ஆணவமாய் நினைக்கக்கூடாது. தேவனுக்குத் தெரியாத இரகசியம் ஒன்றுமில்லை. தேவனே நீதியுள்ள நியாயாதிபதி. அவர் எல்லாவற்றையும் நியாயம் விசாரிக்கிறவர். தேவன் மனுஷருடைய ஒவ்வொரு கிரியையையும் தம்முடைய நியாயத்திலே கொண்டு வருவார்.

மனுஷனுடைய காரியங்கள் வெளியரங்கமாகயிருந்தாலும், அந்தரங்கமாக இருந்தாலும் அவற்றையும் தம்முடைய நியாயத்தில் கொண்டுவருவார். மனுஷனுடைய காரியங்கள் நன்மையானாலும் தீமையானாலும், தேவன் அவற்றையும் தம்முடைய நியாயத்தில் கொண்டு வருவார். தேவனுக்கு மறைவான காரியம் ஒன்றுமில்லை.

நம்முடைய எல்லா கிரியைகளுக்கும் நியாயத்தீர்ப்பு நாளிலே தேவனுக்குக் கணக்கு ஒப்புவிக்கவேண்டும். நாம் இப்போது கர்த்தரோடு சீராய் நடந்தால், நியாயத்தீர்ப்பு நாளின்போது கர்த்தருடைய சமுகத்தில் நம்மைக் குறித்து, சந்தோஷமாய் கணக்கு ஒப்புவிப்போம். நாம் இந்தப் பிரபஞ்சத்தில் தேவனுக்குப் பயந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டால், நியாயத்தீர்ப்பு நாளின்போது நமக்கு தேசம் ஒன்றும் இருக்காது. கர்த்தர் நம்மை தம்முடைய பிள்ளையாக அங்கீகரிப்பார். நமக்கு புத்திரசுவிகாரத்தின் ஆசீர்வாதங்களைக் கட்டளையிடுவார். தேவனோடு ஐக்கியமாயிருப்பதே நமக்கு மெய்யான சந்தோஷம். தேவனைவிட்டு விலகி ஜீவிப்பது மாயையாகவே இருக்கும்.